307

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1979 ஏப்ரல் 28

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

Research on Tuberculosis in animals.

* Q No. 862.—THIRU S. M. VASAN. Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether any research into the incidence of Tuberculosis in animals have been conducted in this State ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை* பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. மு. வாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நோயைத் தடுப்பதற்காக அரசு மேலும் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க உள்ளது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: விவர அறிக்கையிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கால்நடைகளைப் பாதிக்கும் உருக்கி நோய் மனித இனத்திற்குப் பரவுமா ? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் ? அது பற்றி ஏதாவது ஆராய்ச்சி நடத்தப்பட்டு கட்டுரைகள் வெளியிடப்படுமா என அமைச்சர் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

* 517 பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1979 ஏப்ரல் 28

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாடுகள், வெள்ளாடுகளின் பால் மூலம் மனித இனத்திற்கு இந்நோய் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்நோய் பரவுவதை கீழ் குறிப்பிடப் பட்டுள்ள நடவடிக்கைகளின் மூலம் குறைத்து விடலாம் :—

(1) உருக்கி நோய் பாதிப்பினை கண்டறிவதற்கான பரிசோதனைகளை தங்களுடைய கால் நடைகளுக்கு மேற்கொள்ள விவசாயிகளை ஊக்கு விப்பது ;

(2) உருக்கி நோயினால் பாதிக்கப்பட்ட கால் நடைகளை மந்தையி லிருந்து நீக்குதல் ;

(3) தீவிர மருத்துவ ஆய்வின் மூலம் சுவாச, கரு, மடி ஆகிய உறுப்பு களில் உருக்கி நோய் பாதிப்பினைக் கண்டு பிடித்து நோய் உள்ள கால்நடை களைப் பிரித்தல் அல்லது நீக்குதல் ;

(4) பால்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை முறை யாக குறிப்பிட்ட கால அளவுகளில் பரிசோதித்தல் ;

(5) கன்றுகளுக்குக் கொடுக்கும் பால் அல்லது தயிர், உருக்கி நோய் பாதிக்காத கால்நடைகளிலிருந்து பெற்றதாக இருப்பது அல்லது பாலை போதுமான அளவு கொதிக்க வைப்பது, அல்லது முறையாக பதப்படுத்தப் பட்டிருத்தல்.

இந்நோய் பற்றி ஆராய்ச்சிப் பணிகள் சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு பணியாளர்களால் சில கட்டுரைகள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வெளியிடப்பட்டு உள்ளன : திருவாளர்கள் கே. பி. சந்திரசேகரன், ஆர். ராமகிருஷ்ணன் ஆகியோர் பசு உருக்கி நோய் கன்றை பாதிப்பது பற்றியும், திருவாளர்கள் கே. பி. சந்திரசேகரன், ஆர். ராம கிருஷ்ணன் ஆகியோர் மைக்கோ பேக்டரியம் உருக்கி நோய் கிருமிகளால் எருதுகளில் நோய் பாதிப்பு பற்றியும், திருவாளர்கள் வி. டி. பத்மநாபன், பி. என். ராய் ஆகியோர் பன்றிகள் உருக்கி நோய் பற்றியும், திருவாளர்கள் ஜே. எஸ். மோசஸ், கே. நாச்சிமுத்து, எ. கோட்டீஸ்வரன் ஆகியோர் உருக்கி நோய் சீரத்தின் மின்துளை ஆய்வு பற்றியும், திருவாளர்கள் டி. ஜே. அப்துல் காதர் விலங்குகளில் உருக்கி நோயைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் பற்றி யும் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 28]

வியாசர்பாடியில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்குக் குடியிருப்புகள்.

* **வினா எண் 863—திரு. சு. பாலன்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வியாசர்பாடியில் பர்மா தமிழர்கள் வாழும் குடிசைகளை அகற்றி வீடுகள் கட்டும் திட்டம் எப்போது செயல்படும்?

(ஆ) அவர்களுக்கு கட்டவிருக்கும் வீட்டின் பரப்பளவு எவ்வளவு?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) சென்னை நகரில், வியாசர் பாடி ஏரிப் பகுதியில் குடியமர்த்தப்பட்ட பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய வர்கட்கு வீடு கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசின் வேலை, வீட்டு வசதி வழங்கு துறை மற்றும் மறுவாழ்வுத் துறை அமைச்சர் அவர்களது தலைமையில் தமிழக முதல்வர் அவர்களால் இத் திட்டத்திற்கு 28—9—1978 ஆம் நாளன்று அடிக்கல் நாட்டு விழா நடத்தப் பட்டு, வியாசர்பாடி ஏரிப் பகுதியைச் சீர் செய்து மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரால் வீட்டுக் கடன் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வீடுகளை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வீடுகள் கட்டும் பணி விரைவில் துவக்கப்படும்.

(ஆ) ஒவ்வொருத்தும் சுமார் 1,200 சதுர அடி வீட்டு மனை கொடுக்க வும், அதில் சுமார் 200 சதுர அடி பரப்பில் வீடு கட்டவும் திட்டமிடப்பட் டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, பர்மா தமிழர்கள் எத்தனை பேர் அங்கே கடைகள் வைத்து இருக்கிறார்கள்? எத்தனை பேருக்கு அரசாங்கக் கடன் கொடுக்கப்பட்டு இருக்கிறது? அரசாங்க உதவி தவிர பாங்க் லோன் கொடுக்கப்பட்டு இருக்கிறதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, பர்மா பஜாரில் 332 கடைகள் பர்மா தமிழர்களால் வைக்கப்பட்டு இருக்கிறது. இதில் கடன் வாங்கிய பர்மா தமிழர்கள் எண்ணிக்கை 247. அவர்களுக்கு வியாபாரக் கடன் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சாதாரணமாக பர்மாவிலிருந்து தாயகம் வரும் தமிழர்களுக்கு 'ரிப்பேட்டிரியேட்ஸ்' வங்கி—அதாவது குடியமர்த்தப் பட்டவர்களுக்கு என்று நியமிக்கப்பட்டு இருக்கின்ற வங்கி மூலம் கடன்

கொடுக்கப்பட்டு வருகிறது. அதையும் தவிர பஞ்சாப் நேஷனல் பாங்க் மூலம் 120 குடும்பங்களுக்கு ரூபாய் 5 லட்சத்து 90 ஆயிரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதுவும் தவிர 68 குடும்பங்களுக்கு ரிப்பேட்ரியேட்ஸ் பாங்க் காரண்டி கொடுத்தது, அவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை குடும்பங்கள் அந்த வீடு கட்டும் திட்டத்தால் பயன்பெற்று இருக்கிறார்கள்? எத்தனை பேர் இது வரையில் குடியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, 3,132 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

மதுரை ராஜா மில் மின்சார கட்டண நிலுவை

***வினா எண் 864—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ராஜா மில் நிர்வாகம் ரூபாய் 88 ஆயிரத்திற்குமேல் மின்சாரக் கட்டணம் பாக்கி கட்ட வேண்டியுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இந்தப் பணத்தை உடனடியாக வசூலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மில் ஓடாத காலத்திற்கான மாதாந்திரக் குறைந்த அளவுக் கட்டணமான ரூபாய் 32,858.95 நிலுவையில் உள்ளது.

(ஆ) மின்சார வாரியம் உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அமைச்சர் அவர்கள் பாக்கி இருப்பதாகச் சொன்னார்கள். அது மில் ஓடாத காலத்திற்கு என்று சொன்னார்கள். அதை வசூலிப்பதற்கு மின்சார வாரியம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? அந்த மேனேஜ்மென்ட் ரொம்ப நொடிந்து போய் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தப் பணத்திற்கு ஆபத்து வர இருப்பதால் உடனடியாக அரசு வசூலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மில் ஓடாத 4½ ஆண்டுக் காலத்திற்கும் புதிய ஒப்பந்தம் சேர்த்து எழுதித் தருவதாகப் புதிய சொந்தக்காரர்கள் ஒப்புக் கொண்டதன் பேரில் மேற்படி தொகையை தள்ளுபடி செய்ய மின்சார வாரியம் உத்தேசித்துள்ளது. அதற்கான விவரங்கள் மதுரை மேற்பார்வையாளரிடம் இருந்து பெறப்பட்டு, மின் வாரியத்தின் பரிசீலனையில் தற்போது உள்ளது.

1979 எப்ரல் 28]

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பாக்கிகளை மின்சார வாரியத்திற்கு வசூலிப்பதற்காக அண்மையில் ரெவின்யூ ரெகவரி ஆக்ட் நிறைவேற்றப்பட்டதே, அந்தச் சட்டப்படி வசூலிக்க ஏற்பாடு உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது ஆன்னியுவல் மினிமம் சார்ஜஸ். ஓடாத நேரத்தில், மூடியிருந்த காலத்தில் விதிக்கக் கூடிய அந்த ஆன்னியுவல் மினிமம், அந்த மில்லை இப்போது புதியவர்கள் வாங்கியிருக்கிறார்கள்—சாதாரணமாக தொழிற்சாலைக்கு 10 ஆண்டுகள் என்று இருக்கும். அதில் 4 ஆண்டுகள் ஓட்டிவிட்டு, 4 ஆண்டுகள் ஓடாமல் இருந்தால், அந்த ஓடாத 4 ஆண்டுகளுக்கு மேலும் நீடிக்க காரண்டி தருவார்கள் என்றால் அதை ஏற்றுக்கொள்வது வழக்கம்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குச் சலுகை அளிப்பதில் சங்கடம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சொன்னார்கள். இப்படிப்பட்ட பெரிய கம்பெனிகள் 80 ஆயிரம் ரூபாய், 1 லட்ச ரூபாய் என்று பாக்கிகளை ஏற்றிக் கொண்டே இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் முறையில் இன்று சட்டத்தில் இடம் இல்லை என்றாலும், அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசும் அமைச்சரும் ஆலோசனை செய்வார்களா ?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது மின்சாரம் பயன்படுத்தியதற்கான கட்டணம் அல்ல. மின்சாரம் பயன்படுத்துவேன் என்ற உறுதி எழுதிக் கொடுத்ததற்கான கட்டணம். ஆகையால் மின்சாரத்தை பயன்படுத்திவிட்டு கட்டணம் செலுத்தவில்லை, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இதில் எழாது. இந்த நிர்வாகம் சரியாக இயங்காத காரணத்தினாலும் நிர்வாகம் மாறிக்கொண்டேயிருந்ததாலும் தடைப்பட்டிருந்தது. ஆகவே அது மீண்டும் இயங்குவதற்கு உரிய சலுகைகளை அரசாங்கமோ அல்லது மின்வாரியமோதான் செய்ய வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது ஓட்டிக் கொண்டிருந்தால் ஏற்படக்கூடிய ஓர் ஆண்டு குறைந்த அளவு கட்டணத்தை வருகிற ஆண்டுகளிலே செலுத்திவிடுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதைத்தான் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். தவிர விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டண விகிதம் மிக மிகக் குறைவு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 28

சின்கோனா துறை

* வினா எண் 865—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு செய்தி அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'சின்கோனா' துறையினை தனி அமைப்பாக ஏற்படுத்தும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): சின்கோனாத் துறையை தனி அமைப்பாக மாற்றும் திட்டம் ஏதும் இப்போது இல்லை. சின்கோனா துறையினை நிர்வகிக்க ஒரு ஆட்சிக்குழு அமைப்பை அரசு இப்பொழுது ஏற்படுத்தியுள்ளது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆட்சிக் குழுவில் யார் யார் உறுப்பினர்களாக உள்ளார்கள். அவர்களுக்கு என்ன ஊதியம்; அது எப்படி செயல்படுகிறது; அதிலே ஏற்படும் நன்மைகள் என்ன என்பதைப் பற்றி விவரமாகத் தெரிவிக்க இயலுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் அவர்களே, அரசு அரசாணை நிலை எண் 156, வன மற்றும் மீனளத் துறை தேதி 2—3—1979-ல் சின்கோனாத் துறையை நிர்வகிக்க ஒரு ஆட்சிக்குழு அமைப்பினை ஏற்படுத்தியது. இவ்வாட்சிக்குழு 1—4—1979 லிருந்து இயங்கி வருகிறது. இந்த ஆட்சிக்குழு அமைப்பில் செயலாளர், வன மீனளத் துறை தலைவராகவும், செயலாளர், நிதித்துறை அல்லது அவர் நியமித்த ஒரு அதிகாரி ஒரு உறுப்பினராகவும், செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை ஒரு உறுப்பினராகவும், வனத்துறை தலைவர் (பொது) ஒரு உறுப்பினராகவும், இயக்குநர் சின்கோனாத்துறை, உறுப்பினராகவும் செயலராகவும், சின்கானாத துறையில் வல்லுநர்களாக உள்ளவர்களில் ஒருவர் இவ்வாட்சிக் குழுவில் நியமிக்கப்பட்டு அவர் ஆலோசனையும் பெறப்படும் விதத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

அதிகாரங்களைப் பொருத்தவரையில் இவ்வாட்சிக்குழு மாதம் ரூபாய் 2,500-க்கு மேற்படாத வகையில் பதவிகள் உருவாக்கலாம். இவ்வதிகாரம் தமிழ்நாடு பொதுப்பணி ஆணைக்குழுவின் அதிகாரத்திற்குட்பட்ட பதவி களுக்குப் பொருந்தாது. அரசிதழ் பதிவு அலுவலர்களின் நியமனம் அரசின் கருத்தினை பெற்ற பிறகுதான் நியமிக்க வேண்டும். இக் குழு ரூபாய் 25 லட்சத்திற்கு மேற்படாத தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலை சம்பந்தமான

1979 ஏப்ரல் 28]

வேலைகளை ஏற்று நடத்தலாம். மற்ற இனங்களில் ரூபாய் 5 லட்சத்திற்கு மேற்படாமல் செலவு செய்யலாம். துறையின் பணிகள் துரிதமாக முடிக்கப் போதுமான நிதி சம்பந்தமான அதிகாரங்கள் பகுதி அதிகாரிகளுக்குத் தரலாம்.

சின்கோனா மற்றும் துறையின் பொருட்களின் விலையினை நிர்ணயிக்கவும் அவைகளின் விற்பனையை ஏலத்தில் அல்லது ஒப்ப அறிவிப்பு மூலமாகச் செய்யலாம்.

விசேட வேலைகளுக்காக ஊக்கப் பரிசுகள், முன் பணச் சம்பள உயர்வு முதலியவைகளை ஊழியர்களுக்கு அளிக்கலாம். அரசிதழ் பதிவு அலுவலர் களை தோட்டங்களிலிருந்து தொழிற்சாலைக்கு மாற்றும்பொழுது தலைவரின் உத்தரவு பெற்றுத்தான் மாற்றவேண்டும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தற்பொழுது சின்கோனா நிர்வாகத்தை ஒரு டைரக்டர் மற்றும் அவர்களுடைய கீழ் உள்ள அதிகாரிகள் இதுவரையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் என்ன கெடுதலை அல்லது என்ன தவறுகளை கண்டு இந்தப் புதிய ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அது எப்படி சரியாகும்? நீங்கள் தான் சொல்லவேண்டும். எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது நீங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருக்கு நான் ஒன்று சொல்கிறேன், அமைச்சர் அவர்கள் அவசரமாகப் போயிருக்கிறார், அமைச்சருக்கு பதில் அவருடைய செயலாளர் பதிலளிக்கிறார், நடைமுறையில் நிர்வாகத்தை நடத்தும் அமைச்சருக்குத்தான் விவரங்கள் தெரியும், நீங்கள் அமைச்சர் வந்த பிறகு கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கேள்வி சம்பந்தப்பட்ட வரையிலும் 2, 3 துணைக் கேள்விகளுக்குத் தயாராக வைத்துக்கொள்ளும் வகையில் தான் வரக்கூடிய நிலைமையில் இருக்கிறது, அப்படி இருக்கையில் தனிக் கேள்வி எதற்கு?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் கேட்கிற கேள்விக்கு பதிலளிக்க விவரங்கள் அவரிடம் இல்லை. ஆகவே அமைச்சர் வந்த பிறகு கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, இந்த சின்கோனா துறை லாபத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. இந்தத் துறையிலே அதற்கு வேண்டிய ஒரு ஆட்சிக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். அந்தக் குழுவிலே அஃபிசியல்ஸ் எத்தனை பேர், நான்-அஃபிசியல்ஸ் எத்தனை பேர்? அஃபிசியல்ஸ் என்று சொல்லும்போது ரிட்டயர் ஆன அஃபிசியல்ஸ் அதில் இருக்கிறார்களா, எத்தனை பேர்? யார், யார்? என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, இந்த ஆட்சிக் குழுவிலே யார், யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று ஏற்கெனவே நான் சொல்லி விட்டேன்.

காட்டுமன்னார்குடி ஊராட்சி ஒன்றியம்

***வினா எண் 866—திரு. கே. சௌந்திரராசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்குடி ஒன்றியத்தை காட்டுமன்னார்குடி, ஸ்ரீமுஷ்ணம் (திருமலை) ஒன்றியம் என இரு ஒன்றியங்களாகப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) இதுபற்றி அவ்வொன்றியத்திலிருந்து ஏதேனும் தீர்மானம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தற்போது இல்லை.

(ஆ) & (இ) இவ்வினாக்கள் எழவில்லை.

1979 ஏப்ரல் 28]

திருக்கோவிலூர் பேரூராட்சி.

*வினா எண் 867—திரு. கோ. ரகோத்தமன், திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் டவுன் பஞ்சாயத்தை நகராட்சியாக மாற்றும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உத்தரவு பிறப்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (ஆ) 9—3—1979 நாளிட்ட அரசாணை பல்வகை எண் 381-ல் தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கும் திருக்கோயிலூர் பேரூராட்சியினை நகராட்சியாக மாற்ற முன்னறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கோ. ரகோத்தமன்: தலைவரவர்களே, வரும் தேர்தலுக்கு முன்பாக அதைப் பிரிக்க இந்த அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, உத்தேசம் உள்ளது.

வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்

*வினா எண் 868—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் வட்டம் வத்திராயிருப்பு பேரூராட்சியில் குடிநீர்த் திட்டத்திற்கென பேரூராட்சியின் சார்பில் ரூபாய் 16,500 ஆய்வுத் தொகை கட்டியும் குடிநீர்த் திட்டம் துவக்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் திட்டம் எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம். வத்திராயிருப்பு கட்டிய சரியான ஆய்வுத் தொகை ரூபாய் 15,500.

(ஆ) ஆய்வு களப்பணிகள் முடிவடைந்து, உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு வந்தபோது அங்கே மக்களுக்கு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவேன் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். வாக்குறுதி கொடுத்த அடிப்படையில் இப்போது அவர்களுடைய பதில் அமைந்

திருக்கிறது. ஆகையால் அதற்கான உத்தேச மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, குடிநீர் கொடுக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறேனே தவிர எந்தத் தேதியில் கொடுக்கிறேன் என்று சொல்லவில்லை. ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம் தயாரிப்பு தொடர்பாக தகுந்த நீர் ஆதாரத்தைக் கண்டுபிடிப்பதில் தாமதம் ஆனதால் அந்தத் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தயாரிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அதற்குரிய களப் பணிகள் தற்போது முடிவுபெற்றுள்ளன; முடிந்தவுடன் மதிப்பீடு தயாரிக்கப் பட்டு வருகிறது. இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு உத்தேச மதிப்பீடு மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், (இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை) இடமிருந்து கிடைத்தவுடன் பரிசிலித்து, அரசு ஒப்புதல் வழங்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அங்கு குடிநீர் திட்டம் தீட்டப்பட்டு, அது 'ஃபெயில்யூர்' ஆகி விட்டது. ஏனென்றால் சாக்கடை நீரும், குடிநீரும் ஒன்றாக கலந்து, மக்கள் விவரம் தெரியாமல் சாக்கடைத் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, இத் திட்டத்தை ஆரம்பிக்கும்போது குடிநீர்க் குழாயைத் தனியாகவும், சாக்கடைக் குழாயைத் தனியாகவும் போட ஏற்பாடு செய்யப்படுமா? அதற்கு மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, ரூபாய் மதிப்பீடு இன்னும் வரவில்லை என்று சொன்னேன். வந்தவுடன் அரசு ஒப்புதல் வழங்கும். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் குடிநீர் என்றால் அது குடிநீராகத்தான் இருக்கும். அதுவும் நன்றாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீராகக் கொடுப்போம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாறு அணைத் திட்டம்

***வினா எண் 869—திரு ரா. கிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் உள்ளாறு அணைத்திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி நெல்லை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் போடப் பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) வாசுதேவநல்லூர் உள்ளாறு அணைத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி நெல்லை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியது சம்பந்தமான தகவல் அரசிடம் இல்லை.

(ஆ) இத் திட்டம் 8,160 ஏக்கருக்கு பாசன உறுதியும், 2,630 ஏக்கர் ஆயக்கட்டு நிலத்திற்குப் பாசன வசதியும் அளிப்பதுடன், 810 ஏக்கர் ஒரு பாசன ஆயக்கட்டு நிலத்திற்கு இருபாசன வசதியும் அளிக்க வழி வகை செய்யும். இத்திட்டத்தின் மூலம் ராஜசிங்கப்பேரி ஏரி ஆயக்கட்டுதாரர்களுடைய முறைப்பாசன உரிமை பாதிக்கப்படும் என்று ஏற்கனவே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அதன் முடிவு தெரியும் வரை இத்திட்டத்தின் ஆய்வு தள்ளிப் போடப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே ஒரு வழக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட குளத்தைச் சேர்ந்தவர் வழக்கு போட்டதால் இந்தத் திட்டத்தைத் தள்ளிவைப்பது சரியா ? அதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக கதிர் வரக்கூடிய காலத்தில் கூட தீய்ந்து போகக் கூடிய பரிதாபகரமான நிலைமை ஏற்படுகிறது. ஆகையால், அந்தப் பகுதி ஏராளமான நெல் விளையும் பூமியாக இருப்பதால், அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். சட்டப் பிரச்சினைகள் எழுகின்ற நேரத்தில் அந்தத் திட்டத்தை தொடர்ந்து நடத்தாமல் சட்டப் பிரச்சினைகள் முடிந்து வழக்கு மன்றத்திலேயிருந்து தீர்ப்பு கிடைத்தவுடன் அதைத் தொடர்ந்து நடத்துவது தான் நல்லதாக இருக்கும் என்ற அடிப்படையில் தான் இப்படித் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இந்த வழக்கு தீர்ந்துவிட்டதாக நான் அறிகிறேன். அது ஒரு பக்கம் இருக்கட்டும். அதற்கு மேற்கே செண்பகவல்லி அணைக்கட்டு இருக்கிறது. அது கேரள மாநிலத்தின் எல்லையிலே அமைந்திருக்கின்றது. அது உடைந்து சேதம் அடைந்து விட்ட காரணத்தால் தண்ணீர் பூராவும் மேற்கு நோக்கி ஓடுகின்றது. இதற்காக சில இலட்சங்களை மட்டும் செலவு செய்தால் அந்தத் தண்ணீரை இந்தப் பகுதியிலுள்ள குளங்களுக்குக் கொண்டுவர முடியும். அப்போது ஏராளமான நீர் கிடைக்கும். ஆகவே அதை உடனடியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

இது குறித்து அமைச்சரவர்களிடம் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். ஆகவே உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு இதனைப் பரிசிலனை செய்து ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அரசு அது பற்றிப் பரிசிலனை செய்யும்.

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே, நான் கேள்வி கேட்கவில்லை. இப்போது இந்தக் கட்டிடம் இடிந்து ஒருவர் கீழே விழுந்திருக்கின்றார். அந்த நிகழ்ச்சி நம் பக்கத்திலேயே நடைபெற்றிருக்கிறது. ஆகவே ஒருவேளை நாம் இருக்கும் இந்தக் கட்டிடத்திற்கும் ஆபத்து வந்துவிடக் கூடாது. ஆகவே உடனடியாக அதைக் கவனிப்பதற்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை கவனித்து உடனடியாக அவைக்கு நான் தகவல் தெரிவிக்கிறேன்.

பல்லகச்சேரி ஏரிப்பாசனப் பகுதி

*வினா எண் 870—திரு. செஞ்சி இராமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் கட்டப்பட்டுள்ள சூளாங்குறிச்சி அணையினால் பல்லகச்சேரி கிராமத்திலுள்ள ஏரிப் பாசனப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு மாற்றுத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகத்தின் விற்பனை நிலையங்கள்

* வினா எண் 871—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகம் தனது சேல்ஸ் எம்போரியங்களை எந்தெந்த மாவட்டங்களில் நடத்திவருகிறது?

(ஆ) அதை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்த உத்தேசம் உள்ளதா?

1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தமிழ்நாடு கைவினைப் பொருள் அபிவிருத்திக் கழகத்தின் (Tamil Nadu Handicrafts Development Corporation Limited) விற்பனை நிலையங்கள், கன்னியாகுமரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தர்மபுரி மாவட்டங்கள் தவிர எல்லா மாவட்டங்களிலும் உள்ளன.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு புதிய விற்பனை நிலையம் ஆரம்பிக்க தகுந்த இடம் பார்க்கப்பட்டு வருகிறது. எஞ்சிய மாவட்டங்களில் புதிதாக விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்க தற்சமயம் உத்தேசமில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கைவினைப் பொருட்கள் என்று சொல்லக்கூடியவை எந்தெந்தப் பொருட்களிலே இருந்து தயாரிக்கப்படுகின்றன? பனையிலே இருந்து கிடைக்கின்ற பொருட்களை வைத்து அதிகமான கைவினைப் பொருட்கள் செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. அப்படி செய்கின்ற வாய்ப்பு இருக்கின்ற இடங்களில் எல்லாம் அதைச் செய்வதை ஊக்குவித்து அதனை விற்பனை செய்து, அதன் மூலமாக பல இடங்களில் உள்ள கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே அதைச் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, கைவினைப் பொருட்கள், கலைப்பொருட்கள் என்று சொல்லக்கூடியவை பல மூலப்பொருள்களாலே செய்யப்படுகின்றன. சிற்பங்கள் செய்வது, சந்தன மரங்களிலிருந்து கலைப் பொருட்கள் தயாரிப்பது, களி மண்ணிலே இருந்து பல பொருட்கள் செய்வது இப்படிப் பல வகைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பனைப்பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கக்கூடிய பொருட்களை விற்பனை செய்யக்கூடிய நிலையங்கள் காதி வாரியத்தின் மூலமாக நடத்தப்படுகின்றன. சில உயர்ந்த பொருட்களை விற்பனை நிலையத்தின் மூலமாகவும் நாம் இன்றைக்கு விற்பனை செய்து கொண்டு வருகின்றோம். இருந்தாலும் பனையிலே இருந்து கிடைக்கின்ற மூலப் பொருட்களை வைத்துத் தயாரிக்கப்படுகின்ற பொருட்களை விற்பனை செய்வதை அரசு இப்போது சில பகுதிகளில் துவக்கி இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்தக் கைவினைப்பொருள் சேல்ஸ் மையங்கள் சில இடங்களிலே காட்சியாக இருப்பதைப் போலக் காண்கிறோம். ஆகவே இவைகளின் விற்பனை இன்றையதினம் இலாபகரமாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு இந்தக் கைவினைப்

பொருட்களை அன்னிய நாட்டிலும் நமது நாட்டிலும் விற்பதற்கு வேறு சில முறைகளை அரசு கையாளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, கலைப் பொருட்களை விற்பனை செய்யக்கூடிய பூம்புகார் போன்ற விற்பனைக் கூடங்கள் கண்காட்சியைப் போல சிறப்பாக இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது விற்பனை நிலையங்கள் தானே தவிர வெறும் கண்காட்சிக் கூடம் அல்ல.

இந்த விற்பனையை அதிகரிப்பதற்கு அரசு என்னென்ன செய்திருக்கிறது என்று கேட்கிறார்கள். 1978-79-ம் ஆண்டு 181 இலட்ச ரூபாய் அளவிற்கு விற்பனை செய்திருக்கின்றார்கள். சராசரியாக 130 இலட்சம், 140 இலட்சம் என்ற அளவில் முன்பு விற்பனை நடந்ததை விட 40 இலட்ச ரூபாய் அளவிற்கு அதிகமாக இந்த விற்பனை நிலையங்கள் மூலமாக விற்றிருக்கிறோம். வெளி நாடுகளுக்கும் கலை நுட்பம் கொண்ட சிறப்புப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப் பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, கைவினைப் பொருள் அபிவிருத் திக் கழகத்தின் விற்பனை நிலையங்கள் நான்கு மாவட்டங்களில் இல்லாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு புதிய விற்பனை நிலையம் ஆரம்பிக்க ஆவன செய்வதாகவும் சொன்னார் கள். தர்மபுரி மாவட்டத்திலும் இன்னும் இரண்டு மாவட்டங்களிலும் அப்படிப் பட்ட நிலையங்களை ஏற்படுத்துவதற்குரிய என்ன தகுதியை அவை இழந் திருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 4 மாவட் டங்களில் இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்திருக்கிறோம். வெளி நாட்டுக்காரர்கள் வந்து செல்வது, அங்குள்ள மக்கள் தொகை, அது சுற்றுலா மையமாக இருக்கிறதா என்பதைப் பார்த்து இந்தக் கூடங்களை அமைத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தர்மபுரி மாவட்டத்தையும் கவனித்து எடுத்துக் கொள்ளப்படும்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் நவீன சவ்வரிசி ஆலை

***வினா எண் 872—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கள்ளக்குறிச்சி வட்டத்தில் மிக அதிகமாக மரவள்ளிக் கிழங்குகளைப் பயன்படுத்தும் வகையில் நவீன சவ்வரிசி ஆலை (Modern Sago Factory) ஒன்றை நிறுவ அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மரவள்ளிக் கிழங்குகளைப் பயன்படுத்தும் வகையில் பொதுத்துறையில் நவீன சவ்வரிசி ஆலை நிறுவ நடவடிக்கை எதும் மேற்கொள்ளப்படவில்லை. தொழில் முனைவர்கள் தனியார் துறையில் புதிய சவ்வரிசி ஆலை துவங்க முன் வந்து மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களை அணுகினால் அவர்கள் வேண்டிய உதவிகளைச் செய்வார்கள்.

திரு. துரை முத்துச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அதிகமாக மரவள்ளிக் கிழங்கு கிடைக்கின்றது. தனியாரே அதை நடத்தி லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக் கூடிய அனைத்துக் கட்சிகளின் சார்பாக அரசாங்கம் நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தென்னாற்காடு மாவட்டத்தில் ஏற்கெனவே 17 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. தனியார் யாராவது முன் வந்தால் அவர்களுக்குத் தேவையான உதவி செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

தமிழ்நாட்டில் விசைத்தறிகள்

*வினா எண் 873—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் இப்போதுள்ள மொத்த விசைத்தறிகள் எத்தனை?

(ஆ) மேலும் விஸ்தரிக்காமல் தடுக்கும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : (அ) தமிழகத்தில் 28,043 அனுமதி பெற்ற விசைத்தறிகள் உள்ளன. மேலும் சுமார் 30,000 விசைத்தறிகள் அனுமதியின்றி செயல்பட்டு வருகின்றன என்று தெரிகின்றது.

(ஆ) ஆம்.

(இ) இப்பொழுது அனுமதியுடன் இயங்கிவரும் விசைத்தறிகளின் திறன் அதிகரிக்கப்படமாட்டாது. தற்பொழுது அனுமதியின்றி இயங்கிவரும் விசைத்தறிகளைக் கடுமையான அபராதம் வசூலித்த பின்பே அவற்றிற்கு அனுமதியளிக்கப்படும். மேலும் விசைத்தறிகளை அனுமதியின்றி தோன்றுவதைத் தடுக்க மத்திய அரசுச் சட்டம் இயற்றப் போவதாகக் கூறியிருக்கின்றனர்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விசைத் தறிகளைப் புகுத்தி இன்றைக்கு அதில் நெசவுத் தொழில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அந்தக் காரணத்தை ஒட்டி அந்த விசைத்தறிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? அல்லது இனியாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, விசைத் தறிகள் அதிகமாகப் பெருவதன் காரணமாக, கைத்தொழில்கள் பாதிக்கப்படுகிறது என்பதை மாநில அரசு உணர்ந்து விசைத்தறிக் கட்டுப்பாட்டை மத்திய அரசு செயல்படுத்த வேண்டும் என்று மாநில அரசு கீழ்க்கண்ட தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் விசைத்தறிகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்சொன்ன வழிவகைகளைக் கருத்தில் கொண்டு மத்திய அரசை கீழே கூறப்பட்ட வழிகளில் நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசு கேட்டுக் கொண்டது :—

(1) மத்திய ஆயத் துறை அதிகாரிகளுக்கு (சென்ட்ரல் எக்சைஸ் அதாரிட்டீஸ்) அனுமதி இல்லாமல் செயல்படும் விசைத்தறிகளுக்கு எல். 4 உரிமம் வழங்கக்கூடாது என அறிவுரை செய்யப்படவேண்டும்.

(2) 19—6—1976 அன்று வரையில் செயல்பட்டு வந்த விசைத்தறிகளை ஒழுங்குபடுத்துவதற்கான அறிவுரைகள் அவசரமாக பிறப்பிக்கப்படவேண்டும்.

(3) 19—6—1976-க்குப் பின் செயல்பட ஆரம்பித்த அனுமதியற்ற விசைத்தறிகளை மாநில அதிகாரிகள் மூடிவிடவோ அல்லது கைப்பற்றவோ அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

(4) பஞ்சாலை ஆணையரின் பருத்தி துணி நூல் கட்டுப்பாடு உத்திரவுகளை தகுந்தவாறு திருத்தியமைத்து மாநில அதிகாரிகளுக்கு கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட ரகங்களை உற்பத்தி செய்யும் விசைத்தறிகளை மூடவும் கைப்பற்றவும் அதிகாரம் அளிக்க வேண்டும், மற்றும்

(5) மேற்சொன்ன கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யும் ஆணைகளை மூன்று முறை மீறிய விசைத்தறிகளின் உரிமங்களை ரத்து செய்ய வேண்டும் என்பது போன்ற அதிகாரங்களை மாநில அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

1979 ஏப்ரல் 23]

[முற்பகல் 9-30]

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் கைத்தறிக்கு ஒதுக்கப்படும் நூல்களைக் குறுக்கு வழியில் உபயோகித்து விசைத் தறிக்காரர்கள் கொண்டு போய் விடுகிறார்கள், இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, நூல்களைப் பொறுத்தளவில், கைத்தறிக்கு 'ஹாங் யார்ன்' என்ற நூலும், விசைத்தறிக்கு 'கோன் யார்ன்' என்ற நூலும் உற்பத்தி செய்யப்படுகிறது. கைத்தறிக்கு என்று தயார் செய்யும் நூலை விசைத்தறிகளில் பயன்படுத்த முடியாது.

திரு. யா. சை. மு. யூசுப்: கைத்தறிகளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் டிசைன்களை விசைத்தறிகளும் பயன்படுத்தி வருவதால், கைத்தறித் துணிகளில் கடுமையான போட்டி இருந்து வருகிறது. விசைத்தறிகள் அதிகாரமற்ற முறையில் சில டிசைன்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். அதிகாரமற்ற முறையில் இயங்கிவரும் விசைத்தறிகளுக்கு எப்படி மின்சாரம் வழங்குகிறார்கள்? அதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: விசைத்தறியாளர்கள் கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரகங்களை உற்பத்தி செய்யும் தங்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என அரசுக்கு முறையிட்டிருக்கிறார்கள். ஆனால், சேலம், திருச்செங்கோடு, கோவை, கரூர், ராஜபாளையம், சத்திரப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள விசைத்தறியாளர்கள் ரகக் கட்டுப்பாடு உத்தரவை மீறுகிறார்கள் என்றும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அடிக்கடி கைத்தறி நெசவாளர்கள் கிளர்ச்சி செய்து வருகின்றார்கள். ஒரு சில விசைத்தறிகாரர்கள் மத்திய அரசின் சார்பில் பம்பாய் பஞ்சாலை ஆணையாளரால் பிரசுரிக்கப்பட்ட ரக ஒதுக்கீடு உத்தரவு செல்லாது என மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக வழக்குகளைத் தொடுத்து மேற்படி ரக ஒதுக்கீடு உத்தரவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கவேண்டும் என்று கோரினர். ஆனால் சென்னை உயர்நீதிமன்றம், டெல்லி சுப்ரீம் கோர்ட் ஆகிய மன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளில் ரக ஒதுக்கீடு ஆணை செல்லும் என்றும் தமிழ் நாட்டிலுள்ள விசைத்தறி உற்பத்தியாளர்களால் தொடரப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளன.

விசைத்தறிகளுக்கு மின்சாரம் கொடுப்பது சம்பந்தமாக, அவர்கள் வீடுகளுக்கு வழங்கப்படுகின்ற மின்சாரத்திலிருந்தோ, கிணறுகளுக்கு வழங்கப்படுகின்ற மின்சாரத்திலிருந்தோ இந்த விசைத்தறியாளர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அனுமதி பெறாதவர்கள் தனியாக மின்சாரம் வேண்டும் என்று கேட்டு உரிமம் பெறுவதில்லை. அப்படிப் பெறுவதாக இருந்தால் அந்த உரிமம் ரத்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, அனுமதி பெறாத விசைத்தறிகளின் எண்ணிக்கை தான் அதிகமாக இருப்பதாக அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து தெரிகிறது. இந்த எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகிக் கொண்டே வருகிறது. மின்சாரக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில், வீட்டுக்காக கிடைக்கின்ற மின்சாரத்திலிருந்தோ அல்லது கிணறுகளுக்குக் கொடுக்கப்படும் மின்சாரத்திலிருந்தோ மின்சாரத்தைப்பெற்று இந்த அனுமதி பெற விசைத்தறிகள் இயங்கி வருகின்றன என்று தெரிகிறது. இதைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் கைத்தறிக்கும், விசைத்தறிக்கும் உள்ள இணைப்பான கொள்கை ரீதியாக அரசின் முடிவு என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரதராஜன் அவர்கள், துணைக் கேள்வியாக கேளுங்கள், நீண்ட உரையாற்றாதீர்கள்.

திரு. என். வரதராஜன் : நான் கேட்கின்ற இந்தக் கேள்விக்கு இப்போது பதில் அளிக்காவிட்டாலும், இந்த விஷயத்தில் அரசு ஒரு உறுதியான முடிவுக்கு வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அரசு நிச்சயமாகப் பரிசிலிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படும் துணிகளில், கைத்தறியில் உற்பத்தி செய்த துணி என்று சீல்களைக் குத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள். கைத்தறி ரகத்தை மட்டும்தான் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதற்கு என்ன ஏற்பாட்டை அரசு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையில் கைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் துணிகளைத் தான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்திருக்கிறது. ஆனால் விசைத்தறிகள் வைத்திருக்கின்ற சில தனிப்பட்டவர்கள் தங்களுடைய துணிகளை ஏற்றுமதி செய்து வருவதாகத் தெரிகிறது. இதைக் கட்டுப்படுத்துவது

1979 ஏப்ரல் 28]

பம்பாயிலுள்ள டெக்ஸ்டைல் கமிஷன்தான். அவர்களுடைய அதிகாரத்திற்கு உள்பட்டது தான் இது. மாநில அரசாங்கம் இதில் எத்தவிதமான நடவடிக்கையும் எடுக்க இயலாது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், 'ஹாங் யார்ன்' என்றும் 'கோன் யார்ன்' என்றும் நூல்களைப்பற்றிச் சொன்னார்கள். இவைகளைப் பார்த்தால் சைனா மொழிகளைப்போல் இருக்கிறது. தனித்தனியாக இந்த நூல்களை எப்படிக் கண்டுபிடிக்கிறார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'யார்ன்' என்பது ஆங்கிலச் சொல் தான். ஹாங்-கோன் என்ற வார்த்தைகள் வந்தால் சைனா மொழி என்று எடுத்துக் கொள்ளவேண்டாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்த நூல்களைத் தனித் தனியாகப் புரிந்துகொள்ள ஏதாவது வழிவகை இருக்கிறதா? அதே நேரத்தில் அனுமதி பெறாமல் இயங்கிக் கொண்டிருக்கின்ற பவர் லூம்களின் பேரில் அனுமதிபெற்று நடத்தக்கூடிய பவர் லூம்காரர்கள் மிக ஆத்திரத்தோடு இருந்து வருகிறார்கள். ஆகவே அனுமதி பெறாமல் நடத்தக்கூடியவர்கள் உபயோகப்படுத்தும் கரன்ட்-க்கு சார்ஜையாவது அதிகப்படுத்த முடியாதா? அந்த முறையில் ஏதாவது பனிஷ்மென்ட் கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, பொதுவாக நூற்பு ஆலைகளில் சிட்ட நூல்கள் கைத்தறிக்கு என்றும், கோன் அல்லது கண்டு நூல் விசைத்தறிக்காகவும் உற்பத்தி செய்யப்படுகிறது. சிட்ட நூல்களை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்று தான் மத்திய பஞ்சாலை ஆணையாளர் அறிவுரை செய்து வருகிறார். குறைந்த அளவுதான் கோன் நூல் தயாரிக்கப்படுகிறது. நம்முடைய கூட்டுறவு நூற்பு ஆலைகளிலும் ஒன்றிரண்டைத் தவிர, பிற நூற்பு ஆலைகளில் எல்லாம் சிட்ட நூல்களையே உற்பத்தி செய்து வருகிறோம். அனுமதி பெறாத விசைத்தறிகள் பயன்படுத்தி வருகின்ற மின்சாரத்திற்குக் கட்டுப்பாடு செய்வது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனைகளை அரசு நிச்சயமாகப் பரிசிலிக்கும்.

திரு. வீ. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறி நெசவாளர்கள் தமிழகத்திலே 18,500 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு சார்பிலே ஒரு தொழிற்கூடம் அமைத்து, விசைத்தறித் தொழிலாளர்கள் வாழ வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலாளர்களுக்கு என்று தொழில் துறையின் சார்பாக தனிச் சட்டப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால், தனிப்பட்டவர்கள் 4, 5 விசைத் தறிகள் வைத்து தனியாகத் தொழில் செய்வதால், அவர்களுக்கு இதிலே வழிவகை செய்து கொடுக்க இயலாது. இப்போது அரசினுடைய கூட்டுறவுத் துறையின் சார்பிலே 1,200 விசைத்தறிகள் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலே இயங்கி வருகின்றன. அவர்களுக்கு உண்டான பாதுகாப்பு இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனுமதி கூட மத்திய அரசாங்கத்திலே இருந்து எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. குஜராத் மாநிலத்தில் ஏராளமான விசைத்தறிகள் இருப்பதாக நான் கேள்விப் படுகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் குறைந்தபட்ச எண்ணிக்கை இருக்கக்கூடிய விசைத்தறிகளை உடனடியாக அனுமதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ? அதோடு, இப்படி அனுமதிக்கப்படாத விசைத்தறிகள் இருப்பதன் காரணமாக, தொழிலாளர்களுக்கு சட்டப் பாதுகாப்பு இல்லாமல் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு முறைப்படி குறைந்தபட்ச சம்பளம் கிடைப்பதில்லை. அதை நிர்ணயிப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் முதற் பகுதி கேள்விக்கு என்னால் விடையளிக்க முடியும். இரண்டாவது பகுதி கேள்வி, தொழிற்துறை சம்பந்தப்பட்டது. அந்த அமைச்சரைக் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழக அரசு விசைத்தறிகளுக்கு உரிமங்கள் வழங்க கேட்டுக் கொண்டிருக்கிறது. நான்காவது திட்ட காலத்தில் 12,500 விசைத்தறிகள் ஒதுக்கப்பட்டுள்ளன, அதன் அடிப்படையில் அனுமதியின்றி இயங்கிவரும் விசைத்தறிகளில் 6,591-க்கு மட்டும்தான் அனுமதி வழங்க முடியும். 1—9—1972-ல் உள்ள நிலவரப்படி மீதியுள்ள விசைத்தறிகளுக்கும் அனுமதி வழங்குவதற்காக தமிழ்நாட்டிற்கு 11,000 விசைத்தறிகளை ஒதுக்கும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டது. ஆனால், இதற்கு மத்திய அரசு அதிகப்படியாக இத்தறிகள் நிறுவ இதுவரையிலே அனுமதி வழங்கவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, எற்கனவே மொத்த விசைத்தறிகள் 28,000 இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவைகளில், 10 விசைத்தறிகளுக்கு அதிகமாக இருக்கக்கூடிய பாக்டரிகள் எத்தனை ? அதற்கும் குறைவாக

1979 ஏப்ரல் 28]

உள்ளவை எத்தனை என்பதை அறிவிக்க விரும்புகிறேன். இதிலே சட்டத்திலே இருந்து தப்பிப்பதற்காக, பினாமி பெயரிலே பல விசைத்தறிகள் இருக்கின்றன. அதைப்பற்றி அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா? அதைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இயலுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, 10-க்கு குறைவாகவும், 10-க்கு அதிகமாகவும் உள்ள விசைத் தறிகள் பற்றிய விவரப் பட்டியல் இப்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தரப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான நிலங்கள்.

வினா 851—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான நஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர்? புஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர்?

விடை—

தஞ்சை மாவட்டம், தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான நிலங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன :—

	நஞ்சை	புஞ்சை
	(ஏக்கரில்)	
1. ஆதீனகர்த்தரின் சொந்தப் பெயரில் உள்ள நிலங்கள்	16.02	5.63
2. தருமபுர மடத்தின் பெயரில் உள்ள நிலங்கள் (தரிசு, கல் பாறை நிலங்கள் உட்பட)	3,290.97	1,997.94
ஆலயங்கள் மற்றும் கட்டளைகள் பெயரில் உள்ள நிலங்கள்.	4,505.44	11,971.20
மொத்தம்	7,812.43	13,974.77

மதுவிலக்குக் குற்றங்கள்

வினா எண் 852—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு முதல் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 எப்ரல் மாதம் முதல் 1977 மார்ச்சு முடிய தமிழ்நாட்டில் கள்ளச் சாராயம் குடிப்போர் மீது போடப்பட்ட வழக்குகள் எத்தனை மாவட்ட வாரியாக?

(ஆ) கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீது மட்டும் போடப்பட்ட வழக்குகள் எத்தனை மாவட்ட வாரியாக?

(இ) போடப்பட்ட வழக்குகளில் தண்டனை அடைந்தவர்கள் எத்தனை பேர்?

(ஈ) தண்டனை அடைந்தவர்களிடமிருந்து அபராதமாக வசூலிக்கப் பட்ட தொகை எவ்வளவு மாவட்ட வாரியாக?

(உ) இந்தச் சட்டத்தை கடுமையாக்க திட்டம் ஏதேனும் பரிசீல னையில் உண்டா?

விடை—

பதிலுக்கான விவர அறிக்கை * சட்டப் பேரவை முன் வைக்கப் படுகிறது.

வினா 853—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977-78 ஆம் ஆண்டில் இதுவரை மதுவிலக்குக் குற்றங்களுக்காகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை மாவட்ட வாரியாக?

விடை—

பதிலுக்கான விவர அறிக்கை ** சட்டப் பேரவை முன் வைக்கப் படுகிறது.

வினா 854—திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 ஜூன் மாதம் முதல் 1978 மார்ச்சு மாதம் வரை தமிழகம் முழுவதும் சாராயம் காய்ச்சுபவர், சாராய விற்பனையாளர், சாராயம் குடித் தவர்கள் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?

பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

** 532-543 பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 ஏப்ரல் 28]

(ஆ) அதில் தண்டிக்கப்பட்டு சிறை சென்றோர் எத்தனை பேர்?

(இ) அபராத தொகை கட்டியவர்கள் எத்தனை பேர்?

(ஈ) வசூலான மொத்த அபராதத் தொகை எவ்வளவு?

விடை—

பதிலுக்கான விவர அறிக்கை * சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திருவல்லிக்கேணி தொகுதியில் குடியிருப்பு மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பெற்ற வீடுகள்.

வினா 855—திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாடு அரசு குடியிருப்பு மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 1974-ம் ஆண்டு திருவல்லிக்கேணி தொகுதி லாயிட்ஸ் சாலையிலுள்ள கோகுலம் காலனி, ராகவ நாயக்கர் தோட்டம் ஆகிய அரிசன பகுதிகளில் கட்டப்பட் டுள்ள குடியிருப்புகளுக்கு ஒதுக்கீடு செய்த தொகை எவ்வளவு?

(ஆ) இந்த குடியிருப்புப்பணி முழுமையாக முடிந்துவிட்டதா?

(இ) இல்லையெனில், காரணமென்ன?

விடை—

(அ) தமிழ்நாடு அரசு குடியிருப்பு மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 1974-ம் ஆண்டு திருவல்லிக்கேணி தொகுதி லாயிட்ஸ் சாலையிலுள்ள கோகுலம் காலனி, ராகவ நாயக்கர் தோட்டம் ஆகிய அரிசன பகுதிகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு ஒதுக்கீடு செய்த தொகை ரூ. 9,18,000.

(ஆ) இக்குடியிருப்புப்பணி, மின் இணைப்புக் கொடுப்பதைத் தவிர அனைத்தும் முடிந்துவிட்டன.

(இ) மின் இணைப்பிற்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை இப் பணியை முடிக்கப் போதுமானதாக இல்லை. தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநரிடமிருந்து திருத்திய மதிப்பீடு பெறப் பட்டு அரசால் அங்கீகரிக்கப்பட்டபின், மின் இணைப்புப்பணி முடிக்கப் படும்.

* 544-545ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1979 ஏப்ரல் 28

அரிசன மாணவர் இல்லங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள்.

வினா 856—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் கட்டிடங்களில் உள்ள அரிசன மாணவர் இல்லங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டுவது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் 100 அரசு அரிசன மாணவர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கட்ட 1974-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாக இக்கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை தாழ்த்தப்பட்ட மாணவ விடுதிகள் 35-ம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்பட்டோர் நல விடுதிகள் 5-ம் பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகள் 17-ம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 14 விடுதிகள் 1979 ஜூன் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும்.

செட்டிப்பாளையம்-அரசம்பாளையம் சாலை.

வினா 857—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, மதுக்கரை ஒன்றியம், செட்டிப்பாளையத்தில் இருந்து அரசம்பாளையம் வரை கிராமப்புற சாலை அமைக்க 5—11—1977-ல் பொது மக்கள் கொடுத்த விண்ணப்பத்தின்பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

செட்டிப்பாளையத்திலிருந்து அரசம்பாளையம் வரை 6.4 கிலோ மீட்டர் நீளம் சாலையை அமைத்து மேம்பாடு செய்ய சுமார் 4.00 இலட்சம் மதிப்பீட்டில் 4-ம் கட்ட வேலையாக கிராம சாலைகள் திட்டத்தின்கீழ் அரசின் நிதி நிலமை, வேலையின் முக்கியத்துவம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு செயல்படுத்துவதுபற்றி பரிசிலனை செய்யப்படும்.

மானாமதுரை ஒன்றியத்தில் இணைப்புச் சாலைகள்.

வினா 858—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள, கருவக்குடி, அரசகுளம், இராமநேந்தல், கிலாங்காட்டூர், முகவூர், கில்வுகுடி, பொட்டப்பஞ்சேரி ஆகிய கிராமங்களுக்கு இணைப்பு சாலைகள் அமைத்துத் தரும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

விடை—இல்லை

1979 ஏப்ரல் 28]

காட்டுக்குறிச்சி சாலை பழுதுபார்த்தல்.

வினா 859—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், காட்டுக்குறிச்சி சாலை சுமார் 2 கி.மீ. தூரம் மிகவும் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியம், காட்டுக்குறிச்சி காலனிக்குச் செல்ல 1-1/4 கி. மீட்டர் தூரம் சாலை அரிசன நலத்துறையால் 1978-ல் போட்டு முடிக்கப் பட்டுவிட்டது.

நத்தம் மலைப் பகுதியில் செக்-டாம் அமைத்தல்.

வினா 860—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதியில் உள்ள மலைப் பகுதியில் வெள்ளப் பெருக்கால் சாகுபடி நிலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க செக்-டாம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

விடை—இல்லை.

நாமக்கல் தொகுதியில் அரிசன மக்களுக்காகக் கட்டப்பெற்ற வீடுகள்.

வினா 861—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதியில் 1967 முதல் 1975 ஆம் ஆண்டு வரை அரிசன மக்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை ?

(ஆ) அந்த வீடுகளில் இடிந்துள்ளவை அல்லது சேதம் அடைந்துள்ள வைகள் எத்தனை ?

விடை—

(அ) நாமக்கல் தொகுதியில் 1967 முதல் 1975-ம் ஆண்டு வரை அரிசன மக்களுக்காக 178 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) அனைத்து வீடுகளும் நல்ல நிலையில் உள்ளன.

ஆத்தூர் தாலுக்காவில் குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா 862—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலூகாவில் மாவள்ளிக்கிழங்கிலிருந்து குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

விடை—

(அ) & (ஆ) தற்போது நம் நாட்டில் குளுகோஸ் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் ஏழு நிறுவனங்களின் மொத்த நிறுவப்பட்ட உற்பத்தித்திறன் 80,000 டன்கள் ஆகும். ஆனால், 1977 ஆம் ஆண்டு மொத்த உற்பத்தி 28,000 டன்களே ஆகும். எனவே, சேலத்தில் ஒரு குளுகோஸ் தொழிற்சாலை நிறுவுவது குறித்து சாத்தியக் கூறுகள், குளுகோசிற்கு கிராக்கி அதிகமானவுடன் பரிசீலிக்கப்படும்.

ஆத்தூர்-ராசிபுரம் நெடுஞ்சாலையில் பாலம்.

வினா 863—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர்-ராசிபுரம் நெடுஞ்சாலையில் 3-வது கிலோமீட்டரில் ஒரு பாலம் கட்டும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும் ?

விடை—

(அ) & (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள இடமானது இராசிபுரம்-ஆத்தூர் நெடுஞ்சாலையில் (அரசு மாவட்ட பெருஞ்சாலை), கிலோமீட்டர் 54/2 இல் உள்ளது. இவ்விடத்தில் உள்ள ஓடையின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால், அங்கு 15 மீட்டர் நீளத்திற்கு ரூ. 20,000 செலவில் ஒரு கடினப் பரப்பு (hard bed) அமைத்தாலே போதுமானது என்று கருதப்படுவதால் இதனைப் பராமரிப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள தலைமை பொறியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1979 ஏப்ரல் 28]

Travel concessions to physically handicapped persons in buses.

Q 864.—S. M. VASAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) Whether free passes or passes at concession rates **are** provided to the physically handicapped in the State Transport Undertakings ; and

(*b*) if so, the details thereof?

விடை—

(அ) ஆம். பல்லவன் போக்குவரத்து கழக (பெருநகர்) பிரிவில் மட்டும்.

(ஆ) பல்லவன் போக்குவரத்துக் கழக பெருநகர் பிரிவு இயக்கும் பேருந்துகளில் சென்னையிலிருந்து 15 மைல் சுற்றளவில் இலவசமாக பயணம் செய்ய மாதாந்திர பயண சீட்டுகள் அங்கஹீனமானவர்களுக்கு அவர்களின் அங்கஹீனத்திற்காக சிகிச்சை பெறும் காலத்தில் மட்டும் அவர்கள் குடியிருக்கு மிடத்திலிருந்து சிகிச்சை பெறும் மருத்துவ மனைக்கு சென்று வர வழங்கப் படுகிறது. இப்பயண சலுகையினை பெற அங்கஹீனத்திற்கான சான்றித ழுடன் (இலவச பயண அனுமதி வழங்கப்படும் தேதியிலிருந்து மூன்று வருடங் களுக்கு மேற்படாமல் சான்றிதழ் இருத்தல் வேண்டும்). சிகிச்சை பெறும் மருத்துவ மனையில் வழங்கப்பட்ட சீட்டினையோ அல்லது மருத்துவரால் சிகிச்சை பெறுவதற்காக வழங்கப்படும் சீட்டினையோ காண்பித்தல் வேண்டும்.

அரிசனங்கள் மற்றும் மலை வாழ் மக்களுக்கான குழந்தைகள் காப்பகம், சமுதாயக் கூடங்கள்.

வினா 865—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் குழந்தைகள் காப்பகமும், கம்யூனிட்டி சென்டர் கட்டிக்கொடுக்கும் செயல்திட்டம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ? மாவட்ட வாரியாக.

விடை—

(அ) மற்றும் (ஆ) அறிக்கை* ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

* 546-548-ம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

கர்த்தா கவுண்டனேரி பழுதுபார்த்தல்

வினா 866—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம் தீர்த்தமட பிர்க்கா—தீர்த்தமட கிராமத்திலுள்ள கர்த்தா கவுண்டனேரி பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை பழுதுபார்க்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது எதும் இல்லை.

நீலகிரி மாவட்டத்தில் புதிய அணைகள்.

வினா 867—திரு. என். கிட்டப்பா: மாண்புகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் புதிய அணைகள் கட்ட ரூ. 9.48 லட்சம் அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் புதிய தடுப்பு அணைகள் கட்டுவதற்கு ரூ. 9.48 லட்சம் மதிப்பீட்டில் அரசு ஆணை வழங்கியுள்ளது :—

வரிசை எண்.	தாலுக்கா.	பணியின் பெயர்.	திட்டமிட்ட செலவு. (ரூபாயில்)
1.	கூனூர்.	நெடுகுலா கிராமத்தில் ச.எண் 620-ல் ஒரு அணை கட்டுதல்.	16,500
2.	,,	நெடுகுலா கிராமத்தில் காப் பட்டிக்கு அருகில் ச.எண் 107-ல் ஒரு அணை கட்டுதல்.	21,000
3.	,,	நெடுகுலா கிராமத்தை சேர்ந்த நரிகிரி குக்கிராமத்தில் ச.எண் 133-ல் ஒரு அணை கட்டுதல்.	23,000

வரிசை எண்.	தாலுக்கா.	பணியின் பெயர்.	திட்டமிட்ட செலவு. (ரூபாயில்)
4.	கூனூர்	தெங்குமரகதா ஊராட்சியில் கல்லம்-பாளையம் கிராமத்தில் கோத்தகிரி கல்லாவின் குறுக்கே இப்போதிருக்கும் கொறம்புக்கு பதிலாக பிரிவு வாய்க்கால் கட்டுதல்.	1,64,000
5.	,,	நல்விமாயூர் கிராமத்திற்கு நீர் வழங்கும் ஏரிக்கு அருகே மேற்புறத்திலுள்ள ஓடைப்பகுதியில் குண்டுக்கல் ஹல்லா மற்றும் வாச வள்ளம் குறுக்கே தடுப்பு அணை கட்டுதல்.	36,000
6.	உதக மண்டலம்	மசினகுடி கிராமத்தில் செகூரின் குறுக்கே ஒரு அணை கட்டுதல்.	3,30,000
7.	,,	தும்மனுட்டி கிராமத்தில் ச.எண். 377-ல் ஒரு அணை கட்டுதல.	63,000
8.	,,	நாஞ்சநாடு கிராமத்நில் ச.எண். 215-ல் ஒரு அணை கட்டுதல்.	1,00,000
9.	கூடலூர்	மாங்குழி கிராமத்தில் ச.எண். 33-1 எ-ல் ஒரு அணை கட்டுதல்	20,000
10.	,,	நெல்லியாலம் கிராமத்தில் ச.எண். 444-ல் ஒரு அணை கட்டுதல்.	60,000
11.	,,	முப்புவாயலுக்கருகில் படந்துரை கிராமத்தில் ச.எண். 13-ல் ஒரு அணை கட்டுதல்.	22,000
12.	,,	படந்துரை கிராமத்தில் ச.எண் 71-72 ல் ஒரு அணை கட்டுதல்.	42,000
13.	,,	எருமாட் கிராமத்தில் முப்பகண்ணூரில் ச.எண். 74-ல் ஒரு அணை கட்டுதல்.	50,000
		மொத்த ரூபாய் ..	9,47,500 அல்லது 9,48,000

அரூர் குடிநீர்த் திட்டம்.

வினா 868—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

அரூர் குடிநீர்த்திட்டம் விரைவில் பூர்த்தி செய்து நகர குடிநீர் பஞ்சத்தைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தற்போது திட்டம் மேற்கொள்ளப் பட்டு வேலை நடைபெற்று வருகிறது. 1979-ம் ஆண்டு இறுதியில் குடிநீர் வழங்கப்படும்.

லாரிகளில் பயணம் செய்தோர் மீது நடவடிக்கை.

வினா 869—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978 ஆம் ஆண்டில் இதுவரை லாரிகளில் பயணம் செய்ததற்காக எவர் மீதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

விடை—

2,449 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வினா 870—திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977-78-ல் லாரிகளில் பயணிகளை ஏற்றக்கூடாது என்ற சட்டத்தை மீறியதற்காக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன?

விடை—

6,454 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

வன நிலங்களில் கால்நடைகளை மேய்ப்பதற்கான கட்டணம்.

வினா 871—திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம், வனச்சரகம், குத்தியாலத்தூர், திங்களூர் போன்ற கிராமங்களில் மலைவாழ் மக்கள் ஆடு மாடு மேய்க்க முன்பிருந்த கட்டணங் களை உயர்த்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு உயர்த்தப்பட்டுள்ளது?

(இ) பட்டி அமைத்து ஆடு மாடு மேய்ப்பதற்கு முன்பிருந்த கட்டணத்தை பத்து மடங்காக உயர்த்தப்பட்டுள்ளதா?

(ஈ) இந்த கட்டண உயர்வை அரசு ரத்து செய்யும் உத்தேசம் உண்டா?

1979 ஏப்ரல் 28]

விடை—

(அ) தமிழ்நாட்டில் உள்ள எல்லா அரசு வன நிலங்களிலும், கால்நடைகளை மேய்ப்பதற்கான கட்டணங்களை 1—7—1978 முதல் அரசு உயர்த்தியுள்ளது. ஆனால், காடுகளில் நடுவே இருக்கும் குடியிருப்புகளில் உள்ள மலைவாழ் மக்களின் கால் நடைகள், கட்டணமின்றி மேய அனுமதிக்கப்படுகின்றன.

(ஆ) ஒரு வருடம் பூராவும் காட்டில் கால் நடைகள் மேய்வதற்கு, கீழ்க்கண்ட கட்டணங்கள் விதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கால்நடைக்கும் கட்டணங்கள் பின்வருமாறு :—

	முன்பிருந்த கட்டணம். (தலைக்கு ஒராண்டிற்கு)	1-7-78 முதல் திருத்தியமைக்கப்பட்ட கட்டணம்.
	ரூ. பை.	ரூ. பை.
செம்மறியாடு ..	0.50	1.00
பசு, காளை ..	1.00	2.00
எருமை ..	2.00	4.00
கழுதை, குதிரை ..	2.00	4.00
யானை ..	20.00	30.00

(இ) ஆம், முன்பு கோவை தெற்கு வட்டத்தில் இருந்த 25 பைசா கட்டணமும் மற்ற பகுதிகளில் இருந்த 5 பைசா கட்டணமும் தற்போது 50 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஈ) தற்போது இல்லை.

மாவட்டங்களில் பட்டுபுழு வளர்ப்பு.

வினா 872—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்வுககு விடையளிப்பாரா—

மைய அரசின் பட்டுப்புழு வளர்ப்பு புதிய அனுமதியில் எந்த எந்த மாவட்டங்கள் சேர்க்கப்படவில்லை?

விடை—

மத்திய அரசின் தீவிர பட்டுப்புழு வளர்ப்பு அபிவிருத்தித் திட்டம் 1978-79 ஆண்டில் சென்னை, புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய தமிழ்நாடு முழுவதும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. நடப்பு ஆண்டில் இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் (சென்னை மாவட்டம் நீங்கலாக) அமுலுக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

[1979 ஏப்ரல் 28

பெருந்துறையில் அரசு மருத்துவனை.

வினா 873—டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறையில் அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம் உண்டா?

விடை—

இல்லை.

சென்னை மத்திய சிறையில் கைதி மரணம்.

வினா 874—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ந் தேதி சென்னை மத்திய சிறையில் ஆயுள் கைதியாக இருந்த ஆறுமுகம் என்பவர் மரணம் அடைந்து விட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 12—8—1978 அன்று பகல் 1-30 மணி அளவில் சிறை வாசிகள் தங்களுடைய மதிய உணவினை முடித்துவிட்டு தொழிற்சாலைகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்த வேளையில் பழைய 'பி' வகுப்பு சிறையின் மாடிப் படிகளிலிருந்து இறங்கும் பொழுது கைதி எண். 8266 ஆறுமுகம் என்பவருக்கு வலிப்பு ஏற்பட்டு கீழே விழுந்து விட்டார். இதனால் அவருக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனிருந்த கைதி உதவிக்காகக் குரல் எழுப் பினார். அபாய நிலையிலிருந்த கைதியைக் கண்ணுற்ற காவலர் சிறை வாசியை உடனே மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். முதலுதவிச் சிகிச்சைக்குப் பின்பு உடனேயே அவர் சென்னை அரசு பொது மருத்துவ னைக்குக் கொண்டு செல்லப்பட்டார். தீவிர சிகிச்சை அளித்தும் கூட, கைதி மாலை சுமார் 5.45 மணியளவில் காலமானார். மேற்படி சிறைவாசிக்கு வலிப்பு நோய் உண்டு. இதற்கு முன்பு சிறையில் அவருக்கு இது போன்று வலிப்பு வந்துள்ளது.

சென்னை மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளரால் பஞ்சாயத் தார் முன்னிலையில் உரிய விசாரணையும் நடத்தப்பட்டது. விசாரணையும் பிரேத பரிசோதனைச்சான்றும் கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்தினால் தான் கைதி இறந்தார் என்று உறுதிப்படுத்தியது.

1979 ஏபரல் 28]

விபத்துக்குள்ளாகிய மின்சார ஊழியர்கள்.

வினா 875—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஆகஸ்ட் 30-ம் தேதி மின்சார அதிர்ச்சி காரணமாக சென்னை மீர்சாகிப்பேட்டையில் வேலை செய்து கொண்டிருந்த மின்சார ஊழியர்கள் விபத்துக்குள்ளாகி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரா?

(ஆ) ஊழியர்கள் இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறார்கள்?

(இ) இதற்கான காரணங்கள் யாவை?

விடை—

(அ) ஆம்.

(ஆ) & (இ) குறைந்த அழுத்த மின் புதை கம்பிகளைச் சரிபார்த்த போது பக்க உயர்மின் கம்பிகளில் சேதமேற்பட்டு, அது வெடித்துச் சிதறிய தில் மூன்று உதவியாளர்கள் காயமுற்றனர். அவர்கள் இராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்து மீண்டும் பணியில் சேர்ந்து விட்டனர்.

சின்னாம்பதிக்கு சாலை அமைத்தல்.

வினா 876—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பேரூர் தொகுதியில் உள்ள மதுக்கரை ஒன்றியம் மாவுத்தம்பி கிராமத்தில் மலைவாழ்மக்கள் இருக்கும் சின்னாம்பதி செல்ல போடப்பட்ட பாதையின் மொத்த மதிப்பீடு என்ன?

(ஆ) பணி முடிவு பெறாமல் உள்ளதற்கு என்ன காரணம்?

விடை—

(அ) & (ஆ) ரூபாய் 54,890 செலவில் சீர் பருவச் சாலை திட்டத்தின் கீழ் சின்னாம்பதிக்கு மண்சாலை அமைக்கும் பணி 31—10—1976 இல் பூர்த்திசெய்யப்பட்டு மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தால் மேற்கொண்டு பராமரிப்புக்காக 23—5—1977-ல் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக்கும் பணிகள்.

வினா 877—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சிதம்பரம் அருகில் உள்ள பிச்சாவரத்தை சுற்றுலா இடம் அபி விருத்தி செய்ய ஒதுக்கப்பட்ட ரூ. 36 இலட்சத்தில் எவ்வளவு செலவு செய்யப்பட்டது?

(ஆ) இதுவரை என்னென்ன பணிகள் செய்து முடிக்கப்பட்டன?

விடை—

(அ) பிச்சாவரத்தை சுற்றுலா மையமாகக் மேம்படுத்த கீழ் குறிப்பிடப் பட்டுள்ள பணிகளுக்காக 1978-79-ல் தொகை ரூ. 4.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது—

1. உணவு அறை அடங்கிய ஓய்வுக் கூடம் அமைத்தல்.
2. பங்களா திட்டில் சிறிய தங்கும் இடங்கள் அமைத்தல்.
3. படகு துறை அமைத்தல்.
4. நிலம் கையகப்படுத்துதல், மற்றும் சாலை அமைத்தல்.
5. அடிப்படை வசதிகள் உருவாக்குதல்.

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தினால் இவற்றிற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன.

விளாத்தி குளம் அரசு மருத்துவ மனைக்கு பெண் மருத்துவ அதிகாரி.

வினா 878—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் அரசு மருத்துவமனைக்கு பெண் மருத்துவ அதிகாரி நியமிக்க உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படும்?

விடை—

(அ) & (ஆ) இல்லை.

திருமுட்டம் பகுதியில் கைப்பம்புகள் பழுது பார்த்தல்.

வினா 879—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், திருமுட்டம் பகுதியில் பஞ்சாயத்துக்கு உட்பட்ட குடிதண்ணீர் பைப்புகளில் 50 அடிக்கு மேல் அதிக ஆழமுள்ள கைபம்புகளை ரிப்பேர் செய்ய பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டா?

(ஆ) இல்லையெனில், அதிகாரம் வழங்கப்படுமா?

விடை—

(அ) இல்லை. தற்போதுள்ள ஏற்பாட்டின்படி எல்லா கைபம்புகளின் பராமரிப்பையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலரால் மேற்கொள்ளப்படும்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

1979 ஏப்ரல் 28]

ஊமத்தநாடு கிராமத்தில் சமூதாயக் கூடம்.

வினா 880—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பேராவூரணித் தொகுதி ஊமத்தநாடு கிராமத்தில் சமுதாய நல மன்றம் கட்டும் திட்டத்திற்கு அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அனுமதி அளிக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டில் சமுதாயக் கூடங்கள் கட்டும் திட்டத்தில் பேராவூரணித் தொகுதி ஊமத்தநாடு கிராமத்தில் சமுதாயக்கூடம் கட்டு வதற்கு அரசு ஒப்புதல் அளித்து, 20—11—1978 அன்று ஆணை பிறப்பித் துள்ளது.

பேராவூரணி அரசு மருத்துவ மனை.

வினா 881—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

பேராவூரணி அரசினர் மருத்துவ மனையில் எக்ஸ்ரே, இரத்த சேமிப்பு நிலையம், சோதனைக்கூடம் முதலானவற்றை நடப்பு நிதியாண்டில் தொடங் கும் திட்டம் ஏதேனும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

இல்லை

பழனியில் உள்ள கருணை இல்லம்.

வினா 882—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பழனி ஸ்ரீதண்டாயுதபாணி தேவஸ்தானத்தால் நடத்தப்பட்டு வரும் கருணை இல்லத்தில் எத்தனை குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர் ?

(ஆ) அவர்களுக்கு அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நிதி உதவி செய்கின்றது ?

விடை—

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்தால் கருணை இல்லம் ஏதும் நடத்தப்படவில்லை. ஆனால் 80 சிறுவர்களைப் பேணும் அனாதை இல்லம் ஒன்று நடத்தப்படுகிறது. இதற்காகும் செலவுக்கு அரசு நிதி உதவி செய்வதில்லை. செலவு முழுவதும் ஆலய நிதியிலிருந்தே ஏற்கப் படுகிறது.

விவசாய பொறியியல் தொழிற்சாலைகள்.

வினா 883—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள விவசாய பொறியியல் தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) இதில் பணியாற்றும் தொழிலாளர்கள் எண்ணிக்கை என்ன?

விடை—

(அ) 860

(ஆ) 5,957

அரசுத் துறைகளின்கீழ் உள்ள வாகனங்கள்.

வினா 884—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த ஜீப், கார், வான் ஆகியவற்றின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) டீசல் எண்ணெய் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை?

(இ) பெட்ரோலால் இயங்கும் வாகனங்கள் எவ்வளவு?

விடை—

(அ)	ஜீப்	3,310
	கார்கள்	333
	வேன்	1,430
	லாரிகள்	2,008
	மோட்டார் சைக்கிள்	677
	மொத்தம்	7,758

(ஆ) 2,262

(இ) 5,4[illegible].

1979 ஏப்ரல் 28]

கீழ்க்குப்பம் கிராம அரிசனங்களுக்கு மனைப் பட்டாக்கள்

வினா 885—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதி மட்டவெட்டு மதுரா கீழ்க்குப்பம் கிராம அரிசன மக்கள் வீடு கட்டியிருக்கும் நத்தம் புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை. மட்டவெட்டு கிராம ச. எண் 378 என்பது சேரிநத்தம் என 'ஏ' பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இந்நிலத்தில் நீண்ட காலமாக அரிசனங்கள் வீடு கட்டி வசித்து வருகின்றனர் என்றும் இந்த இடம் செட்டில் மெண்டு காலத்திலேயே ஜாரி செய்யப்பட்டது என்றும் விசாரணையிலிருந்து தெரிகிறது. எனவே இவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா கொடுக்கப்பட வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இடந்தவிர மேற்படி சேரிநத்தத்தில் இந்துக்களும் முகமதியர்களும் ஆக 9 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் ச. எண். 379/1ஏ-ல் உள்ள 0.83 ஏக்கர் புன்செய் நிலத்தினை ஆர்ஜிதம் செய்து 12 அரிசனங்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மகளிர் மாணிக்கம் கிராமத்தில் குழாய்க் கிணறுகள்

வினா 886—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் மகளிர் மாணிக்கம் குழாய் கிணறு போடப்பட்டு எவ்வளவு காலம் இயங்காமல் உள்ளது?

(ஆ) அதற்கான காரணம் யாது?

விடை—

(அ) 22—8—1978 முதல் 25—9—1978 வரையிலும் 22—11—1978 முதல் 7—12—1978 வரை பழுது பார்க்கப்பட்டு தற்பொழுது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

(ஆ) கைநீர் இறைப்பானின் இடிப்பாகத்தில் பொருத்தப்பட்டுள்ள சிலிண்டர் ஆழ்துளைக் குழாய்க் கிணற்றின் உள்ளே தவறி விழுந்திருந்த காரணத்தால் இயங்காமல் இருந்தது.

Part-time employees in Harur Panchayat Union Schools.

Q 887.—THIRU N. KITTAPPA. Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the remuneration paid to the part-time workers|employees of the Harur Panchayat Union Educational Institutions ; and

(b) the basis on which this amount has been fixed?

விடை—

(அ) & (ஆ) ஒன்றியத் தீர்மானத்தின் அடிப்படையில் 1—6—1971 முதல் 30—9—1977 வரை மாதம் ரூ. 45 வீதம் வழங்கப்பட்டது. அரசாணைப்படி 1—10—1977 முதல் இது ரூ. 30 ஆகத் திருத்தப்பட்டது.

Q 888.—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the details of the cadre for which part-time workers| employees are appointed in the educational institutions run by the Harur Panchayat Union ;

(b) the total number of them as on date employed ; and

(c) the number of years for which they have been employed now?

விடை—

(அ) பள்ளி நடத்தாட்டிகள் மட்டும்.

(ஆ) அறுபத்தி ஆறு.

(இ) ஏழரை ஆண்டுகள்.

அச்சங்குளம் கிராம பாலர் பள்ளி.

வினா 889—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, அச்சங்குளம் கிராமத்தில் பாலர் பள்ளி ஒன்று இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில் அதற்கு தனிக் கட்டிடம் கட்டும் உத்தேசம் உண்டா?

விடை—

(அ) ஆம்

(ஆ) அப்பாலர் பள்ளிக்கு கட்டிடம் கட்ட தற்போது ஏதும் திட்டமில்லை.

டேனிஷ் கோட்டையை சுற்றுலா மையமாக்கல்.

வினா 890—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டையை திருத்தி அமைத்து சுற்றுலா மையமாக ஆக்கிடும் செயற்குறிப்பு தற்போது எந்த நிலையிலுள்ளது ?

விடை—

தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டையை சுற்றுலா மையமாக ஆக்கிடும் செயற்குறிப்பு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

சேலம்-மாயூரம் பேருந்துப் பணி

வினா 891—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து விருத்தாசலம், சிதம்பரம், வழியாக மாயூரம் வரை ஓடிக்கொண்டிருந்த அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் யாவை ?

விடை—

(ஆ) ஆம்.

(ஆ) அந்தப் பேருந்து சேலம்-சிதம்பரம் என்ற அங்கீகரிக்கப்பட்ட நாட்டுடைமைத் திட்டத்தின்கீழ் சேலத்தில் இருந்து சிதம்பரம் வரை நிரந்தர அனுமதியின்பேரிலும், நாட்டுடைமைத் திட்டத்தின்கீழ் அடங்காத பகுதியான சிதம்பரத்திலிருந்து மாயூரம் வரை தற்காலிக அனுமதியின் பேரிலும் ஓட்டப் பெற்றுவந்தது. தற்காலிக அனுமதியைப் புதுப்பிக்கவேண்டி அணுகியபோது ஒரே தடத்தில் ஓடும் ஒரு பேருந்துக்கு இருவகையான அனுமதிகள் வழங்க இயலாதென மாநில போக்குவரத்து ஆணையர் அவர்களால் மறுக்கப்பட்டு விட்டது. எனவே அப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், பல்லவன் போக்குவரத்துக் கழகம் 15—11—1978 முதல் விரைவுப் பேருந்து தடம் எண் . 561-ல் இரண்டு பேருந்துகளை கோயம்புத்தூரிலிருந்து மாயூரத்திற்கு சேலம்-ஆத்தூர், விருத்தாசலம், சிதம்பரம் வழியாக நான்கு தடவைகள் இயங்க ஆரம்பித்துள்ளது.

Parks maintained by Madras Corporation.

Q 892 THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) the details of Parks belonging to the Madras Corporation, and

(*b*) the steps taken to maintain these public parks ?

விடை—

(அ) & (இ) அறிக்கை ஒன்று* அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கட்டப்பெற்ற வீடுகள்.

வினா 893—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் அரிசன வீட்டு வளர்ச்சி கழகத்தின் மூலம் அரிசனங்களுக்கு எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன ?

(ஆ) எந்தெந்த ஊர்களில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன ?

(இ) ஒரு வீட்டின் மதிப்பீடு என்ன ?

விடை—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அரிசனங்களுக்கு 5,000 வீடுகள் கட்டித்தர ஆணையிடப் பட்டுள்ளது.

(ஆ) வீடுகள் கட்டப்பட்ட ஊர்களின் ** விபரம் பேரவை முன் தனி யாக வைக்கப்பட்டுள்ளது.

(இ) ஒரு வீட்டின் மதிப்பீடு சுமார் ரூ. 6,000.

சொக்கம்பாளையத்திற்கு குடிநீர் வழங்கல்

வினா 894—திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை மாவட்டம், அவிநாசித் தாலுக்கா, சொக்கம்பாளையம் கிராமம் திருப்பூர் குடிநீர் விநியோகத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

*549-556-ம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

** 557-560 ம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 ஏப்ரல் 28]

விடை—

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 1,08,500-க்கு மதிப்பீடு தயார் செய்து அன்னூர் பேரூராட்சியின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன் சொக்கம்பாளையம் ஊரகத்திற்கான குடிநீர்த் திட்டம் மேற் கொள்ளப்படும்.

ஆழக்குழாய் கிணறுகள் அமைக்க ஆகும் செலவு

வினா 895—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் போடப்படும் ஆழ் குழாய் கிணறுகள் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு செலவு ஆகிறது?

விடை—

1. படிவப்பாறைப் பகுதியில் 6 அங்குலம் விட்டமுள்ள 300 அடி ஆழம் கொண்ட ஆழ்துளைக் குழாய்க் கிணறு போட ஆகும் செலவு சுமார் ரூ. 31,100.

2. கடினப் பாறைப் பகுதியில் 6 அங்குலம் விட்டம் 200 அடி ஆழம் கொண்ட ஆழ்துளைக் குழாய்க் கிணறு போட ஆகும் செலவு ரூ. 13,800.

3. கடினப்பாறைப் பகுதியில் 4½ அங்குலம் விட்டம் 150 அடி ஆழம் கொண்ட ஆழ்துளைக் குழாய்க் கிணறு போட ஆகும் செலவு சுமார் ரூ. 7,500.

இட்டிக்கல் அகரம், ஆலப்பட்டி கிராமங்களில் ஏரிகள் அமைத்தல்.

வினா 896—திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கிருஷ்ணகிரி ஒன்றியம் இட்டிக்கல் அகரம், ஆலப்பட்டி கிராமம் ஆகிய இடங்களில் புதிதாக ஏரிகள் அமைக்க திட்ட மதிப்பீடு போடப்பட்டுள் ளதா?

(ஆ) ஆம் எனில், அவை எப்போது கட்டி முடிக்கப்படும்.

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1. இட்டிக்கல் அகரம் கிராமத்தில் ஏரி அமைத்தல்:

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் (Drought Prone Areas Programme) ஆறாவது அய்ந்தாண்டு திட்டகாலத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்படுமானால், அதற்கான நிதி ஒதுக்கீடும் கிடைக்குமானால் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நீர்ப் பாசனத் திட்டங்களை ஆராய்ந்து அதற்கான பட்டியல் ஒன்றைத் தயாரித்து அனுப்புமாறு மத்திய அரசு, இம்மாநில அரசைக் கேட்டுக் கொண்டது அதன் படி, வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் ஆறாவது அய்ந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் நீர்ப்பாசன திட்டங்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு, அப்பட்டியல் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்பட்டியல் மேற்கண்ட ஏரி அமைக்கும் வேலையும் அடங்கியுள்ளது. இந்த வேலைக்கு ஆறாவது அய்ந்தாண்டு திட்டச் செயற் குறிப்புகள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அவர்களது ஒப்புதல் பெற்றபின் மாநில அரசின் அனுமதி வழங்கி, அதன் பிறகுதான் இவ்வேலை மேற்கொள்ளப்பட்டு கட்டி முடிக்கப்பட வேண்டும்.

2. ஆலப்பட்டி கிராமத்தில் ஏரி அமைத்தல்.

இதற்கான மதிப்பீடு தல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு, அவர்களது ஆய்வில் உள்ளது. நீர்ப்பாசனத் தலைமைப் பொறியாளரிடமிருந்து இவ் வேலைக்கான செயற்குறிப்புகள் பெறப்பட்டு அரசினால் பரிசீலிக்கப்பட்டு, அவர்களது அனுமதி வழங்கின பின்புதான் இவ்வேலை மேற்கொள்ளப்பட்டு, கட்டி முடிக்கப்படவேண்டும்.

New Police Stations in Dharmapuri district.

Q 897—THIRU K. APPUNU GOUNDER : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to open new police stations in Dharmapuri district ; and

(*b*) if so, the places where they are to be opened?

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Mullikadu Dam.

Q. 898—THIRU K. APPUNU GOUNDER : Will the Hon. the Mininster for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether the proposal for the construction of Mullikadu Dam in Harur taluk near Pappireddipatti in Dharmapuri district is pending with the Government ;

(*b*) if so, when it will be implemented ;

(*c*) the estimated cost thereof ; and

(*d*) the total acreage that can be irrigated by that dam ?

விடை—

(அ) & (ஆ) ரூ. 560 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(இ) இத்திட்டம் உடனடியாக செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படும்.

(ஈ) இத்திட்டத்தினால் 8,550 ஏக்கர் புதிய நிலங்கள் புன்செய் பாசனமும், ஏற்கனவே உள்ள 1,852 ஏக்கர் நன்செய் நிலங்கள் பாசன உறுதியும் பெறும்.

Check dams in Dharmapuri district.

Q. 899—THIRU K. APPUNU GOUNDER : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) the number of Check dams constructed in Dharmapuri district in the year 1977-78 ;

(*b*) the number of dams proposed for the year 1978-79 ; and

(*c*) the allotment made to Dharmapuri district for the year 1978-79 for the proposal ?

விடை—

(அ) 200 எண்ணிக்கை.

(ஆ) 255 எண்ணிக்கை.

(இ) மண்வளப் பாதுகாப்பு வேலைகளின்கீழ் தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன. வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் 1978-79-ம் ஆண்டில் மண்வளப் பாதுகாப்பு வேலைக்காக ரூ. 8 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தடுப்பு அணைகளுக்கான செலவும் மேற்கண்ட தொகையில் அடங்கும். இவ்வேலை மண்வளப் பாதுகாப்பு திட்டத்தில் இணைந்த வேலையாக மேற்கொள்ளப் படுவதால் தடுப்பு அணைகள் கட்டுவதற்கு மட்டும் குறிப்பாக எந்தவித ஒதுக்கீடும் கிடையாது.

தர்மபுரி மாவட்டத்தில் அரிசன குடியிருப்புகள்.

வினா 900—திரு. கா. அப்புனு கவுண்டர் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1977-78-ம் ஆண்டிற்கு தர்மபுரி மாவட்டத்திற்கு அரிசன நலத் துறையால் ஒதுக்கப்பட்ட இலவச வீடுகள் எத்தனை ?

(ஆ) அவைகளில் எத்தனை கட்டி முடிக்கப்பட்டன ?

(இ) 1978-79-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் எத்தனை ?

விடை—

(அ) 1977-78-ம் ஆண்டிற்கு தர்மபுரி மாவட்டத்திற்கு அரிசன நலத் துறையால் ஒதுக்கப்பட்ட இலவச வீடுகள்—நூற்று ஐம்பத்து நான்கு.

(ஆ) அவைகளில் 58 வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

(இ) 1978-79-ம் ஆண்டிற்கான அரிசன வீட்டுவசதி திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதுக்கோட்டையிலுள்ள இராணியார் அரசினர் மருத்துவமனை.

வினா 901—திரு. த. புஷ்பராஜு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரத்திலுள்ள, இராணியார் அரசினர்-மருத்துவ மனையை விஸ்தரிக்கும் அரசு செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திட்டச்சேரி பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கல்.

வினா 902—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திட்டச்சேரி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளதா?

விடை—

இல்லை. தற்போது ஆய்வுப் பணிகள் மட்டுமே நடந்து வருகிறது.

தச்சு மற்றும் கொல்லுத் தொழிலாளர்களுக்குத் தொழிற்கருவிகள் வழங்கல்

வினா 903—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கொல், தச்சு தொழிலாளி களுக்கு அரசு தொழில் கருவிகள் கொடுக்கிறதா ?

1979 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில் எவ்வளவு கடன், எவ்வளவு மானியமாக கொடுக்கப் படுகிறது?

(இ) எந்த அடிப்படையில் தொழிற்கருவிகள் வழங்கப்படுகிறது?

விடை—

(அ) & (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தச்சு மற்றும் கொல்லுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்கு கருவிகளும் இதர தளவாடச் சாமான்களும் வாங்க மூலதனச் செலவுக்கடனாக, கீழ்க்கண்ட நிதி உதவி அளிக்கிறது:—

	கடன்.	மான்யம்.	மொத்தம்
	ரூ.	ரூ.	ரூ.
தச்சுத் தொழிலாளி	250	250	500
கொல்லுத் தொழிலாளி	400	400	800

(இ) தச்சு மற்றும் கொல்லுத் தொழில் வல்லுநர்களை கண்டறிந்து அவர்கள் தேவையையொட்டி மேலே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் மான்யத் தொகைக்கு மேற்படாமல் நிதி உதவிகளை வாரியம் அளிக்கிறது.

கரிசல்குளம் கிராம அரிசன குடியிருப்புக்குக் குடிநீர் வசதி

வினா 904—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி வத்ராயிருப்பு ஒன்றியத்தை சேர்ந்த கரிசல்குளம் கிராமம் அரிசன பள்ளர் குடியிருப்புக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கும் (அடிபம்பு) திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இக்கிராமத்திற்கு ஏற்கனவே ஒரு அடிகுழாய் வறட்சி நிவாரணப் பணித்திட்டத்தின் கீழ் 1977-78-லேயே அமைக்கப்பட்டுள்ளது.

ருத்திரப்ப நாயக்கன்பட்டி சமுதாயக் கிணறு.

வினா 905—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம் ருத்திரப்பநாயக்கன்பட்டி சமுதாயக்கிணறு அங்குள்ள பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) & (ஆ) மோட்டார் பழுதுபட்டதால் சமுதாயக் கிணறு பயன் படாமல் உள்ளது. அதைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Electric Crematorium at Mylapore.

Q 906.—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any electric crematorium has been opened at Mylapore Burning Ghat in Madras ; and

(*b*) if so, the details thereof ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மின்சாரத்தால் இயங்கும் சுடுகாடு 31—7—1978 அன்று துவங்கப் பட்டது. இதன் மூலம் ஒரு பிணத்தை எரிப்பதற்கு ரூ. 50 வசூலிக்கப் படுகிறது.

Traffic Offences.

Q. 907—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) Whether the system of on the spot fine collection is to be adopted for traffic offences in Madras City ; and

((*b*) if so, the details thereof ?

விடை—

(அ) & (இ) போக்குவரத்து அதிகாரிகளால் வைப்புத் தொகை களை அந்தந்த இடத்திலே ஏற்றுக் கொள்ளுவது என்ற போக்குவரத்து சீட்டு வழங்கும் முறைக்கான (Traffic Ticketing System) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது. போக்குவரத்து விதிகளி லிருந்து மீறுபவர்கள் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட தொகையை வைப்புத் தொகையாக வைக்கலாமா அல்லது நீதிமன்றத்தினால் குற்ற வழக்கு தொடரலாமா என்பதை அவர்களின் விருப்பத்திற்கே விடும் அறிவிப்புள்ள கீட்டு வழங்கும் முறைக்கான செயற்குறிப்பு

அரிசனங்களுக்கு இலவச வீடுகள்.

வினா 908—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ம் ஆண்டில் அரிசன மக்களின் 5,000 வீடுகட்டும் திட்டம் அமுல்படுத்தப்பட்டதா ?

1979 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாது?

விடை—

(அ) 1977-78-ம் ஆண்டில் அரிசன மக்களுக்கு 5,000 வீடுகள் கட்டும் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

(ஆ) மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை விவரம் கீழ்வருமாறு உள்ளது:—

வரிசை எண்.	மாவட்டத்தின் பெயர்.	ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.
1	செங்கல்பட்டு	440
2	வட ஆற்காடு	432
3	தர்மபுரி	154
4	சேலம்	365
5	கோயம்புத்தூர்	400
6	நீலகிரி	60
7	தென் ஆற்காடு	674
8	தஞ்சாவூர்	500
9	திருச்சிராப்பள்ளி	609
10	புதுக்கோட்டை	185
11	மதுரை	380
12	இராமநாதபுரம்	448
13	திருநெல்வேலி	280
14	கன்னியாகுமரி	73
	மொத்தம் ..	5,000

Taxis and autorickshaws from Egmore and Central Stations.

Q. 909—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether Motor Vehicle Inspectors have been posted at the Egmore and Central Railway Stations to check malpractices by taxi and autorickshaw men ; and

(*b*) if so, the details thereof ?

விடை—

(அ) இல்லை. ஆனால் முறைகேடுகளைக் கண்டுபிடிப்பதற்காக திடீர் சோதனைகள் நடத்தப்படுகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Q. 910—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the steps taken by the Government to check malpractices by autorickshaw and taxi drivers at the Egmore and Central Railway Station in Madras

விடை—

கீழ்க்கண்ட முறைகேடுகளுக்காக டாக்சி மற்றும் ஆட்டோரிக்ஷா ஓட்டுநர்கள் குற்றவியல் நீதிபதியின் முன்னர் நிறுத்தப்பட்டு குற்ற வழக்குத் தொடரப்படுகிறது :—

1. ஓட்ட மறுத்தல் ;

2. மீட்டர் கட்டணத்துக்கு மேலாக கட்டணம் கேட்டல்; மற்றும்

3. குறைபாடுடைய மீட்டர்களை வாகனத்தில் பொருத்தியிருத்தல்.

சென்னை நகரில் 1978 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் பின்வருமாறு :—

1. ஓட்ட மறுத்தல்	262
2. அதிகக் கட்டணம் கேட்டல்	199
3. குறைபாடுடைய மீட்டர்	82

மூவரைவென்றான், கட்டயதேவன்பட்டி கிராமங்களில் தொழுநோய் தடுப்பு.

வினா 911—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி மூவரைவென்றான், கட்டயதேவன் பட்டி ஆகிய கிராமங்களில் குஷ்டரோகிகள் பெருமளவில் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறதா ?

(இ) மேற்படி பகுதிகளில் குஷ்டம் அதிக அளவில் பரவாமல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

1979 ஏப்ரல் 28]

விடை—

(அ) இல்லை. இக்கிராமங்களில் தொழுநோய் உள்ளவர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

கிராமங்கள்.	மக்கட் தொகை.	தொழுநோய் உள்ளவர்கள் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
திருவில்லிபுத்தூர்	59,000	379
மூவரைவென்றான்	679	23
கோட்டதேவன்பட்டி	844	25

(ஆ) தொழுநோய் உள்ளவர்களின் சிகிச்சைப் பெற்றவர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

	தொழு நோய் உள்ளவர்கள் சிகிச்சை பெற்ற விவரம்.
திருவில்லிபுத்தூர்	288
மூவரைவென்றான்	22
கோட்டதேவன்பட்டி	16

(இ) பொதுமக்களுக்கு தொழுநோய் பரவுவதை பற்றியும் அந்நோயை தடுப்பதற்கான முயற்சிகள் பற்றியும் அறிவுறுத்தப்படுகின்றன. ஒரே குடும்பமாக வாழும் மற்ற நோயுற்ற நபர்களை சந்திப்பதின் மூலமும் தொழுநோய் பரவுவது தவிர்க்கப்படுகின்றன. நலக் கல்வி பணியாளர்கள் மூலம் நலக் கல்வி பயிற்சியளிக்கப்படுகிறது.

ஆயதர்மம் பஞ்சாயத்து அரிசன பகுதிகளுக்குப் பாசன வசதி.

வினா 912—திரு. இரா. **தாமரைக்கனி** : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, ஆயதர்மம் பஞ்சாயத்தை சேர்ந்த அரிசனங்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளுக்கு பாதை அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதி ஆயதர்மம் பஞ்சாயத்தைச் சேர்ந்த அரிசனங்கள் வாழும் குடியிருப்பு பகுதிக்கு பாதை ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. பாதையில் கப்பி போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 28

திருப்பரங்குன்றம் முருகன் கோவில் குளம்.

வினா 913—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு அருகிலுள்ள தெப்பக் குளத்தில் சுற்றுச்சுவர் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) & (ஆ) திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் திருக்குளத்தின் சுற்றுச் சுவரை உடனடியாக செப்பனிட வேண்டியதின் அவசியத்தைக் கருதி இவ்வேலையைச் செய்வதற்கான நிர்வாக அனுமதி வழங்கவும், திருத்திய மதிப்பீடு தயாரிக்கவும் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நாகர்கோவில் அரசினர் பொது மருத்துவமனையில் "எக்ஸ்ரே" கருவி.

வினா 914—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தின் தலைமை மருத்துவமனையான நாகர் கோவில் அரசினர் பொது மருத்துவமனையில் கடந்த ஓராண்டு காலமாக "எக்ஸ்ரே" கருவி செயல்படாமல் பழுதடைந்த நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை யாவை?

விடை—

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள 'எக்ஸ்ரே' கருவிக்கு தேவையான உதிரி உறுப்புகள் (Spare Parts) மாற்றப்பட்டு அது தற்போது நல்ல முறையில் செயல் பட்டு வருகிறது.

பயணிகள் பாதுகாப்புச் சங்கம்

வினா 915—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பயணிகள் பாதுகாப்புச் சங்கம் என அமைப்பு ஒன்று உள்ளது அரசுக்குத் தெரியுமா?

1979 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், அதற்கான அங்கீகாரம் எதையேனும் அரசு அளித்துள்ளதா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

அரிசன நலத்துறை மாணவர் விடுதி இணைந்த உயர் நிலைப்பள்ளிகள்.

வினா 916—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரிசன நலத்துறை நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் விடுதி உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

விடை—

தமிழ்நாட்டில் அரிசன நலத்துறை நடத்தும் உயர்நிலைப்பள்ளிகளில் விடுதிகள் இணைந்த உயர்நிலைப்பள்ளிகள்—ஆறு (6) ஆகும்.

எஸ். கொடுக்குளம் கிராம புறம்போக்கு நிலம்.

வினா 917—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, எஸ். கொடுக்குளம் கிராமத்திலுள்ள அரசுப் புறம்போக்கு நிலம் 56.68 ஏக்கர் நிலம் வருவாய் துறையிலிருந்து ஒப்படைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு ஒப்படைக்கப்பட்டது?

(இ) அக்கிராமத்தில் உள்ள 12.83 ஏக்கர் மரப்பட்டா தரப்பட்ட உள்ளது?

விடை—

(அ) 101.16 ஏக்கர் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஆ) எந்த ஆண்டு எனச் சரியான தகவல் இல்லை.

(இ) தற்போது அந்தப் புறம்போக்கு நிலம் யாருடைய பொறுப்பில் 36.83 ஏக்கர் ஆகியவை நீங்கலாக மற்றவை பஞ்சாயத்தின் பொறுப்பில் உள்ளது.

கறைவளைஞ்சான்பட்டி கிராம அரிசனப் பகுதிக்குப் பாதை வசதி.

வினா 918—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, முத்து வெங்கிடராயபுரம் கிராமம் கறைவளைஞ்சான்பட்டி கிராமத்தில் வாழும் அரிசன மக்கள். தங்கள் ஊருக்கு செல்வதற்கு ரோடு வசதி (பாதை அமைப்பு) இல்லை என்பது உண்மையா?

(ஆ) அமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1979-80 ஆண்டில் இச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப் படவிருக்கிறது.

சேதுபாவா சத்திரம் குழந்தைகள் காப்பகக் கட்டிடம்.

வினா 919—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குழந்தைகள் காப்பகங்களுக்கு கட்டிடங்கள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குழந்தைகள் காப்பகங்களுக்கு கட்டிடங்கள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் தற்சமயம் ஏதும் இல்லை.

வத்திராயிருப்பு ஒன்றிய அண்ணா நகர் அரிசனக் குடியிருப்புக்குக் குடிதண்ணீர் வசதி.

வினா 920—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

திருவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம், கோபாலபுரம் அண்ணா நகர் அரிசனக் குடியிருப்புக் குடிதண்ணீர் வசதி செய்து தர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

1979 ஏப்ரல் 28]

விடை—

திருவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் கோபாலபுரம் அண்ணா நகர் அரிசனக் குடியிருப்புக்கு குடிதண்ணீர் குழாய்கள் அமைக்கப் பட்டுள்ளன. மேலும், ஓர் ஆழ்கிணறு அமைக்கும் திட்டம் உள்ளது. அவ் வேலை இன்னும் ஒரு மாதகாலத்திற்குள் முடிக்கப்படும்.

திருவில்லிபுத்தூர் தொகுதியில் புறம் போக்கு நிலங்கள் ஒப்படை.

வினா 921—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, சிங்கம்மாள்புரம் கிராமம், சர்வே எண் 587/39-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் வீடில்லாத பனை ஏறும் தொழிலாளிகள் 13 பேர் நிலவரி செலுத்தி குடியிருந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்த இடத்தை பட்டா செய்து தர செயற்குறிப்பு உண்டா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்படி நிலம் மேய்ச்சல் தரை புறம்போக்காக கிராம கணக்கு களில் உள்ளது. இதை நத்தமாக மாற்றி பனை மரத் தொழிலாளருக்கு ஒரி செய்ய திருவில்லிபுத்தூர் வட்டாட்சியரின் நடவடிக்கையில் இருக் கிறது.

வினா 922—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, சிவந்திபட்டி கிராமம், அழுதாகுளம் வடக்கு பக்க அரசு புறம்போக்கு நிலம் சர்வே எண் 113/3-ல் உள்ள நிலத்தில் வீடில்லாத பனை ஏறும் தொழிலாளிகள் சுமார் 20 வருட காலமாக தீர்வை செலுத்தி குடியிருந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அந்த இடங்களை பட்டா செய்து தர செயற்குறிப்பு உண்டா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) களம் புறம்போக்காக உள்ள இந்நிலத்தை பனை ஏறும் தொழிலாளர்களுக்கு ஒப்படை செய்ய நத்தம் புறம்போக்காக மாற்றுவதற்கு மாவட்ட வருவாய் அதிகாரி நடவடிக்கை எடுக்கிறார்.

வினா 923—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் கிராமம், வாழைக்குளம் சமீபம் வீடில்லாத 60 பனைமரம் ஏறும் தொழிலாளிகள் சுமார் 10 வருட காலமாக சர்வே எண் 544/1ஏ-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் நிலவரி செலுத்தி குடியிருந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்த இடங்களை அவர்களுக்கு பட்டா செய்து தரும் உத்தேசம் உண்டா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்படி நபர்களுக்கு மம்சாபுரம், சிவந்திபட்டி கிராமங்களில் குடியிருக்க வீடுகள் இருப்பதாக தெரியவருகிறது. மற்றும் சர்வே எண் 544/1-ஏ நிலம் கிராமக் கணக்கில் குளம் புறம்போக்காக உள்ளதால் அதை நத்தமாக மாற்றுவது குறித்து பொதுப்பணித் துறையினரின் கருத்துரையை மாவட்ட வருவாய் அதிகாரி கேட்டுள்ளார்.

ரெங்கபாளையம் ஊராட்சியில் இளநிலை பாடசாலை.

வினா 924—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஒன்றியம், மங்கலம் கிராமம், ரெங்கபாளையம் ஊராட்சியில் இளநிலை பாடசாலை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது?

விடை—

(அ) & (ஆ) ஏற்கனவே ஓர் இளநிலை பாடசாலை இயங்கி வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி

வினா 925—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி அமைக்க அரசிடம் குறிப் பேதும் உண்டா?

விடை—

இல்லை.

1979 ஏப்ரல் 28]

வடபாதி மங்கலம்-கோட்டூர் சாலை.

வினா 926—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி வடபாதிமங்கலம், காரியமங்கலம், சேர்ந்தமங்கலம் வழியாகக் கோட்டூர் வரும் சாலை மேம்பாடு செய்ய குறிப்பேதும் உண்டா?

(ஆ) அதன் திட்ட மதிப்பீடு என்ன?

விடை—

(அ) & (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் வடபாதிமங்கலத்தில் உள்ள திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைப் பகுதியில் வடபாதிமங்கலத்திலிருந்து கோட்டூர் வரை உள்ள சாலைக்கு மேம்பாடுத் திட்டம் என்ற சாலைப் பணிக்கு ரூ. 15.60 இலட்ச மதிப்பீட்டில் 1972 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. இப்பணிக்கு ரூ. 17.10 இலட்சத்திற்குத் தொழில்நுட்ப ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. இப்பணி முடிவடைந்து சாலை போக்குவரத்திற்கு உகந்த நிலையில் உள்ளது. எனவே, மேலும் மேம்பாடு ஏதும் தேவையில்லை.

இலந்தைக்குளம் கிராமத்திற்குப் பாசன வசதி.

வினா 927—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி இலந்தைக்குளம் கிராமம் மேற்குப் பகுதியில் மலையின் அடிவாரத்தில் உள்ள நிலங்களை பாசனத்தின்கீழ் கொண்டு வருவதற்காக கன்மாய் அமைக்கும்படி மக்கள் கோரியிருக்கின்றார்களா?

(ஆ) ஆம் என்றால் அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இலந்தைக்குளம் கிராமத்தின் அருகில் தலைமையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்க சுமார் 98 லட்சத்திற்கு முதனிலை அறிக்கை தயாரிக்கப்பட்டது. இது தற்போது திட்ட ஆய்வு வட்ட கண்காணிப்புப் பொறியாளரின் ஆய்வில் இருந்து வருகிறது.

[1979 ஏப்ரல் 28

மலைவாழ் மக்கள் ஆலோசனைக் குழு.

வினா 928—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்களின் வளர்ச்சிக்காக தனி போர்டு அமைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் தலைவர் யார்?

(இ) உறுப்பினர்கள் எத்தனை பேர்?

(ஈ) மலைப்பகுதி அடங்கிய தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்கள் எத்தனை பேர்?

(உ) அவர்களும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனரா?

விடை—

(அ) பழங்குடி மக்களின் நலனை ஆராய்ந்து அறிந்து தக்க ஆலோசனைகள் வழங்க "பழங்குடி மக்கள் ஆலோசனைக்குழு" ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) இந்த ஆலோசனைக்குழுவின் தலைவர் மாண்புமிகு அரிசன நல அமைச்சர் ஆவர்.

(இ) இந்தக்குழுவில் 20 உறுப்பினர்கள் உள்ளனர்.

(ஈ) மலைப்பகுதி அடங்கிய தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு பேர்கள்.

(உ) ஆம். அவர்களும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு உள்ளனர்.

வடாற்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள்.

வினா 929—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மொத்தமுள்ள கூட்டுறவு விவசாய கடன் சங்கங்கள் எத்தனை?

(ஆ) அதில் தவணை தவறிய கூட்டுறவு சங்கங்கள் எத்தனை?

(இ) தவணை தவறிய சங்கங்கள் உள்ள பகுதிகளில் விவசாய கடன் வழங்க மாற்று ஏற்பாடு ஏதாவது செய்யப் பட்டுள்ளதா?

விடை—

(அ) 343 சங்கங்கள்,

(ஆ) 340 சங்கங்கள்,

1979 ஏப்ரல் 28]

(இ) 340 தவணை தவறிய கூட்டுறவு சங்கங்களில் 119 சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் பெறத் தகுதியிழந்து விட்டன. தகுதியுள்ள உறுப்பினர்களுக்குப் புதிய வேளாண்மைக் கடன்கள் வழங்கும் நோக்கத்துடன் சங்கங்களின் நிதிநிலையை உயர்த்தவும், தவணை தவறிய நிலுவையைக் குறைக்கவும் மத்திய வங்கி, உறுப்பினர்களைத் தங்களது கடன்களைத் திரும்பச் செலுத்த இணங்கச் செய்ய பெருமுயற்சி எடுத்து வருகிறது.

வடாற்காடு மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

வினா 930—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1970 ஆம் ஆண்டிலிருந்து புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் எத்தனை? எந்த ஊர்களில்?

(இ) மொத்தம் எத்தனை கூடங்கள் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஐந்து.

1. புதுப்பாளையம்.
2. தண்டராம்பட்டு.
3. கலவை.
4. காவேரிப்பாக்கம்.
5. தக்கோலம்.

(இ) தற்பொழுது பதினெட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் ஒரு இடத்தில் (வேட்டவலம்) துணை விற்பனைக் கூடமும் செயல்படு கின்றன.

கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்கள்.

வினா 931—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் எத்தனை உள்ளது?

(ஆ) அலுவலகங்களில் வேலைப்பளு அதிகமாக இருப்பதால் கூடுதல் பணியாளர் கேட்டு கோரிக்கை வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) 60 கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்கள் உள்ளன.

(ஆ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

கலசப்பாக்கம் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

வினா 932—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் மேல் நிலைப்பள்ளிக்கு போதிய கட்டிடம் கட்டப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா—

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(இ) எப்போது கட்டிடம் கட்டப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ)

இப்பள்ளிக்கு 1977-ம் ஆண்டில் கட்டிடம் கட்டுவதற்கான ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. ஆனால், அவ்வாண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட புயல் மழை காரணமாக அரசினர் கழக உயர்நிலைப் பள்ளி கட்டிட பணிகளுக்கென ஒதுக்கப் பட்ட தொகை முழுவதும் புயலால் பாதிக்கப்பட்ட பள்ளிகளுக்கு செலவழிக்கும்படி உத்தரவிடப்பட்டதால் இப்பள்ளிக்கும் மற்ற கழக உயர்நிலைப்பள்ளிகளுக்கும் ஏற்கெனவே கட்டிடம் கட்டுவதற்கென வழங்கப்பட்ட ஆணைகள் ரத்து செய்யப்பட்டன. அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீடு கிட்டிய பின் இப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் கருத்துரு மறுபரிசீலனை செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 28]

வயோதிகக் கலைஞர்களுக்கு மானியம்.

வினா 933—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திலிருந்து நன்னிலம் பகுதியைச் சார்ந்த வயோதிகக் கலைஞர்களுக்கு மானியம் வழங்க 1978-79-ல் எத்தனைப் பேருக்குப் பரிந்துரை செய்து அரசிற்கு அனுப்பப்பட்டது?

(ஆ) அவர்களுள் எத்தனை பேர்களுக்கு உதவித்தொகை வழங்கப் பட்டது?

விடை—

(அ) ஒன்பது.

(ஆ) இந்த ஒன்பது விண்ணப்பங்களில் திரு. கே. வைத்தியநாதன் நடிகரின் விண்ணப்பம் ஏற்கனவே அரசின் பரிசீலனையில் இருந்து அரசாணை நிலை எண் 1974, கல்வி, தேதி 4—11—1978-ல் பிரதிமாதம் ரூ. 75 ஏப்ரல் 1978 லிருந்து மான்யமாக வழங்க ஆணையிடப்பட்டது. மீதி விண்ணப்பங்களின்மீது நிதியாண்டு 1979-80 துவக்கத்தில் முடிவெடுக்கப் படும்.

தஞ்சை மாவட்டத்திற்கு அனுமதிக்கப் பெற்ற பல் நிபுணர்கள்.

வினா 934—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளில் பல் நிபுணர்கள் இடங்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் பணியாற்றுவோர் எண்ணிக்கை என்ன?

விடை—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள அரசினர் மருத்துவ மனைகளுக்கு மொத்தம் அனுமதிக்கப்பட்ட பல் நிபுணர்களின் எண்ணிக்கை—7.

(ஆ) 4 பதவிகளில் பல் நிபுணர்கள் பணியாற்றி வருகின்றார்கள். 3 பதவிகள் காலியாகவுள்ளன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு 1978-ஆம் ஆண்டில் பல்நிபுணர்கள் வேலைக்கு தேர்வு செய்த வேட் பாளர்களை தமிழ்நாடு மருத்துவ பணியில் நியமிப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட வுடன் மேலே கூறிய காலியிடங்கள் நிரப்பப்பட்டுவிடும்.

புவனகிரி பகுதியில் வேள்ளாற்றின் கரைகள்.

வினா 935—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் வெள்ளாற்றில் புவனகிரியில் (பகுதியில்) ரிவிட்மென்ட் கட்ட எவ்வளவு தொகைக்கு காண்டிராக்ட் விடப்பட்டது?

(ஆ) அந்த வேலை எப்போது முடிவடையும்?

விடை—

(அ) வெள்ளாற்றில் புவனகிரி பகுதியில் ரிவிட்மென்ட் வேலை ஏதும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமுட்டம் பூவராகசாமி கோயில் நகைகள் திருட்டு

வினா 936—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்குடி வட்டம் திருமுட்டம் பூவராகசாமி கோயிலில் 1978-ம் ஆண்டு நகைகள் திருட்டுபோனது உண்மையா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன நகைகள் திருட்டு போனது?

விடை—

(அ) அருள்மிகு பூவராகசாமி ஆலயத்தில் 1978-ம் ஆண்டு நகைகள் திருட்டு போகவில்லை. ஆனால் மேற்படி ஆலயத்தில் 17—7—1977 அன்று நண்பகலில் 12 மணியளவில் சில நகைகள் களவு போனதாக அறநிலையத் துறைக்கு ஆலய செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

(ஆ) தாயார் உற்சவர் தங்க நகர கல்கிரீடம், தயார் உற்சவர் பவுன் கல்லிழைத்த திலகம், தாயார் உற்சவர் நித்தியப்படி சாத்துப்படியில் உள்ள பவுன் பதக்கம், விபூதிப்பட்டை பவுன், தாயார் உற்சவர் திருமாங்கல்யம், குண்டு, பவுன் தாம்புக்கயிறு சங்கிலியில் கோர்த்தது ஆகிய ஆபரங்கள் களவு போயிருந்தன. களவாடிய நபர் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது. மேலும் புலன் விசாரணை நடந்து வருகிறது. களவு போன நகைகளில் சில பகுதிகள் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

1979 எப்ரல் 28]

குமராட்சி ஊராட்சியை பேரூராட்சியாக மாற்றல்.

வினா 937—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்குடி வட்டம் குமராட்சி ஊராட்சி கிராமத்தை பேரூராட்சியாக மாற்ற செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முடியும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

Workers Employed in Match Units in Sivakasi.

Q. 938—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) total number of industries engaged in the manufacture of Matches in Sivakasi Taluk as on date ; and

(*b*) the total number of Men, Women and Children below the age of 14 employed in them ?

விடை—

(அ) ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாத்தூர் தாலுகாவில் (25—3—1979-ல்) தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை 1,360 ஆகும் (சிவகாசி சாத்தூர் தாலுகாவில் உள்ளது).

(ஆ) இத்தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் ஆண்கள் 3,703 பேர், பெண்கள் 11,291 பேர். 14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் 978 பேர்.

இலந்தைக்குளம் கிராமத்திற்கு அருகே புதிய அணை

வினா 939—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, இலந்தைக்குளம் பகுதியில் வரும் வெள்ளத்தைத் தடுக்க கவரி மலைக்கும் கண்ணியாகோயில் குட்டத்திற்கும் (குன்று) இடையில் ஓடுகின்ற ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால், எப்போது அணை கட்டப்படும் ?

விடை—

(அ) & (ஆ) தலைமலையாறு திருவில்லிபுத்தூர் வட்டத்தில் வத்திராயிருப்பு ஒன்றியத்தில் இலந்தைக்குளம் கிராமத்தின் வழியே ஓடுகிறது. இலந்தைக்குளம் கிராமத்தின் மேற்குப் பக்கத்தில் தலைமலையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் சாத்தியக்கூறுகளைக் கண்டறிய சனவரி 1979-ல் ஒரு முன்னோடி ஆய்வு நடத்தப்பட்டது. நீர்த்தேக்கம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இருப்பதால் சுமார் ரூபாய் 98 இலட்சத்திற்கு முன்னோடி அறிக்கை தயாரிக்கப்பட்டது. இது தற்போது திட்ட ஆய்வு வட்ட கண்காணிப்புப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது. விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் முடிவு எடுக்கப்படும்.

பெரம்பூர் தொகுதியில் குடிசை மாற்றுப் பணிகள்

வினா 940—திரு. சு. பாலன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் வீட்டு வசதி துறை மூலம் குடிசை வாழ் மக்களுக்கு குடிசை அமைத்து மாதத் தவணையில் குடிக்கூலி வசூல் செய்யப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில் அந்த இடங்களில் அவர்களுக்கு குடிசைகளை மாற்றி புது வீடுகள் கட்டித்தரவும் பாதை வசதி, வடிகால் வசதி குப்பைகளை அகற்ற அடிப்படை வசதிகளும் செய்து தர திட்டம் உள்ளதா ?

விடை—

குடிசைவாழ் மக்களுக்கு குடிசை அமைத்து மாதத் தவணையில் குடிக் கூலி வசூல் செய்யப்படுவதில்லை. எனினும் சென்னை நகரில் உலக வங்கி திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட குடியிருப்புகளில் கீழ்க்கண்ட அடிப்படை வசதிகள் செய்து தர திட்டமிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன—

(1) 10 வீடுகளுக்கு ஒரு குழாய் வீதம் அமைத்தல்.

(2) 10 வீடுகளுக்கு ஒரு கழிவறை மற்றும் ஒரு குளியலறை வீதம் அமைத்தல்

1979 ஏப்ரல் 28]

(3) 50 மீட்டர் நீளத்திற்கு நீள வாட்ட கழிவு நீர்க் குழாய் அமைத்தல்.

(4) 40 மீட்டர் தூரத்திற்கு ஒன்று விதம் தெருவிளக்குப் போடுதல்.

(5) மழை நீர் செல்ல சாலையின் இருபுறமும் கால்வாய் அமைத்தல்.

(6) 3 குழந்தைகள் காப்பகம் மற்றும் ஒரு உயர்நிலைப் பள்ளி அமைத்தல்.

(7) 21 குழந்தைகளுக்கான பள்ளிகள் அமைத்தல்.

(8) 13 தொழிற்கூடங்கள் அமைத்தல்.

மேலும் பெரம்பூர் தொகுதியில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கு குடிசை மாற்று வாரியம் மூலம் கேசவப்பிள்ளைப் பூங்காவில் 1,552 குடியிருப்புகளும், எம். எஸ். முத்து நகரில் 336 குடியிருப்புகளும் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வினா 941—திரு. சு. பாலன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரம்பூர் பகுதியில் குடிசைவாழ் மக்களுக்கு குடிசை மாற்றுவாரியம் மூலம் வீடு கட்ட திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு வீடுகள் கட்டப்படும்.

விடை—

(அ) ஆம்.

(ஆ) கேசவப்பிள்ளைப் பூங்காவில் 1,552 குடியிருப்புகளும், எம். எஸ். முத்து நகரில் 336 குடியிருப்புகளும் கட்டப்படும்.

Wages of Workers in Rural Textile Centres.

Q. 942—THIRU N. KITTAPPA: Will the Hon. Minister for Handlooms and Textiles be pleased to state—

(*a*) Whether the Tamil Nadu Khadi and Village Industries Board has increased the wages of women in their Rural Textile Centres in recent times; and

(*b*) If so, the details thereof?

(அ) & (ஆ): ஆம். கிராமிய நூற்பு நிலையங்களில் வேலை பார்க்கும் ஆண், பெண் அனைத்து நூற்பாளர்களின் ஊதியமும் 14—1-1979 முதல் கீழே கொடுக்கப்பட்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

நூல் நம்பர்.	இராட்டை விவரம்.	முன்புள்ள கூலி விகிதம்.	முன்புள்ள நல நிதி.	14—1—1979 முதல் உயர்த்தப்பட்ட கூலி விகிதம்.	14—1—1979 முதல் உயர்த்தப்பட்ட நல நிதி,
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
		(சிட்டம் ஒன்றுக்கு)		(சிட்டம் ஒன்றுக்கு)	
1	6 கதிர் டெல்லி மாடல் அம்பர் இராட்டை ..	0 22	0 01	0 23	0 01
2	6 கதிர் 33 மெட்ரிக் அம்பர் இராட்டை ..	0 14	0 01	0 18	0 01
3	6 கதிர் 56 மெட்ரிக் ..	0 16	0 01	0 20	0 01
4	6 கதிர் 70 மெட்ரிக் ..	0 18	0 01	0 22	0 01
5	12 கதிர் 33 மெட்ரிக் ..	0 11	0 01	0 14	0 01
6	12 கதிர் 56 மெட்ரிக் ..	0 13	0 01	0 16	0 01
7	12 கதிர் 100 மெட்ரிக்	0 18	0 01	0 20	0 01
8	6 கதிர் கள அம்பர் இராட்டை .	0 64	0 02	0 68	0 02

அர்ஜுனா நதியின் குறுக்கே தடுப்பு அணை.

வினா 943—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வடுகபட்டி கிராமம், களத்தூர் பக்கத்தில் அர்ஜுனா நதியில் கட்டப்பட்டுள்ள தடுப்பணையினால் களத்தூரிலுள்ள வீடுகள், விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 எப்ரல் 28]

விடை—

(அ) & (ஆ) புதுக்கோட்டை கண்மாய்க்கும் அதன் கீழ்வரும் கண் மாய்க்கும் தண்ணீர் அளிக்க அர்சுனா நதியின் குறுக்கே வடுகப்பட்டி கிராமம் அருகில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அணைக்கட்டின் இடது பக்கத் திலிருந்து புதுக்கோட்டை கண்மாய்க்கு ஒரு வரத்துக் கால்வாய் செல் கிறது. இதற்கு மதகு கிடையாது. இந்த வரத்துக் கால்வாய் அணைக் கட்டுவதற்கு முன்னமேயே உள்ளது. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெய்த பெரும் மழையில் இந்த வரத்துக் கால்வாய் பல இடங்களில் உடைப் பெடுத்ததனால் களத்தூர் கிராமத்தில் உள்ள நெல் வயல்கள் சேதமடைந் தன. மேலும் களத்தூர் கிராமத்தில் உள்ள வீடுகளும் அர்சுனா நதியின் பெரும் வெள்ளத்தால் சேதமடைந்தன.

இந்த சேதங்கள் அர்சுனா நதியின் குறுக்கே கட்டிய அணைக் கட்டி னால் ஏற்பட்டவை அல்ல. எனினும் அணைக்கட்டில் இருந்து புதுக் கோட்டை கண்மாய்க்கு செல்லும் வாய்க்காலில் தண்ணீர் செல்வதை ஒழுங்கு படுத்த ஒரு தலை மதகு கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பெற்ற கூட்டுறவுக் கடன்கள்.

வினா 944—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியில் 1974-75, 1975-76 1976-77, 1977-78 ஆண்டுகளில் வழங்கிய விவசாயக் கடன் எவ்வளவு ?

(ஆ) ஒவ்வோர் ஆண்டும் வசூல் சதவிதம் எவ்வளவு ?

விடை—

(அ) & (ஆ) கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியால் 1974-75 முதல் 1977-78 வரை வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள் வசூல் சதவீதம் விவரம் பின் வருமாறு :—

ஆண்டு.		வழங்கப்பட்ட கடன்கள்.		
		குறுகிய கால கடன்கள்.	நடுத்தர கால கடன்கள்.	வசூல் சதவீதம்.
(1)		(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்)		
1974–75	..	985.71	3.36	99.9
1975-76	..	1,327.23	0.30	97.1
1976-77	..	1,329·37	21·53	88·6
1977-78	..	1,497·48	30·38	91·0

[1979 எப்ரல் 28

வினா 945—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கியில் 1974-75, 1975-76, 1976-77, 1977-78 ஆண்டுகளில் வழங்கிய விவசாயக் கடன் எவ்வளவு?

(ஆ) ஒவ்வோர் ஆண்டும் வசூல் சதவிதம் எவ்வளவு?

விடை—

(அ) & (ஆ) தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கியால் 1974-75 முதல் 1977-78 வரை வழங்கிய விவசாயக் கடன்கள், வசூல் சதவிதம் விபரம் பின் வருமாறு :—

ஆண்டு.	வழங்கிய கடன்கள்.		
	குறுகிய கால கடன்கள்.	நடுத்தரக்கால கடன்கள்.	வசூல் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
1974-75	574·39	6·22	99·1
1975-76	681·11	9·47	98·6
1976-77	821·71	18·18	91·4
1977-78	821·13	45·08	92·6

வினா 946—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"1385 பசலி, 1386 பசலி, 1387 பசலி, 1388 பசலி ஆகிய விவசாயக் காலங்களில் ஒவ்வொரு பசலியிலும் தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்பெற்ற கடன் தொகை எவ்வளவு?

விடை—

ஆண்டு.	வழங்கப்பட்ட கடன்.	
	குறுகிய காலக் கடன்.	நடுத்தர காலக் கடன்.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
பசலி 1385 (1-7-75—30-6-76)	2,095·87	30·21
பசலி 1386 (1-7-76—30-6-77)	1,969·29	3 3
பசலி 1387 (1-7-77—30-6-78)	2,255·85	79·47
பசலி 1388 (1-7-78—28-2-79)	1,876·07	145·77

1979 ஏப்ரல் 28]

இளையங்கண்ணி அருகில் கட்டப்பெற்ற பாலம்.

வினா 947—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணையில் வலதுபுறக் கால்வாயில் சங்கராபுரம் சாலையில் இளையங்கண்ணி அருகில் ரூபாய் ஒரு லட்சம் செலவில் கட்டப்பட்ட பாலத்தினை இடித்து மீண்டும் கட்டப்பட்டதற்கு அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

விடை—

சாத்தனூர் வலதுபுறக் கால்வாயில் 16/848 கி. மீட்டரில் சங்கராபுரம் சாலையின் குறுக்கே அமைக்கப்பட்ட பாலத்தின் மதிப்பீடு ரூ. 45,000 ஆகும். இப்பாலத்தை கட்டும்போது பாலத்தின் ஒரு பகுதி தாக்கட்டுப்பாடுக்கு இணங்க கட்டப்படாததால் மீண்டும் புதிதாக அப்பகுதி சரியான முறையில் ஒப்பந்தக்காரரின் செலவிலேயே செய்யப்படல் வேண்டுமென ஆணையிடப்பட்டது. இவ்வாணைக்கேற்ப இப்பகுதி மீண்டும் ஒப்பந்தக்காரரின் செலவிலேயே கட்டப்பட்டது. இப்பாலம் இப்போது முடிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. அரசுக்கு இவ்வேலையில் எவ்வித நட்டமும் இல்லை.

சாத்தனூர் அணை பிரதானக் கால்வாயில் சிமெண்ட் பூச்சுப்பணி.

வினா 948—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணையின் 22 கி.மீ. நீளமுள்ள பிரதான கால்வாயில் 7 கி.மீ. சிமெண்ட்டால் பூசப்பட்டு மீதமுள்ள 15 கி.மீ. தூரமும் சிமெண்ட் பூச்சு செய்ய ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும்?

விடை—

(ஆ) & (ஆ) சாத்தனூர் அணை பிரதானக் கால்வாயில் சிமெண்ட் பூசப்படாமல் உள்ள மீதமுள்ள 15 கி.மீ. நீளத்தை சிமெண்டு பூச்சு அமைக்கும் பணிக்கான முதல் நிலை ஆய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் நிலை ஆய்வின்படி இத்திட்டம் சிக்கனமானதென்று தெரிந்த பின்னர் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதற்கு அரசு ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னரே பணிகள் தொடங்கப்படும்.

Part-time Lecturer posts in Madras Law College.

Q. 949—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of Part-time Lecturer posts vacant in the Madras Law College at present ; and

(b) the steps taken to fill up these posts

விடை—

(அ) இரண்டு.

(ஆ) ஒரு பதவியை நிரப்புவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மற்றொரு பதவி பிப்ரவரி 1979-லிருந்து தான் காலியாகவுள்ளது. அதை நிரப்புவதற்கான செயற்குறிப்பை சட்டக் கல்வி இயக்குநர் அரசுக்கு சமர்ப்பித்ததும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம்.

வினா 950—திரு. இ. தமிழரசன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் வடசேரி-மாரப்பட்டு ஊர் வழியாக பாலாற்றுக்குக் குறுக்கே கண்மாய் வைத்த தரைப்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு செயல்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன? எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) & (ஆ) 1975 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ரூ. 10.50 இலட்சத்திற்கு மேற்படி வேலையை எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. இதற்கிடையில் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), வேலூர், வாணியம்பாடிக்கும் ஜாபராபாத்துக்கும் இடையில் மத்தியசாலை விதியின் கீழ் பாலம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என அறிவித்தார். அத்திட்டத்தின்படி பாலம் கட்டி முடிந்துவிட்டதால் மேற்படி வேலையை தற்காலிகமாய் நிறுத்தி வைக்க சர்க்கரை இயக்குநர் உத்தரவிட்டார். மீண்டும் கிராம மக்கள் மற்றும் ஆலையினரிடமிருந்து வந்த வேண்டுகோளின்படி பாலாற்றின் குறுக்கே வடசேரி மாரப்பட்டு தரைப்பாலம் கட்டும் வேலையை எடுத்துக்கொள்ள கோரியதினால் மறுபரிசீலனை செய்து மீண்டும் எடுத்துக் கொள்ளலாம் என அரசுக்குச் சர்க்கரை இயக்குநர் சிபாரிசு செய்துள்ளார். 1978-79 ஆம் ஆண்டு முடிந்துவிட்டதால் சாலைப் பணிகள் 1979-80-ம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும்.

1979 ஏப்ரல் 28]

மருந்தியல் வகுப்புகளுக்கு விரிவுரையாளர்கள்.

வினா 951—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மருந்தியல் (Pharmacy) படிப்புக்கு இளநிலை மருந்தியல் பட்டதாரிகளையே விரிவுரையாளர்களாக நியமிக்கும் முறைக்குப் பதிலாக முதுநிலை மருந்தியல் பட்டதாரிகளை நியமிக்கும் உத்தேசம் உண்டா?

விடை—

இல்லை.

மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை.

வினா 952—திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்புகள் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) & (ஆ) இல்லை.

களக்காடு புதுக்கிராமச் சாலை.

வினா 953—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் களக்காடு, புதுக்கிராமத்தில் உள்ள அரிசனங்கள் சோட்டை தனியார் வெட்டி போக்குவரத்துக்கு இடையூறு செய்வது குறித்து அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், வடமலை சமுத்திரத்திலிருந்து புதுக்கிராமம் அரிசன காலனிக்கு செல்லும் சாலை களக்காடு நகர பஞ்சாயத்தைச் சார்ந்தது. இச்சாலையில் ஆக்கிரமிப்புகள் இருப்பதால், ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி 1978-79 ஆம் ஆண்டு அரிசன நல நிதியிலிருந்து சாலையை சீரமைக்கும் பணியை எடுத்துக் கொள்ளுமாறு களக்காடு பஞ்சாயத்து ஒன்றிய ஆணையருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 28

கிராமப் பகுதிகளில் பணியாற்றும் ஆயாக்களுக்கு பயணப்படி.

வினா 954—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் உள்ள தாய்-சேய் நல நிலையங்களில் பணிபுரியும் நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் மாதாந்திரப் பயணப்படியாகிய ரூ. 25 அங்கு பணியாற்றும் ஆயாக்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) & (ஆ) மூன்றாவது ஊதியக்குழு இச்சலுகையை புதிய வகை பணியாளர்க்கு மேலும் விரிவுபடுத்தி கொடுக்க பரிந்துரைக்கவில்லை. எனவே தாய்-சேய் நல நிலையங்களில் பணிபுரியும் ஆயாக்களுக்கு மாதாந்திர பயணப்படி தருவதற்கில்லை.

தொழுந்தம்பட்டு ஊராட்சியில் மேல்நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா 955—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் கொழுந்தம்பட்டி ஊராட்சியில் மேல் நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் வேலை முடிந்துவிட்டதா?

விடை—

விரைவில் முடிக்கப்படும்.

ஏர்வாடியில் பாசன வாய்க்கால் தலைப்பினை மாற்றி அமைத்தல்.

வினா 956—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் பொதுப்பணி துணைக் கோட்டத்திற்கு உட்பட்ட ஏர்வாடி கிராமவாசிகள் பாசன வாய்க்காலின் தலைப்பினை மாற்றித்தருமாறு கோரியுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்ந்து அதன்பின் ஆவன செய்யப்படும்.

1979 ஏப்ரல் 28]

அரிசன உயர்நிலைப்பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள்.

வினா 957—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ம் ஆண்டில் ஆய்வுக்கூட வசதியெற்ற அரிசன உயர்நிலைப் பள்ளிகள் பழங்குடி மாணவர் மாணவியர் உயர்நிலைப்பள்ளிகள் எவை?

(ஆ) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

(அ) 1977-78-ல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அய்ந்து தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகள் ஆய்வுக்கூட வசதி பெற்றன :

(1) உயர்நிலைப்பள்ளி, நெடுங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

(2) உயர்நிலைப்பள்ளி, காட்டேர்பாப்பாக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(3) உயர்நிலைப்பள்ளி, நல்லம்மாள்புரம், திருநெல்வேலி மாவட்டம்.

(4) உயர்நிலைப்பள்ளி, பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம்.

(5) உயர்நிலைப்பள்ளி, நாகல்கேணி, செங்கல்பட்டு மாவட்டம்.

(ஆ) ஆய்வுக்கூட கட்டிடங்கள் கட்டுவதற்கும், ஆய்வுக்கூட உபகரணங்கள் வாங்குவதற்கும் இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூபாய் 1,65,654.43 ஆகும்.

வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஆசிரியர்கள்.

வினா 958—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஆசிரியர் பயிற்சியில் தேறியவர்களுள் தற்போது வேலை கிடைக்காமலிருக்கும் ஆசிரியர்கள் எத்தனை பேர்? மாவட்ட வாரியாக?

விடை—

30—11—1978 அன்றைய நிலவரப்படி 41,669 பேர்கள் மாவட்ட வாரியான புள்ளிவிவரங்கள்* இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

* 561-564-ம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மாநகராட்சியில் மக்களை சந்திக்கும் திட்டம்.

வினா 959—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 30—9—1977 அன்று சென்னை மாநகராட்சியில் மக்களைச் சந்திக்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 702 கோரிக்கைகள் வரப்பெற்றன. அவற்றில் 601 கோரிக்கைகள் ரூ. 61,43,464 செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வழங்கப்பெற்ற கடன்களில் நிலுவை.

வினா 960—திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சிறுதொழில் வளர்ச்சிக்கு என கொடுக்கப்பட்டுள்ள கடன்கள் எத்தனை தொழிற்சாலைகளிலிருந்து எத்தனை கோடி ரூபாய் தற்போது பாக்கி வசூலிக்க வேண்டியுள்ளது?

விடை—

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் சிறுதொழில் வளர்ச்சிக்கென கொடுக்கப்பட்டுள்ள கடன்களில் 31—12—1978 தேதி நிலவரப்படி 1264 தொழிற் சாலைகளிலிருந்து 1.60 கோடி ரூபாய் பாக்கி வசூலிக்க வேண்டியுள்ளது.

Kalyana Mandapams

Q. 961—Thiru C. MANICKAM: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state the temples in the State under the control of the Hindu Religious and Charitable Endowments Department in which Kalyana Mandapams are available for the Public to celebrate their marriages?

விடை—

இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக்குட்பட்ட 84 ஆலயங்களில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் கல்யாண மண்டபங்கள் உள்ளன. அவற்றின் * விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

* 565-569-ம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 ஏப்ரல் 28]

கால்நடை உதவியாளர் பயிற்சிப்படிப்பு.

வினா 962—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கால்நடை உதவியாளர் பயிற்சிப் படிப்பை மீண்டும் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை—

கால்நடை பராமரிப்பு திட்ட செயல்பாட்டிற்கு தேவையான பணியாளர்கள் குறித்து விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. தேவைகளின் அடிப்படையில் இது குறித்து முடிவு எடுக்கப்படும்.

ஊத்தங்கரை வட்ட அரசு மருத்துவமனை.

வினா 963—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை வட்ட அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கான நவீன வசதிகளை செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

ஊத்தங்கரை மருத்துவமனை இருக்கும் இடத்தில் கட்டிடம் கட்ட இடமில்லை. ஊத்தங்கரை பஞ்சாயத்து 5 ஏக்கர் நிலமும் நன்கொடை ரூ. 10,000 மும் வழங்க முன் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிலமும், நன்கொடையும் பெறப்பட்டதும் கட்டிடம் கட்டுவது பற்றி தீர்மானிக்கப்படும்.

தர்மபுரி மாவட்டத்தில் அனாதை இல்லம்

வினா 964—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தர்மபுரி மாவட்டத்தில் அனாதை சிறுவர் இல்லம் உருவாக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

[1979 ஏப்ரல் 28

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

வினா 965—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1977 ஜனவரி முதல் ஜுலை முடிய எத்தனை லஞ்ச புகார்கள் லஞ்ச ஒழிப்பு பிரிவினருக்கு போய் உள்ளது?

(ஆ) அவைகளை விசாரித்த லஞ்ச ஒழிப்பு பிரிவினர் அரசுக்கு தங்கள் ரிப்போர்ட்டுகளை அனுப்பியுள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) ஒன்று.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஒன்றியங்களில் சித்த மருத்துவமனைகள்.

வினா 966—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எத்தனை ஒன்றியங்களில் சித்த மருந்துவமனை உள்ளது?

விடை—

தமிழ்நாட்டில் 192 ஊராட்சி ஒன்றியங்களில் 304 கிராம சித்த மருந்தகங்களும் 32 ஊராட்சி ஒன்றியங்களில் 39 முறைப்படுத்தப்பட்ட சித்த மருந்தகங்களும் இயங்கி வருகின்றன.

இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிலாளர்கள்.

வினா 967—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரியில் உள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனியில் 120 தொழிலாளர்கள் தொடர்ச்சியாக வேலை செய்பவர்கள் சுமார் அய்ந்து வருடம் வரை சர்வீஸ் உள்ளவர்கள் காண்டிராக்ட் தொழிலாளர்களாக வைக்கப்பட்டிருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) அவர்களை நிரந்தரமாக்கி காண்டிராக்டை ஒழிக்க அங்கீகரிக்கப் பட்டுள்ள சங்கம் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளதா?

(இ) அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

1979 ஏப்ரல் 28]

விடை—

(அ) இல்லை.

(ஆ) & (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

துலுக்கர்பட்டிக்கு பாசன வசதிகள்.

வினா 968—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியிலுள்ள ஆனைக் குளம் வருவாய் கிராமத்திலுள்ள துலுக்கர்பட்டி பகுதியிலுள்ள விவசாயிகள் தங்களுக்கு நம்பியாறு பாசனத்திலிருந்து ஓர் குளம் அமைத்துத் தரக்கோரி வேண்டுகோள் விடுத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அத்தகு குளம் அமைக்க அரசு ஏதேனும் செயற் குறிப்பு வைத்துள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆனைக்குளம் ஏரியை பழுது பார்க்கவும், வரத்துக் கால்வாயை புனரமைக்கவும் ரூ. 2 இலட்சங்களுக்கு மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக் கிறது.

நாகலாபுரத்தில் நடமாடும் மருத்துவப்பிரிவுக்கு வாகனவசதி.

வினா 969—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) நெல்லை மாவட்டம் நாகலாபுரம் Primary Health Centre நடமாடும் மருத்துவமனை, அரசு ஒப்புதலளித்தும், வாகனம் இல்லாமல் இயங்காமலிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வாகனம் வழங்கப்படும்?

விடை—

(அ) டி. எம். வி. 8316 எண்ணுடைய வாகனம், நாகலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1979 ஏப்ரல் 28

பாபனாசம் கோவில் கோபுரம் புதுப்பிக்கும் பணி.

வினா 970—திரு. எஸ். முத்துசாமி கரையாளர் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பாபனாசம் கோவில் கோபுரம் புதுப் பிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—

(அ) & (ஆ) ஆம். இக்கோயில் கோபுரத்தின் மேல் பாகத்தில் இரண்டு அடுக்குகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மீதி பணிகளைப் பூர்த்தி செய்ய இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

பேராவூரணி அரசு மருத்துவ மனை.

வினா 971—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பேராவூரணி அரசினர் மருத்துவ மனையில் மின் விளக்குகள் எரியவில்லை என்ற புகார் மனு அரசுக்கு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மின் விளக்குகள் எரிய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) & (ஆ) இம்மருத்துவ மனையில் மின் இணைப்புகள் பழுது பார்க்கப்பட்டு இப்பொழுது விளக்குகள் நன்கு எரிகின்றன.

குடும்பநலத் திட்டத்தில் பணியாற்றும் சுகாதார பார்வையாளர்கள்.

வினா 972—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) செவிலியர் (Nurse) பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர் சுகாதார பார்வையாளராக (Health Visitors) குடும்பநலத் திட்டத்தில் (Family Planning) பணியாற்று கின்றனர் ?

(ஆ) அவர்கள் தங்களை செவிலியர் பணிக்கு மாற்ற வேண்டும் என வேண்டுகோள் விட்டு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது அதன் நிலை என்ன ?

தமிழ்நாடு LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 28]

விடை—

(அ) 18 பேர்கள்.

(ஆ) & (இ) அரசு ஆணை (நிலை) எண் 1598, மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத்துறை நாள் 2—9—1978-ல் அவர்களை செவிலியராக மாற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வத்திராயிருப்பு அரசு மருத்துவ மனை.

வினா 973—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி வத்ராயிருப்பு அரசினர் மருத்துவ மனையில் விசேஷ பிரிவுகளும் மருத்துவ மனைக்கு காம்பவுண்டு சுவர் கட்டுவதற்கும் அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கையில் உள்ளது?

விடை—

(அ) & (ஆ) இல்லை.

அர்சனாபுரம் கிராம ஆதிசனங்களுக்கு மனைப் பட்டாக்கள்.

வினா 974—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, அர்சனாபுரம் கிராமத்தில் புறம் போக்கு நிலத்தில் குடியிருக்கும் வீடு இல்லாத ஏழைகளுக்கு அந்த வீட்டு மனைகளைப் பட்டா செய்து கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

அல்லியாளமங்கல கிராமத்தில் குடிநீர்த் தொட்டி.

வினா 975—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள அல்லியாளமங்கலம் கிராமத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் குடி தண்ணீர் தொட்டி அமைக்கப் பட்டு செயல்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

பல்கலைக் கழகங்களில் செம்மல்கள் நியமனம்.

வினா 976—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்கலைக் கழக மான்யக்குழு, கலாச்சாரத் துறைகளில் நடப்பு ஆண்டுக்கு இம்மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் செம்மல்கள் (Fellow ships) நியமனத்துக்கு அனுமதி வழங்கி இருக்கிறதா?

(ஆ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

விடை—

(அ) ஒரு விவர அறிக்கை * சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப் பட்டுள்ளது.

(ஆ) ஒரு *விவர அறிக்கை சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப் பட்டுள்ளது.

சென்னை காசிமேடு பகுதியில் மின் வசதி.

வினா 977—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரத்தின் வடகோடியில் உள்ள காசிமேடு சுடுகாடும் அதை ஒட்டியுள்ள பகுதிகளும் கடந்த ஓர் ஆண்டுகளாக விளக்கு வசதி இன்றி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை நிவர்த்தி செய்ய இந்த அரசு எடுக்க விருக்கும் நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சியால் ரூ. 12,500-க்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

உணவுக் கலப்படத் தடைச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.

வினா 978—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-ம் ஆண்டில் இதுவரை உணவுக்கலப்பட தடைச்சட்டத்தின் கீழ் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன?

(ஆ) மாவட்ட வாரியாக?

* 569-570-ம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

விடை—

(அ) 1—1—1978 முதல் 31—12—1978 வரை உணவுக் கலப்பட தடைச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 4,293.

(ஆ) மாவட்ட வாரியாக :

சென்னை	68
செங்கல்பட்டு	190
தென் ஆற்காடு	258
தஞ்சாவூர்	513
திருச்சிராப்பள்ளி	436
புதுக்கோட்டை	121
மதுரை	630
இராமநாதபுரம்	115
திருநெல்வேலி	596
கன்னியாகுமரி	21
வட ஆற்காடு	206
சேலம்	462
தர்மபுரி	42
கோயம்புத்தூர்	473
நீலகிரி	162
மொத்தம் .	4,293

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தாதூர் மட்டத்தில் பழங்கால கல்வெட்டுகள் பற்றிய ஆராய்ச்சி.

வினா 979—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை தொகுதி மேலூர் கிராமத்தில் உள்ள தாதூர் மட்டம் என்னுமிடத்தில் உள்ள பழங்கால கல்வெட்டை ஆராய்ச்சி செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) தற்பொழுது ஏதும் இல்லை.

(ஆ) மாவட்ட வாரியாக, கல்வெட்டுகள் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது தஞ்சை மாவட்டப் பகுதி இத்துறையால் ஆய்வு செய்யப்படுகிறது. நீலகிரி மாவட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்பொழுது இக்கல்வெட்டு ஆய்வு செய்யப்படும்.

உதகை எமரால்டு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா 980—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை வட்டத்தில் எமரால்டு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

தற்சமயம் இல்லை.

மேலத்தொட்டியபட்டி அரிசன குடியிருப்புக்கு குடிநீர் வசதி.

வினா 981—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி மேலத்தொட்டியபட்டியில் இருக்கும் அரிசனக் குடியிருப்புக்கு குடிநீர் வசதி செய்துதர எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

மேலத்தொட்டியபட்டியில் ஏற்கனவே 2.40 மீ.×2.40 மீ. அளவில், தரை மட்டத்திலிருந்து 14 மீட்டர் ஆழமுள்ள ஒரு குடிநீர்க் கிணறு நல்ல நிலையில் இருக்கிறது. அதில் 5 மீட்டர் ஆழத்திற்கு குடிப்பதற்கு ஏற்ற தண்ணீர் உள்ளது. அங்கு வசிக்கும் 15 வீடுகளில் உள்ள குடும்பங்களின் தேவைக்குப் போதுமானது. எனவே மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவையில்லை.

Siddha wing at Madurantagam Government Hospital.

Q. 982—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether Siddha wing is to be opened at Madurantakam Government Hospital; and

(*b*) if so, the details thereof?

விடை—

(அ) & (ஆ) மதுராந்தகத்திலுள்ள அரசினர் மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவு 11—10—1978 முதல் கீழ்க்கண்ட பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றது.

1979 ஏப்ரல் 28]

(அ) உதவி மருத்துவ அலுவலர் 1

(ஆ) மருந்தாளுநர் 1

(இ) கடைநிலை ஊழியர் 1

பேரளம் அரசினர் மருத்துவமனை.

வினா 983—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலம் ஒன்றியம், பேரளம் அரசினர் மருத்துவமனைக்கு கூடுதலாக பெண் மருத்துவர் போடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாயூரம் நகராட்சியில் சாலைப்பணிகள்.

வினா 984—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-79-ம் ஆண்டில் இதுவரையில் மாயூரம் நகராட்சியில் சாலை போடுவதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) எந்தெந்த வேலைகளுக்கு?

விடை—

(அ) ரூபாய் 1,62,036.93.

(ஆ) அறிக்கையொன்று* அவையின் முன் வைக்கப்படுகின்றது.

பள்ளிநோட்டு புத்தகங்களுக்கான விலைப்பட்டியல்கள் வைத்தல்.

வினா 985—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி நோட்டுப் புத்தகங்களுக்கு விலைப்பட்டியல் வைக்காததற்காக 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் கும்பகோணம் பகுதியில் எத்தனை வியாபாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டது ?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு எந்தவகையான தண்டனை விதிக்கப்பட்டது ?

விடை—

(அ) ஒன்று மட்டும்.

(ஆ) ஒரு வியாபாரி மீது பள்ளி நோட்டுப்புத்தகங்களுக்கு விலைப் பட்டியல் வைக்காததற்காக 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் வழக்கு தொடரப்பட்டு ரூ. 100 தண்டனை அளிக்கப்பட்டது.

* 571-573ம் பக்கங்களில் இணைப்பு XI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

காயல்பட்டணம் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டிட வசதி.

வினா 986—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுகா காயல்பட்டணத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குக் கட்டிடம் அமைக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு?

(இ) எப்போது கட்டிடம் கட்டி முடிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

கருவளஞ்சான்பட்டியில் நலத்துறை தொடக்கப்பள்ளி.

வினா 987—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதி அச்சங்குளம் பஞ்சாயத்து, கருவளஞ்சான் பட்டி கிராமத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களது குழந்தைகளுக்கென தொடக்கப்பள்ளி நிறுவும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை—

திருவில்லிபுத்தூர் தொகுதி, அச்சங்குளம் பஞ்சாயத்தைச் சேர்ந்த கருவளஞ்சான்பட்டி கிராமத்தில் அரிசன நலத்துறை மூலம் தனியாக தொடக்கப் பள்ளி துவங்கும் உத்தேசம் இல்லை.

மதுரை பாண்டியன் கூட்டுறவு அங்காடி.

வினா 988—திரு. என். லட்சுமிநாராயணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பாண்டியன் கூட்டுறவு அங்காடியை விரிவுபடுத்த உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான திட்டங்கள் யாவை?

1979 ஏப்ரல் 28]

விடை—

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் ஆதரவின்கீழ் மாவட்ட மொத்த நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலையின் புனரமைப்புத் திட்டத்திற்கான கருத்துரு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதிகளில் தங்கிப்படிக்கும் அரிசன மாணவர்களுக்கு உதவித்தொகை.

வினா 989—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசன மாணவர்கள் தங்கிப்படிக்கும் ஹாஸ்டல்களில் மாணவர்களுக்கு இப்பொழுது கொடுத்துவரும் உதவித்தொகையை அதிகரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை—

இல்லை.

மேலூர் பகுதியில் பெரியார் ஆயக்கட்டு நிலங்கள்.

வினா 990—திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், மேலூர் பகுதியில் பெரியாறு மேம்பாடுத் திட்டத்தின்கீழ் கால்வாய் சீரமைப்பின்மூலம் ஒருபோக சாகுபடி நிலங்களை இருபோக சாகுபடி நிலங்களாக மாற்றம்செய்ய திட்டம் உண்டா?

விடை—

இல்லை.

வடாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நியாயவிலைக் கடைகள்

வினா 991—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் சார்பில் எத்தனை நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன?

(ஆ) புதிதாக வேலைக்கு எடுக்கப்பட்ட ஆட்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு மாதச் சம்பளம் எவ்வளவு?

விடை—

(அ) 1366 முழுநேரக்கடைகளும், 112 பாதிநேரக் கடைகளும் வட ஆற்காடு மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ளன.

(ஆ) 673 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் 367 பேர்கள் மட்டும் வேலையில் சேர்ந்துள்ளார்கள்.

(இ) இவர்களுக்கு மாத சம்பளம் ரூ. 100 கொடுக்கப்பட்டு வருகிறது.

தண்டராம்பட்டு திருவண்ணாமலை ஒன்றிய விதவைப் பெண்களுக்கு தையல் மிஷின் வழங்கல்.

வினா 992—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978 ஆம் ஆண்டில் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் எத்தனை விதவைப் பெண்களுக்கு தையல் மிஷின் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

ஒருவருக்கும் வழங்கப்படவில்லை.

வினா 993—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978-ல் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் எத்தனை விதவைப் பெண்களுக்கு தையல் மிஷின் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

ஒருவருக்கு மட்டும் வழங்கப்பட்டது.

போச்சம்பட்டியில் துணை வட்ட ஆட்சியர் அலுவலகம்.

வினா 994—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், போச்சம்பட்டியில் துணை வட்ட ஆட்சியர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) அப்படியானால் எப்போது அமுலாக்கப்படும்.

விடை—

(அ) & (ஆ) தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 28]

நன்னிலம் வட்டத்தில் பெருமழை காரணமாக ஏற்பட்ட சேதங்கள்.

வினா 995—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த நவம்பர், டிசம்பர் மாத பெருமழையின் காரணமாக நன்னிலம் வட்டத்தில் இறந்த கால்நடையின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அவற்றிற்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) 20.

(ஆ) இல்லை.

வினா 996—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் நன்னிலம் ஒன்றியத்தில் கடந்த நவம்பர், டிசம்பர் மாத பெருமழையில் தண்ணீர் தேங்கியதால் எத்தனை ஊர்களில் மக்கள் வெளியேற்றப்பட்டு உணவு வழங்கப்பெற்றது?

விடை—

11 கிராமங்களைச் சார்ந்த 346 குடும்பங்களிலுள்ள 1558 நபர்களுக்கு மொத்தம் 9 நாட்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு மண்டல அலுவலகம்.

வினா 997—டாக்டர் கே. சமாசம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் 'மண்டல அலுவலகம்' ஒன்று ஏற்படுத்த ஏதேனும் அரசு செயல்திட்டம் வகுத்துள்ளதா?

விடை—

தற்போதைக்கு ஏதுமில்லை.

மதுரா அண்ணாநகர் கிராமத்திற்கு மின் வசதி.

வினா 998—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம் வரகூர் ஊராட்சியில் அடங்கிய மதுரா அண்ணாநகர் கிராமத்திற்கு மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதா?

விடை—

செங்கம் வட்டம் வாசூர் ஊராட்சியில் அடங்கிய மதுரா அண்ணாநகர் கிராமத்திற்கு தெரு மின்விளக்கு கோரி மின்வாரியத்திடம் எந்த மனுவும் நிலுவையில் இல்லை.

வானாபுரம் அரிசன குடியிருப்புக்கு கூடுதல் மின்வசதி.

வினா 999—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வானாபுரம் அரிசன காலனிக்கு கூடுதல் மின் விளக்கு அமைக்கும் திட்டம் மின்சாரத்துறையிடம் நிலுவையில் உள்ளதா?

ஆம் எனில், எப்போது செயல்பட உள்ளது?

விடை—

ஆம். இந்த வேலைக்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது இது 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிக்கப்பட உள்ளது.

ஆடுதுறை பேரூராட்சியை நகராட்சியாக்கல்.

வினா 1000—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி () இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

1979 ஏப்ரல் 28]

(2) அறிவிப்புகள்.

(அ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1979-80 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் :—

1. திரு. சி. மாணிக்கம்,
2. திரு. செ. பட்டாபிராமன்,
3. திரு. இ. தமிழரசன்,
4. திரு. பொ. காளியப்பன்,
5. திரு. ப. தனபால்,
6. திரு. பி. ராமதாஸ்,
7. திரு. சி. ராமநாதன்,
8. திரு. என். சங்கரய்யா,
9. திரு. என். இராமச்சந்திர ரெட்டி,
10. திரு. சோ. பாலகிருஷ்ணன்,
11. திரு. டி. பி. எம். பெரியசாமி,
12. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா,
13. திரு. து. புருஷோத்தமன்,
14. திரு. சென்னை மு. அரங்கநாதன்,
15. திரு. மு. அம்பிகாபதி,
16. திரு. கா. அப்புனு கவுண்டர்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப் பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1979-80 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையில் 174-வது விதியின்கீழ் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

[முற்பகல் 9-40]

(ஆ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1979-80 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் :—

1. திரு. இரா. அமிர்தராஜ்,
2. திரு. இரா. முத்தையா,
3. திரு. என். சுப்பராயன்,
4. திரு. எச். ஜி. ஆறுமுகம்,
5. திரு. செ. கிருஷ்ணன்,
6. திரு. மு. ரா. சௌந்திரராஜன்,
7. திரு. பி. வேங்கா கவுண்டர்,
8. திரு. என். பெருமாள்,
9. திரு. சி. கோவிந்தராஜன்,
10. திரு. சி. பழனிமுத்து,
11. திரு. எம். ஏ. லத்தீப்,
12. திரு. அ. சுவாமிதாஸ்,
13. திரு. கா. சுப்ரவேலு,
14. திரு. பெ. சு. திருவேங்கடம்,
15. திரு. சேலம் மு. ஆறுமுகம்,
16. திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்.

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1979-80 ஆம் ஆண்டு பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

இப்பேரவையின் விதி 182-ன் கீழ் திரு. இரா. முத்தையா அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 28]

(இ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979-80 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Estimates Committee) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் :—

1. திரு. துரை கோவிந்தராசன்,
2. திரு. கி. பெ. காத்தமுத்து,
3. திரு. இரா. ச. முனிரத்தினம்,
4. திரு. தி. அன்பழகன்,
5. திரு. சு. முத்துசாமி,
6. திரு. வ. மு. சுப்பிரமணியன்,
7. திரு. இ. கணேசன்,
8. திரு. ஒ. சுப்பிரமணியன்,
9. திரு. ரா. பெரியசாமி,
10. திரு. என். வரதராஜன்,
11. திரு. ப. சந்திரன்,
12. திரு. பொ. உத்திராபதி,
13. திரு. என். கிட்டப்பா,
14. திரு. த. வேணுகோபால்,
15. திரு. துரை கலியமூர்த்தி,
16. திரு. பொ. விஜயராகவன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால் 1979-80 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

இப்பேரவையின் 165-வது விதியின் கீழ் திரு. வ. மு. சுப்பிரமணியன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஈ) உரிமைக் குழு உறுப்பினர்கள் நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979-80 ஆம் ஆண்டுக்கான உரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினான்கு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் :—

1. திரு. வி. கே. ராஜு,
2. திரு. கே. பண்ணை சேதுராம்,
3. திரு. எம். எம். ஏ. ரசாக்,
4. திரு. என். லட்சுமிநாராயணன்,
5. திரு. எஸ். முத்துசாமி,
6. திரு. ரா. க. சு. தண்டபாணி,
7. திரு. பொ. சிகாமணி,
8. திரு. எஸ். வி. இராமசாமி,
9. திரு. கே. கந்தசாமி,
10. திரு. கே. கே. முத்தையா,
11. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்,
12. திரு. பா. க. சி. முத்துசாமி,
13. புலவர் கா. கோவிந்தன்,
14. திரு. மா. மணிமாறன்.

முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்ப தால் 1979-80 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக் கப்பட்டதாக நான் அறிவிக்கின்றேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர் களாவர்.

பேரவையின் 183 (4)-வது விதியின்கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

(3) உரிமைப் பிரச்சினை.

'India Today' என்கிற பத்திரிகை மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 184 வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. விஜயராகவன் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார்கள். இதே பொருள் குறித்து திரு. லத்திப் அவர்களும் ஒரு நிர்மானம் கொடுத்துள்ளார்கள். இப் பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதியளிக்கப்படுகிறது.

* THIRU P. VIJAYARAGHAVAN : Under Rule 184 of the Assembly Rules, I give notice of the following breach of privilege :

"The fortnightly magazine 'India Today', dated March 16-31 has published in page 15 column 3 under the title "SOUTH-HAVEN FOR DISTILLERS", the most derogatory and disparaging matters pertaining to the Members of the Tamil Nadu Legislature particularly those who have accommodations in the Legislators' Hostel."

"*Above Law* : Tamil Nadu was the first State in India to introduce total prohibition 42 years ago when the late C. Rajagopalachari was the Chief Minister. Rajaji eventually became the first Governor-General after Independence and as a teetotaller he served liquor at State functions at Rashtrapathi Bhavan. But, unlike MGR, Rajaji was not a faddist. It is widely believed that a majority of MGR's Cabinet colleagues drink without the fear of the new law.

As the evening shadows grow, a mysterious man appears under a palm tree by the side of the northern gate of the Legislators' hostel on the banks of the Cooum in Madras. There is a triangular stretch of thickly wooded land with a stagnant pool separating the MLA's hostel and the official residence of the Speaker of the Tamil Nadu Assembly. The wire-mesh fencing on the roadside of this piece of land has conveniently given way, providing easy access. The fluorescent tube opposite flickers but never glows, providing an ideal setting for the man's business.

Occupants of the hostel, it is said, come one at a time, thrust a two-rupee note into the palm of the man under the tree, who produces a plastic tumbler from the pocket of his nether garment and fills it with amber liquid from a jerrican hidden behind the bush. Once the liquid is drained, the man wipes the tumbler with his none too clean dhoti and is ready to receive the next customer. Sanctified by custom, this piece of land has remained out of bounds for law-enforcers.

[Thiru P. Vijayasaghavan] [1979 ஏப்ரல் 28

By sundown the sagging spirits of residents in the hostel are rejuvenated enough for the following day's discussions on the evils of drinking in the State Legislature. It must, however, be said in fairness to the non-AIADMK Members that they have been free from such hypocrisy and have been unanimously opposing the draconian prohibition laws of the MGR Ministry."

The above matter amounts to lowering the dignity and status of all the Legislators living in the M.L.As' Hostel. The publication is directed towards disparagement of the reputation of the Tamil Nadu Legislators. This reckless and indiscreet comment transgresses the limits of fair comments and seriously violates the norms to be observed by the newspapers. The observation is highly motivated and as such, it affects the privileges of the Tamil Nadu Legislators—both collectively and individually. I pray that the matter be hereby *suo motu* referred to the Committee on Privilege for appropriate action.

தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு கருத்தை இந்தியா டுடே என்று சொல்லப்படுகிற இந்தியா முழுவதும் விநியோகிக்கப்படுகிற பத்திரிகை மாத்திரமல்ல, உலகத்தில் பல நாடுகளிலேயும் அனுப்பப்படுகிற ஒரு பெரிய பத்திரிகை எழுதியிருக்கிறது. எங்களுக்கு இருக்கிற வருத்தம் என்னவென்றால் எங்களைப் போன்றவர்கள் எல்லாம் பெரும்பான்மையோர் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலேதான் தங்கிக் கொண்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குப் பக்கத்திலே இருக்கிற இடத்திலே இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்று சொல்வதோடு மட்டுமல்லாமல் இன்னொரு முக்கியமான வாக்கியத்தையும் இங்கே எழுதியிருக்கிறார்கள்.

"By sundown the sagging spirits of residents in the hostel are rejuvenated enough for the following day's discussions on the evils of drinking in the State Legislature."

என்று சொல்லப்படுகிறது. இந்த வாக்கியங்கள் உறுப்பினர்களை எல்லாம் மிக இழிவுபடுத்துகின்ற வாக்கியங்கள். மாலையிலே தங்களுடைய உணர்வு களைப் புதுப்பித்துக் கொண்டு மறுநாள் காலையிலே குடிப்பதின் தீமையைப் பற்றிப் பேசுகிறார்கள், அப்படிப் பேசுவதற்காகத்தான் மாலையிலே குடிக் கிறார்கள் என்ற அளவிற்கு இருக்குமானால் அது உண்மையிலேயே உறுப் பினர்களின் பெயருக்கும் இந்தச் சபைக்கும் எவ்வளவு மாசு கற்பிப்பதாகும் என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள். இன்னொன்றையும் சொல்லியிருக் கிறார்கள்.

"It is widely believed that a majority of MGR's Cabinet colleagues drink without the fear of the new law".

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அமைச்சரவர்கள் கவலைப் பட்டுக் கொள்ளவேண்டும், எங்களுக்கு இல்லை. ஆனால் எங்களுடைய

1979 ஏப்ரல் 28] [திரு. பொ. விஜயராகவன்]

பிரச்சினை சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குப் பக்கத்திலே இப்படிப்பட்ட செயல் நடப்பது மட்டுமல்ல, அங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் காலையில் பேரவையிலே குடிப்பதின் நிமையைப்பற்றிப் பேசுவதற்காக மாலையிலே குடிக்கிறார்கள் என்ற அளவிற்கு அந்தமாதிரியான செய்திகள் வெளியிடப்படுமானால் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்கள் மக்கள் மத்தியில் எப்படி இருக்கும் என்பதைத் தாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே உள்ள பொதுமக்கள் மத்தியில் எவ்வளவு மோசமான ஒரு கருத்தை பரவ விட்டிருக்கிறார்கள். அதன் மூலமாக உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய பணிகளைச் செவ்வனே ஆற்றக்கூடிய நிலைமை இல்லாது அவர்கள் எப்படி தங்கள் பணிகளை சிறப்பாகச் செய்யமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயருக்கும், மொத்தமாக இந்த அவைக்கும் மாசு கற்பிக்கின்ற வகையிலே அது இந்தியாவிற்குள் மட்டுமல்ல, உலகத்தின் பல நாடுகளிலேயும் உள்ள மக்கள் மத்தியிலே அப்படிப்பட்ட கருத்தைப் பரப்பக்கூடிய நிலைமை இருக்குமானால் இந்த மன்றத்தினுடைய நிலைமை என்ன ஆகும் என்பதைத் தாங்கள் எண்ணிப் பார்த்து இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய அருமை நண்பர் திரு. விஜயராகவன் அவர்கள் ஒரு புத்தகத்தை வைத்து இங்கே படித்தபோது அதற்குப் பின்னாலே ஒரு *** படம் இருக்கிறது. அது என்ன புத்தகத்தை வைத்துப் படிக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை பத்திரிகை மீது உள்ளதால் அதன் ஆசிரியருக்கு விளக்கம் எழுதிக் கேட்டதற்குப் பிறகு என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.*

[முற்பகல் 9-50]

டாக்டர் கே. சமரசம்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம் இந்தச் சட்டப் பேரவையின் செய்தியைப் பற்றி வெளியிடக்கூடிய பத்திரிகைகளின் மீது நீங்கள் சில கருத்துக்களைச் சொன்னீர்கள். ஆனால் இன்றையதினம் வெளியாகி இருக்கின்ற ஆங்கிலப் பத்திரிகையில் நீங்கள் சொன்ன கருத்துக்கு மாறாக செய்தி வெளியாகி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

யிருக்கிறது. இதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். Indian Express, Saturday, dated 28th April 1979 மூன்றாவது பக்கம், ஐந்தாவது பத்தியில் இந்தக் கருத்து . . .

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். அவர் எந்த விதியின் கீழ் பேசுகிறார்? ஏதாவது கொடுத்திருக்கிறாரா? அதன் மீது பேசுகிறாரா? நாங்கள் எழுந்தால்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'ஸீரோ அவர்' என்று இங்கே இல்லை. நீங்கள் ஏதோ பேசிக்கொண்டிருக்கும்பொழுது பிரச்சினையை எழுப்பு கிறீர்கள். முதல் வரிசையில் இருப்பவர்கள் எழுந்து சொல்லலாம் என்று சொல்லியிருப்பதால் இப்பொழுது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

இன்னொன்று, ஃப்ரன்ட் பெஞ்சில் இருப்பவர்களைக் கலந்து சொல்ல விரும்புகிறேன். உரிமைப் பிரச்னை கொண்டு வந்தாலும்கூட, இங்கு படித்த வாசகங்கள், சொன்னது ஆகியவை பத்திரிகைகளில் வெளிவரலாமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. அவைகள் இதிலே வெளிவர வேண்டிய நியாயம் இல்லை. ஆனால் பத்திரிகை மீது நடவடிக்கை எடுப்பது வரையில் நிற்கட்டும், அவைகள் அவைக்குறிப்பில் ஏறாமல் இருப்பது நல்லது. அதாவது, அவைக்குத் தெரிந்து விட்டது. பத்திரிகையிடம் விளக்கம் கேட்கப் போகிறேன். ஆனால் படித்த வாசகங்கள்—இங்கே குறிப்பிட்டாலும் வெளியே

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தங்களுடைய உணர்வை நான் நிச்சயமாகப் பாராட்டுகிறேன். ஆனால் அது எந்த அளவிற்குப் பொருத்தமாக இருக்கிறது என்று சொல்ல முடியவில்லை. இந்தச் செய்தி ஏற்கனவே பத்திரிகையில் வெளிவந்துவிட்டது, மக்கள் தெரிந்து கொண்டார்கள், இனி மேல் மற்றப் பத்திரிகைகளில் இதைப் பிரசுரிக்கக் கூடாது என்று சொல்வது ஒன்று

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆகவேதான் சொன்னேன், கலந்து பேசிச் சொல்கிறேன் என்று கூறினேன். அது இன்டர்நேஷனல் பத்திரிகை யாக இருக்கிறது. குறிப்பிட்ட—ஆங்கிலம் படித்தவர்கள் மட்டும் படிக்கும் பத்திரிகையாக இருக்கிறது, அதிலும் சில சதவிகிதம் படித்த மக்கள் மட்டும் படிக்கின்ற பத்திரிகையாக இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டில் இந்தப் பிரச்னை, எல்லாக் கருத்துக்களும், எண்ணங்களும் சொல்ல வேண்டுமா என்பதுதான் என் கருத்து. இருக்கலாம் என்று சொன்னால் பரவாயில்லை. ஆகவேதான், கலந்து பேசிச் சொல்கிறேன் என்று கூறினேன்.

1979 ஏப்ரல் 28]

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இது இரகசிய தஸ்தாவேஜு இல்லை. பத்திரிகையில் வந்து விட்டது. இப்பொழுது சப்ரஸ் பண்ணுவதாக இருக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி சொன்ன ** என்ற வார்த்தையை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(4) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 41 (3)-வது விதியின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(5) கவன ஈர்ப்புகள்.

(அ) சில தனியார் கல்லூரிகள் சட்டத்தை மீறி நன்கொடை வசூலிப்பது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"சட்டத்தை மீறி சில தனியார் நிர்வாகங்கள் கல்லூரிகளில் நன்கொடை வசூலிப்பதால் ஏழை பெற்றோர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் சிறுபான்மையினர் நடத்தும் கல்லூரிகளில் கட்டாயமாக நன்கொடை வசூலிக்கப்படுகிறது என்ற புகார் எழுத்து மூலமாக ஏதும்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பெறப்படவில்லை, எனினும் ஒப்புதல் பெறாது கல்லூரிகளில் நன்கொடை வசூல் செய்வதைப் பற்றிய அரசு ஆணை 1581, கல்வி, நாள் 4—10—1972-ல் தனியார் கல்லூரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி வசூல் செய்யப்படும் நன்கொடை தொகையினை மானியக் கணக்கீட்டிற்கு வரவினமாக எடுத்துக்கொள்ளப்படும். இவ்வாறு எடுத்துக்கொள்வதால் நிர்வாகத்திற்கு அரசு மானியம் அந்த அளவிற்குக் குறையும்.

மற்றும் தமிழ்நாடு தனியார் கல்லூரிகளின் ஒழுங்காற்றுச் சட்டம் 1976, விதி எண் 28-ன்படி, தனியார் கல்லூரிகளில் எந்தவிதமான நன்கொடையும் முன் அனுமதி பெறாமல் வசூல் செய்யக் கூடாது.

தனியார் கல்லூரிகளில் (சிறுபான்மைக் கல்லூரிகள் உட்பட) நன்கொடை வசூல் செய்வது தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால், அவ்விஷயத்தை சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் ஆலோசித்து, அக்கல்லூரிக்கு வழங்கிய அங்கிகாரத்தை திரும்பப் பெறவோ அல்லது பல்கலைக்கழக விதி முறைக்கு உட்பட்ட பிற நடவடிக்கைகளோ மேற்கொள்ளலாம்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, சில தனியார் கல்லூரி களில் மாணவர்களைப் புதிதாக சேர்க்கும்போது அந்தக் கல்லூரியினுடைய முன்னேற்றத்திற்காகவும், கல்லூரியினுடைய கட்டிடங்கள் கட்டுவதற்காகவும், லேபரட்டரி போன்ற வசதிகளைப் பெருக்குவதற்காகவும் தங்களுக்கு நிதி தேவைப்படுகிறது என்று சொல்லி, அதற்காக நன்கொடைகள் வேண்டுமென்று சொல்லி, நன்கொடைகள் கொடுப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து சேர்க் கின்ற நிலைமை இருக்கிற காரணத்தால், பெற்றோர்களால், அப்படிப்பட்ட நல்ல கல்லூரிகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க முடியாத நிலைமை இருக் கிறது. எனவே, அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள், அங்கே நன்கொடை கணக்குகள் வந்தால், அரசு மானியத்திலே அந்த அளவிற்குக் குறைத்துக் கொடுக்கப்படும் என்று. அரசு மானியத்திலே குறைத்துக் கொடுப்பதற்கு முன்னாலே, அவர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தி, அதன்மூலம் நன்கொடைகள் வசூலிக்கிறார்கள். அதைப்பற்றி அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதைத தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்கள் ஏதாவது நன்கொடை வசூலிக்க வேண்டுமென்றால், அரசினுடைய முன்னுரிமை பெற்றுத்தான் அப்படிச் செய்ய வேண்டுமென்று விதி ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்கு மாறாகச் செய்கிறார்கள் என்ற புகார் வருமானால், நாம் நிச்சயமாக விசாரித்து நடவடிக்கை எடுப்போம். அது நிரூபிக்கப்பட்டால், சம்பந்தப்

1979 ஏப்ரல் 28] [திரு. செ. அரங்கநாயகம்]

பட்ட பல்கலைக்கழகத்தை ஆலோசித்து அங்கீகாரத்தைக்கூட ரத்து செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்வோம் என்பதைத்தான் நான் இங்கே தெரிவித்துள்ளேன்.

(ஆ) பெத்தநாய்க்கன்பாளையத்தில் ஆழ்துளை குடிநீர் குழாய் கிணறுகள் பழுதுபார்க்கப்படாமை குறித்து.

திரு. சி. பழனிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"பெத்தநாய்க்கன்பாளையத்திலுள்ள ஆழ்துளை குடிநீர் குழாய்க் கிணறுகள் பழுதுபார்க்கப்படாததால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் 8 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு, அவைகளில் கைப்பம்புகளும் பொருத்தப்பட்டுள்ளன. தற்சமயம் மேற்கூறிய 8 கைப்பம்புகளில் 1, 6 மற்றும் 9 வார்டுகளிலுள்ள கைப்பம்புகள் பழுதடைந்த நிலையிலுள்ளன. மீதமுள்ள 5 கைப்பம்புகள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

அரசு அங்கீகரித்த கைப்பம்புகள் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகள் மற்றும் ஊராட்சிகளிலுள்ள சிற்றூர்களிலும், குடிநீர் வடிகால் வாரியத்தாலும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், சமுதாய நலத் துறை ஆகிய அமைப்புகளால் நிர்மாணிக்கப்பட்ட ஆழ்துளை குழாய்க் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள கைப்பம்புகளின் பராமரிப்பை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுள்ளது. ஆகவே, பேரூராட்சிகளிலுள்ள கைப்பம்புகளின் பராமரிப்பு அந்தந்த பேரூராட்சிகளைச் சாரும். ஆகவே, பெத்தநாயக்கன்பாளையத்திலுள்ள பழுதடைந்த 3 கைப்பம்புகளைப் பராமரிப்பது, அந்த பேரூராட்சியைச் சார்ந்ததாகும். மேலும் அரசுக்கு கைப்பம்புகள் பழுதுபார்க்காமல் இருப்பது குறித்து தகவல் கிடைத்தவுடன், அவைகளை உடனே பழுதுபார்த்து இயங்க வைக்குமாறு குடிநீர் வடிகால் வாரியத்தை அரசு கேட்டுக்கொண்டுள்ளது. விரைவில் அவை சீர் செய்யப்படும்.

திரு. சி. பழனிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, பெத்தநாயக்கன் பாளையம் பேரூராட்சியிலுள்ள ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளில் 3 பழுதடைந்து பல மாதங்களாகிவிட்டன. அவைகளைப் பழுதுபார்க்க வேண்டுமென்று ஆழ்துளை குழாய்க் கிணறு மேலாளரிடம் கூறினோம். ஆனால், அவர் பழுதுபார்க்கவில்லை. பேரூராட்சியே பழுதுபார்க்க வேண்டு மென்று அமைச்சர் கூறி உள்ளார்கள். ஊராட்சிகளுக்குப் பழுதுபார்ப்பதைப் போல், பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பழுது பார்க்க வேண்டுமென்கிறேன். பேரூராட்சி ஊழியர்களால் அதனைப் பழுது பார்க்கும் வேலையைச் செய்ய முடியாது. ஆகவே, ஆழ்துளை குழாய்க் கிணறுகளைச் செய்கின்ற, நிறுவுகின்ற குடிநீர் வடிகால் வாரியமே பழுது பார்த்து கொடுத்தால் அதற்கான கட்டணத்தை நாங்கள் செலுத்துகிறோம். அதை உடனடியாகச் செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆலோசனை அரசால் பரிசீலிக்கப்படும். இப்பொழுது பழுதுபார்க்க வேண்டு மென்று அரசு கேட்டுக்கொண்டுள்ளது என்று சொல்லியுள்ளேன். விரைவில் அவை சீர்செய்யப்படும் என்று கூறி உள்ளேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 10-00]

(இ) சின்னசேலம் பேரூராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு குறித்து.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

"தென்னாற்காடு மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாட்டினால் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, தென் னாற்காடு மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியத் திட்டம் பற்றி விரிவான ஆய்வு செய்யப்படுகிறது. கோமுகி நதி அணையி லிருந்து தண்ணீர் கொண்டு வரக்கூடிய சாத்தியக்கூறுகளும் மற்றும் பொருளாதார வசதி பற்றி விரிவாக ஆராய்ந்து திட்டம் தயாரித்த பின்னர் முறைப்படி அரசு ஆட்சி ஒப்புதல் (administrative approval) வழங்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சின்ன சேலம் நகரத்திற்கு கோமுகி நதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்படுவதாக உள்ளதா அல்லது மணிமுத்தாறு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்

1979 ஏப்ரல் 28] [சின்னசேலம் மா. சுப்பிரமணியன்]

படுவதாக உள்ளதா? கோமுகி நதியிலிருந்து கொண்டு வருவதற்கு சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளதாகத் தெரிகிறது. எனவே கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த நிலையில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு கொண்டுவரப்படுமா அல்லது தனித்தனியாக போடப்படுகிறதா? கொண்டுவருவதை மிக விரைவில் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, கோமுகி நதி அணையிலிருந்து அல்லது மணிமுத்தாறு நதி அணையிலிருந்து தண்ணீர் கொண்டுவரக்கூடிய சாத்தியக்கூறுகளும், மற்றும் பொருளாதார வசதி பற்றி விரிவாக ஆராய்ந்து முடித்த பின்னர்தான் திட்டம் தயாரிக்க விருக்கிறது. இப்பொழுது தண்ணீர் கொண்டுவரப்படுவதில் மிக எச்சரிக்கை யாக இருக்க வேண்டியிருப்பதால் சற்று காலதாமதம் ஆகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் விரைவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று அறிவிக்கிறேன்.

(ஈ) நாகூர் பகுதியில் டீசல் தட்டுப்பாடும், மீன்பிடி படகுகள் செயல் படாமையும் குறித்து.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"நாகப்பட்டினம், நாகூர் பகுதியில் கடுமையான டீசல் தட்டுப் பாட்டினால் 200 மீன்பிடி படகுகள் செயல்படாமல் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து."

மாண்புமிகு திரு. க. உரா எட்மண்ட்: நாகப்பட்டினத்திலுள்ள பெட்ரோல் நிலையங்களுக்கு சென்னை மற்றும் நெய்வேலி நகரங்களிலிருந்து டீசல் எண்ணெய் விநியோகிக்கப்படுகிறது. ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரையில் மீன்பிடித் தொழிலுக்கு முக்கிய காலம் ஆகும். கடலூர் பகுதியிலிருந்து வரும் படகுகள் உட்பட ஏறக்குறைய 120 முதல் 150 விசைப் படகுகள் நாகப்பட்டினம் பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடைய ஒரு நாளைய டீசல் எண்ணெயின் தேவை அளவு 12 கி. லிட்டர்கள் ஆகும். சென்ற மார்ச்சு மாதம் பெட்ரோல் நிலையத்தினர் சாதாரணமாக தாங்கள் பெறும் 400 கிலோ லிட்டருக்கு பதிலாக 290 கிலோ லிட்டர்களையே பெற்றனர். ஒரு நாளைய தேவை 13 கிலோ லிட்டர் என்று இருக்க, நாள் ஒன்றுக்கு சராசரி 9 கிலோ லிட்டர்களே கிடைக்கப்பெற்றன.

சென்னையிலிருந்து விநியோகம் தடைபட்ட காரணத்தினால் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் தஞ்சாவூர் விற்பனை அதிகாரி இரண்டு வண்டிகளில் (truck loads) டீசல் எண்ணெயை (17 கிலோ லிட்டர்) திருச்சியிலிருந்து அனுப்ப ஏற்பாடு செய்தார்கள். அதிலிருந்து 10 கிலோ லிட்டர் விசைப் படகுகளுக்கு விநியோகிக்கப்பட்டது. 17—4—1979 முதல் 20—4—1979 வரை கிடைக்கப்பெற்ற, மற்றும் விநியோகிக்கப்பட்ட டீசல் எண்ணெயின் அளவு கீழ்க்கண்டவாறு உள்ளன :—

நாள்	கிடைக்கப்பெற்ற டீசல் எண்ணெயின் அளவு (கிலோ லிட்டரில்)	விநியோகிக்கப்பட்ட அளவு (கிலோ லிட்டரில்)
17—4—1979	8	9.5
18—4—1979	16	2
19—4—1979	இல்லை	1
20—4—1979	8	5

19—4—1979 அன்று உதவி ஆட்சியாளர் (நாகப்பட்டினம்) பெட்ரோல் நிலைய உரிமையாளர்கள், விசை படகு உரிமையாளர்களின் இரண்டு பிரதிநிதிகள், ஒரு பேருந்து உரிமையாளர், ஒரு லாரி உரிமையாளர், மீன்வளத் துறை ஆய்வாளர், மற்றும் வட்டார விநியோக அதிகாரி ஆகியோருடன் ஒரு பேச்சுவார்த்தை நடத்தினார். அந்தக் கூட்டத்தில் நாள் ஒன்றுக்கு பெறப் படும் டீசல் எண்ணெயில் 60 சதவிகிதம் விசைப் படகுகளுக்கும், மிகுதியை பேருந்து உரிமையாளர்களுக்கும், மற்றும் விவசாயிகளுக்கும் அளிப்பது என்று ஒத்துக் கொள்ளப்பட்டது. இந்த ஏற்பாடு 20—4—1979 அன்றுமுதல் நடைமுறைக்கு வந்துவிட்டது. தற்போது மீனவர்கள் ஒருநாள் விட்டு ஒருநாள் மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்றனர்.

மேலாளர், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (நேரில்) பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன், வட்டார மேலாளரின் இயக்குநர் மற்றும், மேலாளர், இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகியோருடன் இது விஷயமாக தொடர்பு கொள்ளப்பட்டது. நாகப்பட்டினம் மற்றும் நாகூர் பகுதிகளுக்கு கூடுதலான டீசல் வண்டிகளை அனுப்புவதாக அவர்கள் உறுதி அளித்துள்ளார்கள்.

மேற்கூறிய சூழ்நிலைகளினால் நிலைமை கட்டுக்கடங்கி உள்ளது என்ப தையும் மீன்பிடி விசைப் படகுகளுக்கு டீசல் எண்ணெய் சீரான விநியோகம் கிடைக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் அறியலாம்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், நாகூர் பகுதியில் கடலோரப் பகுதியில் மீனவர்கள் வாழக்கூடிய இடங்கள், அவர்கள் கடலையே, இந்த மீன் பிடிக்கும் தொழிலையே வாழ்க்கைக்குத் துணையாக

நம்பிக் கொண்டிருப்பவர்கள். அதுவும் ஏப்ரல், ஜூன், ஜூலை மாதங்களில் தான் அவர்களுக்கு மீன்பிடிக் காலமாகும். அதை வைத்துத்தான் கணிசமான பகுதி இந்த ஆண்டிலிருந்து வரவு-செலவு பார்க்க வேண்டியிருக்கிறது அவர்களுக்கு. அப்படி இருக்கிறபோது டீசல் இல்லாமல் அவர்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஒரு நாள் விட்டு ஒரு நாள் மீன் பிடிக்கச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள், அதுவரைக்கும் நன்றி. ஆனால் அவர்கள் வருமானம் மிகவும் பாதிக்கப்படுவதினால் அதுகூட தினமும், முன்புபோல் மீண்டும் தினமும் மீன் பிடிக்கச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய, அவர்களுக்கு வேண்டிய டீசலை சப்ளை செய்ய அரசு முன்வந்து ஏற்பாடு செய்ய ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலும், தூத்துக்குடியிலும் இதேபோன்ற குறைபாடு இருந்தது. அதுபோலவே முகவை மாவட்டத்திலும் கடல் ஓரப்பகுதிகளிலும் உள்ள மீனவர்களுக்கும் இதே குறைபாடு இருந்தது. அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு அந்த மீனவர்களுக்கு அடையாள கார்டு வழங்கப்பட்டு, அந்த அடையாள கார்டைக் காட்டி டீசலை வாங்கிக் கொள்ளலாம் என்று ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அந்த முறையே இப்பொழுது அங்கே அமுல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதே முறைகளை இப்படித் தேவைப்படும் மற்ற இடங்களிலும் விரைவில் அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து அதற்கான நடவடிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இதேமாதிரி பல்வேறு பகுதிகளில் தொழிற்சாலைகளிலும், மற்றும் மக்களிடத்தில் இருந்தும் குறைபாடுகள் வந்துக் கொண்டிருக்கிறது. இதற்கு அரசாங்கத்தின் கணிப்பு என்ன? சப்ளை குறைவும், பிளாக் மார்க்கெட்டும்தான் காரணமா? பிளாக் மார்க்கெட் இருக்கிறது ; நிறைய டீசல் கம்பெனிகளில், பெட்ரோல் கம்பெனிகளில் வைத்துக்கொண்டே இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக அரசாங்கத்தின் கணிப்பு என்ன, இதற்குத் தடுப்பு நடவடிக்கையாக அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்துள்ளது, அல்லது என்ன செய்யப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள டீசல் குறைவு என்று சொல்வதற்கில்லை, அதே நேரத்தில் தேவையான அளவுக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லி விடவும் முடியாது. ஒவ்வொரு ஆண்டிலும் அதற்கு முந்திய ஆண்டு அதே மாதத்தில் எந்த அளவுக்கு டீசல் வழங்கப்பட்டதோ அந்த அளவுக்கு மேல்

12 சதவீதம் கூட்டிக் கொடுக்கிறார்கள். அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு அப்படியில்லாமல் முந்தைய ஆண்டு எவ்வளவு கொடுக்கப்பட்டதோ அதே அளவு டீசலை மட்டும் தான் கொடுத்தார்கள். அதிகமாகக் கொடுக்கப்படும் அந்த 12 சதவீதத்தைக் கொடுக்கவில்லை, அதனால்தான் குறைவாகக் கொடுக்கிறார்கள் என்றும் சொல்வதற்கில்லை, தேவைக்குப் போதுமானது என்றும் சொல்ல முடியாது என்று குறிப்பிட்டேன். ஏற்கெனவே மின்சாரத் தட்டுப்பாடும் இருப்பதால் விவசாயிகளுக்கும் டீசல் தேவைப்படுவதாக இருக்கிறது. அதனால் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை. பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்தில் சில ஸ்தாபனங்களில் பிளாக் மார்க்கெட் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். நம்முடைய நாட்டில் அது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. இருந்தாலும் யார் யார் தவறு செய்கிறார்கள் என்று கண்டுபிடித்து அதனைத் தடுப்பதற்கான முயற்சிகளை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் எந்தெந்த வகையில் எல்லாம் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்குப் பயன் படுத்திக் கொண்டிருக்கிறோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) தூத்துக்குடி ஸ்பிக் உரத் தொழிற்சாலைக்கு தண்ணீர் கொடுப்பது குறித்து அரசு ஒப்பந்தமும், விவசாயிகள் பாதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'தாமிரபரணி ஆற்றிலிருந்து தூத்துக் குடி 'ஸ்பிக்' உரத் தொழிற்சாலைக்கு தண்ணீர் கொடுக்க அரசு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதால், விவசாயிகளுக்குப் பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்த' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், தே. ஞானசிகாமணி ஆகியோர் சார்பில் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

'தாமிரபரணி ஆற்றிலிருந்து தூத்துக்குடி ஸ்பிக் உரத் தொழிற்சாலைக்கு தண்ணீர் கொடுக்க அரசு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதால், விவசாயி களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்து'

1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தற்போது தூத்துக்குடியில் செயல்பட்டு வரும் 20 மில்லியன் கேலன் நீர் வழங்கும் திட்டத்தின் கீழ் மருதூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் அணைப் பகுதியில் உள்ள கால்வாய்களில் கசிந்து வீணாகும் நீரை, கால்வாய்களை லைனிங் செய்வதன் மூலம் மிச்சப்படுத்தி ஸ்பிக் மற்றும் இதர தொழிற்சாலைகளுக்குத் தேவையான அளவு வழங்கப்படுகிறது.

எனவே தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்குவதால் பாசன நீர் வினியோகம் பாதிக்கப்படவில்லை. ஆற்றிலிருந்து கிடைக்கப்பெறும் நீரை வழங்குவதில் இன்னமும் நீர்ப்பாசனத்திற்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே நீர்ப்பாசனத்திற்குத் தான் முதல் உரிமை கொடுப்பதாகச் சொல்கிறார்கள். லைனிங் செய்வதன் மூலம் மிச்சப்படுத்தும் தண்ணீரைத்தான்—கசிந்து வீணாகும் தண்ணீரைத் தான் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். நீர்ப்பாசனத்திற்கு முன்உரிமை கொடுக்கப்படவில்லை என்பதற்கு சில விவரங்களை இப்போது சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அமைச்சருக்குத் தவறான தகவல் கொடுத்து இருக்கிறார்கள். சென்ற ஆண்டு கூட மருதூர், ஸ்ரீவைகுண்டம் பகுதியில் உள்ள மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. ஸ்பிக் இற்குக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அந்த வருஷத்திலேயே விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, நீர்ப்பாசனத்திற்கு முன்னுரிமை என்று சொல்கிறபோது, அவர்களுக்குக் கொடுத்ததுபோக மீதம் உள்ளதைத்தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தர விடுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் லைனிங் செய்வதன் மூலமாக வீணாகாமல் கிடைக்கக்கூடிய நீரைத்தான் இன்றைக்கு ஸ்பிக் போன்ற உரத் தொழிற் சாலைக்குக் கொடுத்து வருகிறோம். நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் இல்லாமல் விவசாயிகளுக்குப் போகும் அளவில் எந்தவிதமான திட்டத்தையும் இந்த அரசு தீட்டவில்லை. அது இந்த அரசின் குறிக்கோளும் அல்ல. ஆகவே, நீர்ப்பாசனத்திற்கு முன்னுரிமை கொடுத்துவிட்டு, எஞ்சியுள்ள நீர்தான் உரத்தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் கூறுகிற அப்படிப்பட்ட நிலைமை இல்லை. அப்படி இருந்தால் கண்டிப்பாக அதுபற்றி பரிசிலனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே கசிவுநீரைத் தான் ஸ்பிக் உரத்தொழிற்சாலைக்கு அனுப்புவதாகச் சொன்னார்கள். தாமிர பரணி ஆற்றில் இருந்தும், மருதூர் அணையில் இருந்தும் தண்ணீர் விட

[திரு. ரா. கிருஷ்ணன்] [1979 ஏப்ரல் 28

வேண்டும் என்று கேட்ட நேரத்தில், விவசாயிகளுக்குத் தண்ணீர் இல்லாமல் போனாலும் பரவாயில்லை, ஸ்பிக்கிற்குப் போகட்டும் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை நிச்சயமாக கண்டிக்கக் கூடியது. ஆகவே, அந்த நிலையைப் போக்குவதற்கு இந்த ஸ்பிக் உரத் தொழிற்சாலை ஒரு பெரிய ஆழ் கிணறு தோண்டி அதன் மூலமாகத் தண்ணீர் எடுத்து பயன்படுத்திக் கொள்கிற அளவிற்கு ஆலோசனை கூறி, அதை அமலாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கசிவு நீர் என்பது தண்ணீர் செல்கிற வாய்க்கால்கள் லைனிங் செய்யப்படுவதால் கிடைக்கக்கூடிய அதிகப்படியான நீர் ஆகும். லைனிங் செய்யப்படாமல் விட்டு விட்டால், அந்த வீணாகிப் போகிறது. அந்த நீர்தான் நிலத்தடி நீராகப் போய்விடுகிறது. ஆகவே லைனிங் செய்வதன் மூலம் அந்தக் கசிவு நீரை உரத்தொழிற்சாலைகளுக்குக் கொடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த உரத் தொழிற்சாலைக்கு ஒரு பெரிய ஆழ் கிணறு தோண்டுவதன் மூலம் அவர்கள் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் தொடர்ந்து நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதை ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுமானால் கண்டிப்பாக உங்களுடைய யோசனை ஏற்றுக்கொள்ளப்படும்.

(6) தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகளை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நான் 9-ம் தேதி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி கடைசி நாள் கேளுங்கள். 30-ம் தேதி கேளுங்கள்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: அவர் கொடுத்து ரொம்ப நாள் ஆகிவிட்டது. இன்றைக்கு எடுத்துக்கொள்வதாகச் சொன்னீர்களாம். ஆகவே, அவரைப் பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இன்றைக்குத் தயாராக இருந்து இருந்தால் எடுத்துக்கொண்டு இருப்பேன். அதில் பிரச்னை இல்லை. இன்று வரவில்லை. கடைசிநாள் அந்தப் பிரச்சினை என்ன என்பதை அவர் அவையில் தெரிவிக்க நிச்சயமாக அனுமதிக்கிறேன். இன்று வேண்டாம்.

1979 ஏப்ரல் 28]

(முற்பகல் 10-10)

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) பசுக்கள், வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, இச்சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
என்று மொழிகிறேன்.

* 1979, ஏப்ரல் 25-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மசோதாவையும், இதற்கு அடுத்து இருக்கிற இரண்டு மசோதாக்களையும் சேர்த்து விவாதித்துவிட்டு, பிறகு மூன்று மசோதாக்களையும் தனித்தனியாக நிறைவேற்றலாம். முதலில் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த அவைக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற ஊராட்சிகள் பதவிக்கால நீட்டிப்பு, தனி அதிகாரிகள் நியமனம், மற்றுமுள்ள திருத்தச் சட்டம் ஆகியவைபற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தத் திருத்த மசோதாக்கள் மூலம் இதற்கு மேலும் நடைபெற இருக்கக் கூடிய தேர்தல்களை ஒத்திப்போடுவது என்பது இந்த மசோதாக்களுடைய பிரதான அடிப்படையான குறிக்கோளாக இருக்கிறது. இந்த அரசு வந்து, இது மூன்றாவது முறையாக ஒத்திப்போடப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்தோ அல்லது பஞ்சாயத்து யூனியனோ தேர்தல்களை நடத்தி சுமார் 10 வருஷங் களுக்கு மேல் ஆகப் போகிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது தேர்தலை நடத்தப் பயப்படுகிறார்கள், தயங்குகிறார்கள், அவர்கள் தேர்தலை நடத்தினால் வர முடியாது என்றெல்லாம் சொல்லித்தான் அவர்களை வீழ்த்திவிட்டு இந்த ஆட்சி வந்திருக்கிறது. நீங்கள் வந்து இரண்டாண்டுக் காலம் முடிகிறது. இன்னும் தேர்தலை நடத்த ஏன் தயங்குகிறார்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை. வேண்டுமானால் தேர்தலே நடத்தப் போவதில்லை என்று சொல்லி விடுங்கள். இல்லை என்றால் 1980 ஆம் வருஷத்தில் அல்லது 1981 ஆம் வருஷத்தில்தான் நடத்தப் போகிறோம் என்று சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு, இப்படி அடிக்கடி திருத்த மசோதா என்கிற பெயரால், விசேஷ அதிகாரிகள் என்கிற பெயரால், 4 மாதம், 5 மாதம், 3 மாதம் என்று எதற்காகக் கொண்டுவர வேண்டும்?

இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் பஞ்சாயத்து யூனியன்களாக இருந்தாலும் சரி, நகரசபைகளாக இருந்தாலும் சரி, அங்கே அதிகாரிகள், சிப்பந்திகளை நியமிப்பதிலும் சரி, ஆசிரியர்களை நியமிப்பதிலும் சரி அல்லது அவர்களை ட்ரான்ஸ்ஃபர் செய்வதிலும் சரி, இன்றைக்கு மிகப் பெரும் அளவுக்கு அதிலே சீர்கேடுகள் இருந்து வருகின்றன என்பதை நான் சொல்லா மலேயே அமைச்சரவர்களுக்குத் தெரியும்.

இப்பேர்ப்பட்ட ஒரு சூழ்நிலையிலே பாராளுமன்றத் தேர்தல் நடைபெறக் கூடிய அளவுக்கு இருக்கின்ற காரணத்தினால் இதைத் தள்ளிப் போடுகிறோம் என்று அமைச்சரவர்கள் காரணம் சொல்வார்கள் என்பது நமக்குத் தெரிந்த

1979 ஏப்ரல் 28] [திரு. வி. கே. கோதண்டராமன்]

விஷயம். பாராளுமன்றத் தேர்தல் வெற்றிகரமாக முடிந்தால் உடனே இந்தத் தேர்தலை ஒருவேளை வைக்கலாம். அப்படி இல்லை என்றால் அதாவது வெற்றிகரமாக நடக்கவில்லை என்று சொன்னால் மேலும் ஒரு வருஷமோ அல்லது 6 மாதமோ இப்படியே ஏதாவது காரணங்களைக் காட்டி அதற்குப் பிறகும் தள்ளிப் போடக்கூடிய அளவுக்கும் வரலாம். ஆகவே இது சரியல்ல. இது மக்கள் மத்தியிலே தெளிவாக இந்த அரசைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதை நான் அதாவது எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னால்கூட எதிர்க்கட்சிக்காரன் இப்படித்தான் பேசுவான் என்று நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆனால் உங்கள் ஆட்களே கூடச் சொன்னாலும் கேட்க மாட்டீர்கள். நீங்களாவது ஒரு திட்டவட்டமான முடிவு எடுத்து அந்த அடிப்படையிலே உறுதியான ஒரு ஸ்டான்டிலே நிற்கவும் மாட்டீர்கள். ஆகவே இந்த நிலைமை சரியல்ல. ஆகவேதான் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையிலே பஞ்சாயத்து போர்டுகளுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் எந்தவிதமான நிதி வசதியும் கிடையாது. அந்த நிதி வசதியை ஏற்படுத்தி கிராமங்களுக்கு ரோடு போக்குவரத்துக்களை செய்யவோ அல்லது இன்னும் அதை அபிவிருத்தி செய்யக்கூடிய தன்மையிலேயோ இன்றைக்கு மிகப் பெரிய அளவுக்கு கவனம் செலுத்தி ஆகவேண்டும்.

இதுபோன்ற கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு மத்திய அரசினுடைய கருத்து என்னவென்றால் ஐ.ஆர்.டி.பி. அன்ட் எஸ்.எஃப்.டி.ஏ. என்கிற பெயராலே அவர்கள் பல சலுகைகளை சிறு விவசாயிகளுக்கு வழங்கினோம் என்கிற அளவுக்கு சப்சிடி 25 பெர்சன்ட் அல்லது 30 பெர்சன்ட் அல்லது 50 பெர்சன்ட் இப்படி கொடுக்கக்கூடிய அளவுக்கு இருக்கின்றது. ஆனால் பஞ்சாயத்திலே ஒரு சிறிய லோன் வாங்கவேண்டுமென்றால் கூட அதற்காக யார் யாருக்கெல்லாம் எந்தெந்த அளவுக்கு எத்தனை எத்தனை பெர்சன்ட் கொடுத்து வாங்க வேண்டிய அளவுக்கு இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். அந்த அளவுக்கு லோன் வாங்குவதிலே சிரமங்கள் இருக்கின்றன. ஒரு லோன் என்று வருகின்றபோது அங்கே உள்ள அதிகாரிகள் அந்த கிராமங்களை சுற்றி வளைத்து போய்ப் பார்க்கிறார்கள். அப்போது அந்த விவசாயிகள் எவ்வளவு லோன் கேட்கிறார்களோ, அந்த அளவுக்குக் கூட விவசாயிகள் செலவு செய்ய வேண்டிய நிலை எற்பட்டு விடுகிறது. அந்த அளவுக்கு நடைபெறுகின்றது. அந்த அளவுக்கு விவசாயியும் செலவு செய்கிறான். அதாவது கிடைக்க வேண்டிய லோனிலே பாதிப் பணத்தையாவது செலவு செய்ததற்குப் பிறகு தான் அவனால் அந்தத் தொகையை வாங்க முடியும் என்ற நிலைமை இருக்கின்றது. இப்பேர்ப்பட்ட ஒரு சூழ்நிலை

யிலேதான் இன்றைக்கு கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகள் மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சரவர்களுக்குத் தெரிந்த விஷயம்.

ஆகவேதான் இப்படித் தேர்தலைத் தள்ளிப் போடுவது என்பது சர்வ சாதாரணமானதாக இப்போது வந்தாகிவிட்டது. அது இன்னும் பல மாதங் களுக்குக்கூட தள்ளிப் போடப்படுகின்ற நிலை உருவாகலாம். ஒரு மாதத் திற்கு முன்னாலே மாண்புமிகு அமைச்சரவர்கள் அடித்துச் சொன்னார்கள், திட்டவட்டமாகத் தேர்தலை நடத்தியே தீருவோம், எந்தக் காரணத்தைக் கொண்டு தேர்தல் நிற்காது என்று. அதாவது சேலன்ஞ் பண்ணி அடித்து உறுதியாகச் சொன்னார்கள். ஒரு மாதத்திற்குப் பிறகு இரண்டாவது மாதத் திலேயே சொன்ன சொல்லிலே இருந்து கீழே விழுந்தாச்சு. அதாவது இரண் டாவது மாதத்திலேயே கீழே விழுந்தாச்சு. இதற்குக் காரணம் பார்லி மென்ட் எலக்ஷன் என்று சொல்வார்கள். பார்லிமென்ட் எலக்ஷனிலே எந்த அளவுக்கு நிலைமை ஏற்படுமோ அதைப் பொறுத்துத்தான் நடத்தப்படும் என்று தோன்றுகிறது. ஆகவே பார்லிமென்ட் எலக்ஷன் முடிந்த உடனே நடத்தப்படும் என்கின்ற அளவுக்கு நம்பிக்கையே கிடையாது.

இப்போது இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்தால் இந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் வைத்ததுதான் சட்டம். அந்த அளவுக்கு இன்றைக்குத் தொடர்ந்து நடைபெறக்கூடிய அளவுக்கு இருக்கின்றது என்று சொன்னால் இந்தத் தேர்தலைத் தள்ளிப்போடுவது சரியல்ல. இந்தத் தேர்தலை இன்னும் 1 மாதம், 5 மாதம் என்றெல்லாம் தள்ளிப்போடுவது அவ்வளவு சரியல்ல, ஆகவே அதை உடனடியாகக் கண்டிப்பாக நடத்தியாக வேண்டும். இப்போது நீங்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தத் திருத்த மசோதா சரியல்ல. (மணி யடிக்கப்பட்டது) ஆகவே அதைக் கண்டிப்பாக வன்மையாகக் கண்டிக்கிறோம், எதிர்க்கிறோம். ஆகவே இந்தச் சட்டத்தை நீங்கள் வாபஸ் வாங்கிக் கொண்டு தேர்தலை உடனடியாக நடத்தியாக வேண்டும். அப்போதுதான் நீங்கள் ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கக்கூடிய அமைச்சரவை என்று சொல்லிக்கொள்ள முடியும். அப்போதுதான் ஜனநாயகத்திற்கு பாதுகாப்பு கொடுக்கிறீர்கள் அல்லது அதற்கு உண்மையாகவே மதிப்பு கொடுக்கிறீர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும். ஆகவே அந்த அடிப்படையிலே நீங்கள் இந்தத் தேர்தலை மேலும் தள்ளிப்போடுவது சரியல்ல. தயவுசெய்து கண்டிப்பாக இந்த பில்லை வாபஸ் வாங்கிக்கொண்டு தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டு என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம் எங்கள் கட்சியின் சார்பிலே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி எதிர்க்கின்ற

1979 ஏப்ரல் 28]

போது இங்கே இந்த மன்றத்திலே தேர்தல் வரும் என்று அமைச்சரவர்கள் அறிவித்ததில் சந்தேகம் வருகின்றது என்பது மாத்திரமல்ல. இந்த அமைச்சரவைக்குக் களங்கத்தையும் ஏற்படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது இந்த அமைச்சரவை சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றுமா என்ற எண்ணம் நிச்சயமாக மக்களுக்கு உண்டாகி இருக்கின்றது. முன்பு இதே மானியக் கோரிக்கை வருகின்றபோது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் ஜூன் மாதம் 20-ம் தேதி கட்டாயம் தேர்தல் நடக்கும் என்கிற அறிவிப்பை எனக்கு முன்னாலே உட்கார்ந்துகொண்டு அறிவித்ததைப் பார்த்தால் நிச்சயமாக இந்த அறிவிப்பு ஈடேறும் என்று எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தோம்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஜூன் மாதம் என்றுதான் சொன்னேன், 20 ஆம் தேதிக்குள் என்று சேர்த்துக் கொண்டார்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: ஜூன் மாதம் 20 ஆம் தேதிக்குள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் படித்துப் பார்க்க வேண்டும். அந்தக் குறிப்பை நான் வைத்திருக்கிறேன். மேலும் 10 நாட்கள் தான் பரவாயில்லை. ஜூன் 30 ஆம் தேதி என்று வைத்துக் கொள்ளட்டும். இப்படி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தங்கள் சொந்தக் கட்சிக்காக இந்தத் தேர்தல்களைத் தள்ளி வைக்கிறார்கள். இது எங்கு கொண்டு போய்விடும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் வந்திருக்கிறது. அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதிகாரிகள் ஆட்சி நடக்கிறது. போலீஸ் ஆட்சி நடக்கிறது. கூட்டாக அமர்ந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போதைய நிலையைப் பார்த்தால், எங்களுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. இந்த நடவடிக்கையினால் இந்த நாட்டினுடைய அதிகாரிகளின் கைதான் வலுப்படுத்தப்படும், ஜனநாயகம் கொலை செய்யப்படும் என்பதை எங்கள் கட்சியின் சார்பாகச் சொல்லிக்கொள்கிறேன். இப்போது இதை நான்காவது முறையாக அறிவித்திருக்கிறீர்கள். உண்மையாக ஜனநாயகப்படி செய்ய வேண்டும் என்று சொன்னால், அலுவல் ஆய்வுக் குழுவில் பாராளுமன்றத் தேர்தல் வருகிறது, இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தத் தேர்தல்களைத் தள்ளி வைக்கலாம் என்ற நிலைமைகளையெல்லாம் சொல்லியிருக்கலாம். மற்றக் கட்சிகளைக் கலந்திருக்கலாம். ஜனநாயக மரபிற்கு மாறாக 3 அறிவிப்புகளை செய்கிறீர்கள். இம்மாதிரி செய்தால் எப்படி மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படும். இந்தக் கூட்டத் தொடரிலேயே, பாராளுமன்ற தேர்தல் வருகிறது, ஜூன் மாதம் 17 ஆம் தேதி வருகிறது. ஆகையினால் ஜூலை மாதத்திலோ அல்லது ஆகஸ்ட் மாதத்திலோ நடத்திக்கொள்ளலாம்

என்று சொல்லியிருக்கலாம். அப்படி செய்ய தவறியிருக்கிறீர்கள். நிச்சயமாக அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றாமல், இந்தப் பிரச்னையில் இந்த மனோபாவத்தில் நடந்துகொண்டால், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அல்ல, மக்கள் மத்தியில் ஒரு சந்தேகம் ஏற்படும். ஆகவே, இதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம் என்று உறுதியிட்டு, அறுதியிட்டுச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ப. சந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்தல் தள்ளிப்போடுதல் சம்பந்தமாகக் கொண்டுவந்த இந்த மசோதா மீது நான் என்னுடைய கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். ஜனநாயக உரிமைகளை நாம் மக்களுக்கு வழங்குவதில் தவறிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஊராட்சி மன்றத் தேர்தல்களை இதுவரை பல முறை தள்ளிப்போட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். அப்படித் தள்ளிப் போடுகிற நேரத்தில் எல்லாம் மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம், அதிகாரிகள் கையில் அதிகமான பளுவைச் சுமத்தியிருக்கிறோம்; அவர்களை வைத்து ஆட்சி என்ற முறையில் நாம் அவர்களுக்கு அதிகப் பளுவைத் தருகிறோம் என்று பலவாறாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி தேர்தல்களைத் தள்ளிப் போடக் கூடாது என்று சொல்வதற்கான காரணத்தை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதிகாரிகள், ஆசிரியர்கள் நியமனத்தில் எந்த அளவிற்குத் தவறு செய்துகொண்டிருக்கிறார்கள், அதோடு மட்டுமல்லாமல் இருக்கிற ஊராட்சி மன்றத் தலைவர்கள் கூட தலைவர்களாக இருக்கிறார்களே ஒழிய, இந்தத் தேர்தல் நடக்கும் என்று எதிர்பார்க்கின்ற நேரத்தில், அவர்கள் தங்கள் பணிகளை செய்யும் உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஊராட்சி மன்றங்களில் மின்விளக்குப் போடுதல், சாலைகள் போடுதல், மண் எடுத்தல், இன்னும் இன்னும் சிறிய சிறிய வேலைகளைச் செய்ய முடியாத அளவில் அதிகாரிகள் செய்யக் கூடிய நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. பெரிய திட்டங்களைச் செய்வதற்கு இந்த அரசு கட்டளையிட்டிருக்கிறது. ஆனால் அந்த ஊராட்சி மன்றத் தலைவர் இப்படிப்பட்ட வேலைகளைக்கூட செய்ய முடியாத அளவில் கட்டளை பிறப்பிக்கப்பட்டதாக அறிகிறேன். அந்தக் காலத்தில் ஊராட்சி மன்றத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட்டதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பள்ளி ஆண்டு முடிவில் ஆசிரியர்களை மாற்றம் செய்யக் கூடிய நேரம். பொதுவாக ஆசிரியர்களை மாற்றம் செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் அதிகாரிகள் தங்கள் விருப்பம்போல் தங்கள் அபிலாட்சைகளை நிறைவேற்றுகின்ற வகையில் ஆசிரியர்களை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அரசாங்கம் பிறப்பிக்கின்ற ஆணைகள் இருந்தும் அவைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்கு

1979 ஏப்ரல் 28] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஊராட்சி மன்றங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இப்படி தேர்தலை தள்ளி தள்ளி கொண்டு போனால் ஜனநாயக அமைப்பையே மக்கள் மறந்து விடுகின்ற வாய்ப்பு ஏற்பட்டுவிடும். அதிகாரிகள் கையிலேயே இன்னும் சுமையை ஏற்றக்கூடாது, ஆகவே ஊராட்சித் தேர்தல்களையும், ஊராட்சி ஒன்றிய தேர்தல்களையும் உடனடியாக நடத்தி ஜனநாயக உரிமைகளை வழங்கவேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சபையில் வைத்திருக்கின்ற திருத்தச் சட்ட முன்வடிவுகளை நான் வன்மையாக எதிர்க்கிறேன். ஏற்கனவே இந்த அரசைப்பற்றி ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத அரசு என்று நிரூபிப்பதற்கு பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இப்போது ஜூலை மாதம் தேர்தலை நடத்திவிடுவோம் என்று ஆணித்தரமாக இந்தப் பேரவையில் வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் இப்போது இன்னும் ஐந்து மாதங்களுக்கு, இந்தச் சட்டங்களைக் கொண்டு வந்து அதன் மூலம் பஞ்சாயத்து மன்றங்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும், தனி அதிகாரிகளையும்—இவர்களின் காலத்தை இன்னும் ஐந்து மாதங்கள் நீடிப்பதற்கு இந்த மசோதாவை தாக்கல் செய்திருக்கிறார்கள். இதற்கு சொல்லப்பட்டிருக்கும் காரண காரியங்களைப் பார்க்கும்போது ஒரு காரணத்தைப் போய் தேடிப்பிடித்து சொல்லுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்தக் காரணத்தைப் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது. பாராளுமன்ற தேர்தல் நடைபெறவிருப்பது, இதற்கு குறுக்கே நிற்கிறது. ஆகவே பாராளுமன்ற தேர்தல் முடிந்தவுடன் உள்ளாட்சித் துறைக்கான தேர்தல் நடத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மசோதாவை தாக்கல் செய்திருக்கிறார்கள். பாராளுமன்ற தேர்தல் எப்போது நடந்து முடிவு பெறும் என்பது இந்த அரசுக்கு தெரிந்திருக்கிறது. பாராளுமன்ற தேர்தல்கள் இன்னின்ன நாட்களில் நடைபெற்று முடியும் என்பது தெரிந்த பின்னால், இன்னின்ன நாட்களில் உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்திருந்தால் ஓரளவுக்கு இதை ஏற்றுக்கொள்ள முடியும். பாராளுமன்ற தேர்தல் நடைபெறப்போகிறது அதன் பின்னால் உள்ளாட்சித் துறைக்கான தேர்தல் நடைபெறும் என்று சொன்னால் உண்மையிலேயே இவர்கள் உள்ளாட்சித்துறை தேர்தலை நடத்தமாட்டார்கள் என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

தனி அதிகாரிகளால் பல்வேறு பஞ்சாயத்து யூனியன்களில் எந்த அளவுக்கு ஊழல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை ஏற்கனவே இங்கே எடுத்துக் கூறியிருக்கிறோம். இப்படிப்பட்ட செயல்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) மக்களுடைய ஆட்சி

இல்லை என்று சொன்னால் உள்ளாட்சித் துறை சரியாக செயல்படாது என்பதை இந்த அரசு நன்றாக உணரும், இருந்தாலும் அவ்விதம் செயல் படுகிறதா என்றால் இல்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

ஏதோ சாக்குபோக்குக்கு ஏதாவது காரணங்களைக் கூறி இந்த அதிகாரிகள் கையில்தான் அதிகாரங்களைக் கொடுப்போம், மக்கள் கையில் கொடுக்கத் தயாராக இல்லை என்பதை இந்த அரசு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசிலிருந்து அதிகாரங்களை மாநில அரசுக்கு பெறுவதற்காக போராடவும் தயாராக இருக்கிறோம் என்று அறைகூவல் விடுகின்ற இந்த அரசு தங்களிடம் இருக்கின்ற அதிகாரங்களைக் கூட உள்ளாட்சித் துறைகளுக்கு கொடுக்க முன்வரத் தயாராக இல்லை. ஏற்கனவே பஞ்சாயத்து மன்றங்களும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் இன்னும் அதிகமாக அதிகாரங்கள் ஏன் எங்களுக்கு தரக்கூடாது என்று கூறிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இனிமேலாவது இப்படிப்பட்ட சட்டத்தை நிச்சயமாக இந்த அவையில் கொண்டு வரமாட்டோம் என்ற உறுதியையாவது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூறினால் நலமாக இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், தனி அதிகாரிகள் இவர்களுடைய காலத்தை இன்னும் ஐந்து மாத காலத்திற்கு நீட்டிக்க வேண்டும் என்று இந்தத் திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதை நான் கடுமையாக எதிர்க் கிறேன். ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது, இந்த அரசு தனக்கு இருக்கின்ற அதிகாரத்தை இவைகளின் மீது மேலும் தக்க வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற நினைப்பில்தான் இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னார்கள்.

(முற்பகல் 10-30)

என்னைப் பொறுத்த வரையிலே நான் சொல்ல விரும்புவது, அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துவதாக இருந்தாலும் பரவாயில்லை. இந்த ஊராட்சி ஒன்றியங்களின் அன்றாட நிர்வாகத்தில் அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துகின்ற அளவில் இருந்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. அரசாங்கம் எல்லா இடங்களிலும் தவறு செய்யும் என்றும் நான் கருதவில்லை. இப்போது நடந்து கொண்டிருப்பது அரசாங்கத்தின் நேரடி அதிகாரம் இல்லை. தனி அலுவலர்கள் இன்றைக்கு ராஜபோகமாக, தன்னிச்சையாக அவர்கள் என்ன நினைக்கிறார்களோ, அந்த நிலையில் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கான்ட்ராக்ட் விடுவதிலே ஊழல்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், பலருடைய

இன்புளுவன்சிலே அவர்கள் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்; அதற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். பணம் கைமாறுகிறது, பல இடங்களில் என்ற குற்றச்சாட்டை நான் சொல்லுகிறேன். இன்றைக்கு அரசியிலிலே பல இடங்களில் அதற்காக அத்தாட்சி கொடுக்கப்பட்டு, சில குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் இன்றைக்கு சில பேர்களின்மீது நடவடிக்கை எடுத்தாலும், பலர்மீது நடவடிக்கை எடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்திலே அதிகாரத்தை வைத்திருந்தாலும் பரவாயில்லை; ஆனால் அரசாங்கத்திற்கும் இதிலே பங்கில்லை. அதிகாரிகள்தான் இதை நடத்துகின்றார்கள். இந்த நிலையில் இன்றைக்கு இந்த அரசு, மக்களுடைய பிரதிநிதிகளை ஆங்காங்கே தேர்ந் தெடுத்து, அவர்கள் வாயிலாக இன்றைக்கு நிர்வாகத்தை நடத்துவதற்கு முன்வரவில்லை என்று சொன்னால், அதற்கு என்ன காரணம்? அரசாங்கம் தங்கள் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்ப வில்லை அல்லது தங்கள் அலுவலர்களை இந்த வரம்பு மீறுகின்ற முறையில் செயல்பட்டு, ஊழல்கள் மலிந்த நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருப்பதற்கும் ஆசைப்படவில்லை. இந்தக் குற்றச்சாட்டுகளை நான் கூற விரும்பவில்லை. உண்மையிலேயே என்ன காரணம் என்று சொன்னால், மக்களைச் சந்திக்கத் தயங்குகிறார்கள்; மக்களைச் சந்திக்கப் பயப்படுகிறார்கள். பொது மக்கள் நமக்கு என்ன தீர்ப்பு வழங்கிவிடுவார்கள் என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு, இந்தத் தேர்தல் வாயிலாக நாம் அதற்கு முன்னோடியாக இருந்து விடக்கூடாது என்று நினைக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. மக்கள் அளிக்கின்ற வாக்குகள் மறு தேர்தலுக்கு தீர்ப்பாக அமைந்துவிடக் கூடாது, அதற்கு நாம் வழிவகுத்தவர்களாக ஆகிவிடக்கூடாது என்றும் உலகத்திற்கு நம் பலகீனம் தெரிந்து விடக்கூடாது என்பதற்காகவும் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றதே தவிர, இதன்வாயிலாக தங்கள் அதிகாரத் தையோ அல்லது அதிகாரிகளின் அதிகாரத்தையோ குறைத்து விடுகின்றோமே என்பதற்காக அல்ல. இதுதான் உண்மையான காரணம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லி, அரசாங்கத்தின்மீது இதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்கிறேன்.

ஜனநாயக நாட்டில், குறிப்பாக அரசியல் சட்டத்தில் வழிவகுத்துள்ள கிராம அரசுகள், கிராம நிர்வாகம், கிராம ஜனநாயகம் ஆகியவற்றைக் கெடுத்து, ஜனநாயகம் கொலை செய்யும் வகையிலே இந்த அரசு அடிக்கடி தங்களுடைய தீர்மானத்தைக் கொண்டுவருவது மிகவும் கண்டிக்கத் தக்கது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்புதான், அமைச்சர் அவர்கள் இதே மன்றத்தில் மிகவும் உறுதியாக, இறுதியாக அறுதியிட்டுச் சொன்னார்கள். ஜூன் மாதத்தில் தேர்தல் நடக்கும் என்று. இந்த அவையிலே அந்த

வாக்குறுதியைக் கொடுத்தார்கள். இதே சட்டமன்றத்தில் கொடுக்கப்பட்ட அந்த வாக்குறுதி, காப்பாற்றப்படவில்லை. எங்களால் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நாங்கள் காப்பாற்றமாட்டோம், அவ்வளவுதான் மதிப்புக் கொடுக்கிறோம் என்ற வகையில், பாராளுமன்றத் தேர்தல் வருகிறது, ஆகவே, அதற்காகத் தேர்தலை தள்ளி வைக்கிறோம் என்று சொன்னால், பாராளுமன்றத் தேர்தலுக்காக, ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களைத் தள்ளி வைப்பதா? பாராளுமன்றத் தேர்தல் இரண்டு தொகுதிகளிலே நடை பெறுகின்றது. அதுவும் தஞ்சாவூர் மாவட்டத்திலே. அதற்காக தமிழகத் திலே உள்ள எல்லா இடங்களிலும் தேர்தலைத் தள்ளிப்போடுவதா? பாராளுமன்றத் தேர்தலோடு, இந்தத் தேர்தலையும் சேர்த்து நடத்தலாமே? வசதியாககூட இருக்குமே? அதை விட்டுவிட்டு, மற்றக் காரணங்களைச் சொல்வது, தமிழக மக்களைப் பழிவாங்குவதாகும்.

ஜனநாயக முறைப்படி அங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சூழ்நிலை உருவாகுமானால், தெருக்களிலே விளக்கு இல்லை, சாலை இல்லை, சுகாதார வசதி இல்லை, இன்னும் ஊழல்கள் எல்லாம் நடக்கப் போகிறது. ஆனால், மக்கள் இதற்கெல்லாம் இன்றைக்கு தண்டனை தராவிட்டாலும், அதுவும் சாதாரண தண்டனை அல்ல, பெரிய அரசியல் தண்டனையைத் தர இருக்கிறார்கள், அதற்குத் தயாராக இருங்கள் என்று சொல்லிக்கொண்டு, இதை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு அமர்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக கொண்டுவந்திருக்கும் சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் இப்போது நிர்வாகம் ஸ்தம்பிக்கக்கூடிய நிலை ஏற்பட்டு செயல்பாடு இல்லாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களில் ஆலோசனைக் குழுக்கள் போடப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துக்களில் ஆலோசனைக் குழுக்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்கள் முறையாகச் செயல் படவில்லை. அமைச்சர் அவர்கள் கொஞ்சம் அந்தத் துறைக்குத் தகவல் கொடுத்து மாதந்தோறும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆலோசனைக் குழுக்களைக் கண்டிப்பாகக் கூட்டி அந்தக் குழுக்கள் சொல்லுகிற ஆலோசனைகளை, தீர்மானங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கான உத்தரவை ஸ்பெஷல் ஆபீசர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது அது வெறும் ஆலோசனைக் குழுக்களாகத்தான் இருக்கின்றன. அங்கே போடப்படுகின்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதில்லை.

1979 ஏப்ரல் 28] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

முக்கியமான வேண்டுகோள்—புதிய அரசு ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களுக்கு அரசியல் கட்சிச் சின்னங்களைக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இதைத் தயவு செய்து பரிசீலனை செய்து ஊராட்சித் தேர்தல்களில் அரசியலைப் புகுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊரிலே கிராமங்களுக்கு நன்மை செய்யக்கூடியவர்கள் அரசியல் இல்லாத நிலையில் தேர்ந்தெடுக்கப்பட வழி வகுக்கப்பட வேண்டும். அரசியலைப் புகுத்த வேண்டாம், அரசியல் சின்னங்களைக் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டு இந்த முறை நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மக்கள் ஆட்சி ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் மலர வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் எதிர்பார்த்ததைப் போலவே அவர்களுடைய குரலில் கண்டனமும் கடுமையும் இருந்தன. ஆனால் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது—ஊராட்சிகளுடைய, ஒன்றியங்களுடைய பதவிக் காலம் இந்த மாதம் 30ஆம் தேதியோடு முடிவடைகிறது. சட்டமன்றம் முடிவடைகிற அன்றோடு பதவிக்காலம் முடிவடைகிறது. ஆகவே, மே 1ஆம் தேதி தேர்தலை நடத்தக்கூடிய அளவுக்கு சூழ்நிலை இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்த்திட வேண்டும். தேர்தலுக்கு முன்னறிவிப்புக் கொடுப்பது போன்ற காரியங்களுக்கே சில நாட்கள் தேவைப்படும் என்பதை நிச்சயமாக அறிவார்கள்.

இந்த அரசுக்கு தேர்தலைத் தள்ளிப் போட வேண்டும், நடத்தக் கூடாது, மக்களைச் சந்திக்க அச்சம் இருக்கிறது என்றால் நீண்ட காலத்திற்குக் கூடக் கேட்கலாம், ஓராண்டுக் காலம் என்று கூடக் கேட்கலாம். ஆனால் ஐந்து மாத கால அவகாசம் கேட்டு அந்த ஐந்து மாத கால அவகாசத்தையும் குறைத்துக் கொள்வதற்கும் சட்டத்தில் வழியைச் செய்து தேர்தலை நடத்த வேண்டுமென்பதில் அரசு தன்னுடைய தீவிரத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள், தேர்தலை நடத்துங்கள் என்று கோதண்டராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். 30ஆம் தேதி வரை மக்களுடைய பிரதிநிதியாக இருக்கிற அவர்களைப் போன்றவர்கள் இங்கிருந்துவிட்டு 1 ஆம் தேதி வீட்டுக்குப் போனவுடன் தேர்தலை நடத்துவது உகந்ததாக இருக்குமா என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களைப் போன்றவர்கள் வசதிக்காகத்தான் கொஞ்ச காலம் அவகாசம் கேட்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இந்தத் தேர்தலைப் பொறுத்த அளவில் அதற்குரிய ஏற்பாடுகளை அரசு செய்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ பல லட்ச ரூபாய்களைச் செலவழித்து 1979 ஜனவரி வரை 21 வயது அடைந்தவர்களை வாக்காளர்களாக சேர்க்க அரசு முயற்சி எடுத்து அலுவலாளர்களை அமர்த்தி பணிகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பது விளையாட்டுக்காக அல்ல, தேர்தலை நடத்தக் கூடாது என்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோதண்டராமன் அவர்களும், அருமை அண்ணன் லத்திப் அவர்களும் குறிப்பிட்டார்கள்—மக்களைச் சந்திக்க அஞ்சுகிறீர்கள், அதனால்தான் தள்ளிப்போடுகிற சடங்கு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். நான் அமைச்சர் என்ற முறையில் அல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டன் என்ற முறையில் சொல்லுகிறேன்—நாங்களும் மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம், மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டிருக்கிறோம். அருமை அண்ணன் லத்திப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தலைப் பொறுத்த அளவில் தேர்தல் களத்தில் நாம் சந்திக்கப் போகிறோம். நான் அகந்தையோடு தெரிவிப்பதாகக் கருத வேண்டாம்; ஆணவத்தோடு தெரிவிப்பதாகக் கருத வேண்டாம்; அந்த உள்ளாட்சித் தேர்தல்களின் பெரும்பான்மையான இடங்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவேளை ஆளுகின்ற பொறுப்பு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்து கேள்வி கேட்கின்ற நிலைமையில் தாங்கள் இருப்பதுதான் ஆளும் கட்சிக்குத் தருகிற தண்டனை என்று கருதுவார்களானால் அப்படிப்பட்ட தண்டனையைத் தர மக்கள் காத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

ஆகவே, தேர்தலைப் பொறுத்தவரையில் இந்த அரசுக்குத் துளியளவு கூட அச்சம் கிடையாது. உள்ளாட்சி மன்றங்களுடைய நிர்வாகம் சீரும் சிறப்புற நடைபெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வரவேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய அவா. திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும் பொழுது இப்போது இருக்கின்ற ஆலோசனைக் குழுக்களுக்கு அதிகாரம் கொடுக்கக் கூடாதா என்று கேட்டார்கள். அப்படிச் செய்தால் அது இப்போது உள்ள உள்ளாட்சி அமைப்பையே தகர்த்துவிடும். ஆகவே, இப்போது இருக்கின்ற ஆலோசனைக் குழுக்கள் ஆலோசனைக் குழுக்களாகவே தொடர்ந்து செயல்படும், தேர்தல் உறுதியாகவும் நடக்கும். நான் அடுத்த முறை சட்டமன்றம் கூடுகிறபோது உங்களைச் சந்திக்கின்ற நேரத்திலே

உங்களுக்குக் கொடுத்த உறுதிப்படி நான் தேர்தல்களை நடத்திவிட்டேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கின்ற முறையிலே திரு. லத்திப் போன்றவர்கள் பாராட்டுகின்ற வகையிலே இருப்பேன் என்பதை நான் சொல்லிக்கொண்டு இந்தச் சட்டமுன் வடிவுகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, ஐந்து மாத காலம் என்று நீடிப்புக் கேட்டு இருக்கிறீர்கள். அந்த பீரியடினுடைய கடைசி காலம் மழை காலம். ஆகவே, டெபனிட்டாக மினிஸ்டர் அஷ்யூர் பண்ணுவாரா? அப்போது மழைகாலம் என்று சொல்லி மேலும் இன்னொரு ஐந்து மாதம் என்று கேட்பார்களே! ஆகவே அவர்கள் இந்த ஐந்து மாதத்தில் நடத்தப் படுமென்று அஷ்யூர் பண்ணுவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அடாது மழை பெய்தாலும் விடாது தேர்தல் நடத்தப்பெறும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நிச்சயமாக அண்ணா தி.மு.க. தான் பெரும்பான்மையான பஞ்சாயத்துக்களில் வருவார்கள் என்று ஏதோ ஒரு நம்பிக்கையோடு தெரிவித்தார்கள். நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். நீங்கள் ஐந்து மாதம் கழித்து வைக்கிறீர்கள், ஐந்து மாதம் கழித்து அந்த நம்பிக்கை உங்களுக்கு இருக்கலாம், ஆனால், இன்றைய தினம் தேர்தலை நடத்தினால் நீங்கள் சிறுபான்மையோராகத்தான் வருவீர்கள், ஆகவே, இப்போது தேர்தலை நடத்துவதற்கு நீங்கள் தயாரா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: எப்போது தேர்தல் நடக்கும் என்ற நிலைமையை ஒட்டி அந்தக் கேள்விக்குத்தான் பதிலை நம்முடைய அமைச்சர் சொன்னார்கள். மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு ஐந்து மாதங்களுக்குப் பிறகு நிலைமை மாறலாம் என்ற சந்தேகம் இப்போதே ஏன் வரவேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை. வெற்றி தோல்வி ஒருவருக்கே உரித்தானது அல்ல.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய கருத்தோடு நான் என்னுடைய கருத்தினையும் இணைக்க விரும்புகிறேன். திரு. ஜேம்ஸ் அவர்கள் இப்போதே தோல்விக்குக் காரணம் தேட வேண்டாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: அமைச்சர் அவர்கள் வழக்கம்போல பதிலை அளித்தார்கள், எதிர்பார்த்தது தான். அதற்கு மேலே அவர்கள் பதில் சொல்ல முடியாது என்பது நமக்குத் தெரியும். மே மாதம் முதல் தேதி

தேர்தல் நடத்தமுடியுமா என்று அவர்கள் கேள்வி கேட்டார்கள். இதே அமைச்சர் ஒரு மாதத்திற்கு முன்னாலே இதைக் கொண்டுவந்தபோது தேர்தல் நடத்த முடியுமா என்று ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை என்று தெரியவில்லை. அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள், தேர்தலை நடத்தியே தீருவோம் என்று தொடையைத் தட்டி மாரை நிமிர்த்தி டேபிளைத்தட்டி ஜூன் மாதத்திலேயே கண்டிப்பாக நடத்துவோம் என்று சொன்னார்கள். இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால் அடாது மழை பெய்தாலும் விடாது நடக்கும் என்று சொல்கிறார்கள். நாடகம் நடக்கிற கொட்டகையிலே தான் அது. அங்கே உள்ளே உட்கார்ந்து தான் நாடகம். ஆனால் தேர்தல் என்பது ஓப்பன் கிரவுண்டிலே நடக்கக்கூடிய பிரச்சினை. மழையிலே நனைந்து கொண்டு யாரும் வரமாட்டார்கள். ஆகவே, மழைக்காலம் என்கிற போது தேர்தல் நடத்தமுடியுமா? வேண்டுமானால் ஐந்து மாதங்களை பத்து மாதம் என்று போடுங்கள். பார்லிமெண்ட் தேர்தல் அதன் கூடவே சேர்த்து நடத்த வேண்டியதுதானே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து இரண்டாவது முறை பேசுவதைப் போன்று நேரம் எடுத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: விவாதிக்க விடமாட்டேன் என்கிறீர்கள். இப்படி மணி அடித்து மணி அடித்து எங்களை சிக்கலில் மாட்டிவிடுகிறீர்கள், நாங்கள் ஏதாவது சொன்னால் அப்படிச் சொன்னார், இப்படிச் சொன்னார் என்று சொல்லி உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபடியும் பேசிக்கொண்டே இருக்கிறீர்களே, சுருக்கமாக கிளாரிபிகேஷன் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஆகவே கிட்டவட்டமாக இந்த தேர்தலை ஐந்து மாதங்களுக்குப் பிறகு உங்களால் நடத்த முடியுமா? அடாது மழை பெய்தாலும் விடாது தேர்தல் நடக்கும் என்று வழக்கத்திற்காக வேண்டி பழமொழியாகச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணியடித்தேன் என்று சொல்கிறீர்கள். இதையேதான் திரு. உமாநாத் அவர்களும் கேட்டார்கள். அதையே நீங்களும் கேட்டு நேரத்தை வீணாக்காதீர்கள்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, இந்தக் கோரிக்கை சபையிலே நடக்கும் காலத்தில் நான் திருப்பித் திருப்பிக் கேட்டேன். என்றைக்குத் தேர்தல் நடக்கும் என்று. மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் சொன்னார்கள், ஜூன் மாதம் என்று. எந்தத் தேதி என்று கேட்கிறபொழுது, தலைவரவர்கள் டெல்லியில் இருக்கிறார்கள், வந்தவுடன் இதுபற்றிக் கலந்து அறிவிக்கப்படும்

என்று சொன்னார்கள். இப்பொழுது ஐந்து மாதங்கள் தள்ளியாகிவிட்டது. இப்பொழுதாவது எந்த மாதம், எந்தத் தேதி என்று சொல்வார்களா, தலைவாவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்களைக் கலந்துகொண்டு அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, தேர்தலில் வாக்குரிமை வயதை 21 லிருந்து 18 ஆகக் குறைக்க வேண்டுமென்று, இந்தியாவிலுள்ள மாநிலங்களில் ஒன்பது மாநிலங்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக் கின்றன. அதைப்போன்று நம்முடைய மாகாணத்திலேயும் வாக்காளர்களின் வயதை 18 என்ற அடிப்படையில் வைக்க தீர்மானம் நிறைவேற்றி 18 வயதான வர்களும் வாக்களிக்கும் வகையில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்த வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, அது இன்னும் அதிக கால அவகாசத்தை எடுக்கும். ஆகவே, ஊராட்சி மன்றங் களைப் பிரிப்பது, ஒன்றியங்களைப் பிரிப்பது போன்ற பிரச்சனைகள் முடிந்தவுடன்—இன்னும் ஜேம்ஸ் அவர்கள் சார்ந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் பஞ்சாயத்துக்கள் சீரமைப்பு ஆகியவை முடிந்தவுடன் ஐந்து மாதக் காலத்தில் தேர்தல்கள் நிச்சயமாக நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 37/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 37/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்"

என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(உ) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

* 1979 ஏப்ரல் 25 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 28]

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊ) உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகாரமன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

[முற்பகல் 10.50]

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்களால் இப்பொழுது முன்மொழியப்பட்ட தமிழ் நாடு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சட்டங்களை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று நான் கூற விரும்புகிறேன். இதனுடைய காரண விளக்க நோக்கத்தில் ஏற்கனவே மாநில அரசு அல்லது உள்ளாட்சி மன்றம் அல்லது கூட்டுறவு அமைப்பு ஆகியவற்றிற்குச் சொந்தமான நிறுவனங்கள், கட்டிடங்கள் அல்லது பாலங்களுக்கு, எல்லாவற்றிற்கும் உயிருடன் இருக்கும் யாருடைய பெயரையும், அவருடைய நிலை என்னவாக இருந்தாலும் அல்லது அவர் எத்தகைய பதவி வகித்தாலும் இடக்கூடாது என்று அரசு முடிவெடுத்து அதன்படி உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. அந்த உத்தரவை நிறைவேற்றக்கூடிய நிலையிலே கோர்ட்டுகளிலே இன்றைக்குத் தடைகள் ஏற்பட்ட காரணத்தாலே, இப்பொழுது சட்டப் பேரவையிலே,

* 1979, ஏப்ரல் 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

முன்னாலே வந்து, இதை சட்டபூர்மாகவே அரசாங்கத்தினுடைய அந்த உத்தரவை நிறைவேற்றுவதற்காக, அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலையை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தினுடைய இந்த நிலையோடு கோட்பாடு ரீதியிலே (in principle) இதை ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய நாட்டின் நீண்ட தேசிய இயக்க வரலாற்றிலே ஏராளமான தேசிய இயக்கத் தலைவர்களுடைய பெயரால், அவர்கள் உயிரோடு வாழ்ந்த காலத்திலேயே, பல உள்ளாட்சி மன்றங்கள், நிறுவனங்கள், ஆகியவற்றில், அவர்களுடைய பெயர்களால் எத்தனையோவிதமான தெருக்களும், பூங்காக்களும் வைக்கப்பட்டன.

மதுரையை மாநகராட்சியை எடுத்துக் கொண்டாலே காலஞ்சென்ற தேச பக்தர் வைத்தியநாத ஐயருடைய பெயராலே அவர் வாழ்ந்த காலத்திலேயே வைத்தியநாத ஐயர் பூங்கா என்று வைக்கப்பட்டது. அல்லது, ஆளுங்கட்சி நண்பர்களுக்கும் மிகவும் தெரிந்தவரான திரு. பி. டி. இராஜன் அவர்களுடைய பெயராலேயே, அவர் வாழ்ந்த ரோடே, திரு. பி. டி. இராஜன் ரோடு என்று அவருடைய காலத்திலேயே வைக்கப்பட்டது. அதேபோல், மதுரையிலே நகரசபைக்கு 'சேர்மன்'களாக இருந்த பல முக்கிய தலைவர்களுடைய பெயர்களைக் கொண்ட இடங்கள் இருக்கின்றன.

மதுரையை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டாலே, பெருந்தலைவர் காமராஜர் பெயராலே காமராஜபுரம் என்ற பெயர் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய நாட்டினுடைய வரலாற்றில் ஒருவர் உயிரோடு இருக்கும் போது, அவருடைய பெயரால் பொது நிறுவனங்களுக்கும் ஸ்தலஸ்தான நிறுவனங்களுக்கும் பெயர் வைப்பது என்பது தொன்றுதொட்டு பழக்கமாக இருந்து வந்திருக்கிறது. எனவே இன்றைக்கு அப்படிப்பட்ட பெயரை வைக்கக்கூடாது என்று சொல்வது எவ்விதத்திலும் பொருத்தம் அல்ல.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ஒரு மனிதன் உயிரோடு இருக்கும் போது அவரை நம்பமுடியாது என்ற ஒரு கொள்கை, ஒரு தோல்வி மனோ பாவக் கொள்கை இதிலே அடங்கியிருக்கிறது, செத்ததற்குப் பிறகுதான் ஒரு மனிதன் நல்லவனாக இருக்க முடியுமே தவிர, அவர்கள் வாழ்கிற காலத்திலே நல்லவர்களாக இருக்க முடியாதா, நம்ப முடியாதா, என்று நான் கேட்க விரும்புகிறேன், ஒரு மனிதர் பொது வாழ்விலே இருக்கிறவர், இறந்து விட்ட பிறகு, அவருடைய பெயரை வைக்கிறோம். அவர் இறந்து விட்ட சில காலத்திற்குப் பிறகு, அவர் பல தவறுகளைச் செய்தார்கள் என்று, அப்பொழுது சரித்திரத்திலே, விசாரணையிலே நிரூபிக்கப்படுகிறது என்று சொன்னால், அப்பொழுது என்ன செய்வது? ஆகவே, அதற்கு இது பரிகாரம் ஆகாது.

அது மட்டுமல்ல, இதற்கு முக்கியமான மற்றொரு காரணம் என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுபட்ட இயக்கமாக இருந்த காலத்திலே, அதிலே ஏற்பட்ட ஒரு பிளவின் காரணமாக, இன்றைக்கு இந்தப் பெயர்கள் வைக்கக் கூடாது என்று ஒரு அரசியல் அடிப்படையிலேயே, இந்த ஸ்தல ஸ்தாபன நிறுவனங்களுக்கு, அப்படிப்பட்ட அதிகாரங்களைக் குறைக்கக்கூடிய அந்தப் போக்கு ஏற்படக் கூடாது என்று வாஸ்தவத்திலே சொல்கிறோம்.

இப்பொழுது நாமே, கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பிரித்து, இரண்டாகப் பிரித்து, வேறு பெயர் போடுகிறோம். அல்லது இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரித்து, இரண்டு பெயராக கொடுக்கும்போது, தமிழ் நாடு அரசே சொல்கிறது. நானே அந்தப் பெயர் வைப்பேன் என்று. அப்பொழுது மத்திய சர்க்கார் குறுக்கிட்டு, இல்லை, உங்களுடைய மாகாணத்திலே ஒரு மாவட்டத்தினுடைய பெயரை மாற்ற வேண்டுமென்றாலும், மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்றுத்தான் மாற்ற வேண்டுமென்று அவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அது மாநில சுயாட்சிக்கு எவ்வளவு விரோதமானதோ, அதேபோல் ஒரு ஸ்தல ஸ்தாபனமோ அல்லது முனிசிபாலிட்டியோ அல்லது பஞ்சாயத்தோ தன்னுடைய விருப்பத்தின் பெயரிலே, மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள், தங்களுடைய பிரதேசத்திலேயே மிகச் சேவை செய்தவர்கள் அல்லது மாநிலத்திற்குச் சேவை செய்தவர்கள் என்று இருக்கக்கூடியவர்கள் பெயரை வைப்பது முற்றிலும் பொருத்தமானது. அந்த ஸ்தல ஸ்தாபனங்களுடைய உரிமையிலே நாம் தலையிடுகிறோம். நாம் ஒரு பக்கத்திலே மத்திய சர்க்காரிடத்திலே மாநில சுயாட்சி என்று கேட்டுக் கொண்டு, டீசென்ட்ரலைசேஷன் கீழே அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பது என்று வரக்கூடிய நேரத்திலே ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அந்த உரிமை இல்லையென்று சொல்கிறோம். அவர்கள் ஒரு பெயரை மாற்ற வேண்டுமென்றாலும் மாநில அரசாங்கத்தின் சம்மதம் வேண்டும். தேவையா? இது பியூராக்ரஸி இல்லையா? இன்றைக்கு ஏதோ சிற்றூரிலே உள்ள ஒரு பெயரை மாற்ற வேண்டுமென்றால், மாநில சர்க்காருடைய அனுமதி வேண்டும், முன் அங்கீகாரம் வேண்டுமென்று சொல்வது பொருத்தமற்றது. ஆனால், நீங்கள் அரசியல் தலைவர்களுடைய பெயராலே ஏற்படக்கூடிய பிரச்னைகளை வைத்து, இந்தச் சட்டத்தைப் போடுவது சரியல்ல. உதாரணமாக, எடுத்துக் கொள்ளுங்கள். நம்முடைய அரசாங்கமே புலவர்களையும் இதர வித்துவான்களையும், விஞ்ஞானிகளையும் மாநில மத்திய சர்க்கார்கள், அவர்கள் உயிர் வாழக்கூடிய காலத்திலேயே கவுரவிக்கிறோம். இந்தச் சட்டத்தினுடைய ஸ்பிரிட்டை எடுத்துக் கொண்டு பார்த்தால், இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், எவரையும் உயிரோடு இருக்கக்கூடிய காலத்திலே பாராட்டக்கூடாது.

ஏனென்றால் அதற்குப் பிறகு அவர் ஏதாவது தவறு செய்தால் என்ன செய்வது, அப்படி பார்க்கப் போனால் எவ்வளவோ உயிரோடு உள்ள எத்தனையோ பேர்களுக்கு புகழ்பாடுகிறார்களே, விழா நடத்துகிறார்களே, புகழாரம் சூட்டுகிறார்களே, அவர்கள் பின்னால் தவறு செய்தால் என்ன செய்வது. என்னைப் பொருத்தவரையில் உயிர் உள்ள மனிதர்களின் பெயரை வைப்பதை தடை செய்வது என்பது சரியல்ல. அது ஒன்றும் புதிததல்ல, முன்னாலேயே அப்படி வைத்திருக்கிறார்கள். ஆகவே நான் கூறுகிறேன் நம்முடைய தேசிய இயக்க காலத்திலிருந்தே வந்திருக்கிற மரபை மாற்று வதாக இது ஆகிவிடும்; இது ஒன்று. இரண்டாவது, அரசியல் தலைவர்களின் மீதும் மற்ற தலைவர்கள் மீதும் மக்களுடைய அபிமானத்தைக் காட்டு வதற்காக அப்படி வைக்கப்படுவதை தடுப்பது என்பது மக்களுடைய பிரியத்தை தடை செய்வதாகும், மூன்றாவது ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இருக்கக்கூடிய உரிமையை பறிக்கின்ற செயலாக இது இருக்கும். இந்த மூன்று காரணங்களுக்காக நான் இதை எதிர்க்கிறேன். இன்றைக்கு அரசியல் காரணங்களால் ஏற்பட்டிருக்கிற மனக் கசப்பிற்காகவோ, எதிர்ப்புணர்ச்சியினாலோ, உயிரோடு இருப்பவர்களின் பெயர்கள் வைக்கக்கூடாது என்று சட்ட திருத்தம் கொண்டு வருவது என்று சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அப்படி முனிசிபாலிட்டிகளோ, ஸ்தல ஸ்தாபனங்களோ தவறான வைக்கக்கூடாத பெயரை வைப்பார்களே யானால் அதைத் தடுப்பதற்கான வகையில் உங்களுக்கு மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது இப்படி தடை போடுவதான வகையில் மசோதா கொண்டுவரக்கூடாது என்ற காரணத்தை காட்டி மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்த திருத்தச் சட்ட மசோ தாவை எதிர்க்கிறோம் என்று கூறி அமர்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை, முனிசிபாலிட்டி, பஞ்சாயத்துக்கள் முனிசிபல் கார்ப்பொரேஷன்கள் என்ற நான்கிலும் இந்த திருத்தத்தை கொண்டு வரவேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். காரணம் இந்த திருத்தங்கள் எல்லாம் அரசியல் காரணத் திற்காக கொண்டு வரப்படுகின்றன என்ற எண்ணத்தில் நாம் இருக்கக்கூடாது என்று சொல்கிறேன். உயிரோடு இருப்பவர்களுக்கும் இப்படி பெயர் வைப்பது என்று சொல்கிறபோது, அது பலவிதத்திலும் பல தவறான சூழ்நிலைகளுக்கு இடம் கொடுப்பதாக அமையக்கூடும். குறிப்பாக நாம் தேர்தலிலே நிற்கப் போகிறோம். தேர்தலை சந்திக்கவிருக்கிறோம். தேர்தல் காலங்களிலே இப்படி பெயர்களை வைத்துக் கொண்டிருந்தால் அது indirectly it will corrupt the minds of the voters என்கிற வகையில் அந்த பெயர்கள் வாக்களிப்பவர்களின் எண்ணங்களை மாற்றுகிற வகையிலும் அமைந்துவிடும்.

உயிரோடு இருப்பவர்களுக்கு பெயர் வைப்பது என்று சொல்கிறபோது அது புகழுக்காக வைக்கப்படுவது அல்ல. வெறும் முகஸ்துதிக்காக வைக்கப் படுவது. அப்படி பெயர் வைக்க வேண்டும் என்று சொல்கிறபோது, பெயர் வைக்க வேண்டும் என்று சிலர் ஆதரிப்பார்கள், பெயர் வைக்கக்கூடாது என்று சிலர் எதிர்ப்பார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டுவிடும், அந்தச் சூழ்நிலையில் பெயர் வைப்பதை எதிர்ப்பவர்கள் யார் என்பதை கண்டு கொள்வார்கள், அப்படிப்பட்ட நிலைமை ஆட்சியில் இருப்பவர்களின் தரப்பிலிருந்து இருக்குமேயானால், எதிர்ப்பவர்கள் பாதிக்கப்படுகிற நிலைமைகளும் ஏற்படும். ஆகையினால் யாருக்கு உண்மையில் நீதி கொடுக்கப் படவேண்டுமோ அவர்களுக்கு பாதுகாப்பற்ற முறையில் நிகழ்ச்சிகளை ஏற்படுத்திவிடக்கூடும். யாருக்கு உண்மையான நீதிகள் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்கிற கருத்தினால் இதை ஆதரிக்கிறேன். இந்தியன் பீனல் கோடு

171(*c*) talks of 'undue influence'. Undue influence is one of the conditions to disqualify an election. It will amount to undue influence or corrupt practice.

என்கிற அடிப்படையில் என்னுடைய உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் முனிசிபல் கார்ப்பொரேஷன், முனிசிபாலிட்டீஸ் சம்பந்தப்பட்ட வரையிலும் அரசினுடைய அனுமதியைப் பெற்றுதான் பெயர் வைப்பதோ அல்லது மாற்று வதோ செய்ய முடியும் என்று மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் பஞ்சாயத்துக்களில் அவர்களே வைத்துக் கொள்ளலாம் அனுமதி வேண்டுவது இல்லை என்கிற வகையில் பஞ்சாயத்து ஆக்ட்டில் இருக்கிறது. பஞ்சாயத்துக்களும் அப்படி அனுமதி வாங்க வேண்டும் என்ற திருத்தம் கொண்டு வரப்படுவதற்கான முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

ஒருவர் உயிரோடு இருக்கிறபோது அவருடைய பெயரை வைக்கலாமா வைக்கக்கூடாதா என்கிற பிரச்சினையை எடுத்துப் பார்க்கிறபோது எங்களைப் பொருத்தவரைக்கும் அனைத்திந்திய ரீதியில் இதர மாநிலங்களில் அப்படி வைப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது. இதற்கு முன்னாலேயும் வைக்கப் பட்டிருக்கிறது. உயிரோடு இருந்தவர்களின் பெயர்கள் அவர்களுடைய காலத்திலேயே வைக்கப்பட்டிருக்கிறது. அவைகளையெல்லாம் நீக்குவதற்கு இல்லை,, அப்படி நீக்குவது தவறு என்பது என்னுடைய கருத்து இருந்தாலும்கூட அதிலே இன்னொரு கருத்தையும் நாம் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11.00)

அரசியல் தலைவர்கள் பெயர்கள் மட்டுமல்ல, யார் ஒருவர் நன்கொடை கொடுத்தார்களோ அந்த நன்கொடை கொடுத்தவர்கள் பெயரிலும் கட்டிடங்கள்

அல்லது ஸ்தாபனங்கள் போடப்பட்டு இருப்பதும் இந்த அரசின் முடிவால மாற்றப்பட்டு இருக்கிறது. சேலத்தில் இருந்து ஒருவர் என்னிடம் வந்து ரெப்ரசென்ட் செய்தார். லட்சம் ரூபாய் கொடுத்தோம், கட்டிடம் கட்டினோம், அவர் பெயர் வைக்கவேண்டும் என்று சொல்லி கொடுத்தோம். வைக்கப்பட்டது. ஆனால் இப்போது எடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அவர் பெயர் வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த நன்கொடை கொடுத்தார்கள். அவர்களுக்கு அரசு கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று? அரசின் இந்த முடிவால் பல பெயர்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதன் விளைவுகள் எங்கோ போய் இருக்கின்றன. அதை அரசு கவனிக்கவேண்டும். அதைக் கருத்தில்கொள்ளவேண்டும். இப்படி நன்கொடைகள் பல கொடுக்கப்பட்டு ஆஸ்பிடல்கள் கட்டப்பெற்று, அதற்கு நன்கொடைகள் கொடுத்தவர்கள் பெயர் வைக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள பெயர்கள் நீக்கப்படுகிறபோது அரசு அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று? உங்களுடைய பெயரை வைக்கிறேன் நன்கொடை கொடுங்கள் என்று கேட்டு வாங்கி, கட்டிடம் கட்டி, பெயர் வைக்கப்பட்ட பிறகு இப்படி முடிவு எடுப்பது சரியல்ல. அப்படி பெயர் வைக்கப்பட்டவர்கள் பெயர் இப்போது எடுக்கப்பட்டு இருப்பதும் சரியல்ல. அந்தக் கருத்து சரியல்ல என்பதை தெரிவித்து, இதை ஏன் பஞ்சாயத்துக்களுக்குக் கொண்டு போக வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. பஞ்சாயத்துக்களுக்கு போதுமான நிதி வசதி இல்லை. அங்கே வசதி உள்ளவர்கள் ரோடு போடவும், ஆஸ்பிட்ல்கள் கட்டவும், பள்ளிகள் ஏற்படுத்தவும் நன்கொடைகள் கொடுத்து, அதற்கு அவர்கள் பெயரைப் போட்டு அந்த வகையில் முன்னேற்றம் அந்தப் பகுதியில் நடந்து வந்துகொண்டு இருக்கிறது. ஆனால் தற்போது அவ்வாறு செய்தால் அவர்கள் ஒவ்வொருவர் பெயர் வைக்கிறபோதும் அரசின் அனுமதி பெற்றுச் செய்யவேண்டும் என்று நாம் மாற்றம் கொண்டு வருவது சரியல்ல என்பதைத் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சங்கரய்யா அவர்களும், மார்க்கபந்து அவர்களும், மாரிமுத்து அவர்களும், தங்களுடைய எண்ணங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, இப்படி ஒரு சட்ட முன்வடிவு அரசு கொண்டு வராமல், அரசே தனது விருப்பம் போல் பல நிறுவனங்களுக்கு ஆட்சியில் இருப்பவர்களுடைய பெயர்களை வைத்து அழகு பார்த்து இருக்க முடியும். ஆகவே, தங்களுக்கு இருக்கும் அதிகாரத்தைக்கூட இழக்கும் வகையில், அப்படி ஒரு விளம்பரத்தையோ, புகழையோ தேடிக்கொள்வது தவறானதாக இருக்கும் என்ற தூய எண்ணத்தின் அடிப்படையில் தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பதைக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

1979 ஏப்ரல் 28] [திரு. கா. காளிமுத்து]

திரு. சங்கரய்யா அவர்கள் பரந்த மனத்தோடு, பெருந்தன்மையோடு தெரிவித்தார்கள். பல தேசீயத் தலைவர்கள் பெயர்கள் எல்லாம் அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் இடம் பெற்று இருக்கின்றன. அதற்கு முன் உதாரணங்கள் இருக்கின்றன என்று தெரிவித்தார்கள். நான் அந்தக் கருத்திலே மாறுபாடு கொள்ள விரும்பவில்லை. ஆனால் அந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு பின்னாலே எப்படிப்பட்ட தவறான உதாரணங்கள் வந்தன என்பதையும் அவர்கள் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எப்போதாவது ஒன்று, ஏதாவது ஒன்று ஆட்சியில் இருப்பவர்களுடைய பெயரால் அல்லது பதவி வகிக்கக் கூடியவர்கள் பெயரால் அல்லது புகழ் பெற்று இருக்கின்ற ஒரு மனிதனின் பெயரால் நிறுவனங்கள் வைக்கலாம். ஆனால் தொடர்ந்து அமைகின்ற அத்தனை நிறுவனங்களிலும் சரி, அல்லது அரசுக்குச் சொந்தமான, அரசாலே நிர்வகிக்கப்படுகின்ற, அதற்கு உள்ளடங்கி இருக்கும் அமைப்புகளாலும் சரி, அத்தனையிலும் சில குறிப்பிட்ட மனிதரின் பெயராலே பெயரிடப் பெற்று, நாட்டு மக்களுக்கு அருவருப்பைத் தரத்தக்க அளவிலே சூழ்நிலை உருவாவது பொதுவாக நாம் அனைவரும் இருக்கும் பொது வாழ்விற்கு, அரசியலுக்கு நல்லதல்ல என்று எண்ணிப்பார்த்து இந்த சட்ட முன்வடிவு கொண்டு வரப் பட்டிருக்கிறது.

திரு. மாரிமுத்து அவர்களும், நம்முடைய சங்கரய்யா அவர்களும், தெரிவித்தது போல, இது உள்ளாட்சி அமைப்புகளில் தலையிடுவதாகாதா என்று கேட்டார்கள். நிச்சயமாக தலையிடுவதாக ஆகாது. காரணம், உள்ளாட்சி அமைப்புகள் குழப்பத்திற்கு இடம் இல்லாமல் நடப்பதற்கும், அரசு துணை புரிந்தாக வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் கட்சிப் பூசல்கள் எழுந்து, குழப்பங்கள் மேலோங்கி, தனிப்பட்டவர்கள் பெயர்களை இடுவதிலே கசப்பு உணர்ச்சிகள் வந்து, அதன் மூலமாக அதனுடைய நிர்வாக அமைப்பு சீர்குலைந்து போகாமல் இருக்கும் செவிலித்தாயாக அரசு நிச்சய மாக செயல்பட்டாக வேண்டும். ஆக, அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் இது கொண்டு வரப்பட்டு இருக்கிறதே தவிர அரசு எந்த விதமான கட்சி மாச்சரியத்தின் அடிப்படையிலும் கொண்டு வரவில்லை. அப்படி இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வராமல், அரசே இப்படி ஆணைகளைப் பிறப்பிக்காமல், முன்பு இருந்தபடி இருக்கட்டும், இனி மேல் வரும் நிறுவனங் களுக்கு நாம் நம்முடைய பெயர்களை வைத்து பார்ப்போம் என்று முடிவு செய்து கொண்டு காரியங்களைச் செய்யலாம். அப்படிச் செய்வது இதற்குப் பின்னாலே வருகின்ற அரசுக்குக் கூட அது தவறான வழிகாட்டியாகிவிடும். மனிதர்கள் தங்களுடைய சேவையால், பணியால் மக்கள் மத்தியிலே நிலைக் கிறார்கள். அவர்கள் மறைந்ததற்குப் பிறகு அவர்களைப்பற்றிய நினைவு மங்கிப் போகக்கூடாது என்கிற வகையில் நாம் பல நிறுவனங்களுக்கு அவர்

களுடைய பெயர்களை வைக்கிறோம். வாழ்கிற நேரத்தில் அவர்கள் தொடர்ந்து தொண்டாற்ற வாய்ப்பு இருக்கிறது. அவர்களுடைய பணியின் மூலமாக மக்களின் இதயத்தில் இடம் பிடிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இருக்கிறது. இது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின், கழக அரசின் கொள்கை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை வேறுவிதமாக இருக்கலாம். ஆனால் இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னால், இந்தக் கட்சியின் கொள்கைகளைச் செயல்படுத்த இப்படிப்பட்டத் திருத்தச் சட்டங்களைச் கொண்டுவந்து செயல்படுத்துகிறது என்பதைத் தெரிவித்து, இதில் அரசுக்கு எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, அமைச்சர் பதில் சொல்லுகிறபோது கட்சி அரசியல் பாகுபாடு இருக்கிற காரணத்தால்தான் இதைப்போன்ற சட்டங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். மாநில சுயாட்சி நாம் கேட்கிறபோது மத்திய அரசு கூட இப்படித்தான் சொல்லும். ஆகவே, எந்தக் கட்சியாக இருந்தாலும் ஏகோபித்த அளவுக்கு ஒரு முடிவு எடுக்கிறார்கள் என்றால் அதை அனுமதிப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஒரு ஊராட்சியில் அல்லது நகராட்சியில் ஏகோபித்து செய்யும் எந்த முடிவையும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரையில் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

எ. கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு 1979

* THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, I move that the Tamil Nadu Debt Relief (Amendment) Bill *, 1979 (L.A. Bill No. 20 of 1979) be taken into consideration.

By the Tamil Nadu Debt Relief Act, 1976 (President's Act 31 of 1976) permanent relief, by way of liquidation of debts due to pawnbrokers, moneylenders and other non-institutional sources of credit who have been charging usurious rates of interest and indulging in other malpractices was given to the weaker sections of the rural community, who are connected with agricultural production. Accordingly, the debts due to such pawnbrokers, money lenders and other non-institutional sources of credit incurred by the said weaker sections before the date of commencement of that Act were deemed to have been wholly discharged. During the actual working of the Act, however, it has been found necessary that certain changes should be effected in the Act so as to make the intention clear.

I commend the motion for the acceptance of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்போன்றுதான் அடுத்த மசோதாவும் இருக்கிறது. ஆகவே, இரண்டு மசோதாக்களையும் சேர்த்து விவாதித்துவிட்டு, பிறகு தனித் தனியாக நிறைவேற்றிக் கொள்ளலாம்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, இந்த கடன் நிவாரணச் சட்டத்தை கொண்டுவந்திருக்கிற காலத்திலே, பின்னிட்ட காலத்திலே வசூல் செய்து கொள்ளலாம் என்ற முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக கடன் நிவாரணச் சட்டங்களைக் கொண்டு வருகிற காலத்திலே சாதாரண மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு நாங்கள் கொண்டுவருகிறோம் என்று

* 1979, ஏப்ரல், 17-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் ஏழை எளிய மக்களின் தொண்டையைப் பிடிக்கும் வகையில் இன்றைக்கு கடன் நிவாரணச் சட்டம் உருவாகியிருக்கிறது. கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவருகிற காலத்தில், கடந்த இரண்டாண்டுகளில் தமிழ் நாட்டில் என்ன நடந்திருக்கிறது என்றால் கடன் கொடுத்தவர்களுக்குச் சாதகமாகத்தான் இருக்கிறதே தவிர, கடன்பட்டவர்களுக்கு சாதகமாக இல்லை.

அந்த வகையிலேதான் தமிழ்நாட்டில் மதிப்பிற்குரிய முத்தையா செட்டியார் தலைமையில் கடன் கொடுத்தவர்கள் மாநாடு நடத்தினார்கள். இங்கே வட்டிக்கடைக்காரர்கள் மாநாடு நடக்கிறது. அதில் மாண்புமிகு வீரப்பன் அவர்கள்கூட கலந்துகொண்டதாக நான் கேள்விப்படுகிறேன். இந்த அரசாங்கமானது அந்த அளவுக்கு வட்டிக்கடைக்காரர்களுக்கு சாதகமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வட்டிக் கடைக்காரர்களுக்கு சாதகமாக இருப்பதால்தான் கடன்பட்ட சாதாரண விவசாயிகளுக்கு எந்தவிதமான சலுகையும் கிடைக்காமல் இருக்கிறது. ஏனென்றால் நீண்டகாலமாக வட்டி, முதல் அத்தனையும் சேர்த்து ஒரே காலத்தில் கடனை வசூல் செய்வதற்கு நீங்கள் கதவைத் திறந்திருக்கிறீர்கள். அதனுடைய விளைவு என்ன ?

(முற்பகல் 11.10)

சாதாரணத் தமிழகத்தினுடைய மக்கள் இன்றைக்குப் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு, நீண்ட வறட்சியின் காரணமாகவும் பாதிக்கப்பட்டு, அதன் காரணமாக, அவர்கள் தாங்கள் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். சொசைட்டி மூலம் வாங்கிய கடனைக்கூட கட்ட முடியாமல் இருக்கிறார்கள். தொடர்ச்சியாக மூன்றாண்டு காலம் கடன் நிவாரணச் சட்டம் வந்தது. இந்தக் கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக சட்டப் பேரவையின் மூலமாகவும் வெளியிலே இருந்தும் வந்தும் அதைக் கவனிக்காமல் இந்தக் கடன்களை எல்லாம் ஒரே நாளிலேயே வசூல் செய்யக்கூடிய வகையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள்.

இதற்கு முன்னாலே, "நாங்கள் ஏழை மக்களுக்கு உதவக்கூடிய நிலையிலே கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவரப்போகிறோம்" என்றெல்லாம் சொல்லப்பட்டதே. ஆனால் இன்றைக்கு ஏழை மக்களுக்கு எந்த அளவுக்குப் பாதகம் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு பாதகம் செய்து கொண்டிருக்கின்றது இந்த அரசு. கடன் நிவாரணம் என்பதற்குப் பதிலாக அதாவது அந்த மக்களை கடன் சுமையிலே இருந்து விடுவிப்பதற்குப் பதிலாக இன்றைக்கு துப்பாக்கியைக் காட்டி அந்த மக்களை அடக்கி ஒடுக்குவதற்குரிய

1979 ஏப்ரல் 28] [திரு. செ. சிவசாமி]

ஏற்பாடுகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. உண்மையிலேயே இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்யும் முறையிலே காரியங் களைச் செய்யவில்லை. அதற்குப் பதிலாக அந்த மக்களை அதாவது சாதாரண ஏழை மக்களை, விவசாய மக்களை கொடுமைப்படுத்த வேண்டும் என்று நினைத்து அவர்களை அதள பாதாளத்திற்கு அழுத்திக்கொண்டிருக் கின்றது இந்த அரசு. அதற்கு உதாரணம்தான் இன்றைக்கு வட்டிக்கடைக் காரர் மாநாட்டிலே மதிப்பிற்குரிய ஆளும் கட்சிக்காரர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது நான் மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். இங்கே இருக்கக்கூடிய நிலைமையிலே ஏற்கெனவே இருந்ததுபோல் 500 ரூபாய்க்கு மேற்பட்ட கடன்களை வசூல் செய்யலாம். 500 ரூபாய்க்கும் கீழே உள்ள கடன்கள் அத்தனையையும் ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வசூலிக்கக்கூடிய கடன்களையும் தவணை முறையிலே சன்னம் சன்னமாக அதாவது 500 ரூபாய்க்கு மேல் உள்ள கடன்களைத் தவணை முறையில், 10 அல்லது 15 தவணைகளில் வசூல் செய்வதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU R. MARGHABANDU : I am constrained to oppose this Bill. The object with which this Bill has been introduced is to achieve the object of Article 46 of the Indian Constitution. Though it is called a debtor's Bill, it is actually a creditor's Bill. Several provisions have been introduced in Act 40 of 1978, viz., provisions for wiping out of Rs. 500 and below and half of the principal upto Rs. 5,000 and no interest upto Rs. 10,000. Those provisions have been very much utilised by the debtors in very pecuniary circumstances. Those provisions have been taken away. But this Bill is being called as a debtor's Bill. I regret to state that this Government which is said to uphold the policy of benefitting the poor and down-trodden people has taken away that good impression, by the introduction of this Bill. Because this Bill will create an impression in the minds of the people that this Government is not for the weaker sections of the community.

I now come to another aspect. Several Decrees have been passed under Act 40 of 1978. No provision has been made in this Bill with regard to that aspect. What will happen to the Decrees that have been passed ? What will happen to the scaling down provisions that has been enacted ? No express savings provision has been made in this Bill. So, I request this Government to give at least some clarify over that aspect.

Then, coming to another point, in the year 1975 Justice C. J. R. Paul has rendered a judgment whereby this Debt Relief Act will be made applicable only to those debts which have been incurred prior to July 1975. Upto this date review has been made with regard to this aspect. No reflection has been shown in this Bill. What will happen to the Decrees that have been passed in pursuance of the Decree and Judgment rendered by his Lordship C. J. R. Paul?

Then, a definition has been given for 'creditor' which includes his heirs, legal representatives and assigns. But such explicit definition is absent so far as the debtor is concerned. This also has to be looked into.

Clause 4 (i) states that this legislation will not apply, if the amount is advanced for the purchase of some articles. At this juncture I would like to make one statement about this aspect of the matter. Most of the agriculturists are borrowing the amounts from commission merchants and others. These people are having agreements in printed forms. Recently, the High Court has rendered a judgment that printed forms—pro-notes written in printed forms—have to be struck down. I request this Government also to adopt that procedure. If any agreement were taken in a printed form that should not be made applicable, and that should also be exempted under this Act.

Then, coming to Clause 4 (*k*), so far as minors and widows are concerned, even for those who are divorced, according to the recent amendment introduced by the Government, this Act will not apply, if the value of the property owned by them including the principal amount of the debt or debts due, did not exceed ten thousand rupees. Even on the last occasion I made a request. A limit of Rs. 10,000 has been fixed. Even for a plot in a town area, that may be worth more than Rs. 10,000 it is not yielding any income. If a widow or any widow of a Government servant or any lady who has been a divorcee, if she is owning a small plot which is not yielding any income, I state that this will not be beneficial for such people. So, I request that this Government should enhance the pecuniary limit upto Rs. 25,000 at least.

Then, I come to Clause 7—scaling down. The Clause mentions about Act IV of 1938 and then Act 38 of 1972 alone. What will happen to the scaling down that has been already done under Act 40 of 1978. I request that a saving provision must also be made, so far as the Decrees are concerned which is covered under Clause 16

of this Bill, where you have not made it very clear that Clause 16 will be made applicable even to the decrees that have been passed under Act 40 of 1978.

Next, I would like to refer to Clause 18—stay of execution proceedings. It has been stated under Clause 16 that scaling down application has to be filed within six months from the date of promulgation of the Act. But what will be the plight of the persons who are ignorant of the provisons of this law and who have not filed any scaling down application within 6 months' time. What will happen to them? You have given retrospective effect to this Act which dates back from 1st July 1978. But even by this time several persons have not applied for the scaling down and their Decrees stand still. So, whether this Legislation would be made applicable to them, is not clear. Regarding the limitation point, one thing I would like to state is this. There are promissory notes which are less than Rs. 500 and in those cases, it will give an impression that because of this legislation, if any suit were to be instituted, that suit will not be maintainable. But by that time, within 6 months' time, if the limitation period has been expired, whether this 6 months' period will be excluded from the purview of this legislation? These things will have to be made clear.

With these observations, I conclude my speech.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்த 20, 21 ஆம் மசோதாக்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பாக வன்மையாகக் கண்டிக்கிறோம், எதிர்க்கின்றோம். பொதுவாக நான் சொல்ல விரும்புவதெல்லாம் எப்போதுமே ஒரு சட்டத்தை முன்மொழியும்போது அதனுடைய ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்டை விளக்கமாகக் கொடுப்பார்கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கம், அது மூடி மறைக்கப்பட்டதாக இருக்கிறது. உண்மையைச் சொல்வதற்குத் தயக்கமாக இருக்கிறது, இந்த அரசு தயாராக இல்லை என்ற குற்றச் சாட்டைக் கூற விரும்புகிறேன். பொதுவாக இப்படிப்பட்ட ஆக்ட் 40/1978 என்பது பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கு கொடுப்பதற்காக உள்ள சட்டம். கடந்த ஆண்டில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிற போது, மிகச் சிறப்பாக ஆளுங்கட்சித் தரப்பில் இருந்து கூட வாழ்த்துப் பாடினார்கள். குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இந்தச் சட்டத்தில் நிவாரணம் கொடுக்கக்கூடிய முறையில் ரூ. 500 கடன் பெற்றிருந்தால், அல்லது அதற்குக் குறைவாகப் பெற்றிருந்தால் கடன் நிவாரண முறையிலும், ரூ. 500-லிருந்து ரூ. 5,000 வரை கடன் பெற்றிருந்தால், வட்டியிலும், அந்த அசலில் பாதியைச் செலுத்துவதற்குரிய முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ரூ. 5,000-க்கு மேல் கடன் பெற்றிருந்தால் இன்னொரு முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே இதில் ஓரளவுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய முறை இருந்தாலும் கூட, ஏதோ ஒரு காரணத்திற்காக தலைகீழாக—கடந்த ஆண்டு சொன்ன கொள்கை ஒன்று, இப்போது சொல்லுகின்ற கொள்கை ஒன்று என்ற அளவில் நேர் மாறாக இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. இதன் மூலமாக இந்த நாட்டு மக்கள் எதிர்பார்த்த எந்தப் பலனும் கிடைக்கவில்லை. மாறாக ஏமாற்றம்தான் இருக்கிறது. இங்கு 'ரீஸன்ஸ்' என்பதில் சொல்லப்பட்டிருப்பது . . .

'. . . sources of credit who have been discharging usurious rates of interest and indulging in other malpractices was given to the weaker sections of the rural community who are connected with agricultural production. Accordingly, the debts due to such pawn-brokers, money lenders and other non-institutional sources of credit incurred by the said weaker sections before the date of commencement of that Act were deemed to have been wholly discharged. During the actual working of the Act, however, it has been found necessary that certain changes should be effected in the Act . . .'

என்று மொட்டையாக கூறப்பட்டிருக்கிறது. முறையான காரணத்தை சொல்லவில்லை. பொதுவாக 21-வது மசோதாவை எடுத்துக்கொண்டால் என்ன சொல்லியிருக்கிறார்கள். . .

'During the actual implementation of the Act certain difficulties have been noticed necessitating the re-examination of the provisions of the Act by the Government. The Government on such re-examination have decided that permanent debt relief shall be only by way of scaling down of debts'

என்று கூறப்பட்டிருக்கிறது. 'ஸ்கேலிங் டவுன்' செய்தால் தான் நிவாரணம் கிடைக்க முடியும் என்ற நிலை வந்திருக்கிறது. முன்பு என்ன சொல்லப் பட்டிருந்தது, 500 ரூபாய்க்கு குறைவாக இருந்தால் திரும்ப செலுத்தவேண்டிய தில்லை என்று இருந்தது. இப்போது, கொண்டு வந்திருப்பது, பொருளா தாரத்தால் நலிவுற்றிருக்கும் எந்த மக்களுக்கும் எந்த நன்மையும் கிடைக்கவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு நிவாரணம் இல்லையா? ஸ்கேலிங் டௌன் செய்தால்தான் இந்த நிவாரணம் பொருந்தும் என்று வருகிறது. 20-ல் 'கிராஸ் இன்கம்' என்று கூறப்பட்டிருக்கிறது. என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால், செக்ஷன் 3 (சி)-ல் . . .

'annual household income' means the aggregate of the gross annual income from all sources of all the members of a family.....'

சென்ற ஆண்டில் இது இல்லை. இப்போது புதிதாக நுழைந்திருக்கிறது. ஏற்கனவே தாசில்தார்களுக்கு இருந்த அதிகாரங்களை பறித்து கோட்ட

1979 ஏப்ரல் 28] [திரு. ரா. கிருஷ்ணன்]

வளர்ச்சி அதிகாரிகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இதனால் இன்னும் அதிகமான நிர்வாகச் சிக்கல்களைதான் உருவாக்கும். ஏற்கனவே கடன் கொடுத்தவர்களுக்கு விசேஷ சலுகை கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கின்ற முறையில், உங்களுடைய நண்பர்கள் கூட உங்களை தூற்ற வேண்டிய நிலைக்கு ஆளாகியிருப்பதற்கு மிகவும் வேதனைப் படுகிறேன். இப்போது ஆக்ட் 40/1978 என்பதில் செக்ஷன் 7-என்று இருந்தது. முன்னால் 500-க்கு குறைவான தொகை கடன் இருந்தால் 200-க்கு குறைவான வருமானம் உடையவர்களுக்கு மூன்று விதமான நிவாரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. இப்போது 21-ல் சொல்லப்பட்டிருக்கிறது, செக்ஷன் 8-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

Where any debtor has paid to any crediter one and a half times the amount of the principal whether by way of principal or interest or both, such debt including principal, shall be deemed to be wholly discharged.

ஆக ஒன்றரை மடங்கு செலுத்த வேண்டும் என்றிருக்கிறது. நான் 100 ரூபாய் கடன் வாங்கியிருக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படியென்றால் 150 ரூபாய் செலுத்த வேண்டும். வட்டி என்ற முறையில் எடுத்துக்கொண்டால் 12 சதவிகிதம் என்றிருந்தாலும் கூட 4 ஆண்டுகளில் 48 ரூபாய் தான், 9 சத விகிதம் என்று இருந்தாலும் 36 ரூபாய்தான். ஆனால் இப்போது 50 ரூபாய் செலுத்த வேண்டும். இது உண்மையிலேயே மிகவும் பாதிப்புக்கு உரியது. ஏற்கனவே ஒன்றரை மடங்கு செலுத்தியதோடு, பாக்கியிருந்தால் அதையும் செலுத்த வேண்டும். ஏற்கனவே அதிகமாக வசூல் செய்திருந்தால், அதை செலுத்த வேண்டாம் என்கின்ற நிலைமை முன்னால் இருந்தது. ஆகவே இப்போது வட்டிக்காரர்களுக்கு குறிப்பாக சேட்டுக்காரர்களுக்கு, மார்வாரி களுக்கு, கிராமங்களில் வட்டிக்கு பணம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற மிராசுதார்கள் இவர்களுக்கு சலுகை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது, பொருளாதா ரத்தில் நலிவுற்றிருக்கும் ஏழை மக்களுக்கு இது துரோகம் செய்ததாகும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

ஆகவே, இப்படிப்பட்ட சட்டத்தை ஏற்கனவே நான் முன்பு சொன்னபடி செக்ஷன் 15-லே ஏகப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. நீங்கள் ரூல்ஸ் போடலாம். அதேபோல கோர்ட்-பீசைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே, ஏற்கனவே அதிகமான தொகைக்கு கோர்ட் பீஸ் போட்டிருந்தால், அதை ரீ-பண்டு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? ஆகவே, பல்வேறு சிக்கல்கள் நிறைந்த இந்தச் சட்டத்தை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். இதைக் கொண்டு வருவது சரியல்ல என்று சொல்லி நான் முடிக்கிறேன்.

*திரு. கா. அப்புனு கவுண்டர் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரண சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக் களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக, சில அம்சங்கள் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், நான் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய செக்ஷன் 16

'amendment of certain decrees' பற்றியது.

நான் குறிப்பிட விரும்புகிறேன். இதிலே ஆக்ட் 40/1978 சட்டம் நிறைவேறும் முன்பு எந்த டிகிரி ஏற்பட்டிருந்தாலும், அதிலே அனுகூலங்கள் கிடைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. கடன்பட்டவர்களோ அல்லது டிகிரி பெற்றவர் களோ 6 மாத காலத்திற்குள் திருத்தி மனுப் போட்டு பலன் அடையலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கட்டாயம் ஆறு மாத காலத்திற்குள் அப்படிச் செய்யப்படாவிட்டால், முடிவு என்ன என்பது விளக்கப்படவில்லை. கடன்பட்டவர்கள் கடனைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கடன்பட்டவர்கள் யார்? ஏழை எளிய மக்கள்; சட்ட நுணுக்கம் தெரியாத வர்கள். இந்த ஏழை எளிய மக்களுக்கு நிரந்தரமாக உதவி செய்ய வேண்டுமானால், இந்தச் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்த காலத் திலிருந்து, இதற்கு முன்பு ஏற்பட்ட டிகிரிகளுக்கு அதற்கு ஒரு கால வரையறைக்குள், லிமிடேஷனுக்குள் திருத்த மனு போட்டால், இந்தச் சட்டம் பொருந்தும். பலனை கடன்பட்டவர் அடைய முடியும். இதைச் சட்ட அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எந்த முறையில் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்பதற்கு செக்ஷன் 16 இருக்கிறது. இதன்படி உண்மையிலேயே நிவாரணம் கொடுக்கப்படவில்லை. ஏனென்று சொன்னால், டிகிரி ஏற்பட்டால் அதை வசூலிப்பதற்கு 12 ஆண்டு காலம் என்று சட்டம் உள்ளது. அப்படி இருக்கும்போது கடன் கொடுத்தவர் ஆறு மாத காலம் கடந்துதான் வசூல் செய்வார். அந்த அடிப்படையில் இந்த சட்டம் 6 மாதம் என்பது பொருந்தாது. இந்தச் சட்டம் பாஸ் ஆனால், ஏழை எளிய மக்களுக்கு உதவியாக இருக்காது என்பதை தெரிவித்துக் கொண்டு, இதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு மசோதாக்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. முன்னரே இது சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட சட்டத்தை மாற்றி இப்போது புதிய அமெண்ட்மெண்ட் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே பில் நெம்பர் 20-ஐ எடுத்துக் கொண்டால் 200 ரூபாய் மாத வருமானம் உள்ள வர்கள் பான் புரோக்கர்களுக்கு நகைகளுக்காக பணம் திருப்பிக் கொடுக்க

1979 ஏப்ரல் 28] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

வேண்டியதில்லை என்று பிரசிடென்ட் ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட சட்டம் இந்த 200 ரூபாய் என்பதை, ஒரு குடும்பத்தினுடைய கிராஸ் இன்கம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'annual household income' means the aggregate of the gross annual income from all sources of all the members of a family.'

இந்த கிராஸ் இன்கம் என்பதிலே சந்தேகம் ஏற்படுகிறது. நான் ஒரு விவசாயி என்று வைத்துக்கொள்வோம். நான் ஒரு எக்கர் நிலம் வைத்திருக்கிறேன். அதிலே விளைகின்றது பூராவும் கிராஸ் இன்கம் என்று சொல்லப்படுகிறது. அதற்கான செலவைக் கணக்கிடுவதில்லை. 10 மூட்டை நெல் விளைகின்றது என்று சொன்னால், அதை விற்றால் 500 ரூபாய் வந்தால், அதை கிராஸ் இன்கம் என்று சொல்லப்படுகிறது. அதற்கான கடன் வாங்கி 250 செலவு செய்திருந்தால், அதை கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. கூட்டுறவு சொசைடியிலே கடன் வாங்கியிருக்கலாம். சாகுபடி செய்யப்பட்டதிலே 500 ரூபாய் வருமானம் வந்தது, அதற்காக 250 ரூபாய் செலவு செய்யப் பட்டது. அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்றால், கடனை சொசைடியிலே திருப்பிக் கட்ட முடியாது, வாங்க முடியாது.

(முற்பகல் 11.30)

நெட் இன்கம்மைத்தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். கிராஸ் இன்கம்மை கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது. முன்னால் கொடுத்த சலுகையை எதற்காக இப்படி குறைக்க வேண்டும்? முன்பு கொடுத்த சலுகையே போதாது, மேலும் நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லும் போது பெரும் பகுதியினருக்குச் சலுகை கிடைக்காமல் செய்வது தவறானது. ஆகவே, இந்த மசோதாவைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, எல்.ஏ. பில் 21, முன்பு 500 ரூபாய் வரை கடன் வாங்கியிருந் தால் அதை ரத்து செய்யலாம் என்று சட்டம் இருந்தது. இப்போது அதைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்ற முறையில் சட்டம் கொண்டு வரப்பட்டி ருக்கிறது. கடனில் அகப்பட்டுக் கொண்டிருப்பவனுக்கு எவ்வளவு தூரம் விமோசனம் கொடுத்து காப்பாற்ற வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். இப்போது ஸ்கேலிங் டவுன் என்ற முறையில் கொண்டு வந்திருக்கிறார்கள். கடன் வாங்கியவன் சொன்னானா? அல்லது கடன் கொடுத்தவன் சொன்னானா? கடன் வாங்கியவனை காப்பாற்றத்தான் சட்டம். மணி லெண்டர்ஸ் வந்து சொன்னதன் பேரில் சட்டத்தை மாற்றினால் எப்படி அது உருப்படியாக இருக்கும். ஸ்கேலிங் டவுன் செய்ய என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்த இரண்டு சட்டமுமே சரியல்ல. மறுபரிசீலனை செய்ய

வேண்டும். நோக்கமே காப்பாற்றப்பட முடியாத வகையில் இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இவற்றை எதிர்க்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy Speaker, Sir, a few hon. Members who have participated in this debate have contributed to this debate from their own standpoint.

The hon. Member Thiru Sivasami pleaded for raising this amount of debtors from Rs. 2,400 to practically Rs. 6,000. I think even during the Adviser's regime, during the Presidential Rule, the annual income was Rs. 2,400 for the rural artisans, the agricultural landless labourer and another category of workers and this Government has not been able to see its way to raise it.

So far as the scaling down is concerned, there have been a number of Writ Petitions pending now in the High Court. It may be recalled the during the days of Rajaji, following the doctrine of *dampudat rule,* if a debtor has paid twice the amount, whether it be for interest, whether if be the principal or whether prinncipal and interest, the whole debt is deemed to be wiped out. In the same fashion now, instead of wiping out straightway, as it was made in the earlier sections, namely, section 7, we have now substituted section 8, where the Government had made a provision, scaling down the debt. If a debtor has paid 1-1|2 times the principal amount or interest due, whatever it is, a total of 1-1|2 times principal amount or interest due, to the debt is deemed to be wiped out. In fact we faced this difficulty when many of the writs went to the High Court in regard to Tamil Nadu Act 40 of 1978 and the write petitioners contended that the total wiping out is expropriatory and therefore, we felt —the Government felt—difficulty. Even in regard to the earlier criticism made by the hon. Member Thiru Marimuthu about the gross income, there have been nearly 800 and odd Writs which have paralysed the working of this Act and therefore the Judges were keen in asking us, 'How do you expect the creditor to sit and work out the net or gross amount ?' What are the expenses to be deducted and worked out ? These are all insurmountable difficulties one has to face. Therefore, the best method of arriving at some basis was the gross income. It was because of that this Government decided on the gross income as the basis. Therefore, necessary amendments have been brought out.

1979 ஏப்ரல் 28] (Thiru K. Narayanaswamy)

The other hon. friend Thiru Appunu Gounder mentioned about section 16. May I say this much? Even in the original Act of 40 of 1978 itself it is there. It has been there. We have not altered anything. All that we have altered in the present Act is that after repealing the old Act of 40 of 1978, we are only bringing in Article 46 in the light of Article 31 (c) of the Constitution of India and substituted Clause 8 for Clause 7. Even we have provided a new clause 17 providing for determination of the debt due. Also we have repealed the existing Act 40 of 1978 by Clause 31. Then we made a saving clause, namely, to protect the pending proceedings by clause 32 and if there were any doubts, for removal of doubts also, we have made a provision in clause 33 of the new Bill. Clause 34 provides for exclusion of time for limitations. Therefore that clause might be utilised for meeting difficulties expressed by the hon. Member, Thiru Appunu Gounder.

There were some criticisms of the Preamble. In the Preamble we have made it clear that debts due to the Co-operative Societies and other institutional sources may be protected. That is the reason why in the Bill of 20 preamble has been rather made into a lengthy one so that the object of the legislation may be rendered more clear.

Mr. Deputy Speaker, Sir, I have done.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது ஹைகோர்டிலே ரிட் பெட்டிஷன்கள் வந்து, அவர்கள் எக்ஸ்புரோப்ரியேட் என்கின்ற தன்மையிலே சொத்தை பறிமுதல் செய்கின்ற தன்மை உடைய சட்டம் என்பதால் அதைத் திருத்த வேண்டுமென்று கேட்டதாகவும் அதற்காக இப்படிக் கொண்டு வருவதாகவும் சொன்னார்கள். இப்போது எந்த முற்போக்குச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும் அதிலே பறிமுதல் தன்மை இருக்கிறது என்றுதான் வெஸ்டட் இன்டரஸ்ட்ஸ் சொல்கிறார்கள், அதற்காகதான் கான்ஸ்டிட்யூஷனல் புரட்டக்ஷன் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் அந்த கான்ஸ்டிட்யூஷனல் புரட்டக்ஷன் எப்படிக் கொடுக்க முடியும் என்று பார்த்து அதைக் கொண்டுவர வேண்டுமே தவிர அதற்கு மாறாக, 1976 ஆம் ஆண்டுச் சட்டத்திலே இன்கம் என்றுதான் போட்டார்கள். அதனால் 2,400 வருமானம் வந்தாலும் அவர்களுக்கு அந்தச் சலுகை கிடைத்தது. ஆனால் இப்போது அதை மாற்றி கிராஸ் இன்கம் என்று வைத்திருப்பதால் 1,000 ரூபாய் நெட் இன்கம் வந்தாலும் அவர்களுக்கும் கிராஸ் இன்கம் என்று அதைப் போட்டு அவர்களுக்கும் பயன் இல்லாத முறை ஏற்பட்டுவிட்டது. ஏற்கெனவே இருந்த சட்டத்திலே பயன் பெற்றவர்களுக்கு இப்போது

பயன்பெறாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. இன்னொன்று ஆர்.டி.ஓ. சம்மதம் பெற்றுதான் தாசில்தார்கள் சர்ச் செய்ய வேண்டுமென்று சொன்னால் ஏற்கெனவேயே சுறுசுறுப்பு இல்லை, இப்போது அந்த சுறுசுறுப்பு மேலும் முடம் ஆக்கப்படுகிற நிலைமைதான் இருக்கிறது. அடுத்து 21வது சட்டத்திலே 40வது பிரிவிலே திருத்தம் செய்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் முற்போக்குக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. ஆனால் 500 ரூபாய் கடன் பெற்றவர்களுடைய கடன்களை ரத்து செய்திருக்கிறார்கள், சென்ற ஆண்டிலே. ஆனால் இந்த ஆண்டிலே என்ன காரணம் என்று தெரியவில்லை அப்படி ரத்து செய்த கடனை திருப்பிக் கட்டவேண்டுமென்ற முறையிலே 500 ரூபாய்க்கு ஒன்றரை மடங்கு என்ற முறையிலே 750 ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்வது எந்த வகையிலே நியாயம் என்று தெரியவில்லை. ஆகவே மணிலெண்டர்களைக் காப்பாற்றக்கூடிய முறையிலேதான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றக்கூடிய முறையிலே திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஒன்றரை மடங்கு என்றால் 750 ரூபாய் செலுத்த வேண்டும், 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் 500 கடன் பெற்றிருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள்.

(முற்பகல் 11-40)

அதன் வட்டி மூன்றாண்டுகளுக்கு என்னவாகும்? சுமார் 150 ரூபாய்க்குத் தான் வரும். ஆனால் 250 ரூபாய் அதிகமாகச் செலுத்த வேண்டியிருக்கிறதே, அது எப்படி? அதனால் யாருக்கு இலாபம்? என் கணக்கை இம்மாதிரி போட்டிருக்கிறார்கள் என்று புரியவில்லை.

The Hon. Thiru K. NARAYANASWAMY : It is a lesson in Mathematirs. I will workout at the rate of 12 per cent.

திரு. ரா. கிருஷ்ணன் : 100 ரூபாய் வாங்கினேன் என்றால், இப்பொழுது 150 ரூபாய் செலுத்த வேண்டுமென்றால், 12 சதவீதம் என்றாலும் 3 இண்டு 12 ஆக 36 ரூபாய்தான் வட்டி . . .

The Hon. Thiru K. NARAYANASWAMY : If you have borrowed Rs. 100 at the rate of 12 per cent, it works out only to 136 (12×3=36). If you pay the whole thing you need not pay 1-1|2 times. If it is more than that and if you pay within one year you need not pay 50 per cent extra. The Hon. Member Sankariah was pleased to ask me about the scaling down as against the decision taken by this Government earlier. Suppose there is a borrower who borrows Rs. 2,000 from some Bank and then lends it out at the rate

1979 ஏப்ரல் 28] (Thiru K. Narayanaswamy)

of Rs. 500 for about 40 persons, under the old Act the entire thing gets wiped out. He cannot recover anything. Hence the man who has borrowed and lent Rs. 20,000 goes to rack and ruin. In order to ensure what is called the equity this Government has gone back on that and has reverted to the scaling down theory.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட மந்திரி அவர்கள் சொன்னதுதான் அரசாங்கத்தின் கொள்கை என்றால் அதைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறோம். பேங்கில் 20,000 ரூபாய் கடன் வாங்கி, 500 ரூபாய், 500 ரூபாய் என்று வட்டிக்கு விட்டால், அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதிலே அவ்வளவு அக்கறை இருக்கிறது என்றால் நாங்கள் சந்தோஷப்படுகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஏழைகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று எமர்ஜென்சி காலத்திலேயும் இரண்டு மூன்று சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். நாமும் கொண்டு வந்திருக்கிறோம். அதை மாற்றி 500 ரூபாய் வாங்கியவர்கள் கட்டித்தான் ஆக வேண்டுமென்று சொன்னால், ஏழை எளியவர்களின் பக்கம் இருப்பவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள், ஏன் இருந்த சட்டத்திலே இப்படி மாற்ற வேண்டும்? பேங்கிலே வாங்கிக் கடன் கொடுத்தவர்களைப் பாதுகாக்கும் நிலைமை என்றால் அது எப்படி ஏழை எளியவர்களுக்கு ஆதரவு அளிப்பதாகச் சொல்லப்பட முடியும்? ஏழை மக்களுக்கு அது மிகப் பெரிய பாதகமாக முடியுமே. எனவே சங்கரய்யா அவர்கள் சொன்னதைப்போல இப்பொழுதாவது கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் பேசி விட்டார்கள். நீங்கள் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : டைம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டைம் இருக்கிறது என்றால் செகண்ட் ரவுண்டா?

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவரவர்களே, இங்கே கூறிய பதிலைக் கேட்கின்றபொழுது விந்தையாக இருக்கிறது. ஏதோ இதைக் கடன் கொடுத்து வாங்கும் தொழிலை நடத்துபவர்களுக்காக இந்தச் சட்டம் கொண்டு வந்ததாகத் தெரிகிறது. கடன் கொடுத்து வாங்கும் தொழிலை நடத்துபவர்கள் நிச்சயமாக ஏழைகளாக இருக்கமாட்டார்கள். வங்கியிலிருந்து 20,000 ரூபாய் கடன் வாங்க வேண்டுமென்றால் வசதி

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 28

படைத்தவர்களுக்குத்தான் வங்கியிலிருந்து 20,000 ரூபாய் கிடைக்கும். அந்த நபர் சிறு ஏழைகளுக்கு 500 ரூபாய் விதம் கொடுத்து, அதனால் நஷ்டம் ஏற்பட்டாலும்கூட, இந்த அரசோ, நாடோ கவலைப்பட வேண்டிய அவசிய மில்லை. ஆனால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதால் சாதாரண ஏழைகள் 500 ரூபாய் வாங்கி அதைச் செலுத்த முடியாமல் இருப்பவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? இந்தச் சட்டத்தில் மட்டுமல்ல, சமதர்மத்தைத் தாராளமாக அள்ளி அள்ளித் தெளித்துப் பேசுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தக் கொள்கையை ஏன் மாற்றிக்கொள்ள வேண்டும்? ஏழைகளின் மீது சாதாரணமாக அனுதாபத்தோடு பேசும் இந்த அரசு ஏன் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தக் கொள்கையை மாற்றிக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது என்பதைச் சட்ட அமைச்சரவர்கள் விளக்கு வார்களா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : Government have taken the interest of all concerned including the affected parties, who borrow and lend out even to the weaker section. It is only by reason of that and by reason of what may be called certain difficulties encountered by the Government in Courts, in the High Court this Legislation has been brought into effect.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, I move that the Tamil Nadu Debt Relief (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 20 of 1979) be passed.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

(ஏ) கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1979.

The Hon. Thiru K. NARAYANASWAMI: Sir, I move :—"That the Tamil Nadu Debt Relief Bill *, 1979 (L.A. Bill No. 21 of 1979) be taken into consideration."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 4 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

THE HON. THIRU K. NARAYANASWAMY : I move the following amendments :—

In clause 4, in sub-clause (k),—

(1) *for* item (iii) *substitute* the following items, namely :—

(iii) a minor child whose father is dead ; or

(iv) a female person whose marriage has been dissolved by a decree of diverse or has been declared null and void, or annulled, by a decree of nullity ;"

(2) in the proviso, for the words "such widow or minor child" in both the places where they occur, substitute the words "such widow, minor child or female person."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 5 முதல் 34 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

* 1979 ஏப்ரல் 17-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

The Hon. Thiru K. NARAYANASWAMY : Sir, I move that the Tamil Nadu Debt Relief Bill 1979 (L. A. Bill No. 21 of 1979) as amended be passed.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 11-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மீண்டும் பேரவை 4.02 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்களின் தலைமையில் கூடியது.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஐ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன் வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1979) கீழ்க்கண்ட 19 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற வேண்டும்"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

1. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
2. திரு. துரை கோவிந்தராசன்.
3. திரு. பி. எச். பாண்டியன்.
4. திரு. வெ. பாலகுரு.
5. திரு. ஆர். மணிமாறன்.
6. திரு. கா. செங்கோடன்.
7. திரு. கோ. ரகோத்தமன்.
8. திரு. கா. பாலாஜி.
9. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
10. திரு. மு. செல்வராஜ்.
11. திரு. பெ. சு. திருவேங்கடம்.
12. திரு. செ. சதாசிவம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 28]

13. திரு. மு. சுந்தரம்.

14. திரு. ரா. கிருஷ்ணன்.

15. திரு. சோ. அழகர்சாமி.

16. திரு. எம். ஏ. லத்தீப்.

17. திரு. ரா. மார்க்கபந்து.

18. திரு. ஜே. ஜேம்ஸ்.

19. திரு. கே. கந்தசாமி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 99, உள் விதி (1)க் கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

(ஓ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

*திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமன) சட்டத் திருத்தத்தின் மீது மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த தனி அதிகாரிகள் நியமனம் பொறுத்தமட்டில், கூட்டுறவு அமைப்புகளுடைய விதிமுறைகளை ஆய்வு செய்வதற்காக ஆய்வுக் குழு அமைக்கப்பட்டு இருந்தாலும் இந்த நிறுவனங்களில் இருக்கக்கூடிய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது சரியாகாது.

உதாரணமாக, கூட்டுறவு ஸ்தாபனங்களில் முறைகேடுகளும், சீர்கேடுகளும் நிலவி இருப்பதற்கான காரணம், அந்த அமைப்புகளில் ஒரு ஜனநாயகத் தன்மையில் நடைமுறை இல்லாததுதான் என்பதை நான் சொல்லிக்கொள்ள

1979 ஏப்ரல் 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

விரும்புகிறேன். அதன் காரணமாக அந்த ஸ்தாபனங்களில் மிகப் பெரிய சீர்கேடுகள் இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது மீண்டும் அந்தத் தனி அதிகாரியின் பதவியை நீட்டித்துக்கொண்டு போவது அந்த ஸ்தாபனத்தை இன்னும் கெடுக்க என்ன பந்தயம் என்பதுபோல் உள்ளது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சமீபத்தில் தருமபுரி மாவட்டத்தில் 1977-ம் ஆண்டு வறட்சியால் பாதிக்கப் பட்டு மிகவும் பின்தங்கிய பகுதி என்ற காரணத்தால் 10 ஆண்டுகள் வறட்சிக்கு உட்பட்டு 10 ஆண்டுகள் கடன் கட்ட முடியாத சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் என்று விவரம் சேகரித்து, அவர்களுக்கு மத்திய அரசு 25 சதவிகிதம், மாநில அரசு 25 சதவிகிதம், ரிசர்வ் வங்கி 10 சதவிகிதம், மாநில கூட்டுறவு வங்கி 12½ சதவிகிதம் தருமபுரி மத்திய கூட்டுறவு வங்கி 12½ சதவிகிதம், கிராம கூட்டுறவு சங்கங்கள் 15 சதவிகிதம் என்கிற அளவில் ரூ. 49 லட்சம் ஒதுக்கப்பட்டது. இந்தக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்ததும், கிராமக் கர்ணத்தின் மூலம் விவரம் சேகரிக்கப்பட்டு அளிக்கப்பட்ட பின்பும், அந்த விவசாயிகளுக்கு அந்தக் கடன் தள்ளுபடி செய்யப்படாமல், தருமபுரி மாவட்ட மத்திய வங்கியிலேயே அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு அந்த பாதிக்கப்பட்ட சிறு ஏழை விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்காமல் விவசாயிகளிடம் வசூல் நடவடிக்கையும் செய்யப் படுகிறது. கிடைத்த சலுகைகளைக் கூட அவர்கள் பெற முடியாமல் தடுக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதைக் காண்கிறபோது, அதற்கு அடிப்படை காரணம், ஒரு தனி அதிகாரி ஜனநாயக தன்மை அற்ற முறையில் தன்னிச்சை முறையில் செயல்படும் தன்மையைக் காட்டுவது ஆகும். மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அற்ற, ஒரு கூட்டுறவு அமைப்பை உரு வாக்கப்பட்டதன் விளைவாகத்தான் அங்கே பல்வேறு சீர்கேடுகள் ஏற்பட் டுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, அந்த நிவாரணம் கொடுக்காமல் இருந்ததோடு மட்டுமல்ல, அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து மேலும் கடன்கள் வசூலிக்க வேண்டும் என்கிற நிலைமை ஏற்படுகிறது.

அடுத்து, நில வள வங்கிகள் இன்று ஒருசிலரின் நலவள வங்கிகளாக இருக்கிறது. குறிப்பிட்ட நபர்கள் பெரும் அமைப்பாகத்தான் செயல்பட்டு வந்துள்ளதுதான். பல இனங்களுக்கு கடன் வழங்கப்படுவது குறித்து. அந்த விதிமுறைகளை இன்று விரிவாக்கும் பொருட்டு, வேளாண்மை, கால் நடை வளர்ப்பு, மீன் பிடிப்பு, பால் பண்ணை, பன்றி வளர்ப்பு, தேனீ வள்ர்ப்பு போன்ற பணிகளுக்கும், இவைகளை ஒட்டியுள்ள உபகரணங்கள் மற்றவற்றிற்கும் வாங்குவதற்கு கடன் வழங்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. இது மற்ற ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை. வரவேற்கிறேன் என்றாலும், இந்த நில வள வங்கி கடந்த காலத்தில் ஒருசிலரின் நலத்திற்காக இருந்தது, ஏழை எளிய

REPORTING SECTION

1979 ஏப்ரல் 28] [திரு. எம். அண்ணாமலை]

மத்திய தர விவசாயிகளுக்கு உதவி அளிக்கவில்லை. அப்படிக் கொடுத்தாலும் மிகக் குறைத்துக் கொடுத்து சிக்கலை உருவாக்கி நிலத்தை இழக்கும் நிலை தான் உள்ளது ஒருசில நபர்கள் வேண்டுமானால் பயன் பெறலாமே தவிர, ஒரு சாமான்ய ஏழை விவசாயி உதவி பெறும் அளவிற்கு இல்லை. இதற்குக் காரணம் கடன் கொடுப்பதில் முறைகேடுகள், கால தாமதம், குறைந்த கடன் கொடுப்பது இதுபோன்ற காரணங்களால்தான் இன்று பெருமளவிற்கு எவ்வளவு திட்டங்கள் அரசு போட்டாலும், அதை நம்பி விவசாயிகள் நடவடிக்கைகளை ஆரம்பித்தாலும், அதன் பலனை பெரும் நிலப்பிரபுக்களும், வசதி உள்ளவர்களும் அடைந்து விடுகிறார்கள் என்பதை நாம் காண முடியும் இதனால் இன்று நாடு முழுவதும் சாதாரண ஏழை எளிய விவசாயிகள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

(மாலை 4.10)

அவர்கள் பல்வேறு கொடுமைகளுக்கு உள்படுத்தப்பட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, இப்போது பொய்த்துப்போன கிணறுகளுக்கு எல்லாம் அந்தக் கடனை வஜா செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கலெக்டர் அலுவலகத்தில் ஒரு அலுவலகம் அதற்கான போர்டு இருக்கிறது. அப்படி இருந்தும்கூட, இன்றைக்கு கூட்டுறவு கடன் பெற்று வெட்டிய பல்வேறு கிணறுகள் பொய்த்துப்போன பிறகும் நிவாரணம் கோரி மனுக்கள் செய்தும் நிவாரணம் செய்தார்களா என்று பார்த்தால் இதுவரையில் இல்லை.

உதாரணமாக, ஆரூர் வட்டத்தில் நாசம்கொட்டாய் என்ற இடத்தில் ஒருவர் 3 ஏக்கர் வைத்திருக்கிறார். 6,000 ரூபாய் கடன் பெற்று, கிணறு வெட்டினார். 30 அடி ஆழமும் கிணறு வெட்டினார். அந்த கிணறு பொய்த்துப்போய், தண்ணீர் வரவில்லை. அதுமட்டுமல்லாமல் 4 புறமும் இருந்த ஷெட்டும் இடிந்து விழுந்துவிட்டது. அதனால் அவர் கடனை வஜா செய்ய வேண்டுமென்று சொல்லி, 4 ஆண்டுகளாக மனு செய்துகொண்டிருக்கின்றார். அதுபற்றி சமீபத்தில் ஒரு ரிப்போர்ட் வருகிறது. இந்த கிணற்றில் தண்ணீர் வரவில்லை என்று சொல்வதற்கு, கிணற்றை தூர் வாரி, மேலும் 6 அடி ஆழத்திற்கு வெட்டி, பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான் இறுதி முடிவு காணமுடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருக்கு அந்த மூன்று ஏக்கர் நிலம்தான் இருக்கிறது. வேறு சொத்து எதுவும் கிடையாது. கிணற்றில் தண்ணீர் இல்லை. சுற்றுச் சுவர் பூராவும் இடிந்து கிணற்றில் 8 அடி, 10 அடி ஆழத்திற்கு தூர் ஏறியுள்ளது. சுற்றுச் சுவர் இடிந்து கிடக்கிறது. அதை பூராவும் எடுத்து, மேலும் 6 அடி வெட்டுவது என்று சொன்னால் அவருடைய சக்திக்கு அது முடியக்கூடிய காரியமா? ஆகவே, இந்தத் திட்டம் வெறும் பேப்பரிலே போட்டு, சாதாரண ஏழை எளிய விவசாயிகளை அலைக்கழிப்பதற்குத்தான் இருக்கிறது என்பதோடு ஏழை விவசாயிகளின் மென்னியைப் பிடித்துத் தள்ளி, நிலப் பிரபுக்களிடம் இவர்களது நிலங்களையும் பிற சொத்துக்களையும் இழக்கச் செய்யக்கூடிய சட்டமாகத்தான்

இது இருக்கிறது. ஆகவே, இதை நிலவளம் என்று சொல்வது தவறு; ஒரு சில தனி நபர் வளம் என்று சொல்லலாம். இந்த நிலவள வங்கிகள் மட்டு மல்ல; இன்றைக்கு அதைப்போன்று இருக்கிற பல்வேறு அமைப்புகளின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. ஏற்பட்டிருக்கிற அனுபவங்களைப் பார்க்கிறபோது இப்படிப்பட்ட அமைப்புகளினால் இருக்கிற ஜீவாதாரமும் பறிபோய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் இத் தீமைகளைப் போக்குவதோடு இனி உருவாகும் அமைப்புக்களிலும் இந்நிலை தொடராவண்ணம் கவனிக்க வேண்டும் என்பதோடு இந்தக் கடன் வழங்கு வதிலும் குறிப்பாக, ஏழை எளிய விவசாயிகளுக்கு மொத்தக் கடனில் 75 சத விதம் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்றும், கடனைக் கொடுக்கும் போது குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்கு அது போதுமானதா என்ப தைப் பார்த்தும் கொடுக்க வேண்டும். அது அல்லாமல் ஏதோ கேட்டார்கள், ஏதோ கொடுத்தோம், பின்னால் கட்டுவார்கள், வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலையில் இருக்கக்கூடாது. நில வளர்த்திற்கு என்று கொடுக்கும்போது உண்மையிலேயே அவர்களுடைய நிலம் வளம் பெற்றும் அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறுவதாக இருக்க குறிக்கோளை அடைகிறதா என்பதும் இருக்கும் பொருட்டும் திட்டத்திற்கு ஏற்ற கடன் உதவி அளிக்கும்வகையில் இந்தச் சட்டத்தை மாற்றிமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவ தற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கிற கூட்டுறவுத் திருத்த மசோதா மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஏற்கெனவே, ஒரு விரிவான கூட்டுறவுச் சட்டத்தை இயற்றுவதற்கு ஒரு மசோதா இங்கே தாக்கல் செய்யப்பட்டு, அது பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை காரணமாகக் காட்டி, அந்த விரிவான மசோதாமீது பொறுக்குக் குழு அறிக்கை தயார் செய்து, அந்த அறிக்கையை இந்த மாமன்றத்திலே தாக்கல் செய்து, அந்த மசோதாவை நிறைவேற்றுவது வரை தனி அதிகாரிகள் பதவி காலத்தை நீட்டிப்பதற்கு உதவியாக இருக்க வேண்டுமென்ற காரணத்தைக்காட்டி, இந்த மசோதா இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டுவதால் எவ்வளவு நிர்வாக சீர்கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இந்த அரசு நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக இதற்கு முன்கூட பல்வேறு அங்கத் தினர்கள் தனி அதிகாரிகளுடைய நிர்வாக குழப்படிகளைப்பற்றி இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

1978 ஏப்ரல் 28] (திரு. ஜே. ஜேம்ஸ்)

அரசாங்கத்தின் தரப்பில் பல சந்தர்ப்பங்களில் ஏற்கெனவே விவசாயிகள் கொண்ட கடனை வசூல் செய்கின்ற முறையில் பல முறைகேடுகள் நடைபெற்றன. இந்தக் கடன் சம்பந்தமாக விவசாயிகளுக்கு பல சலுகைகள் அறிவிக்கப்பட்ட போதிலும், அறிவிக்கின்ற சலுகைகள் ஒருவிதமாக இருக்கின்றன, அது நடைமுறையில் வேறுவிதமாக இருக்கின்றது. நடைமுறையில் இந்தத் தனி அதிகாரிகள் நடந்துகொள்கின்ற முறை நிச்சயமாக சரியில்லை. அந்த நடைமுறைகள் அறிவிக்கப்பட்ட சலுகைகளுக்கு மாறாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை இங்கே பல தடவைகள் நான் கூறி இருக்கிறேன். விவசாயிகளுடைய கடன்களை வசூல் செய்கிற முறையில் அட்டாச்மென்ட் நடவடிக்கை நிச்சயமாகக் கைவிடப்படும் இங்கே அமைச்சர்கள் அடிக்கடி கூறுகிறார்கள். ஆனால் அதி வேகமாக இந்தக் கடன்களை வசூலிப்பதில் அட்டாச்மென்ட் நடவடிக்கை எடுக்கப்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகவே இந்தத் தனி அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் ஏழை விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் தொடர்புள்ளவர்களுக்கும் தீமைகள்தான் விளைகின்றதே தவிர நன்மைகள் ஏற்படுவதில்லை. இதனால் ஏழைகளுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவேதான் இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிக்காலத்தை நீடிக்கக் கூடாது என்பதைச் சொல்லிக்கொண்டு, அவ்வாறு நீடிக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டுவரப்படுகின்ற சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு இந்தத் தனி அதிகாரிகளை நியமித்தால், அது தேவையான கமிட்டிகள், போர்டுகள் போன்றவற்றை எல்லாம் அமைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தை இங்கே கூறி இருக்கிறார்கள். இங்கே அமைத்திருக்கின்ற கமிட்டிகளை எல்லாம் பார்க்கின்றபோது, பல கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆளுகின்ற கட்சியைச் சார்ந்தவர்கள்தான் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற குறை பல தடவை எடுத்து கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இம்மாதிரி நிர்வாகச் சீர்கேடுகள் இருக்கக்கூடாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இம்மாதிரி தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம். ஆகவே உடனடியாக இங்கே விரிவான சட்டம் நிறைவேற்றுவதற்கு கால தாமதம் ஏற்பட்டாலும் கூட ஏற்கெனவே அமலில் இருக்கின்ற சட்டத்தை வைத்தே நிச்சயமாக தேர்தலை நடத்துவதற்கு எந்தவிதமான வசதிக் குறைவும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே இங்கே சொல்லி இருக்கின்ற காரணம் ஏதோ சாக்கு போக்கானது. இது நியாயமற்றது. ஆகவே இதை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று கூறி

* திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இப்போது நமக்கு முன்னால் இருக்கின்ற கூட்டுறவு சம்பந்தமான 3 சட்டங்களை இன்றைக்கு அமைச்சரவர்கள் பிரேரேபித்து நாம் அதன்மீது பேசுகிறோம். அதிலே ஒன்று தனி அதிகாரிகளை நியமிப்பதை இன்னும் ஒரு 6 மாதங்களுக்கு நீட்டிக்க வேண்டும் என்று இருக்கக்கூடிய சட்ட திருத்தமாகும். கடந்த சட்டமன்றக் கூட்டத்திலும் அதற்கு முன்பும் தனி அதிகாரிகளை நியமிக்கின்ற அந்த நிலையைப் போக்கி உடனடியாக அந்தந்த ஸ்தாபனங்களிலே உள்ள உறுப்பினர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பைக் கொண்டுவந்தால்தான் அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செம்மையாக செயல்பட முடியும் என்று இங்குள்ள மாண்புமிகு அங்கத்தினர்கள் பல முறை சொன்னார்கள். அதற்கு அரசு தரப்பிலே சொல்லப்பட்ட பதில், காரணம் என்னவென்றால் இப்போது இருக்கக்கூடிய இந்த சட்டத்தை திருத்தப்பட்டதற்கு பின்னால்தான் தேர்தல் வைக்க முடியும் என்று சொல்கிறார்கள். தொடர்ந்து தனி அதிகாரிகள் நிர்வாகத்திலேயே அந்த சங்கங்களை வைத்துக்கொண்டு இருப்பது அதனுடைய வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது மட்டுமல்ல, அந்த நிர்வாகமே சீரழிந்து, உள்ள மூலதனமும் குறைந்து எதிர்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பு வந்தாலும் கூட அதைச் செம்மையாக நடத்துவதற்கு முடியாத நிலைமை ஏற்படும் என்பதை சொல்லிக்கொள்கிறேன். இதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

எங்களுடைய ஊரான கோவில்பட்டியில் பால் வழங்கும் கூட்டுறவு யூனியன் இருக்கின்றது. அங்கே தேர்தல் வைக்க வேண்டும் என்று கேட்டால் அதற்கும் இந்த கூட்டுறவு சட்டத்தைத் திருத்திய பிறகுதான் தேர்தல் வைக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கூட்டுறவு யூனியனில் தனி அதிகாரி வந்த பிறகு, முன்னால் இருந்த அபிவிருத்தி, மற்ற காரியங்கள் எல்லாம் குறைந்து விட்டது. இன்றைக்கு அதைப்பற்றி பொதுமக்கள் நல்ல ஒரு எண்ணம் கொள்ளக்கூடிய நிலையிலே இல்லை. பொதுமக்களுக்கு அங்கே தரமான பொருட்களை வாங்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுள்ளதன் காரணமாக எதிர்காலத்தில் இந்த மாதிரி ஸ்தாபனங்கள் ரொம்ப கஷ்டப்பட வேண்டியதிருக்கும். பிறகு அவற்றை சீர்திருத்தம் பண்ணவே முடியாது. ஆகவே அந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு எந்தவிதமான ஆலோசனைக் குழுக்களும், போர்டும் இல்லை என்று சொன்னால் அதிகாரி வைத்ததுதான் சட்டம் என்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடும். அங்கே வேலை செய்கின்ற நான்கைந்து அதிகாரிகளைக் கைக்குள் போட்டுக்கொண்டால் போதும், அவர்கள் இஷ்டம் போல் காரியங்களைச் செய்ய முடியும்.

(மாலை 4.20)

அதுமாதிரி கூட்டுறவு வங்கிகள், மாநில நிலவள வங்கி, மாவட்ட நிலவள வங்கி, ஆகிய ஸ்தாபனங்களில் தனி அதிகாரியைப் போடுகிறீர்கள். அவர்

1979 ஏப்ரல் 28] (திரு. சோ. அழகர்சாமி)

யாரையும் யோசனை கேட்பதில்லை. அவர் நினைத்தப்படி செயல்படலாம். எங்கள் பக்கத்தில், கோவில்பட்டியில் ஒரு மார்க்கெட்டிங் சொஸைட்டி இருந்தது. அது ரொம்ப நல்ல முறையில், பல ஆயிரக்கணக்கான லாபம் சம்பாதித்துக் கொண்டு வந்தது. மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு பெற்று இருந்த ஸ்தாபனமாக இருந்தது. அந்த ஸ்தாபனத்தில் ஒரு 4 அல்லது 5 வருஷமாக அதன் தலைவராக நான் இருந்தேன். அந்த ஸ்தாபனத்தில் வேண்டிய பருத்தி விதைகளை கருநாடக மாநிலத்தில் இருந்து 3,000 மூட்டை பருத்தி விதைகள் வாங்குவது வழக்கம். சுமார் 6,000 மூட்டை வரை டிமாண்ட் வரும். எங்களால் சப்ளை செய்ய முடியாது. ஒருவருக்கு 2 அல்லது 3 மூட்டைகள்தான் கொடுப்போம் ரேஷன் மாதிரி. நாங்கள் எல்லா மூட்டைகளையும் விற்று நிறைய லாபத்தைச் சம்பாதித்துக் கொண்டிருந்தோம். ஆனால் இப்போது 2,000 மூட்டைகள் வாங்கி ரூ. 50,000 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். காரணம் அந்த ஒரு தனி அதிகாரி யாரையும் யோசனையும் கேட்க முடியாது. அவருக்கு எல்லா விவரமும் தெரிந்திருக்க முடியாது. ஒரு நிர்வாக கூட்டு அமைப்பு இருந்தால் சரிவர கூட்டாகப் பரிசீலனை செய்ய முடியும். எப்படி கொள்முதல் செய்தால் நன்றாக இருக்கும், எந்த விலையில் விற்றால் நஷ்டம் ஏற்படாது, அடுத்த வாரத்தில் என்ன விலைக்கு விற்கப்படும் என்பதையெல்லாம் கூட்டாகப் பரிசீலனை செய்தால் ஒழுங்காக செய்ய முடியும். ஆனால் அந்த தனி அதிகாரி தானே அதையெல்லாம் செய்ய முடியாமல் தனக்கு மேல் இருக்கும் டி. ஆர்.க்கும், ஜே. ஆர்.க்கும் அனுப்பிவிடுகிறார்கள். இதற்குள் விலை ஏறி விடுகிறது. 20,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்று சொல்கிறார்கள். அந்த ஜே.ஆர். கூட, அவருக்கு மேல் இருக்கும் ரிஜிஸ்டிரார்-க்கு அனுப்பி விடுகிறார். இதெல்லாம் முடிந்த பிறகு முடிவு எடுக்கப்படும். இப்படி செய்வதனால் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அந்த கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு விரைவில் தேர்தல் வைக்க வேண்டும்.

முன்பு தங்களுக்கு வேண்டிய கட்சி ஆட்களைப் போடுவதற்காக ரூல்ஸ்-ஐ மாற்றினார்கள். கூட்டுறவு வங்கி, மாநில நிலவள வங்கி, மாவட்ட நிலவள வங்கி, மார்க்கெட் சொஸைட்டி ஆகிய ஸ்தாபனங்களுக்கு ரூல்ஸ்-ஐ மாற்றி முன்பு இருந்த ஆதித்தனார் அவர்கள் தனக்கு வேண்டிய ஆட்களை அந்த ஸ்தாபனங்களில் போட்டுக் கொண்டார்கள். கட்சி ஆட்களை போட்டுக் கொண்டார்கள், என்று சொல்லவில்லை. தங்களுக்கு வேண்டிய ஆட்களை போட்டுக் கொண்டார்கள். அந்த ரூல்ஸ் தப்பு. எப்படி ரூல்ஸ்-ஐ ரிஜிஸ்டிரார் போன்ற அதிகாரிகள் ஒப்புக்கொண்டார்கள் என்று தெரியவில்லை. அதோடு அந்த ஸ்தாபனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 அல்லது 4 உறுப்பினர்களைத் தவிர, இந்த ரூல்ஸ் துணைக் கொண்டு நியமன உறுப்பினர்கள் என்று சொல்லி 6 அல்லது 7 பேர்களைப் போட்டுக்கொண்டு, மெஜாரிட்டியாக இருந்து அந்த

(திரு. சோ. அழகர்சாமி) [1979 ஏப்ரல் 28

ஸ்தாபனத்திற்குப் பிரெசிடென்ட்டாக வரக்கூடிய நிலையை உருவாக்கிக் கொண்டார்கள். எப்படி ரூல்ஸ்-ஐ இந்த அதிகாரிகள் ஏற்றுக்கொண்டார்கள் என்று தெரியவில்லை. அந்த நியமன உறுப்பினர்கள் தேவையில்லை. அரசாங்கத்தின் சார்பாக செக்ரட்டரியைப் போடுங்கள். அந்த ரூல்ஸ் திருத்தப்பட வேண்டி இருக்கிறது. கடந்த காலத்தில் ஆதித்தனார் அவர்கள் செய்த மாதிரியே செய்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உடனடியாக அந்த ஸ்தாபனங்களுக்குத் தேர்தல் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்வதில் ஏன் யோசனை செய்கிறீர்கள்? கடந்த ஏறக்குறைய 30 அல்லது 35 ஆண்டுகளாக அந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தில் நான் ஈடுபாடு கொண்டிருக்கிறேன். இதன் மூலம் மக்களுக்கு நல்ல நன்மைகள் கிடைத்துக்கொண்டிருந்தது. அந்த நம்பிக்கை எல்லாம் இப்போது போய்க்கொண்டிருக்கிறது. ஏனென்றால் எந்த கூட்டுறவு சங்கங்களை எடுத்துக்கொண்டாலும் அதில் அரசாங்கம் தலையிடாமல் ஓரளவு அவர்கள் சுதந்திரமாக நடப்பதற்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். தப்பு ஏதாவது நடந்தால் பிரசிடன்டையோ அல்லது செக்ரட்டரியையோ தண்டியுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் தவறுகள் நடப்பதற்கு ஆதாரமாக ஏன் இப்படி தனி அதிகாரிகளைக் கொண்டு போடுகிறீர்கள். ஆகவே கூட்டுறவு ஸ்தாபனங்களில் எல்லாம் அந்தந்த உறுப்பினர்களே தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கக் கூடிய அளவில் நிர்வாகத்தை உடனடியாக அமைக்க வேண்டும்.

அதற்கு மேல், மாவட்ட அளவில் மாவட்ட பாங்கு; அதற்கு யூனியன் களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதி இருக்கலாம் என்றிருந்தது. பின்னால் அதற்கு மேல் மாவட்ட வங்கிகளிலிருந்து மாநில வங்கிக்கு பிரதிநிதிகள் வரலாம் என்று இருந்தது. ஆனால் இதெல்லாம் இப்போது கிடையாது. நான் கோவில்பட்டி அவுஸிங் சொஸைட்டியினுடைய பிரசிடென்ட். அங்கேயிருந்து ஏராளமான அப்ளிக்கேஷன் இங்கே வந்திருக்கிறது. மூன்று நான்கு லட்சம் ரூபாய் அளவுக்கு கேட் அப்ளிகேஷன் வந்திருக்கிறது. எல்.ஐ.ஸி. லோன் வேறு சாங்ஷன் ஆகி வந்திருக்கிறது. இதையெல்லாம் இங்கு வந்து பார்த்தால், ஒரே சிக்கலாக இருக்கிறது. இங்கேயுள்ள ஸ்பெஷல் ஆபீசர் ஒரு உத்தரவு போட்டார், ஜில்லாவாரியாக அப்ளிக்கேஷன்களை எல்லாம் பிரித்து வையுங்கள் என்றார்கள், பின்னால் அதை மாற்றி ஒவ்வொரு மாதமாக பார்த்து அடுக்கி வையுங்கள் என்று சொன்னார்கள். அப்படிப் பார்க்கும்போது, ஜனவரி மாதத்தில் சில அப்ளிக்கேஷன்கள் வந்திருக்கும். அதே நேரத்தில் ஜூன் மாதத்தில் வேறு நிலைமை ஏற்பட்டிருக்கும். இப்படி பைல்களை எல்லாம் பிரித்து ஆபீஸ் முழுவதும் பரப்பி வைத்திருக்கிறார்கள். எந்த பைல் எங்கேயிருக்கிறது என்று கூட தேடி பிடிக்க முடியாத நிலையில்

1979 ஏப்ரல் 28] (திரு. சோ. அழகர்சாமி)

இருக்கிறது. இதைப்பற்றி அங்குள்ள அதிகாரிகளிடத்தில் கேட்டால், நாங்கள் என்ன செய்வது, வேலை அதிகமாக இருக்கிறது, இங்கங்கே போர்டு வந்தால் தான் இதையெல்லாம் ஏதாவது செய்ய முடியும் என்று அவர்களே சொல்லுகிறார்கள்.

விட்டு அடமான சொஸைட்டிகளை எடுத்துக்கொண்டாலும் சரி, பால்வள சொஸைட்டிகளை எடுத்துக்கொண்டாலும் சரி, நிலவள வங்கிகளை எடுத்துக்கொண்டாலும் சரி,—நிலவள வங்கிக்கு இப்போது திருத்தம் கொண்டு வரப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. மாநில நிலவள வங்கியை எடுத்துக்கொண்டால் ஏராளமான லாபம். கோடிக்கணக்கான ரூபாய் லாபம்; இவ்வளவு லாபம் வரக்கூடிய வங்கியில், உறுப்பினர்களுக்கு உதவி செய்யக் கூடிய வகையில், தவணை கட்ட முடியாதவர்களுக்கு ஏதாவது உதவி செய்வது, அல்லது வட்டியில் கொஞ்சம் குறைத்துக் கொடுத்தால் என்ன? அவ்வளவு லாபம் வந்திருக்கிறது. மாநில வங்கிக்கு, அதே போன்றுதான் ஸ்டேட் கூட்டுறவு வங்கியை எடுத்துக்கொண்டாலும், 50 லட்சம், ஒரு கோடி, ஒன்றரைக் கோடி என்ற அளவில் லாபம். ரிசர்வ் வங்கியிலிருந்து 6 சத விகிதத்துக்கு கடன் வாங்குகிறது. முன்னால் 20, 30 கோடி வாங்கிக் கொண்டிருந்த நேரத்தில் 3 சதவிகிதம்தான் மார்ஜின் இருந்தது. இப்போது 150 கோடி வரை வாங்கிக்கொண்டிருக்கிறோம், இருந்தும் இப்போது 4 சத விகிதம் மார்ஜின் வைத்திருக்கிறோம். இவ்வளவு லாபம் எதற்கு? இப்படி மாநில வங்கியில் மட்டுமல்ல, மாவட்ட வங்கிகளை எடுத்துக்கொண்டாலும், அந்த அளவுக்கு நல்ல லாபம் வந்து கொண்டிருக்கிறது. இப்படியிருக்கும் போது ஏன் ஓரளவுக்கு இந்த மார்ஜினை குறைக்கக் கூடாது? முக்கியமாக நாம் திருத்தங்களை கொண்டு வருகிறோம். அதில் முக்கியமாக 3 டயர் சிஸ்டத்தை ஒழித்துவிட்டு, இரண்டு அடுக்கு முறையைத்தான் வைத்துக் கொள்ளவேண்டும். நேரடியாக ரிசர்வ் பாங்கிலிருந்து வாங்குவதை டிஸ்ட்ரிக்ட் பாங்கே வாங்கி அப்படியே கடன்களை கொடுப்பதற்கு முறையை வைத்துக் கொள்ளுங்கள். ரிசர்வ் பாங்கியிருந்து டிஸ்ட்ரிக்ட் பாங்கு வாங்கி அப்படியே கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு கொடுப்பது என்கின்ற முறைதான் இருக்க வேண்டும். கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு நல்ல அதிகாரிகளை செக்ரட்டரி களைப் போடுங்கள், சினியர் இன்ஸ்பெக்டர்கள், கோபரேட்டிவ் டிரெயினிங் படித்தவர்களைப் போடுங்கள், நான்கைந்து கிராமங்களுக்கு சேர்ந்து ஒரு கூட்டுறவு சொஸைட்டியை வைத்துக்கொள்ளுங்கள். கணக்குகளை ஒழுங்காக வைத்துக்கொள்ளுங்கள். பிரசிடன்ட் பாக்கட்டுக்குள் கணக்குப் புத்தகங்களை வைத்துக்கொள்ளக் கூடாது. என்றைக்காவது ஒரு நாள், பத்து நாட்களுக்கு ஒரு நாள் மட்டும் வருவது என்ற நிலை இருக்கக் கூடாது, ஆடிட்டர் வந்தால், பிரசிடன்ட் வீட்டில் போய் கேட்டால், அங்குள்ள அம்மா,

அவர்கள் வெளியூர் போயிருக்கிறார் என்று சொல்லக்கூடிய நிலை இருக்கக் கூடாது, சொஸைட்டி என்றால் அதற்கென்று தனியாக ஆபீஸ் இருக்க வேண்டும். அங்கே ரெடியாக கணக்குப் புத்தகங்கள் இருக்கவேண்டும்.

(மணியடிக்கப்பட்டது)

காலையில்தான் சீக்கிரமாக முடிந்துவிட்டது. இப்போதும் அதுபோல் முடிந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லுங்கள். சொல்லப்பட்ட கருத்துக்களையே சொல்லிக் கொண்டு இருக்க வேண்டாம் என்பதைத்தான் சொல்ல நினைத்தேன். பேசுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : இந்த 'த்ரீ டயர்' சிஸ்டத்தை எடுத்துவிட்டு, ரிசர்வ் வங்கியிலிருந்து டிஸ்ட்ரிக்ட் வங்கி வாங்கி நேரடியாகவே சொஸைட்டிக்கு கொடுக்கக்கூடிய நிலை இருக்க வேண்டும். மாநிலத்தில் 14 மத்திய வங்கிகள் இருக்கின்றன. இந்த வங்கிகள் நேரடியாக ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கும்படி சொல்லுங்கள்.

(மாலை 4.30)

மார்ஜின் 1½ சதவிகிதம் கூட்டுறவு சங்கத்திற்கு 1½ சதவிகிதம். ஆக மொத்தம் 3 சதவிகிதம் மார்ஜின். ரிசர்வ் வங்கி கொடுக்கும் 6 சதவிகிதம். ஆகமொத்தம் 9 சதவிகிதம் இருக்கிறது. ரிசர்வ் வங்கியை இன்னும் குறைக்கச் சொல்ல வேண்டும். முன்னாலே வேறு கடன்களுக்குக் கொடுப்பதைக் காட்டிலும், விவசாயக் கடன் என்றால் 2 சதவிகிதம் மார்ஜின் இருக்கும். வேறுவிதமான காரியங்களுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் விவசாயக் கடன் என்றாலே முன்னாலே ரிசர்வ் வங்கியிலே 2 சதவிகிதம் வித்தியாசம் குறைவாக இருக்கும். அப்படி இந்தக் கடனுக்கு முன்னாலேயே 2 சதவிகிதம் குறைத்துக் கொடுத்தார்கள். அப்போது கடன் கொடுக்கும் போது வட்டியே 3 அல்லது 4 சதவிகிதம்தான். ஆகையால், இந்த வித்தியாசத்தைக் குறைக்கும்படி ரிசர்வ் வங்கியைக் கேட்க வேண்டும். அதைபோல், ரிசர்வ் வங்கியிலே இருந்து வாங்குகின்றதை மாவட்ட பாங்குகள் மூலமோ அல்லது கூட்டுறவு சங்கங்கள் மூலமோ கொடுத்தால் நல்லது. அதாவது 3 சதவிகிதம் மார்ஜின் இருந்தாலே போதும். அப்படிக் கொடுத்தாலே லாபம் வரும்.

ஒரு கூட்டுறவு சங்கம் 5 லட்சம் ரூபாய் லேவாதேவி பண்ணுகிறது என்று வைத்துக்கொண்டால், 3 சதவிகிதம் மார்ஜின் என்றாலும், அதற்கு ஆண்டு ஒன்றுக்கு 15,000 ரூபாய் லாபம் கிடைக்கும். அந்த லாபம் அந்தக் கிராமத்திலே உள்ளவர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. இப்படி நடந்தால் 5 வருஷங்களில் அந்த வங்கி நல்ல நிலைமையை அடையக்கூடிய வசதிகள்

இருக்கின்றது. ஆகவே, இந்த வட்டியை 9 சதவிகிதம், 12 சதவிகிதம் என்றும், அதற்கு மேல் அபராத வட்டி 3 சதவிகிதம் என்றெல்லாம் சேர்த்துப் போடுவதை விட்டுவிட வேண்டும். இப்படிச் செய்வதால்தான், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் 2 லட்சம், 3 லட்சம் என்று கடன் பாக்கி என்ற நிலை ஏற்பட்டு கடைசியிலே மூங்கிப் போகக்கூடிய நிலைமைக்கு போகிறது. ஆகவே, கடன் வட்டியைக் குறைத்து 9 சதவிகிதம் என்று விவசாயக் கடனாகக் கொடுத்தால், அதாவது 3 சதவிகிதம் மார்ஜின் வைத்தால், ஒவ்வொரு சங்கத்திற்கும் குறைந்தது 15,000 முதல் 20,000 வரை லாபம் வரும். குறைந்தது 15,000 என்று ஆண்டுக்கு வைத்துக்கொண்டாலும், 5 ஆண்டுகளில் அது 75,000 ரூபாய் அல்லது 1 லட்சம் அப்பகுதி விவசாயிகளுக்கு லாபத்திலே வந்து நிற்கும். அதனால், இனிமேலாவது நான் சொல்வது, இந்த விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கூட்டுறவு கடனை, அது பயிர்க் கடனாக இருந்தாலும், அல்லது மறுபடி மத்திய கால கடனாகவோ இருந்தாலும், வட்டியைப் பொறுத்த மட்டில் குறைக்க வேண்டும் என்பது ஒன்று.

இரண்டாவது, மத்திய கால கடன் என்று சொல்லிவிட்டு, அதற்கும் வட்டியைக் கூட்டிக்கொண்டு போகிறீர்கள். அப்படி அதற்கும் வட்டியை உயர்த்தக்கூடாது.

நிலவள வங்கியிலே நீண்ட காலக் கடன் 20, 30, 40 ஆண்டுகள் தவணை என்று கொடுக்கப்பட வேண்டும். அதேபோல் தொழிற்சாலைகளுக்கும் கடன் கொடுக்கப்படுகின்றது. தொழிற்சாலைகள் கடன் என்றால், அங்கே கட்டிடம் கட்டப்பட்டு, பொருட்கள் உற்பத்தியாகி, அந்தப் பொருள்கள் விற்க ஆரம்பித்து, வருமானம் வந்தபிறகு கட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால், விவசாயக் கிணறு கடன் என்றால், முதலிலே கிணற்றை வெட்ட வேண்டும், பின்னர் கிணற்றுக்கு மின் இணைப்புக்கு மனு போடவேண்டும், அவர்கள் கனெக்ஷன் கொடுக்கும்வரை காத்திருக்க வேண்டும், அதற்கான மோட்டாரை வாங்கி வைக்க வேண்டும். கிணறு கட்டப்படாமல் அரை குறையாக இருக்கிறது. அதற்குள் விவசாயிகள் இடத்தில் மட்டும் கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டால், அவர்களால் எப்படிக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியும்? மகசூல் கிடையாது; அதனால் வருமானம் கிடையாது. ஆனால், அவர்கள் வந்து கேட்கும்போது, இல்லை என்று சொன்னால், உடனே மோட்டாரைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள், இல்லாவிட்டால் மோட்டாரைத் தூக்கிக் கொண்டு போவதோடு கிணற்றையும் ஜப்தி செய்கிறார்கள். விவசாயிகள் கடன் வாங்குகிறார்கள். பலன் கிடைக்காமல் எப்படி அவர்களால் கடனைத் திருப்பிக் கட்ட முடியும்? உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தில், மதுராந்தகம் ஏரியாவில் 300,

[திரு. சோ. அழகர்சாமி] [1979 ஏப்ரல் 28

400 பேர்கள் கிணறு வெட்டுவதற்காக, மோட்டார் வாங்குவதற்காக லோன் வாங்கி, மோட்டாருக்கு மின் இணைப்பு கிடைக்கவில்லை. காரணம் அப்போது மின்சாரப் பற்றாக்குறை. அப்படியிருக்கும்போது அவர்கள் கடன் தவணை கட்டவில்லை என்று அவர்களுடைய பம்பு செட்டுகளை தூக்கிக் கொண்டு போனார்கள். பின்னால், அரசாங்கத்தில் சொல்லி கொஞ்சம் தள்ளி வைத்தார்கள். ஆகவே, ஒரு கடனைக் கொடுத்தால், அது பலனளிக்க ஆரம்பித்தப் பிறகு, அதற்காக வசூலை ஆரம்பிக்க வேண்டும். ஆனால், சிறு தொழில்களுக்கு, பெரும் தொழில்களுக்கு கடன் கொடுக்கும்போது, அந்தத் தொழில்களிலே, கட்டிடங்கள் கட்டி, உற்பத்தி ஆரம்பித்து, பொருள் விற்பனை யான பின்பு கடனை வசூலிக்க ஆரம்பிக்கிறார்கள். ஆனால், விவசாயிகளுக்கு மட்டும் ஏன் அப்படியில்லை? ஆகவே, நீண்ட கால கடன் என்று சொன்னால், அப்படி வசூலிக்க ஆரம்பிக்க வேண்டும். எங்கள் பக்கத்தில் அதாவது முகவை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் ஒரு கிணறு வெட்டி, பம்பு செட்டு வைப்பதற்கு 20,000 ரூபாய் ஆகிறது. அதுவே தர்மபுரி, சேலம், கோவை மாவட்டங்களில் வைப்பதானால், ஒரு லட்சம்கூட ஆகிறது. இப்படிப்பட்ட கடனை ஏழு ஆண்டுகளில் திருப்பிக் கட்ட வேண்டு மென்று சொன்னால், எப்படி அவர்களால் கட்ட முடியும்? 7 வருஷங்களில் மொத்த மகசூல், கிராஸ் இன்கமே அந்த அளவுக்கு வராது. வட்டியும் முதலும் சேர்த்து வருஷா வருஷம் 6000 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னால் எப்படிக் கட்ட முடியும்? 20 வருஷம் என்று முன்பெல்லாம் நீண்ட காலக் கடனைத் திருப்பிக் கொடுக்கும் முறை இருந்தது. முன் காலத்தில் இரண்டாயிரம் ரூபாய் வாங்கியதற்கு வருஷத்திற்கு 180 ரூபாய் தான் கட்ட வேண்டியிருந்தது. இப்போது ஏழு வருஷத்தில் கட்ட வேண்டு மென்று சொன்னால் 500 அல்லது 600 ரூபாய் கட்ட வேண்டியிருக்கும். நிலவள வங்கிகள் மூலம் நீண்ட காலக் கடன்கள் கொடுக்கும்போது குறைந்த பட்சம் 30 வருஷத் தவணை கொடுக்க வேண்டும். அதற்குக் குறைவாக இருக்கக்கூடாது. நிலத்தை அபிவிருத்தி செய்ய, கிணறு வெட்ட, மோட்டார் வாங்கி வைக்க, தொழு கட்ட போன்றவற்றுக்கு நீண்ட காலக் கடன்கள் கொடுத்தால் 30 வருஷத் தவணை கண்டிப்பாக வேண்டும். முதலமைச்சரே கூடச் சொல்லியிருக்கிறார்கள், அமெரிக்காவிலே 30 வருஷத் தவணையில் கடன் கொடுக்கிறார்கள் என்று.

மாநில வங்கியில் லாபம் அதிகமாக இருக்கிறது. மாவட்ட வங்கியிலும் லாபம் அதிகம்தான்; வராத கடன்களை எல்லாம் தள்ளிவிடலாம். ரிசர்வ் நிதி என்று ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திற்கு சுமார் 25,000 ரூபாய் அளவுக்கு இருக்கிறது. ரிசர்வ் நிதி எதற்காக இருக்கிறது? என்றைக்காவது ஆபத்து வந்தால் பாதுகாப்பதற்காகத்தான் இருக்கிறது. இப்போது ஆபத்து ஏற்

பட்டிருக்கிறது. புயல், வெள்ளம், வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, ரிசர்வ் நிதியிலிருந்து சிறு விவசாயிகள் தர வேண்டிய பாக்கிக்குச் சரி செய்து கொள்ளலாம்.

பெரிய சட்டம் வர இருக்கிறது. அதற்கு முன்னால் நாமினேட் பண்ணுகிற டைரக்டர்களை விட்டுவிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபையை உடனடியாக நியமிக்க வேண்டும். ஸ்பெஷல் ஆபீசர் போட்டால் ஸ்தாபனமே இருக்காது. எதிர்காலத்தில் நடத்தவே முடியாத நிலை ஏற்படும். நான் சொன்னவற்றையெல்லாம் அமைச்சர் அவர்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு தேவையானவற்றைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நம்முடைய ஜன நாயக அமைப்பில் கிராமங்களில் மறுமலர்ச்சிக்கு முக்கிய காரணமாக உள்ள துறை கூட்டுறவுத் துறை. நம்முடைய இந்திய நாடு விவசாய நாடு. இந்திய மக்களில் 80 சதவிகிதம் மக்கள் விவசாயிகள். அப்படிப்பட்ட விவசாயத் துறையிலே பசுமைப் புரட்சி ஏற்பட முக்கிய காரணம் கூட்டுறவுத் துறை தான். கூட்டுறவுத் துறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளோ அல்லது கிராமத்தைச் சார்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள் பிரதிநிதிகளோ அங்கம் வகிக்க முடியாத நிலை கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழகத்தில் தொடர்ந்து இருந்து வருகிறது. 1976-ல் நெருக்கடி காலத்தில் கூட்டுறவுத் துறை கலைக்கப்பட்டு கடந்த மூன்று ஆண்டு காலமாக அவற்றைத் தனி அதிகாரிகள் நிர்வகித்து வருகிறார்கள். தனி அதிகாரிகள் நிர்வாகத்தில் பொதுமக்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்து அதன் மூலம் அந்தத்துறை செம்மையாகச் செயல்படக்கூடிய நிலைமை இல்லாமல் தனியதிகாரிகள் தங்களுடைய தனிப்பட்ட அதிகாரத் துறையாகக் கருதக் கூடிய நிலையில் கூட்டுறவுத் துறையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பல பேருடைய கூட்டுப் பொறுப்பில் இயங்கக்கூடிய கூட்டுறவுத் துறையானது இன்றையதினம் தனி அதிகாரிகளுடைய எதேச்சதிகாரத் துறையாக செயல் பட்டு வருகிறது. இம்மாதிரி தேர்தலே இல்லாத நிலையில் ஊராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் தனி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கு வதற்காக அட்வைசரி கமிட்டி, மக்கள் குழு நியமிக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போன்று கூட்டுறவுத் துறையில் தனி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்க, கூட்டுறவுத் துறை ஒழுங்கான முறையிலே, ஊழலற்ற முறையிலே, விவசாயிகள் தங்களுக்குத் தேவையான நியாயமான சலுகைகளையும், உரிமைகளையும் பெறக்கூடிய வகையில் இக்கும் ஆலோசனைக் குழுக்கள்

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1979 ஏப்ரல் 28

(மாலை 4-40)

அமைக்கப்பட வேண்டும். தனி அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்கு—தேர்தலை எவ்வளவு விரைவாக நடத்துகிறீர்களோ அதற்கு முன்பாக—மக்கள் குழுக்கள் என்ற முறையிலே அட்வைசரி கமிட்டிகளை நியமிக்க அரசாங்கம் முன்வரவேண்டும். அப்படி நியமித்தால்தான் தனி அதிகாரிகளின் வரம்பு மீறிய போக்கைக் கட்டுப்படுத்த அவர்கள் சீரான வகையில் செயல்பட ஏதுவாக இருக்கும்.

சேலத்திலே இருக்கக்கூடிய சிறப்பு அங்காடியில், சூப்பர் மார்க்கட்டில், பெரிய அளவிலே நட்டம் ஏற்பட்டு நட்டத்திலே அது இயங்கிக்கொண்டிருக்கிறது. காரணம் இன்றைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாததால் கொள்முதல் செய்யப்படுகிற பொருட்கள், எந்த எந்த சீஸன்களில் எந்த எந்த அளவிற்கு அதிகமாக கொள்முதல் செய்து வைத்து ஆண்டு முழுவதும் ஒழுங்காகவும் சீராகவும் ஒரே குறிப்பிட்ட விலையிலே விற்கவேண்டுமென்ற கருத்தை அவர்கள் அறியாத காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை, இன்றைக்கு மட்டமான பொருள்களை கொள்முதல் செய்வதன் காரணமாக சிறப்பு அங்காடிகளிலே மக்கள் வாங்காமல் வெளியிலே வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலை, 2, 3 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதற்கு உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும். தேர்தலை நடத்துவதற்கு முன்பு கூட்டுறவுத் துறையிலே மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை ஆலோசனைக் குழுவிலே உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும்.

சேலம் நகர கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் ஒன்று இருந்து வருகிறது. அந்தச் சங்கத்திலே உள்ள தனி அதிகாரி ஒருவர் 4 ஆண்டுக்காலமாக தொடர்ந்து அங்கே இருந்து வருகிறார். ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியைவிட தனக்குத்தான் அதிகமான செல்வாக்கும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர் நினைத்துக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அவர் மதிப்பதுகூட இல்லை, தனக்கு வேண்டியவர்களுக்குப் பல காரியங்களைச் செய்து அங்கே ஊழல்கள் நடைபெறுவதற்கும் தாராளமாக பாலில் தண்ணீரைக் கலப்பதற்கும் காரணமாக இருந்து வருகிறார். பாலானது சீல் வைக்கப்பட்ட கேன்களில்தான் எடுத்துச் செல்லப்பட வேண்டும். அப்படியில்லாமல் சீல் வைக்கப்படாத கேன்களில் எடுத்துக்கொண்டுபோய் கையை விட்டு எடுத்து வழங்கப்படுகிற நிலைமை இருக்கிறது. இதற்கு எல்லாம் காரணம் அந்தத் தனி அதிகாரியினுடைய எதேச்சதிகாரமான செயல்தான். அதைக் கட்டுப்படுத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிதிகளால் முடியவில்லை என்பது மட்டுமல்ல; அதைப்பற்றி எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் அந்தத் துறையிலே உள்ள அதிகாரிகளோ அல்லது அமைச்சர்களோ சட்டை செய்வதில்லை. இந்த நிலையில் கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள அதிகாரிகள் சுயநல நோக்கத்தோடும் வேண்டியவர் களுக்கு உதவுவதற்காகவும் பதவியைப் பயன்படுத்துகின்ற நிலைமையைத் தட்டிக்கேட்க ஆள் இல்லை என்ற நிலைமையில் நியாயமாகக் கிடைக்க வேண்டிய உதவிகள்கூட காலாகாலத்தில் கிடைக்கவில்லை; பாகுபாடுகள் இருந்து வருகிறது. கூட்டுறவுத் துறையிலே உள்ள ஊழல்களைக் களை வதற்கும் கூட்டுறவுத் துறை செம்மையாக நடைபெறுவதற்கும் உடனடியாக அரசு தேர்தலை நடத்த முன்வரவேண்டும். ஆனால் அதற்கு முன்பு அதிகாரிகளின் வரம்பு மீறிய போக்கைக் கட்டுப்படுத்துகின்ற முறையிலே மக்கள் ஆலோசனைக் குழுக்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தமான காம்ப்ரஹென்ஸிவ் பில்லைக் கொண்டுவந்து அது பொறுக்குக் கமிட்டிக்கு விடப்பட்டு இருக்கிறது. அதோடுகூட ஒரு மூன்று மசோதாக்களின் பேரிலே இப்போது இந்த விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. அதிலே ஸ்பெஷல் ஆபீஸர்கள் நியமனம் சம்பந்தப்பட்டது ஒன்று, இரண்டாவது லேண்ட் டெவலப்மெண்ட் பேங்குகளினுடைய செயல்பாடுகளை விஸ்தரிப்பது என்ற முறையிலே ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக பல்வேறு காரியங்களை நாம் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். கிராமப்புறங்களிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் விவசாய அபிவிருத்திக்காக பயிர் கடன்கள் கொடுக்கின்றன. இதுவல்லாமல், லேண்ட் டெவலப்மெண்ட் பேங்க் நில அபிவிருத்திக்காகக் கடன்களை வழங்கிக்கொண்டிருக்கின்றது. இப்படிக் கடன்கள் கொடுத்து வருகின்றபொழுது லேண்ட் டெவலெப்மெண்ட் பேங்க் மூலம் கொடுப்பதை அந்தந்த சொசைட்டிகளின் மூலம் கொடுக்க முடியுமா என்பதைப்பற்றிக் கூட நாம் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லேண்ட் டெவலெப்மெண்ட் என்று சொல்லும்பொழுது இப்பொழுது நிலத்தைச் சீர்திருத்தம் செய்வது என்பது பத்தில் ஒன்றாகக் குறைந்து விட்டது. ஒரு சொசைட்டி தன்னுடைய லேவா தேவியிலே பத்தில் ஒரு பங்குதான் நிலங்களைச் சீர்திருத்தம் செய்வதற்குக் கடன் கொடுக்க முடியும். பாக்கி கடன்கள், கிணறுகள் வெட்டுவதற்கும், பம்பு செட்டுகள் அமைப்பதற்கும், டிராக்டர்கள் வாங்குவதற்கும் கொடுக்கப்படும் நிலைமை இருக்கிறது. ஆகவே, நிலச் சீர்திருத்தம் என்பது மிகக் குறைவாக

இருந்தாலும், இன்னும் பல்வேறு இடங்களில் நிலத்தைச் சீர்திருத்தாமல் இருப்பதால் அப்படிப்பட்ட தரிசு நிலங்களையெல்லாம் சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டிய நிலங்கள் அதிகமாக இருப்பதாலே இந்த நிலங்களைச் சீர்திருத்தம் செய்வது என்பதற்குக் கொஞ்சம் அதிகமான தொகையை ஒதுக்கினால் நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அது அல்லாமல், இப்பொழுது அனிமல் ஹஸ்பெண்டரி, செரிகல்சர், ஃபிசிகல்சர், பர்சேஸ் ஆஃப் டூல்ஸ் அன்ட் இம்ப்ளிமெண்ட்ஸ் அண்ட் மெஷினரி, இன்னும் இம்மாதிரி பல்வேறு காரியங்களுக்காக இந்த டெவலப்மெண்ட் பேங்க் கடன் கொடுக்க முடியுமென்று நாம் அதனுடைய அதிகார வரம்பை அதிகப்படுத்துகிறோம். அப்படிச் செய்யும்பொழுது இதனால் எவ்வளவு பேருக்கு பெனிஃபிட் கிடைக்கும் என்று பார்க்க வேண்டும். லேண்ட் டெவலப்மெண்ட் பேங்க் இந்தக் காரியங்களுக்காகச் செய்யும்பொழுது அந்த சொசைட்டிகள் மூலம் கொடுத்தால் வசூல் செய்வதற்கு சௌகரியமாக இருக்கும். ஒரு கிராமத்திலே ஆயிரம் ரூபாயை இரண்டு பேர்களுக்குக் கொடுத்துவிட்டு பெரிய மாறுதல் செய்துவிட்டோம் என்று நினைப்பது தவறு. ஆகவே, அந்த மாதிரிக் கடன்களை அந்தந்த வில்லேஜ் சொசைட்டிகளின் மூலம் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கிராமங்களில் உள்ள சிறு தொழில் செய்பவர்களுக்கெல்லாம் கூட கடன் கொடுப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். அதையும் சொசைட்டி மூலம் செய்யலாம். லேண்ட் டெவலப்மெண்ட் பில்லுக்குள்ளே அது வரவில்லை என்றாலும் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இந்த டெவலப்மெண்ட் என்று சொல்லும் பொழுது, சொத்து வைத்திருப்பவர்கள்தான் அதிலே அபிவிருத்தி செய்ய முடியும், சொத்து வைத்திருப்பவர்கள்தான் சாகுபடி செய்ய முடியும், சொத்து இல்லாதவர்கள் சாகுபடி செய்ய முடியாது. ஆனால் குத்தகைதாரர்கள் சாகுபடி செய்கிறார்கள், கடன் கொடுக்கிறார்கள். ஆனால் சிறு தொழில்கள் செய்யும் அந்தத் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் எதையும் இதுவரையிலே செய்யவில்லை. அவர்களுக்குக் கிராம சொசைட்டிகளிலேயிருந்து, தச்சு, கொல்லு வேலை செய்யும் தொழிலாளர்கள், சலவைத் தொழில் செய்பவர்கள் ஆகிய இம்மாதிரி பல்வேறு காரியங்களைச் செய்பவர்களுக்கும் கடன் உதவி செய்ய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு எத்தனையோ வகையான, சிரமங்கள், சங்கடங்கள் ஏற்படுகின்றபொழுது, அவர்களுக்கும் ஒரு குறைந்த தொகையைக் கொடுக்க—அவர்களுடைய ரிபேயிங் கெப்பா

சிட்டியை வைத்து, எவ்வளவு திருப்பிச் செலுத்த முடியுமோ அந்தச் சக்தியை அடிப்படையாக வைத்து அவர்களுக்குக் கடன் வழங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதை முன்பே பேசியிருக்கிறோம், எமெர்ஜென்சி காலத்தில் எவ்வளவு அதிகப்படியாக கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களைச் சேர்க்க முடியுமோ அவ்வளவு பேர்களைச் சேர்த்தாகிவிட்டது. அப்பொழுது என்ன சொல்லிச் சேர்த்தோம் என்றால், உங்களுக்கு வேலையில்லாத காலத்திலே நீங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு 100 ரூபாய், 50 ரூபாய் என்று கொடுக்கிறோம், உணவு தானியங்கள், துணி மணிகள் வாங்கித் தருகிறோம், இம்மாதிரி கொடுப்பதற்காகத்தான் மெம்பர்ஷிப் சேர்க்கிறோம் என்று சொல்லி பல சொசைட்டிகளில் சேர்ந்தாகிவிட்டது. அப்படிச் சேர்த்தாலும் அவர்களுக்குக் கடன் கொடுப்பதை நிறுத்தியாகிவிட்டது. ரிசர்வ் பேங்க் டெவலப்மெண்டுக்குத்தான் கொடுப்போம், இதற்குக் கடன் கொடுக்க மாட்டோம் என்று சொல்வார்கள். ஆகவே, ரிசர்வ் பேங்க் பணத்தை நாம் கேட்க வேண்டாம். அந்தந்த ஊர்களிலே இருப்பவர்களிடம் டெபாசிட் ஏதாவது அதற்கு அந்தந்த சொசைட்டிகளில் வாங்கி அதை வைத்துக் கொண்டு கடன் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய முடியும். அம்மாதிரி செய்தால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு நாம் பல்வேறு வகையான உதவிகளைச் செய்ய முடியும். அந்த உதவியைச் செய்ய அரசு முன்வர வேண்டும். இதில் எந்தவிதமான பெரிய சிரமமும் இருக்காது. அரசு இதற்காகச் சிரமப்பட வேண்டியதில்லை. ரிசர்வ் பேங்கிடம் இதற்காகக் கடன் வாங்க வேண்டிய அவசியமும் இல்லை. உள்ளூர் சொசைட்டிகள் உள்ளூரிலே இருக்கின்ற வசதி படைத்த நான்கு பேர்களிடம், பத்தாயிரம் ரூபாயை டெபாசிட்டாக வாங்கி அந்தத் தொகையை, 100 ரூபாய், 500 ரூபாய், 1,000 ரூபாய் என்று இம்மாதிரி கொடுக்கலாம். அவரவர்களுடைய தொழிலைச் செய்வதற்கு இது உதவியாக இருக்கும் என்ற காரணத்தாலே, அரசு இதைச் செய்ய வேண்டும். ஆகவே, அமைச்சரவர்கள் அதிலே கவனம் செலுத்த வேண்டும். கிராமப் புறங்களிலே இருக்கிற தொழில் நடத்துபவர்களுக்கு இதனால் நாம் உதவக் கூடிய நிலை ஏற்படும் என்ற காரணத்தினால், இம்மாதிரி திட்டங்களை நீங்கள் அமுலாக்க முயல வேண்டும்.

(மாலை 4-50)

விவசாயிகளுக்குக் கடன் கொடுத்திருக்கிறோம். பல்வேறு காரணங்களாலே, 'டிரவுட், வெள்ளம், புயல் இவற்றால் பாதிக்கப்பட்டு, அதனால் வாங்கிய கடனை திருப்பித் தர இயலாத நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு எப்படி நிவாரணம் அளிக்க வேண்டுமென்று

யோசிக்க வேண்டும். திரும்பி வராத தொகையாக இலாபத்திலேயிருந்து ஒரு தொகையை ஒதுக்கி இருக்கிறோம். ஒட்டுமொத்தமாக எடுத்தால், ரூ. 8 கோடி, ரூ. 10 கோடி மிச்சம் ரிசர்விலே இருக்கும் என்று கருதுகிறேன். வராத கடன்களை ஈடுகட்ட இந்தத் தொகையைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு என ஒரு தொகை ஒதுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, 'இன்டரஸ்டை'-ப்பற்றி மதிப்பிற்குரிய அழகர்சாமி அவர்கள் வெகு நேரம் பேசினார்கள். கூட்டுறவு துறையிலே பல்வேறு வகையிலே வேலை செய்து அதிகப்படியான லாபம் பெற்றாலும் கூட, கீழே உள்ளவர்களுக்கு, சங்கடத்தில் உள்ளவர்களுக்கு, இந்த மாதிரி ரிசர்வ் தொகையினைப் பயன்படுத்த வேண்டும். வட்டி விகிதம் அதிகமாகப் போய் விட்டது. அபராத வட்டி—கந்து வட்டி—என்று சொல்வார்கள் கிராமங்களிலே. இந்த அதிக வட்டி, யார் தனியார் துறையிலே வாங்குகிறார்களோ, அந்த அளவு இதிலேயும் வந்துவிடுகிறது. குறைந்த அளவு தொழிலை செய்யும் விவசாயிக்குக் குறைந்த வட்டி இருக்கும் விதத்திலே செய்ய வேண்டும். இப்பொழுது 'த்ரீ டயர்' இருக்கிறது. ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்க் 2 சதவிகிதம், கீழே இருக்கும் சென்ட்ரல் பாங்க் 2 சதவிகிதம், அதற்கும் கீழே இருக்கும் கூட்டுறவு சொசைட்டி 2 சதவிகிதம்—இதனால், 6 சதவிகிதம் வட்டி வைத்தால், வட்டி விகிதம் அதிகமாகப் போகிறது என்பதால், அந்த 'சிஸ்டத்தை' மாற்ற வேண்டுமென்று உறுப்பினர்கள் பேசினார்கள். ஆகவே, ரிசர்வ் பாங்கிலே நேரடியாக வைத்து, இரண்டு அளவிலே, 'டூ டையர்' அளவிலே, மாறுதல் செய்ய முடியுமா என்பதை அரசு யோசிக்க வேண்டும். இவ்வாறு பல்வேறு மாற்றங்கள் செய்வதன் மூலம், விவசாயிகளுக்குக் குறைந்த வட்டி கிடைக்கும் நிலையை நாம் ஏற்படுத்த முடியும். இல்லாவிட்டால், வட்டியையும் கட்ட முடியாத, முதலையும் கட்ட முடியாத நிலைமை தான் விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. கீழே இருக்கிற சாதாரண சொத்தில்லாத மக்களுக்கும் கடன் வசதி கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரையில் கூட்டுறவு துறை சம்பந்தமான 3 மசோதாக்களின் மீது மதிப்பிற்குரிய 5 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களை எல்லாம் நல்கியிருக்கிறார்கள். 3 மசோதாக்களும் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் நல்ல ஒரு

திருப்பத்தை உருவாக்கும் என்ற நல்ல நம்பிக்கையில் உங்களது மேலான ஆதரவை வேண்டி இன்றையதினம் இந்த 3 நடவடிக்கைகளையும் இந்த மாமன்றத்தினுடைய பரிசிலனைக்குத் தமிழக அரசு வைத்திருக்கிறது.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களிலே இன்றைக்கு இருக்கிற தனி அலுவலர்களை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்க வேண்டும் என்ற வகையிலும், இரண்டாவதாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டத்தில் வைப்பு நிதி காப்பீட்டு திட்ட முறையை ஏற்படுத்துவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கும், மூன்றாவதாக தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டிற்கு கூட்டுறவு நில வள வங்கிச் சட்டத்தினுடைய வாயிலாக நில வள வங்கியினுடைய நிதி உதவி செய்யும் பொறுப்புகளை விரிவுபடுத்துவதற்கான நல்ல நோக்கத்திலே இந்த மூன்று மசோதாக்களும் இந்த மன்றத்தினுடைய பரிசிலனைக்கு ஒப்புதலுக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க தனி அலுவலர்கள் நியமனம் பற்றி பல நண்பர்கள் எடுத்துப் பேசுகிற நோக்கிலே கடந்த மூன்றாண்டுகளாக நடைபெற்று வருகிற சில விவரங்களையெல்லாம் அரசின் மேலான கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் சென்ற ஆண்டு எடுத்துச் சொன்னது போல தனி அலுவலர்கள் நியமனம் என்பது நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிற கட்டாயமான நிர்பந்தமே தவிர அரசுக்கு அந்த முறையை விரும்பி தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற உணர்வில் அந்த நிலைமை இன்றைக்கு அங்கீகரிக்கப்படவில்லை. முன்பு ஆட்சியிலே இந்தச் சட்டங்களில் சில திருத்தங்களைச் செய்ததால் கூட்டுறவுச் சங்கங்கள் திரிபு பெற்று சிதைவு அடைந்தன. அதை சீரமைப்படுத்துதல் என்ற முறையிலே இன்றையதினம் இப்படிப்பட்ட திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன.

தனி அலுவலர்கள் பொறுப்பில் இருப்பதால் அதிகார வர்க்கத்தின் கீழ் ஆட்சியை பலப்படுத்தும் முயற்சி என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய மேலான கவனத்திற்கு சில விவரங்களைக் கொண்டு வருவது என்னுடைய தார்மீக கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் தனி அலுவலர்கள் நிர்வாகத்தில், அவர்களுடைய பொறுப்பில் இருந்தாலும் கூட ஒரு காலம் வரையில் இந்த அமைப்பு நீடிக்கிற வகையில் அந்தப் பொறுப்பிலே இருப்பவர்கள் தவறு செய்யாமல், குறைகள் செய்யாமல், முறைகேடுகள் செய்யாமல் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு கட்டுப்பாடுகளை வகுத்து

தமிழக அரசு விழிப்போடு கண்காணித்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்வது என்னுடைய தலையாய கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 7 ஆண்டுக் காலமாக கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் பல முறைகேடுகள், பல தவறுகள் நடைபெற்றதை நீங்கள் எல்லாம் மிக தெளிவாகவே உணர்ந்திருக்கிறீர்கள். குறிப்பாக இன்றையதினம் கூட்டுறவுத் துறை என்று சொன்னால் அதிலே சில குறிப்பிடத்தக்க குறைபாடுகளைச் சொல்வார்கள். ஒன்று ஊழியர்கள் தகுதியின்றி நியமனம் செய்யப்படுவது, இரண்டாவது பதவி உயர்வுகள் தகுதியின்றி கொடுக்கப்படுவது என்று சொல்வார்கள்.

அதுபோலவே கடந்த ஏழு ஆண்டுகளில் பதவிகளில் இருப்பவர்கள் கூட்டுறவுத் துறையின் சலுகைகளைத் தவறாகப் பயன்படுத்தினார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதனைப் போலவே கூட்டுறவுச் சங்கங்களுடைய வாகனங்களை பதவியில் இருப்பவர்கள் தவறாகப் பயன்படுத்தினார்கள் என்பதனை நீங்கள் அறிவீர்கள், அதனைப்போலவே தலைவர்களுடைய படங்களைத் திறக்கிறேன் என்று சொல்லி தேவைக்கு மேலாக அனாவசியமாக ஆடம்பரச் செலவுகளைச் செய்ததை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். விழாக்கள் வைத்து வீண் செலவுகள் செய்ததை நீங்கள் அறிவீர்கள், அதனைப் போலவே தலைவர்கள் வருகிறபோது பரிசுகள் வழங்குகிறோம் என்று சொல்லி ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஆடம்பரத்திற்காக செலவு செய்ததை நாம் நன்றாக உணர்வோம். அதனைப் போலவே கூட்டுறவுத் துறையிலும் கட்டடங்கள் கட்டுகிறேன் என்று சொல்லி, அவைகளை அவர்களே எடுத்துக் கொண்டு அந்த கட்டடங்களிலும் பல முறைகேடுகள், குறைபாடுகள் நடைபெற்றதை நாம் நன்றாக உணர்வோம். அதனைப் போலவே கூட்டுறவுச் சங்கங்களில் பொருள்கள் வாங்குகிற முறைகளில் அதிலே பல குறைபாடுகளை, முறைகேடுகளை ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களுக்கான முறைகேடுகளை செய்ததை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அதனைப்போலவே,

(மாலை 5-00)

கூட்டுறவுச் சங்கங்களில் அணிகலன்கள் வாங்குகிறேன் என்று சொல்லி, அதிலே முறைகேடுகள் நடைபெற்றதை நாம் அறிவோம். இவைகளுக்கு எல்லாம் அப்பால் சொல்லிய குறைபாடு, கூட்டுறவுத் துறையின் வாயிலாக, கூட்டுறவுத் துறையின் சார்பாக விளம்பரம் என்ற பெயராலே அன்றையதினம் ஆட்சிக் கட்சியிலே இருந்த நண்பர்கள் லட்சக்கணக்கான ரூபாய் அளவிற்கு முறைகேடுகளைச் செய்து இருக்கிறார்கள்.

1979 ஏப்ரல் 28] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

இப்படி சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 9 குறைபாடுகள், முறைகேடுகள் நடைபெற்று உள்ளன. இன்றைய தினம், அந்தத் தனி அலுவலர்கள் பொறுப்பில் இருக்கிற நேரத்தில், அதில் உள்ள முறைகேடுகளை, குறைகளை களைவதற்கு என்ன செய்து இருக்கிறோம் என்றால், நாங்கள் தெளிவாக, திட்டவட்டமாக, நான் மேற்சொன்ன அந்த 9 குறைபாடுகளும் தனி அதிகாரிகள் பொறுப்பில் இருக்கும் நிறுவனங்களில் வராத அளவிற்கு நாங்கள் கட்டளைகளை பிறப்பித்து இருக்கிறோம். அதற்கான முறைகளை வகுத்து இருக்கிறோம். அதற்கான செயல் திட்டங்களை வகுத்து இருக்கிறோம். அவ்வப்போது கண்காணித்துக் கொண்டு இருக்கிறோம். மாதம் தோறும் அது எப்படி நடந்து கொண்டு இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, குற்றம் செய்யும் அந்தப் பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அதைப்போலவே, கடந்த காலத்தில் நடைபெற்ற பல முறைகேடுகளை, குறைகளைக் களைவதற்கு பாரதி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது உங்களுக்குத் தெரியும். ஏறத்தாழ 10 கோடி ரூபாய் அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அந்த முறைகேடுகளைச் செய்தவர்கள் மீது இரண்டு வகைகளில் நடவடிக்கைகளை எடுக்கலாம். ஒன்று, சர்சார்ஜ் நடவடிக்கை எடுக்கலாம். அதாவது, சிவில் ப்ரொசீடிங்ஸ். இரண்டாவது, கிரிமினல் ப்ரொசீடிங்ஸ். குற்றவியல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். இந்த இரண்டு வகைகளிலும் இந்த 23 மாத காலத்திற்குள்ளாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவரின் விழுமிய தலைமையில் உள்ள இந்த ஆட்சி தொடர்ந்து பரிசீலனை செய்து, அந்த இரண்டு முறைகளிலும் நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

சர்சார்ஜ் ப்ரொசீடிங்க்ஸ், சிவில் ப்ரொசீடிங்க்ஸ் சம்பந்தப்பட்ட யார் யார் மீது அந்த முறைகேடுகள் அவர்கள் பதவியில் இருந்த காலத்தில் நடந்து இருக்கின்றன என்பதை அறிந்து அவர்கள் மீது எடுத்து இருக்கிறோம். அதைபோலவே, 57 கிரிமினல் வழக்குகள் தொடர்ந்து இருக்கிறோம். அதில் சில வழக்குகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. சில வழக்குகள் போலீசாரிடத்தில் விசாரணையில் இருக்கின்றன. சில வழக்குகள் அரசு வழக்கறிஞர்கள் பரிசீலனையில் இன்று இருந்து கொண்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட வகையில் தேவைப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. தனி அலுவலர்கள் காலத்தின் கட்டாயத்தின் காரணமாகத் தவிர்க்க முடியாத காரணத்தால் நீட்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும், இன்று இந்த இடைவெளி காலத்தில் எந்தத் தவறும் நடைபெறாது என்கிற அளவிற்கு சில விதிகளை, சில

கட்டுப்பாடுகளை நாங்கள் வகுத்துக் கொண்டு, கண்காணிப்போடு மாண்புமிகு புரட்சித் தலைவரின் தலைமையில் இருக்கும் தமிழக அரசு அந்தக் காரியத்தைச் செய்து வருகிறது.

அடுத்தாற்போல் பல நண்பர்கள் சொன்னார்கள். என் தேர்தல்கள் விரைவாக வைக்கக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் தெளிவாகச் சொல்கிற நேரத்தில் சொன்னார்கள். தேர்தல் எப்போது வைக்கப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். இதற்கு முன்பு 1961 ஆம் ஆண்டில் இருந்த சிறு சிறு திருத்தங்கள் கொண்டு வந்தார்களே தவிர இன்று ஒரு 10 நிமிடங்களுக்கு முன்பு உங்களுடைய ஒப்புதலோடு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி இருக்கும் ஒரு அடங்கல் சட்டம் கூட்டுறவு சம்பந்தமாக இதுவரையில் கொண்டு வந்தது கிடையாது.

1961 ஆம் ஆண்டில் இருந்து இன்றைக்கு 1979 ஆம் ஆண்டு ஏறத்தாழ 18 ஆண்டுகள்—இதில் கூட்டுறவு வளர்ந்து இருக்கிறது. கூட்டுறவின் நடவடிக்கைகள் வளர்ந்து இருக்கின்றன. பல கோடி ரூபாய்களை ஏழை எளியவர்கள் வைப்புகளாக நம்பி போட்டு இருக்கிறார்கள். வரவு செலவு செய்கிறார்கள். நாங்களும் கடன்கள் தருகிறோம். ரிசர்வ் வங்கி போன்ற மத்திய வங்கி போன்றவைகளிலும் கடன்கள் கொடுக்கிறார்கள். இன்று அது நலிந்தவர்களின் கேடயமாக இருந்து கொண்டு இருக்கிறது. வளர்ந்து வரும் அந்தக் கூட்டுறவுக்கு ஏற்ப சட்டங்கள் இருக்கின்றனவா? சட்டங்கள் சமூக நீதியைக் கொடுக்கும் சட்டங்களாக, சட்டங்கள் நலிந்தவர்களின் பாதுகாக்கும் படைக் கலன்களாக இருக்கும் அந்த அளவிற்கு இன்று கூட்டுறவுச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். இதை நான் சொல்லவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968 ஆம் ஆண்டு இதே தமிழகத்தில் அனைத்திந்திய முதலமைச்சர்கள், கூட்டுறவு அமைச்சர்கள் மாநாடு நடந்த பிறகு பொருளாதார மேதை என்று கருதப்படுகிற திருமிகு சந்தானம் அவர்கள் தலைமையில் தமிழகத்தில் இருக்கும் கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் அடிப்படையில், அதைப்போலவே அட்மினிஸ்டிரேட்டிவ் ரீஃபார்ம்ஸ் கமிட்டி என்ற பெயராலே திருமிகு வர்கீஸ் குழுவும் பரிந்துரை செய்திருக்கிறது. அதைப்போல மத்திய சர்க்கார் கூட்டுறவுச் சட்டங்கள் எல்லாம் எந்த முறையில் இருக்க வேண்டும், அவைகளுடைய கோட்பாடுகள் எந்த முறையில் இருக்க வேண்டும் என்கிற ஆலோசனைகளை மாநில சர்க்காருக்கு வழங்கியிருக்கிறது. அவைகளை எல்லாம் வைத்துக் கொண்டுதான் 1979 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் ஆட்சியிலே தமிழ்நாடு அரசு இன்றைக்கு அந்தச சட்டத்தை கொண்டுவந்து, பொறுக்குக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறோம்.

1979 ஏப்ரல் 28] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

இன்றையதினம் பல மாண்புமிகு உறுப்பினர்கள் காலதாமதம் ஏன் என்று கேட்டார்கள். அவசரத்தில் அள்ளித் தெளித்துவிடக் கூடாது என்ற பொறுப்பு உணர்ச்சியின் காரணமாகவும், பழைய தவறு மீண்டும் வரக் கூடாது என்பதாலும் கடந்த 22 மாதங்களாக இதில் யார், யார் சம்பந்தப் பட்டிருக்கிறார்களோ அவர்களிடமெல்லாம் ஆலோசனை கேட்டிருக்கிறோம். 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கூட தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய தலைசிறந்த கூட்டுறவாளர்களை எல்லாம், ஏறத்தாழ 200 பேர்களை அழைத்து, 8 மணி நேரம் கலந்து பேசி, பல பரிந்துரைகளைப் பெற்று, 1979 ஆம் ஆண்டு வரையில் என்னென்ன மாறுதல்களைச் செய்யலாம், அவசரமாகச் செய்யக் கூடாது, இந்தச் சட்டம் முழுமையாக இருக்க வேண்டும், பயன்தரக் கூடியதாக இருக்க வேண்டும், சமூக நீதி தரக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தோடு, விஸ்வாசமான நோக்கத்தோடு சம்பந்தப்பட்ட அனைவரையும் கட்சி வேறுபாடு இல்லாமல், நோக்கங்கள் கருதாமல், கூட்டுறவுத் துறையில் நம்பிக்கை வைத்திருக்கிற அனைவருடைய ஆலோசனைகளையும் ஏற்று, இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

நாங்கள் விரும்பி இருந்தால் இன்றைக்கே கூட அதை இங்கே சட்டமாக ஆக்கியிருக்கலாம். ஆனால் இன்றைக்கு 153 விதிகளைக் கொண்ட அந்த மசோதாவை உங்களுடைய மேலான பரிசீலனைக்கு வைத்திருக்கிறோம், பொறுக்குக் குழுவிற்கு, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறோம். அந்தக் குழுவிலே இந்த மாமன்றத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த 19 மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆளும் கட்சி நண்பர்கள் இருக்கிறார்கள்; மற்றும் இங்கே இருக்கிற எல்லாக் கட்சி உறுப்பினர்களும் அல்லது தலைவர்களும் அந்தக் குழுவில் இருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைகளை, பரிந்துரைகளை, நல்ல எண்ணங்களை ஏற்று, ஒரு முழுமையான சட்டமாக ஆக்கி, அதைக் கொண்டு வந்தால் அது கூட்டுறவு இயக்கத்தில் நல்ல அடித்தளமாக அமையும் என்பதால் பெருமையோடு அந்தக் காரியத்தைச் செய்து, இன்றைக்கு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறோம். அந்தக் குழுவிலே அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் அங்கம் வகிக்கிறார்கள். அந்தக் குழுவின் பரிந்துரைகளை இந்த மாமன்றத்திலே வைத்து, சட்டப்பூர்வமாக ஆக்கிய பிறகு, அந்தத் தேர்தலை நிச்சயமாகக் கொண்டுவர தமிழக அரசு நினைத்திருக்கிறது.

இங்கே பெரிய மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களும் தங்களுடைய மேலான கருத்துக்களை இந்த கண்ணியமிக்க சபைக்கு வைக்கும்போது இடைப்பட்ட காலத்தில் ஒரு ஆலோசனைக் குழுவை அமைக்கக் கூடாதா, என்று

கேட்டார்கள். தனி அதிகாரி ஆட்சி என்பது ஒரு அதிகார வர்க்கத்தின் ஆட்சி ; பொருள் எல்லாம் வீணாகிக் கொண்டிருக்கிறது ; தேர்தல் வருவதற்கு முன்னால் இந்த நிர்வாகம் பாழ்பட்டுவிடுமே என்ற கருத்துக்களைச் சொல்லி, கூட்டுறவுத் துறை வளர வேண்டுமென்ற நோக்கத்தோடு எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஒப்புதலோடு ஒரு கருத்தைத் தெரிவித்துக் கொள்வேன். இடைக்காலத்தில், நீங்கள் விரும்பியதைப்போல, இந்தத் தேர்தல் நடக்கும் வரை இந்தத் தனி அதிகாரிகள் இருக்கிற நிர்வாகத்தில், அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிற வகையில் ஒரு ஆலோசனைக் குழுவை போட தமிழக அரசு இன்றையதினம் முடிவு எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவரின் சார்பாக இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், அந்தக் குழுவிலே யார், யார் இருப்பார்கள், எப்படிப் பட்டவர்கள் இருப்பார்கள், உங்கள் கட்சிக்காரர்கள் மட்டுமே இருப்பார்களா என்ற வினாவைக் கூட நீங்கள் கேட்கலாம். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட்டுறவு இயக்கத்தை ஒரு தேசிய இயக்கமாகக் கருதினார்கள். ஜாதி ஒழிப்பு எப்படி ஒரு தேசிய பிரச்சனையோ, மதுவிலக்கு எப்படி ஒரு தேசிய பிரச்சனையோ, தீண்டாமை எப்படி ஒரு தேசிய பிரச்சனையோ அதைப்போல கூட்டுறவு என்பதும் ஒரு தேசிய பிரச்சனை தான். அதில் இன்னார், இனியார் என்று பார்க்க மாட்டோம். விருப்பு வெறுப்புகளைப் பார்க்க மாட்டோம். வேண்டியவர், வேண்டாதவர் என்று பார்க்க மாட்டோம். ஒரு நல்ல நிர்வாக அமைப்பாக இந்தக் கூட்டுறவுத் துறையை உருவாக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் விரும்பினார்கள். அதைத்தான் அவர்களுடைய இதயக்கனி புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

(மாலை 5-10)

அந்தக் குழுவிலே வெளியார்கள் இடம் பெறுவார்கள் என்பதற்காக சில வழிமுறைகளை இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனதிலே வைத்து இந்தக் கண்ணியமிக்க சபைக்குத் தகவல் கொடுக்கும்படி சொல்லி இருக்கிறார்கள். இந்தக் குழுவிலே ஜாதி, மொழி வெறி அற்ற, சமூகத் தொண்டு புரிவதில் அக்கறை உள்ள கண்ணியமான பெரியவர்களை, படித்த பெரியவர்களை, இளைஞர்களைப் போடுவதாக இருக்கிறோம். இப்படிப்பட்டவர்களைக் கொண்ட குழுவாக அது இருக்கும். அந்தக் குழுவிலே போடப்படுகின்ற உறுப்பினர்கள் ஆட்சிக் கட்சியிலே இருப்பவர்களாக

1979 ஏப்ரல் 28] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

மட்டும் இருக்க மாட்டார்கள். கூட்டுறவுத் துறையிலே நம்பிக்கை வைத்திருக்கக்கூடியவர்களும், கீழான மனப்பான்மை இல்லாமல் இருப்பவர்களும், ஜாதி வெறி அற்றவர்களாக இருப்பவர்களும், ஜாதி வெறி உணர்ச்சியைத் தூண்டி விடாதவர்களாக இருப்பவர்களும், பேதங்களை வளர்க்காதவர்களாக இருப்பவர்களும் இப்படிப்பட்ட அருங்குணம் படைத்தவர்கள்தான் இருப்பார்கள். பெரியவர்கள், இளைஞர்கள் அவர்கள் எந்தக் கட்சியிலே அல்லது எந்த முகாமிலே இருந்தாலும் அந்த அணிவகுப்பிலே நிச்சயமாக இடம் பெறுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த நேரத்தில் பணிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதனைப்போலவே நிலவள வங்கியைப் பற்றி எல்லாம் பல தடவைகள் எடுத்துச் சொன்னார்கள். நான் உங்களது மேலான கவனத்திற்கு வைத்திருக்கின்ற இந்த மசோதாவின் சட்டத் திருத்தத்தினால் கூட்டுறவு நிலவள வங்கியைப் பொறுத்தவரையில் பல நல்ல விளைவுகள் உருவாக இருக்கின்றன. இதுவரையிலும் நிலவள வங்கியினுடைய வாயிலாக நிலவள வங்கிக்கு மட்டுமே அளித்து வரப்பட்ட கடன் வசதிகள் வேறு பல காரியங்களுக்கு அளிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது இந்த மசோதாவில். இது வரையிலும் நிலவள வங்கிக்கு மட்டுமே, அதிலேயும் வேளாண்மைக்கு மட்டுமே கடன் கொடுக்கப்பட்டு வந்தது. வேளாண்மைக் காரியங்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டு வந்த நிதிவசதி இன்றையதினம் விரிவுபடுத்தப் பட்டிருக்கிறது. அதன் காரணமாக இன்றையதினம் கால்நடை வளர்ப்பு, மீன் பிடித்தல், தேனீ வளர்ப்பு மற்றும் அவற்றின் தொடர்பான துணைத் தொழில்கள் அனைத்திற்கும், இந்த மசோதாவின் வாயிலாக நிதி உதவி செய்யக்கூடிய ஒரு வாய்ப்புக் கிடைக்கும்.

அதனைப்போலவே, இதுவரையிலும் மின்சார வாரியத்திற்கு மட்டுமே அடமானம் இல்லாமல் கடன் ஈட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டது. ஆனால் இந்த மசோதாவின் மூலமாக வேறு பல அரசு நிறுவனங்களுக்கும் அந்த வசதியை விரிவுபடுத்த வழி செய்யப்பட்டிருக்கின்றது.

ஆக இந்த இரண்டு நல்ல நோக்கத்திற்காக இந்த நிலவள வங்கி சட்டத்திலே இந்தத் திருத்தத்தை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதனைப்போலவே தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டாவது திருத்த சட்டம், வைப்புறுதிக் காப்பீட்டுத் திட்டம், டெப்பாசிட் இன்சூரன்ஸ் ஸ்கீம். பத்தாண்டு காலத்திற்கு முன்பே அதாவது 1968 ஆம் ஆண்டே பிற மாநிலங்களில் வந்துவிட்டது. அதைப்

பரிசிலனை செய்யும்படி மத்திய அரசு 1968 ஆம் ஆண்டிலேயிருந்து வற்புறுத்தி வருகின்றது. அகில இந்திய ரீதியிலே இதற்கான சட்டம் இருக்கின்றது. இன்றைக்கு தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில் மத்திய வங்கி, மாநில வங்கி, நகர வங்கி போன்றவை இருக்கின்றன. இவற்றில் நகர வங்கி என்று சொல்லப்படுகின்ற அர்பன் பாங்க் மொத்தம் தமிழ் நாட்டில் 131 வங்கிகள் இருக்கின்றன. அதனைப் போலவே மத்திய வங்கிகள் என்பது 16 வங்கிகள் இருக்கின்றன. மாநில வங்கி என்பது ஒன்று இருக்கிறது. ஆக ஏறத்தாழ 148 நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்றன.

இந்த 148 கூட்டுறவு நிறுவனங்களில் இன்றைக்கு டெப்பாசிட்டாக ஏறத்தாழ 316 கோடி ரூபாய் இருக்கின்றது. இந்த 148 நிறுவனங்களில் அதாவது இந்த மூன்று இனங்களைக் கொண்ட நிறுவனங்களில் 316 கோடி ரூபாய் 1978-79 ஆம் ஆண்டுக்கான டெப்பாசிட்டுகளாக இடப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த வைப்புகள் எல்லாம் யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்றால் 10 ஆயிரம் ரூபாய், 15 ஆயிரம் ரூபாய் என நம்மைப் போன்ற சின்னஞ்சிறிய, நலிந்தவர்கள் என்ற நிலையில் உள்ள நடுத்தர மக்கள் இந்தக் கூட்டுறவு வங்கியை நம்பி டெப்பாசிட் போட்டிருக்கிறார்கள். ஒரு காலத்திலே அந்த வங்கி ஏதாவது நலிந்துவிட்டால் அவர்களுடைய வைப்புகளுக்குப் பாதுகாப்பு கிடையாது. ஆகவே அந்த வங்கிகள் நலிந்தாலும் கூட அந்த 310 கோடி ரூபாயை டெப்பாசிட் செய்தவர்களுக்கு எந்தவிதமான இழப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இன்றையதினம் மத்திய சர்க்காருடைய அந்த சட்டத்தின் கீழ் இந்த வங்கிகளில் அதாவது நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 3 வகையான வங்கிகளிலும் டெப்பாசிட் இன்சூரன்ஸ் ஸ்கிம் என்ற முறையில், சின்னஞ்சிறு வைப்பாக வைத்திருக்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு நன்மையைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

அதே நேரத்தில் இன்றையதினம் வணிக வங்கியில் போடுகிறார்கள். ஆனால் கூட்டுறவு வங்கியில் பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தால் சிலர் தயங்குகிறார்கள், தடுமாறுகிறார்கள். இந்த மசோதாவிற்குப் பிறகு நம்பிக்கை அதிகமாகி இந்தக் கூட்டுறவு வங்கியிலே வைப்புகளை, டிப்பாசிட்டுகளை, போடுவதற்கு நிலைமை ஏற்படும். உண்மையில் அந்த நம்பிக்கையின் காரணமாக 5,000 ரூபாய், 10,000 ரூபாய், 15,000 ரூபாய் இப்படி பணம் வைத்திருப்பவர்களெல்லாம் நிச்சயமாக இந்தக் கூட்டுறவு வங்கியில், எப்படி வணிக வங்கியில், கமெர்ஷியல் பாங்கில், நம்பிக்கை வைக்கிறார்களோ, அந்த அளவிற்கு இந்தக் கோவாபரேடிவ் பாங்கை நம்புகிற அளவிற்கு இந்த மசோதா வகை செய்கிறது. அதைப்போல்,

1979 எப்ரல் 28]

இன்றையதினம் இந்த மசோதாவில் வசதி செய்யப்பட்டதனால், கூட்டுறவு வங்கியில் இதுவரையில் இருந்து வந்த பலவினம் போக்கப்பட்டு, பலத்தைக் கொடுக்கும் வகையில், இந்த மசோதா இருக்கிறது. இந்த 3 மசோதாக்கள் வாயிலாக கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் நிச்சயமாக நான் ஏற்கெனவே சொன்னதுபோல், விரைவில் அந்தப் பொறுக்குக் குழுவின் பரிந்துரை பெற்று, இந்த 153 விதிகளைக் கொண்ட அந்தக் கூட்டுறவு சட்டத்தில் எல்லா உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்ற காரணத்தால், அவர்கள் தங்கள் கருத்துக்களை, உணர்வுகளைச் சொல்வார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம், அந்த முறையான யோசனைகளையெல்லாம் எடுத்து, முழுமையான திருத்தச் சட்டத்தை விரைவில் உங்கள் பரிசீலனைக்கு கொண்டு வர தமிழக அரசு முடிவு எடுத்திருக்கிறது. இதுவரையில் நான் ஏற்கெனவே சொன்னதுபோல் தனி அலுவலர்கள் நியமனம் காலத்தின் வழியிலே தவிர்க்க முடியாதது. 'அன்வான்ட்டெட் பட் இன்எவிடபிள்'. தேவையற்றது ஆனால் தவிர்க்க முடியாதது. பெரிய தீமை ஏற்படாமல் இருக்க, சிறிய தீமையை ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாதது. நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் மேலான ஒப்புதல் பெற்று, அந்த ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு, அதிலே கட்சி வேறுபாடு இல்லாமல் கூட்டுறவுத் துறையிலே நம்பிக்கை உள்ளவர்களை, ஜாதி, மத, வேறுபாடு உணர்ச்சி கருதாமல், ஏற்கெனவே தீய செயல்களைப் புரிந்தவர்கள் இடம் பெறாத வகையில் ஒரு வன்மை மிக்க, படைக்கலனாக உருவாக்குவதற்கு இந்த தமிழக அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அதற்கு உங்கள் மேலான ஒத்துழைப்பு வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, தர்மபுரி மத்திய வங்கியில் 49 லட்சம் ரூபாய் சிறிய விவசாயிகளுக்குக் கடன் வஜா கொடுக்கப்பட்டது. அந்த வங்கியின் கிளைச் சங்கங்களில் சம்பந்தப்பட்ட கடன்பட்டவர்களுக்கும் வஜா செய்யப்படவில்லை. அது பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணாமலை அவர்கள் சொன்ன பதிலை மனதிலே கொண்டு சம்பந்தப்பட்டவரிடமிருந்து விவரம் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவன்போடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1979) நிறைவேற்றப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(மாலை 5-20)

(ஓ) கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டாவது (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1979 நிறைவேற்றப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

(ஔ) கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1979-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

(க) வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (ஆய்வுக்குழு திருத்தி அமைத்தவாறு), 197T.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
என்று மொழிகிறேன்.

* 1979, ஏபால், 20-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய வருமான வரிவிதிப்பு முறையில் ஸ்டாண்டர்டு எக்கரை உயர்த்தியிருப்பது விவசாயிகளை பாதிக்கக்கூடியது என்கின்ற முறையில் இந்தத் திருத்தங்களை கொண்டு வந்திருக்கிறோம். விவசாய வருமான வரியை அதிகப்படுத்துவதும் நியாயமல்ல. பல்வேறு வகைகளில் ஏற்கனவே நிலத்தின் பேரில் நிலவரி, சர்சார்ஜ், லோக்கல் செஸ், யூனியன் செஸ் போன்ற வரிகள் கட்டாயமாகக் கட்டுகிறோம். மேலும் வருமான வரியும் போடப்பட்டுள்ளது. இதை மேலும் உயர்த்துவது நியாயமல்ல.

சமுதாயத்தில் ஒரு தவறான கருத்து நிலவுகிறது. நிலம் வைத்திருப்பவர்கள் ஏதோ அதிகப்படியான வருமானம் அடைகிறார்கள். அவர்கள் வரி செலுத்துவதில்லை என்ற கருத்து நிலவுகிறது.

திரு. செ. சிவசாமி : எங்கள் திருத்தங்கள் மொழியப்படவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது திருத்தங்களை மொழியலாம்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : உதாரணமாக மலைத் தோட்டங்களில் அதிகப் படியான வருமானம் வருவதாக நினைக்கப்படுகிறது. தற்சமயம் காப்பித் தோட்டத்தில் எக்கர் ஒன்றுக்கு 650 கிலோ விளைவதாக நினைத்து நிர்ணயம் செய்திருப்பதாக தெரிகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. காப்பி போர்டினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரப்படி கடந்த ஆறு ஆண்டுகளில் சராசரி எக்கர் ஒன்றுக்கு தமிழ்நாட்டில் 108 கிலோ காப்பிதான் விளைவிக்கப் படுகிறது. காப்பியிலேயே மிக அதிகமான அளவு விளைவிக்கும் கர்நாடகாவில் எக்கர் ஒன்றுக்கு 289 கிலோவும், கேரளாவில் 133 கிலோவும்தான் விளைகிறது.

இந்நிலையில் ஸ்டாண்டர்டு எக்கர் என்று நிர்ணயம் செய்யும்போது, தேயிலை, காப்பி, ஏலக்காய், இலவங்கம் ஆகிய பயிர்களுக்கு 1 சாதாரண எக்கருக்கு 2½ ஸ்டாண்டர்டு எக்கராக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதை 2 ஸ்டாண்டர்டு எக்கராக ஆக்கலாம். அதையும் 50 பிசிகல் எக்கராக கம்பவுண்டிங் செய்ய அனுமதிக்கலாம். அதை 100 ஸ்டாண்டர்டு எக்கராக கணக்கிட வேண்டும். மஞ்சள் ஒரு சாதாரண எக்கரை, 2 ஸ்டாண்டர்டு எக்கராக மாற்றலாம். தென்னையைப் பொறுத்தவரையில் பாசனம் பெறாத தென்னை நிலத்திற்கு 1 சாதாரண எக்கரை 2 ஸ்டாண்டர்டு எக்கர் என்றிருப்பதை மாற்றி 1:1 எக்கராக மாற்றலாம். தென்னைக்கு தண்ணீர் பாய்ச்சினால்தான் காய்ப்பு உண்டு. இல்லையானால் பாதிப்பு ஏற்படும். இதனை எல்லோரும் அறிந்ததுதான்.

1979 ஏப்ரல் 28] [திரு. ஓ. சுப்பிரமணியன்]

பாசனம் பெறும் பயிர்களான மிளகாய், புகையிலை, பருத்தி போன்ற பயிர்களுக்கு மிகவும் செலவு செய்து, மின்சார மோட்டார் பம்ப் அல்லது ஆயில் என்ஜின் வைத்துத்தான் பயிர் செய்யப்படுகிறது. ஆகவே, அதற்கு ஏற்படும் செலவைக் கணக்கிட்டு, அதையும் குறைக்கவேண்டும். மானாவாரியாகப் பயிர் செய்யப்படும், ராகி, சோளம், கம்பு, வேர்க்கடலை, கொள், எள், துவரை, உளுந்து, முசுக்கட்டை, நெல் ஆகியவற்றிற்கு 1 1/3 ஏக்கராக இருப்பதை விலக்களிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள்கூட இப்போது பேசும் போது, பட்டுப்பூச்சி வளர்ப்பைப்பற்றிப் பேசினார்கள். எனவே, முசுக்கட்டை போன்ற பயிர்களுக்கு அவசியம் விலக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசனம் பெறும் பயிரிடாத நிலம் என்று சொல்லும்போது அதற்கும் 1 : 1 என்று போட்டிருப்பது தவறு. எனவே, பாசனம் பெறும் பயிர் செய்யப்படாத நிலத்திற்கு வரி விதிக்கக் கூடாது. அதேபோல், பாசனம் பெறாத, பயிரிடாத நிலத்திற்கு 1 : 1/3 என்றிருக்கிறது. பாசனமும் இல்லை; அதிலே பயிரிடப் படவும் இல்லை. ஏன் அதற்கு வரி விதிக்க வேண்டும், செய்யாத தொழில், ஈட்டாத லாபம் ஆகியவற்றிற்கு வரி விதிப்பு ஏன்? எனவே, அதையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பழைய சட்டத்தில் நிலவரி அடிப்படையில் ஸ்டாண்டர்டு ஏக்கர் நிர்ணயம் செய்யப்பட்டிருந்ததால், பொருத்தமாக இருந்தது. இப்போது பயிர்வாரி அடிப்படையில் ஸ்டாண்டர்டு ஏக்கர் நிர்ணயம் செய்வது தவறு. பயிரிடாத நிலங்களுக்கு வரி விதிப்பதை நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. பழனிமுத்து: தலைவர் அவர்களே, இந்த விவசாய வருமான வரியிலே, பாக்கு, தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு சொல்லப் பட்டுள்ளதிலே ஒரு ஏக்கர் பாக்கு நிலத்தை 4 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்துள்ளார்கள். பாக்கு பயிரிடுவது என்று சொன்னால் மிகவும் சிரமமான காரியம். பாக்கு பயிரிட்டால், அதிலே பலன் பெறுவதற்கு கிட்டத்தட்ட 8 வருஷங்கள் ஆகின்றது. அப்படிப் பயிரிடக்கூடிய இந்த பாக்கு நிலத்தை ஒரு ஏக்கர் என்பதை 4 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த முறையைப் பற்றி முதலில் இருந்ததுபோல் 1 ஏக்கர் என்பது 3 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அளவிற்கு கொண்டு வரவேண்டும். காரணம், பாக்கு பயிரிட்டால் 8 ஆண்டுகள் கழித்துத் தான் பலன் கிடைக்கின்றது. அந்த நிலையிலே, சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நிறைய தண்ணீர் பாயக்கூடிய அத்தகைய நிலங்கள் இல்லை.

அங்கே, கிணற்றுத் தண்ணீரை இறைத்து, அந்தப் பயிர்களை பயிரிடக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அங்கே பாக்கைப் பயிடுவதற்கு மிகுந்த சிரமம் இருக்கிறது. பாக்குப் பயிர் என்பது எந்தக் காலத்திலும் பயிரிடக் கூடியது அல்ல; பலன் பெறக் கூடியதல்ல. எட்டு ஆண்டுகள் கழித்தே பலன் தாக் கூடியது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

மழை இல்லையென்றால் கிணற்றிலே தண்ணீர் இல்லை. கிணற்றிலே தண்ணீர் இல்லை என்றால், பாக்குப் பயிருக்குத் தண்ணீர் இல்லை. ஆகவே, இந்தப் பாக்குப் பயிரிடுவதிலே மிகுந்த சிரமங்கள் எல்லாம் இருக்கின்றன. எனவே, இந்த சிரமங்கள் இருப்பதை எல்லாம் கணக்கில் கொண்டு, பாக்குக்கு ஒரு சாதாரண எக்கருக்கு 3 ஸ்டாண்டர்டு எக்கர் என்று மாற்றிக் கொடுக்க வேண்டும்.

(மாலை 5-30)

மேலும், இதிலே விவசாயிகளினுடைய நிலைமை மிகவும் பரிதாபமாக உள்ளது. நில வரி, லோகல் செஸ், வாட்டர் டாக்ஸ், கிராப் டாக்ஸ் இப்படி பல வரிகளைப் போட்டு கிட்டத்தட்ட எங்கள் பகுதியில் ஒரு எக்கருக்கு 100 ரூபாய் வரி விதித்திருக்கிறார்கள். பாக்குக்கு ஒரு எக்கர் 3 ஸ்டாண்டர்டு எக்கர் என்று பழைய மாதிரி மாற்றவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது பாக்குக்கு ஒரு எக்கருக்கு 6 ஸ்டாண்டர்டு எக்கர் என்று முதலிலே போட்டு பொறுக்குக் கமிட்டிக்குச் சென்றபோது அது 3 எக்கராகக் குறைக்கப்பட்டது. அதை அப்படியே இப்போதும் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு எக்கர் தென்னை இரண்டு ஸ்டாண்டர்டு எக்கர் என்று போட்டிருக்கிறார்கள். தென்னைக்குத் தண்ணீர் பாய்ச்சுவது கிடையாது. எங்கள் பகுதியில் மழை பெய்தால்தான் தண்ணீர். புயல் அடித்தால்தான் மழை வருகிறது. புஞ்சை நிலங்களில்தான் தென்னை பயிரிடப்படுகிறது. அதற்குத் தண்ணீர் தேவையில்லை. ஆகவே அதையும் குறைக்க வேண்டும். நெல் பயிரைப் பொறுத்தவரை மூன்று போகம் பயிர் செய்வதாக இருந்தால் ஒரு எக்கர் ஒன்றரை ஸ்டாண்டர்டு எக்கர் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே கிராம கர்ணம், முன்சீப்புகளுக்கு நிறைய வேலை இருக்கிறது. அவர்கள் பயிர் செய்திருக்கிறார்களா இல்லையா என்று ஒவ்வொன்றையும் சென்று பார்ப்பதில்லை. அதன் காரணமாக அவர்களிடமிருந்து பயிர் செய்யப்படாத நிலத்திற்கு கூட கர்ணத்திடமிருந்து சர்டிபிகேட் வாங்குவது கஷ்டம். பயிரிடப்படாத நிலங்களுக்கு பயிரிடப்பட்டதாக நிறைய இடங்களில் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். பயிர் வாரியாக

விவசாய வருமான வரி போடப்படுவதால் விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த வரியை அதிகமாக ஆக்கியிருப்பதைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள் கிறேன்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: தலைவர் அவர்களே, இந்த மசோதாவிலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரை விவசாய வேளாண்மை வரு மானத்திற்கு வரி போடுகின்ற இந்த மசோதாவில் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வரி இல்லை என்று போட்டிருப்பது ஓரளவு நமக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் கொடுத்தாலும்கூட, இங்கு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று பயிர் களின் அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கின்ற டெபனிஷனைப் பொறுத்த வரை சில மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது சம்பந்தமாகத் திருத்தம் கொடுத்திருக்கிறோம். ஒவ்வொரு நிதியாண் டிலும் வரக்கூடிய வருமானத்தை வைத்து வருமான வரி விதிக்கப் போவதாக மசோதா சொல்லுகிறது. விவசாயத்தைப் பொறுத்தவரை அதிலிருந்து வருமானம் பெறுகிறோம். அதற்காக விவசாயத்தில் ஏராளமாகச் செலவு செய்கிறோம். மொத்த வருமானத்திலிருந்து மொத்தச் செலவைக் கழித்து நிகர வருமானத்தைப் பார்த்தால் நிச்சயமாக விவசாயிகளிடத்தில்—ஒரு பழமொழி சொல்வது போல்—'உழுபவன் கணக்குப் பார்த்தால் தார்க்கம்பு கூட மிஞ்சாது' என்று சொல்லுவது போன்ற நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, வருமானத்தை மட்டும் வைத்துக் கணக்கிட முடியாது. செலவையும் வைத்துக்கொண்டுதான் கணக்கிட வேண்டும்.

மானாவாரிப் பயிர்களைப் பொறுத்தவரை நிச்சயமாக வரி விலக்கு இருக்க வேண்டும். ராகி, சோளம், கம்பு, வேர்க்கடலை, கொள்ளு, எள், துவரை, உளுந்து போன்ற மானாவாரிப் பயிர்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். நெல்லை மாவட்டத்தின் வட பகுதி, இராமநாதபுரம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டால் எப்போதும் வறட்சியில்தான் இருந்து கொண்டிருக்கும். எப்போதாவது மழை வந்தால் நிச்சயமாக வெள்ளத்தால் பாதிக்கப்படும். ஆகவே, மானாவாரிப் பயிர்களைப் பொறுத்தவரை நிச்சயமாக வருமான வரி விதிக்கக்கூடாது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே மானாவாரி நிலங்களிலே பயிர் செய்யக்கூடிய அத்தனை நிலங்களுக்கும் வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக உணவுப் பொருட்களைப் பொறுத்த வரையில் நெல், சோளம், ராகி இவைகளைப் பொறுத்தவரையிலும் வரியி

விருந்து விலக்கு அளிக்க வேண்டும். மானாவாரிப் பயிர்களுக்கும், உணவுப் பயிர்களுக்கும் விலக்கு அளிக்க வேண்டும். ஏனென்றால் இன்று நம்முடைய விவசாயிகளின் நிலைமை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நெல்லைப் பொறுத்தவரையில் இங்கே அடிக்கடி பேசப்படுகிறது, நியாயமான விலை தரப் படவில்லை என்று. அதைப்போன்றுதான் மானாவாரிப் பயிர்களுக்கும் நியாயமான விலை கிடைக்கவில்லை. இந்த முறையில் பார்த்தால் எந்த உற்பத்திப் பொருளை எடுத்துக்கொண்டாலும் நியாயமான விலை இல்லை. ஆகவே விவசாயிகள் நட்டம்தான் அடைகிறார்கள். ஆகவே மானாவாரிப் பயிர்களுக்கும் விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, திராட்சை, கொட்டைப்பாக்கு, ரப்பர் . . .

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கோரம் இருக்கிறதா, என்று கேட்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி) : ஒருசில உறுப்பினர்கள் காபி சாப்பிடப் போய் இருந்தார்கள், அவர்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள், கோரம் இருக்கிறது.

*திரு. செ. சிவசாமி: திராட்சை, கொட்டைப்பாக்கு, ரப்பர், காபி, தேயிலை, ஏலக்காய் போன்றவைகள் மலைப் பிரதேசத்திலே உற்பத்தியாகிற பொருட்கள், அவைகளுக்குப் போட்டிருக்கின்ற எல்லை ஓரளவிற்கு ஏற்றுக் கொண்டாலும், மஞ்சள், மிக முக்கியமான உணவுப் பொருள் ஆகும். அந்த மஞ்சளுக்கு இரண்டரை ஏக்கர் என்று போடப்பட்டிருக்கிறது, அதை 2 ஏக்க ராகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வாழை, கரும்பு, தென்னை இவைகளுக்கு 2 ஏக்கர் என்று போடப்பட்டிருக் கிறது, வாழை, கரும்பு எல்லாம் எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையிலே கண்மாய்ப் பாசனத்தைத்தான் நம்பியிருக்கின்றன, கண்மாய்களுக்குத் தண்ணீர் வந்தால்தான் அந்தப் பயிர்களைப் பயிரிட முடியும். இந்த நிலையில் தொடர்ந்து வறட்சி இருந்துகொண்டு 6 மாதங்களுக்குப் பின்னாலே 7-வது, 8-வது மாதத்திலே வாழை பலன் தரக்கூடிய நேரத்திலே கிணற்றிலே தண்ணீர் இல்லையென்றால் வறட்சி தொடர்ந்து இருந்தது என்றால் அந்த நிலையில் வாழையைப் பார்த்தால் பார்ப்பதற்கு வேண்டுமானால் அழகாக இருக்கலாம், ஆனால் 10 மாதங்களுக்குப் பின்னாலே பழம் வராத நிலைமை தான் இருந்துகொண்டிருக்கும். இந்த நிலைமைகளையெல்லாம் கணக்கில்

1979 ஏப்ரல் 28] (திரு. செ. சிவசாமி)

எடுத்துக்கொண்டு ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் என்று போடப்பட்டிருப்பது அந்த விவசாயிகளுக்குப் பாதகமாக இருக்கிறது. ஆகவே ஒரு ஏக்கருக்கு ஒரு ஏக்கர் என்ற முறையிலே அதைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெற்றிலை, பூச்செடிகள், காய்கறி இவைகளுக்கு அரை ஏக்கர் என்று போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திருத்தத்திலே 8-வது பாராவிலே மிளகாய், புகையிலை, பருத்தி ஆகியவற்றிற்கு ஒரு போகத்திற்கு ஒரு ஏக்கருக்கு 2 ஏக்கர் என்று போடப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு ஏக்கருக்கு ஒரு ஏக்கர் என்ற முறையிலே போடுவதுதான் சரியாக இருக்கும். நான் அதற்காகத் திருத்தம் கொடுத்திருக்கிறேன், அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மிளகாயைப் பொறுத்தவரையில் கிழக்கு இராமநாதபுரத்திலே மிகப் பெரிய மார்க்கட் அதற்கு இருந்தாலும்கூட, நல்ல முறையிலே விளைந்துவிட்டாலும் கூட அங்கே இருக்கின்ற வியாபாரிகள் சாதாரண விவசாயிகளுக்கு உற்பத்திக்கான பலன் கிடைக்க முடியாதபடி செய்து கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். முதுகுளத்தூர், பரமக்குடி, திருவாடானை போன்ற பகுதிகளிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலிருந்தும் 4, 5 தாலுக்காக்களில் விளைகின்ற மிளகாயைப் பயிர் செய்கிறவர்களுக்கு நியாயமான விலை கிடைக்காத அளவிற்கு துண்டிற்குள்ளே கையைப் போட்டுக்கொண்டு என்ன விலையை நிர்ணயிக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு செய்வதால் இன்றைக்கு அவர்கள் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன கமிஷனுக்கு விற்கிறார்கள் என்றே தெரியவில்லை, அந்த அளவிற்கு வியாபாரிகள் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். சாதாரண விவசாயிகளுக்கு அதிலிருந்து எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. நாங்களும் தொடர்ந்து இந்தச் சட்டசபையிலே அதைப்பற்றிப் பேசிக்கொண்டு வந்திருக்கிறோம், இப்போது மூன்றாவது முறையாக பேசிக்கொண்டு இருக்கிறோம். சாதாரண விவசாயிகளுக்கு உற்பத்திக்குத் தகுந்தாற்போல் விலை கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த மூன்று வருடங்களாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. அவர்கள் சொன்னதுபோல் உழுதவன் கணக்குப் பார்த்தால் மிஞ்சாது என்று சொல்வதைப்போல் இன்றைக்கு அதை விடக் கீழான நிலைமைக்கு சாதாரண விவசாயிகள் போய்க்கொண்டிருக்கிறார்கள். பெருங்கொண்ட வியாபாரிகள் கொள்ளையடிப்பதன் காரணமாக விவசாயிகளுக்கு உழைப்பதற்கான வருமானம் கிடைக்கவில்லை. 15 ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கிறவன் 10 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய நிலைமைக்கு மாறுகிறான். 10 ஏக்கர் வைத்துக்கொண்டிருந்தவன் 8 ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலைமைக்கு மாறுகிறான். எங்கே பார்த்தாலும்

[திரு. செ. சிவசாமி] [1979 ஏப்ரல் 28

(மாலை 5-40)

பஞ்சம், வறட்சி, பசி, பட்டினி என்று இருந்து கொண்டிருக்கிறது. இங்கே யிருக்கின்ற சாதாரண விவசாயிகள் ஏழை விவசாயிகளாக மாறுகின்ற நிலைமையில் உங்கள் புள்ளி விவரங்களே காட்டுகின்றன. இந்த நிலை தமிழ்நாட்டிலே தொடர்ச்சியாக விவசாய மக்களுக்கு வந்துகொண்டிருக்கிறது. இவர்களுக்கு நிவாரணம் வேண்டும், அவர்கள் உற்பத்தி செய்யும் சாமான் களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும், உற்பத்தியைப் பெருக்குவதற்கு உத்தரவாதம் வேண்டுமென்று பலமுறை சொல்லியும்கூட, எந்தவிதமான உத்தரவாதமும் கொடுக்க முடியாத நிலையிலே, அந்தச் சாதாரண விவசாயிகள் உங்களுக்குச் சலுகை வேண்டுமென்று கேட்கின்ற நேரத்திலே, அவர்களிடத்திலே வேறொரு முறையைக் கையாண்டு அவர்களுக்குப் பாவமான நிலைமையை உண்டாக்குகிறோம். இதைக் கணக்கில் கொண்டுதான், இப்பொழுது பேரிடப்பட்டிருக்கும் நிலைமையில் மாறுபட்ட நிலைமையை உண்டாக்கி, உத்தரவாதத்திற்கு, உற்பத்தி செய்த பொருள்களுக்கு கியாரண்டி கொடுத்த பிறகுதான் இந்தச் சட்டத்தைப் போட வேண்டுமே தவிர உத்தர வாதம் இல்லாத முறையிலே, இராமநாதபுரம் ஜில்லாவிலும், நெல்லை ஜில்லாவின் வடக்குப் பகுதியிலும் பஞ்சப் பிரதேசமாக எப்பொழுதும் ஆகாயத்தைப் பார்த்து, மழையைப் பார்த்து விவசாயம் செய்யும் விவசாய நிலங்களுக்கும், தஞ்சை ஜில்லாவிலே இருக்கும் கணக்கைப் பார்த்து ஏக்கருக்கு இவ்வளவு ஏக்கர் என்று ஒட்டுமொத்தமாகப் போடுவதால் அவர்களுக்கு மிகப்பெரிய பாவத்தை ஏற்படுத்துகிறீர்கள். இதுபோலத் தகராறுகளின் காரணமாகத் தான் புரட்சி வருகிறது, பிறகு பல தகராறுகள் வருகின்றன. இல்லாவிட்டால் சாதாரணப் பிரச்னைகளில் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று கணக்கில் பார்த்தால் நிச்சயமாக இப்படிப்பட்ட நிலைமை வராது. இதன் விளைவுதான் இங்கேயிருக்கும் சர்வசாதாரண விவசாயச் சங்கம் ஆர்கனைஸ் செய்ய ஆரம்பித்தால்கூட ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்கள் இன்றைக்கு திரண்டு அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள ஏதாவது வழி கிடைக்காதா என்று நினைத்து அவர்கள் பின்னாலே போகும் நிலைமைகளை நீங்களே உண்டாக்கியிருக்கிறீர்கள். இந்த நிலைமைகளை மாற்றி, மிளகாய், புகையிலை, பருத்தி போன்ற சர்வ சாதாரணப் பயிர் களுக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு ஏக்கர்தான் போட வேண்டும்.

அடுத்தபடியாக, என்னுடைய திருத்தத்தில் ராகி, சோளம், கம்பு, வேர்க் கடலை, கொள்ளு, எள்ளு, துவரை, உளுந்து, முசுக்கட்டை ஆகியவை பாசனம் பெறாத நிலத்தில் பயிரிடப்பட்டால் 1/3 என்று போடப்பட்டிருப்பதை 1/4 என்று திருத்தி இந்த மசோதாவைப் பாஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

பாசனம் பெறும் பயிரிடாத நிலத்திற்கு 1-க்கு 1 ஒன்று சொல்லிவிட்டு பாசனம் பெறாத பயிரிடப்படாத நிலங்களுக்கு—கனம் அமைச்சரவர்கள் இந்த இடத்தில் கொஞ்சம் கவனமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்—பாசனம் பெறாத பயிரிடாத நிலத்திற்கு முழுவதும் ரத்து செய்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 6-வது பாராவில் பாசனம் பெறாத பயிரிடப்படாத நிலத்திற்கு 1/3 என்று சொல்லப் பட்டிருக்கிறது, அந்தப் பாராவை நீக்கி விடும்படி கேட்டுக்கொள்கிறேன். சிறு விவசாயிகளின் அந்தஸ்து, அவர்களின் நிலைமை, வாழ்க்கைத் தரம் உயர என்ன செய்ய வேண்டுமோ அந்த முறையில் உதவி செய்யாமல் ஏதோ வந்தானுக்கு வந்தான், போனானுக்குப் போனான் என்ற கணக்கில் தமிழ் நாட்டிலே ஒட்டுமொத்தமாக இருக்கும் நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், எந்தெந்தப் பகுதி எப்படி எப்படி இருக்கிறது என்று கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரே ஊரிலேயே கண்மாய்க் கரைக்கு அருகே உள்ள நிலம் ஃபர்ஸ்டு கிரேடு, செகண்ட் கிரேடு, தேர்ட் கிரேடு, ஃபோர்த் கிரேடு என்று நான்கு வகையாகப் பிரித்திருக்கிறது. நான்கு வகையான நிலங்களுக்கும் நான்கு வகையான கட்டணம் போட்டிருக்கிறது. இப்படியெல்லாம் விவசாயத்தில் இருக்கும்பொழுது, ஒட்டுமொத்தமாகக் கணக்குப் போட்டு விட்டு, அவன் தலையிலே மிளகாய் அரைப்பது சரியான முறையல்ல. இப்படிப்பட்ட முறையை மாற்றி விவசாயிகளைக் கை தூக்கும் வகையிலே நாங்கள் கொடுத்திருக்கும் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு நீங்கள் செயல்பட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: விவசாய வருமான வரி மசோதா மீது சுருக்கமாகச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏற்கனவே, பொறுக்குக் குழுவில் இருந்த அங்கத்தினர் என்ற முறையில் எனது கருத்துக்களை எல்லாம் ஏற்கனவே நான் குழுவில் எடுத்துக்கூறி இருக்கிறேன். இங்கே மானாவாரி நிலங்களுக்கு வரி சுமத்தி இருப்பது பொருத்தமாகாது என்பது என்னுடைய கருத்து. அதோடு, பாசனம் கொடுத்தும் சில இடங்களில் பயிர் எழாத சூழ் நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களுக்கும் இங்கே வரி விதிக்கப் பட்டிருக்கிறது. அதுவும் பொருத்தமாக இல்லை என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மானாவாரி நிலங்களில் உண்மையிலேயே வரி சுமத்தக் கூடிய அளவு வருமானம் வருமா என்பதை அரசு நிச்சயம் ஆழ்ந்து சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது. பல்வேறு இடங்களில் பெரும் அளவுக்கு நிலம் இருந்தாலும்கூட, அதில் கிடைக்கின்ற விளைபொருளின் அளவைப் பார்க்கும் போது, நிச்சயமாக வருமான வரி விதிக்கக்கூடிய அளவு இல்லையென்று சொல்ல விரும்புகிறேன்.

(திரு. ஜே. ஜேம்ஸ்) [1979 ஏப்ரல் 28

அடுத்து, ரப்பர் ஏக்கருக்கு, ஒரு சாதாரண ஏக்கருக்கு ஸ்டாண்டர்ட் ஏக்கர் விகிதாசாரம் 3 என்ற அளவுக்கு இங்கே விதிக்கப்பட்டிருக்கிறது. என்னைக் கேட்டால், தோட்டப் பயிர்களில் மிகவும் மோசமான நிலையில் இருப்பது ரப்பர். காரணம், ரப்பர் தோட்டம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், ஆரம்பத்தில் 7 ஆண்டு, அதற்கு ஏராளமான செலவு செய்ய வேண்டியிருக்கிறது. 7 ஆண்டு எந்தவிதமான வருமானமும் இல்லை. 7 ஆண்டுக்குப் பிறகு 3 ஆண்டு பெயர் அளவுக்குத்தான்—செலவுக்குக் கூட போதாத அளவு வருமானம் வருகிறது. ஆக, பெரும் அளவு முதலீடு செய்து, 10 ஆண்டுக்குப் பிறகு, அவற்றுக்கெல்லாம் போதுமான அளவு வருமானம் வருகிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. இலகுவில் வருமானம் எடுக்க முடியாத சூழ்நிலை ரப்பர் தோட்டத்தைப் பொறுத்தவரையில் இருக்கிறது.

அடுத்து, தொழிலாளர்களை அமைக்கின்ற முறையில் வேறு எந்தத் தோட்டப் பயிருக்கும் இல்லாத சிக்கல் ரப்பர் தோட்டப் பயிருக்கு இருக்கிறது என்பதை அரசு நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். 2 ஏக்கர் ரப்பர் பயிரிட்டு, அதிலேயிருந்து பலன் எடுக்க வேண்டுமென்றால், ஒரு தொழிலாளியை நிரந்தரமாக பால் எடுப்பதற்கும் இன்னும் ஒரு தொழிலாளியை வேறு பல வேலைகளுக்கும் என நிரந்தரமாக அமைக்க வேண்டும். அந்தத் தொழிலாளிகளுக்கு இப்பொழுது ஆர்கனைஸ்ட் செக்டார் என்ற அடிப்படையில் அளிக்கப்படும் ஊதிய விகிதம், மற்ற எந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளிக்குக் கிடைக்கக்கூடிய ஊதியத்தைப் பார்க்கிலும் அதிகமாக இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில், அவர்களுக்குக் கொடுப்பது அதிகமாக இருந்தாலும், அது அவர்களுக்குப் போதுமா என்று கேட்டால், அது வேறு விவகாரம்.

ஆக, ரப்பர் தோட்டப் பயிரைப் பொறுத்தமட்டில், இங்கே கூறி இருக்கிற தோட்டப் பயிர்களான தேயிலை, காஃபி, ஏலக்காய், இலவங்கம், ஆகிய பயிர்களுக்குச் செய்யும் செலவைவிட, அதிகமாகச் செலவிட்டு பயிரிடக்கூடிய பயிர் என்று நான் கூறிக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, மற்ற தோட்ட பயிர்களை விட இது அதிகமாகக் கணக்கில் சேர்க்கப்பட்டிருப்பது நிச்சயமாக வரவேற்கத்தக்கது அல்ல. தேயிலை, காஃபி, ஏலக்காய், இலவங்கம் போன்ற பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 2½ என்று விகிதாசாரம் நிர்ணயித்திருக்கும் போது, ரப்பர் தோட்டத்திற்கு எந்த அடிப்படையில் 3 ஏக்கர் என்று விதித்திருக்கிறார்கள் என்று நிச்சயமாக நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற பயிர்களுக்கு 2½ ஏக்கர் என்று சொன்னால் இது அதைவிடவும் குறைவாக அமைத்திருக்கவேண்டும். இல்லையென்று சொன்னால், குறைந்த பட்சம் மற்றப் பயிர்களுக்கு விதித்திருக்கிற அளவிலாவது விதிப்பதுதான்

நியாயம் என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவேளை, அமைச்சர் எண்ணிப் பார்க்கலாம், சொல்லவும் கூடும். ஏற்கனவே இருந்த சலுகையைவிட இப்பொழுது அதிகச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது, என்று ஒருவேளை இருக்கலாம். ஆனால், ஏற்கனவே இருந்த சட்டத்தில் பல கோளாறுகள் இருந்தன என்று நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5-50)

ஏற்கெனவே இருந்த தவறுகளையெல்லாம் நாம் அப்படியே இந்தச் சட்டத்திலும் செய்ய வேண்டுமா, நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பதை இங்கே நான் எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவேதான் சொல்கிறேன் ஏற்கெனவே அவர்கள் தவறு செய்தார்கள் என்று சொன்னால், அந்தத் தவறுகளை திருத்துவதற்காகத்தான் நாம் இருக்கிறோம். ஒவ்வொரு வகையிலும் நமது வருவாய்த்துறை எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்பதை இந்த அரசு நிச்சயமாக சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இன்றைக்கு விவசாயிகளுக்கு இதனால் இந்த அளவுக்குப் பலன் இருக்கிற போது செலவு செய்வதிலே தவறேயில்லை என்று சொல்வேன். ஆகவே மற்றத் தோட்டப் பயிர்களைவிட இதற்கு ஸ்டேண்டர்டு ஏக்கர் குறைவாக, 3 ஏக்கர் என்று இருப்பதை 2 ஏக்கர் என்றாவது வைத்தாக வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கம்பவுண்டிங் முறையில் இருக்கிற விவசாயிகளுக்கு சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கதுதான் என்றாலும், தோட்ட விவசாயிகளைப் பொறுத்தவரையில் இன்னும் 40 ஏக்கர் என்று இருப்பதை 50 ஏக்கர் என்கிற வகையிலாவது மாற்றி, திருத்தியமைத்தால் நலமாக இருக்கும் என்று ஒரு கோரிக்கை இருக்கிறது. அதனால் அரசுக்கு நஷ்டம் ஏற்படவில்லை என்று சொன்னால் அவர்களுக்கு அந்த அதிகாரிகளின் தொல்லைகளிலிருந்து அவர்களை மீட்பதற்கு எந்த அளவுக்கு சலுகைகள் கொடுத்தால் அரசாங்கத்திற்கு சங்கடம் ஏற்பட வழியில்லையோ அந்த அளவிற்கு கொடுக்கலாம் என்று எண்ணுகிறேன். அரசாங்கத்திற்கும் நஷ்டம் இல்லாமல் அவர்களுக்கும் பாதுகாப்பு இருக்கும் என்று சொன்னால் அதை எடுத்துக்கொள்வதில் எந்தவிதத் தவறும் இல்லை என்று கூறி இங்கே நான் கொண்டு வந்த திருத்தங்களை, என்னால் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களை, அவைகளின்மீது நான் கூறிய கருத்துக்களை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை வருமான வரி திருத்தச் சட்டத்தின் மீது கடந்த ஓராண்டு காலம் பரிசீலனை செய்து ஆய்வுக் குழுவினுடைய அறிக்கையை வைத்து இங்கே சட்ட முன்வடிவு

விவாதத்திலே இருக்கிறது. இந்த சட்ட முன்வடிவை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். குறிப்பாக இரண்டு உண்மைகளை நாம் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஒன்று, அரசு இன்றையதினம் வரிகளின் மூலமாக வசூல் செய்கிறபோது சாதாரண வரிகளைக்கூட பல்வேறு துறைகளிலும் விதித்துத்தான் வசூல் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு மாறாக வருமானத்தின் மீது வரி வசூல் செய்கிற முறையைத்தான் ஏற்றுக்கொள்வதில் நம் வரையில் நீடிக்க வேண்டும், வளரவேண்டும், ஊக்கப்படுத்த வேண்டும். எந்தத் துறையிலும் வருமானத்தின் மீதுதான் வரி என்கிற முறை வளர வேண்டும். அப்படிப் போடுகிற வரியை நியாயமாக, முறையாக, செம்மையாகச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம்.

இரண்டாவதாக மனதிலே எடுத்துக்கொள்ள வேண்டியது தமிழ்நாட்டிலே சிலர் கைகளிலேதான் நிலங்கள் மிகுந்து கிடக்கிறது. அதுவும் மலைத் தோட்ட விவசாயிகளுக்கு நில உச்சவரம்பு சட்டத்தைக்கூட கொண்டு வரவில்லை. அப்படி மிகுதியான வருவாய் வருகிறவர்களிடத்தில் இருந்து குறைந்த அளவு வருவாயை வரியாக அரசு பெறுவது மக்களுக்கு உதவுவது என்பது சரியான நடவடிக்கைதான். அந்தத் துறையிலேதான் இந்தப் பிரச்னையை அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி சட்டம் கொண்டுவரப்படுகிறபோது, சிறு விவசாயிகளுக்கு, நடுத்தர விவசாயிகளுக்கு பாதுகாப்பு செய்து கொடுக்க வேண்டும். அப்படி அந்தச் சட்டத்தை திருத்தி அமைப்பதுதான் பயனாக அமையும்.

ஒரு விவசாயி ரப்பர் பயிரிடுகிறார் என்று சொன்னால் 6½ ஏக்கர் வரையிலும் ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையிலும் அதற்கு வரியில்லை. கொட்டைப் பாக்கு என்று சொன்னால், 5 ஏக்கர் வரையிலும் வரி இல்லை. தேயிலை, காப்பி, ஏலக்காய், இலவங்கம் என்று சொன்னால் 8 ஏக்கர் வரையிலும் வரி இல்லை. பாசனம் பெரும் பயிர்கள் என்று சொன்னால், 4 ஸ்டாண்டர்டு ஏக்கர், மஞ்சள் 8 ஏக்கர் வரையில் வரியில்லை. வாழை, தென்னை, கரும்பு, புகையிலை போன்றவைகளுக்கு 10 ஏக்கர் வரையிலும் வரியில்லை. ஆனால் மரவள்ளிக்கிழங்கு, முசுக்கொட்டை, ராகி, சோளம், கம்பு, வேர்க்கடலை, கொத்தமல்லி, வெங்காயம், உருளைக்கிழங்கு, நெல் போன்றவற்றிற்கு 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையிலும் பயிர் செய்தாலும் வரி இல்லை. மானாவாரியில் ராகி, சோளம், கம்பு, துவரை, உளுந்து, முசுக்கொட்டை போன்றவைகளுக்கு 60 ஏக்கர் வரையிலும் வரியில்லை. ஆகவே நில உச்சவரம்புச் சட்டம் அமுலில் இருக்கும்படியான நிலம் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் எனக்குத் தெரியும், திண்டுக்கல்லில் ஒரு ஏக்கர்

1979 எப்ரல் 28] [திரு. என். வரதராஜன்]

இரண்டு ஏக்கர் திராட்சை பயிரிடுபவர்களுக்கு என்ன கிடைக்கும் எவ்வளவு வருமானம் வரும் என்று. ஆனால் இந்தச் சட்டத்திலே சொல்கிறார்கள் 4 ஏக்கர் வரையிலும் திராட்சைக்கு வரி கிடையாது என்று. இது சாதாரணமாக சிறு விவசாயிகளையோ, ஏழை விவசாயியையோ, நடுத்தர விவசாயியையோ இன்றைக்கு போடப்பட்டிருக்கிற வரி பாதிக்காது. ஆய்வுக்குழுவில் நாங்கள் விவாதிக்கிறபோது அந்தத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் சொன்ன விவரங்களில் இருந்து நாங்கள் என்ன புரிந்துகொள் கிறோம் என்றால் நிலம் வைத்து இருப்பவர்களில்—விவசாயம் செய்பவர் களிடத்தில் இருந்து 100-க்கு 1 சதவிகிதம் தான் வருமான வரி வசூல் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, ஏற்கனவே முதலில் போட்டு இருக்கும் வரி கூட ஆய்வுக்குழுவில் சிறிது குறைக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே 1978-ம் ஆண்டு நம் மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சட்ட முன்வடிவில் தேயிலைக்கு 4 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சொன்னார்கள். அதை இப்போது 2½ என்று ஆக்கி இருக்கிறார்கள். காப்பிக்கு 4 என்று சொன்னார்கள். அதுவும் குறைக்கப்பட்டு இருக்கிறது. ஏலக்காய் 4 என்று சொன்னார்கள். அதை 2½ என்று குறைத்து இருக்கிறோம். இலவங்கத் திற்கு 4 என்று சொன்னோம். அதையும் 2½ என்று குறைத்து இருக் கிறோம். ஏற்கனவே இருந்த சட்ட முன்வடிவில்கூட இப்படிப்பட்ட பெரிய நபர்களுக்கு சலுகைகள் அளித்து இருந்ததை நாம் பார்த்தோம். ஆகவே, சிறிய விவசாயிகளைப் பாதிக்கும்படியான காரியங்கள் இதிலே இருப்பதாக நான் பார்க்கவில்லை.

மானாவாரியில் 60 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் இருந்தால் வரி. ஆகவே, 60 ஏக்கருக்குமேல் பயிர் செய்தால்தான் வரி வரும். இதனால் சாதாரண விவ சாய மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். அமைச்சர் அவர்கள் 20 கூட்டங்கள் நடத்தி இருக்கிறேன் என்று சொன்னாலும், எல்லோரையும் சமரசப் படுத்தவேண்டும் என்பதற்காகப் பெரிதும் முயற்சி எடுத்துக்கொண்டார்கள். ஆனால் சில நிர்ப்பந்தங்களின் காரணமாக சிலருக்கு விட்டுக்கொடுத்து விடுவோமோ என்று அஞ்சும் நிலை இருக்கிறது. 10,000 ரூபாய்க்கு வருமானம் உள்ளவர்களுக்கு வரியில்லை. 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர் இருப்பவர் களுக்கு வரியில்லை. 20 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்பது என்ன? 10,000 ரூபாய் என்பது என்ன—இன்று சாதாரண மனிதர் 10,000 ரூபாய் வருமானம் பெற்று இருக்கிறார்களா? ஓரளவிற்கு நிலம் இருப்பவர்களுக்குக்கூட சலுகை அளிக்கப்பட்டு இருக்கிறது, வருமானம் வருகிறது என்றால் கணக்குப் போட்டுக் காட்டலாம்.

மஞ்சளைப் பொறுத்தவரையில் கணக்குப் போட்டுப் பார்த்தால் எவ்வளவு தான் கஷ்டநஷ்டங்கள் இருந்தாலும்—கோயம்புத்தூரில் செலக்ட் கமிட்டி முன் சாட்சியம் அளிக்க வந்தவர்கள் கூறியதில் இருந்து தெரிகிறது—ஒரு

ஏக்கர் வைத்தால் 2,000 கிடைக்கும், ஆகவே, அப்படி 10 ஏக்கர் அவர்கள் வைத்தால் 20,000 ரூபாய் நிகர லாபம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. அப்படி கிடைக்கிற தொகைக்கு 75 ரூபாய்தான் வருகிறது. 20,000 ரூபாய் வருமானம் வரக்கூடியவர்கள் கட்டவேண்டிய வரி 75 ரூபாய்தான் கட்டுகிறார்கள். மற்றபடி இந்தத் துறைக்கு வருவாய்த் துறை அமைச்சரே பொறுப்பேற்று இருப்பதால் நாளைக்கு ஒரு பில் கொண்டு வருகிற நேரத்தில் வருமானம் அதிகம் வருகிறவர்களுக்கு அதிகமான வரி வசூலிக்கிற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைத் தோட்டங்களில் சில முக்கியமான பயிர்கள் அதிகமாக விளை கின்றன. அதிலே நடைமுறையில் வரி செலுத்துவதில் பல சலுகைகள் கொடுத்து இருக்கிறார்கள். மலைத்தோட்டப் பயிர்களைப் பொறுத்த வரையில் 100 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரை இணக்கு வசதி தரப்பட்டுள்ளது. இது நிச்சயமாகக் குறைக்கப்பட வேண்டும். அதற்காக நான் சில திருத்தங் களைக் கொடுத்து இருக்கிறேன். அந்தத் திருத்தங்களை நடைமுறையில் கொண்டுவருவதற்கு அரசு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் கொடுத்துள்ள திருத்தத்தை அரசு ஏற்க வேண்டும், பரிசீலிக்க வேண்டும் அந்தத் துறை அலுவலர்கள், அமைச்சர் என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த ஆய்வுக் குழு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நேரத் தில் ஒரு விவரம் புரிந்தது. சாதாரணமாக இருக்கும் கிராம அலுவலர்கள் நேரடியாக பயிர்களைப்போய் பார்க்காமல் சிலவிதமான அடங்கல் புத்த கத்தில் எழுதி விடுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதை அரசு கவனத் தில் கொள்ள வேண்டும். விவசாய வருமான வரி செலுத்துகிறவர்கள் சாதாரணமாக பெரிய அளவிற்கு லஞ்சத்திற்கும், ஊழலுக்கும் உள்ளாக்கப் படுகிறார்கள் என்ற விவரம் ஆய்வுக் குழு பரிசீலனையில் சாட்சியமளித்த வர்கள் மூலம் அறிந்தோம். அது இந்தச் சட்டத்தில் வரவில்லையென்றாலும், பிறகாவது ஏதாவது செய்யலாமா என்பதைப் பார்க்க வேண்டும். கேரளாவில் இருக்கும் சட்டத்தில் அந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட் டாலும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பரிசீலிக்க வேண்டும் என்ற நிலைமை இல்லாமல், ஒவ்வொரு ஆண்டும் பரிசீலித்து, அவ்வப்போது இருக்கும் நிலைமைக்கு ஏற்ப பரிசீலித்து, தவறுகளைக் களைந்து சரிசெய்ய வேண்டும் என சட்டத்தில் இருக்கிறது.

(மாலை 6-00)

அப்படிப்பட்ட ஷரத்து நம்முடைய சட்டத்திற்குத் தேவைப்படுகிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை அமைக்கும்போது இந்தக் குறையை தீர்ப்பதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்தச் சட்டத்தை வரவேற்று அமைகிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, வேளாண்மை வருமான வரியைப்பற்றிய சட்டம் பொறுக்குக் குழுவிற்கு சென்று, அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக் களைச் சொல்லி, இன்றைக்கு இங்கே உறுப்பினர்களுடைய கருத்துக்களைச் சொல்லிய பிறகு சட்டமாக நிறைவேறக் கூடிய வகையில் இந்தச் சட்ட முன்வடிவு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏறத்தாழ எல்லா மாவட்டங்களின் தலைநகர்களுக்கும் சென்று, அங்கே விவசாயப் பெருங்குடி மக்களைக் கேட்டு, விவசாயச் சங்கங்களைக் கேட்டு, எழுத்து மூலமாக அவர்களுடைய எண்ணங்களை அறிந்து, அவைகளை எல்லாம் வைத்து இன்றைக்கு சட்ட முன்வடிவு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவில் ஏறத்தாழ 87 நிறுவனங்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு சென்னையில் நான்கு நாட்கள் கூடி, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நீண்டநேரம் விவாதம் செய்து, அவர்களுடைய அரிய கருத்துக்களைப்பெற்று, இந்தச் சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

நான் முதலிலே தெரிவிப்பதெல்லாம், இந்தக் குழுவிலே எல்லாக் கட்சிகளி னுடைய (எதிர்க் கட்சிகளினுடைய) தலைவர்களும் இதிலே இருந்திருக் கிறார்கள். இது நடக்கிறபோது, அவர்களுடைய அரிய கருத்துக்களைச் சொல்லுகிறபோது, மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லுகிறபோது, அவர்கள் எல்லாம் இந்தக் குழுவில் ஒத்துழைத்ததற்காக அரசின் சார்பாக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே அவர்கள் கருத்துக்களைச் சொல்லுகிறபோது, நீண்டநாள் இதிலே பழக்கப்பட்டு இருந்தாலும், நீண்ட விவாதத்தில் ஈடுபடாமல் கருத்துக்களை சுருக்கமாக சொன்னதிலிருந்து அவர்களுக்கு நன்றாகத் தெரியும், இந்தச் சட்டம் நன்மை செய்கிற சட்டம் என்று. நான் இதைப்பற்றி விளக்கமாகச் சொல்வதாக இருந்தேன். ஆனால் என்னுடைய வேலையை மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் பெரிதும் குறைத்திருக்கிறார். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாய வருமான வரி விதிக்கிறோம் என்று சொன்னால் யாருக்கு விதிக்கிறோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இதைச் சொல்லுகிறபோது நான் மிக மகிழ்ச்சியோடு சொல்கிறேன். இதை அவசரமாகக் கொண்டுவர வேண்டியிருந்தாலும், ஓராண்டு கடந்திருக்கிறது என்றாலும், இன்றைக்கு இதை இங்கே கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று நாம் எண்ணுகிறபோது, மாவட்டந்தோறும் இருக்கிற ஏழை எளிய விவசாயிகளை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

ஏழை எளிய விவசாயிகள் வரி கொடுக்க முடியாமல் திண்டாடுகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லுகிறபோது, ஏழை விவசாயிகளை, அதிலும் வருமான வரி கட்டுகிற சில பேர்களுக்கு நியாயமாக விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தச் சட்டம் இங்கே வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அது அல்லாமல் இரண்டு கோடி ரூபாயை விவசாயிகளிடத்திலே இருந்து வசூல் செய்து, அதை அரசினுடைய கஜானாவில் சேர்க்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை அவசரமாகக் கொண்டுவந்த காரணம், விவசாய வருமான வரி கட்டுகிற, அதிலும் அடித்தளத்திலே இருக்கிற விவசாயிகளை, நடுத்தர விவசாயிகளை முதலிலே வரி கட்டுவதிலிருந்து விலக்களிக்க வேண்டும். அவ்வாறு விலக்கு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்பதை இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதனால் தான் ஆறு மாதத்திற்கு முன்னாலேயே கொண்டுவர நீங்கள் அனுமதித்து இருக்கிறீர்கள்.

விவசாய வருமான வரி என்ற உடனே இருக்கிற எல்லா விவசாயிகளும் கட்டுகிறார்கள் என்று எண்ணிவிட வேண்டாம். இன்றைக்கு நாட்டிலே 55,47,360 பேர் இருக்கிறார்கள். இதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த 55,47,360 பேர்மேலும் வரி போடுகிறார்களே என்று நீங்கள் எண்ண வேண்டாம்.

ஆனால் வரி செலுத்துபவர்கள் எத்தனை பேர்கள் என்று தெரியுமா? நான் முதலிலே சொன்னது இலட்சக் கணக்கிலே. கிட்டத்தட்ட 1 கோடிக்கு குறைவு. அரைக் கோடிக்கு மேல் உள்ளவர்கள் விவசாயம் செய்கிறார்கள். ஆனால் வரி போடப்பட்டிருப்பது யார் யாருக்குத் தெரியுமா? 67,403 பேருக்குத்தான் இன்றைக்கு வரி போட்டுக்கொண்டிருக்கிறோம். அதை நாங்கள் எண்ணிப் பார்க்கின்றபோது, ஏழைகளுக்காகப் பேசுகின்ற அரசு, விவசாயிகளுக்காகப் பேசுகின்ற அரசு என்கின்ற வகையில் இந்த 67 ஆயிரத்

1979 ஏப்ரல் 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

திலே யாரையாவது வெளியே அனுப்ப முடியுமா என்று நாங்கள் கேட்டோம், எண்ணிப் பார்த்தோம். அப்படிப் பார்க்கின்றபோது அந்த 67 ஆயிரம் விவசாயிகளில் ஏறக்குறைய 20 ஆயிரம் விவசாயிகள் இன்றைக்கு வரி இல்லாமல் போய்விடுகிறார்கள். இதை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி விலக்களிக்கப்படும் 20 ஆயிரம் விவசாயிகள் யாராக இருப்பார்கள்? அதிகம் உள்ளவர்களுக்கு விலக்கு கொடுக்க முடியாது. ஆனால் குறைந்த நிலம் உள்ளவர்களுக்குத்தான் விலக்களிக்கிறோம். ஆனால் விவசாயிகளுக்கு நன்மை செய்ய வருகின்ற சட்டமா அல்லது விவசாயிகளுக்கு கெடுதல் செய்ய வருகின்ற சட்டமா என்று கேட்டால் நாங்கள் மேல் மட்டத்தில் உள்ளவர் களுக்குத்தான் வரி போடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத்தான் திரு. வரதராஜன் அவர்கள் சொல்கிறபோது மேல் மட்டத்தில் உள்ளவர்களுக்கு இன்னும் அதிகமாக வரி போடவேண்டும் என்று சொன்னார்கள். அப்படி மேல் மட்டத்திலே உள்ளவர்களுக்கு வரி போட வேண்டும் என்று சொல்கிறபோது என் சிறிது மாற்றம் வந்தது என்பது உங்களுக்குத் தெரியும். சென்ற ஆண்டு என்று நான் நினைக்கிறேன். என்னுடைய நினைவு சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். 1—4—1978 என்று கருதுகிறேன். இந்த அவைக்கு அது வருகின்றபோது நான் அமைச்சராக இல்லை. ஆனால் இதிலே பல எதிர்ப்புகள் வந்த பிறகு பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. இந்த அவைக்கு வருகின்றபோது வரி போடவேண்டும் என்று சொல்லப்பட்டது, ஆனால் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்படுகிறபோது அங்கே வரியைக் குறைக்கவேண்டும் என்பதற்காக அனுப்பப்பட்டதே ஒழிய வரியையே சுத்தமாக எடுத்துவிட வேண்டும் என்பதற்காக அனுப்பப்படவில்லை. அப்படி என்றால் அது அன்றைக்கே இல்லாமல் போயிருக்கும். ஆகவே அந்த வழியிலே ஆராய்ந்து பார்த்து இன்றைக்கு இவைகளை எல்லாம் செய்திருக் கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இன்றைக்கு திரு. வரதராஜன் அவர்கள் பேசுகிறபோது மேல் நிலையிலே உள்ளவர்களுக்கு வரி போடவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அவர் எண்ணியவாறு போட முடியாவிட்டாலும் அதிகமான வருவாய் உள்ளவர்களுக்கு அவர்களுடைய வருவாயிலே 55 சதவீதத்தை வரியாகப் போடுவது அதாவது 100 ரூபாய் வந்தால் 55 ரூபாய்; 100 இலட்சம் வந்தால் 55 இலட்சம்; அல்லது 100 ஆயிரம் வந்தால் 55 ஆயிரம் என்றுதான் முன்னாலே வரி போட முடியும். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சட்டத்தில் அந்த 55 சதவிதம் என்பதை 65 சதவிதம் வரைக்கும் போடலாம் என்று மேல் மட்டத்திலே உள்ளவர்களுக்கு வரியைக் கூட்டி இருக்கின்றது இந்த அரசு.

ஆனாலும் ஒரேயடியாகக் கூட்டக்கூடாது என்பதற்காக குறைவாக கூட்டி இருக்கிறது. அதாவது 55-லேயிருந்து 65 சதவீதம்தான். அதாவது 55 ஆயிரத்திலே இருந்து 65 ஆயிரம்தான் என்ற அளவிலேதான் கூட்டப் பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகையால் இந்தச் சட்டம் ஏழை விவசாயிகளுக்கு, நடுத்தர விவசாயி களுக்கு நன்மை செய்கின்ற சட்டமாகத்தான் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு உறுப் பினர்கள் குறிப்பாகப் பேசினார்கள். நான் நீண்ட நேரம் பேசப் போவதில்லை என்பதற்குக் காரணம் யாருமே இதைப்பற்றி பேசுகின்றபோது அழுத்தம் திருத்தமாக இதைச் செய்யுங்கள் என்று பேச முடியவில்லை. காரணம் மனதில் ஒன்றிருக்கிறது—நான் இதைச் சொல்கின்றபோது யாரும் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது—இது ஒரு நல்ல சட்டம் என்று சொன்னாலும், பேச வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னார்கள். தென்னைக்கு ஒன்று : ஒன்று (1 : 1) என்று வைக்கவேண்டும் என்று சொன்னார்கள். நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது நெல் விளைகின்ற இடத்திற்கு சாதாரணமாக அளவை பூர்வமாக அதாவது ஒரு ஃபிசிக்கல் ஏக்கரை ஒன்று என்று வைக்கின்றபோது தென்னைக்கும் அப்படி வைக்கலாமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே அவ்வாறு வைக்க முடியாது.

அடுத்து பாக்கு பற்றிச் சொன்னார்கள். பாக்குக்கு முதலிலே எவ்வளவு என்றால் 3.3 ஏக்கருக்கு வரியே இல்லை. ஆனால் இன்றையதினம் எவ்வளவு தெரியுமா? 5 ஏக்கருக்கு வரி இல்லை. இதைத்தான் திரு. வரதராஜன் அவர்கள் சுட்டிக்காட்டினார். முதலிலே வரி இல்லாததை அதாவது முதலிலே இருந்ததைவிட நீங்கள் அதிகப்படுத்தி இருக்கிறீர்கள் என்று சுட்டிக் காட்டினார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அதைப்போலத்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்கிறபோது இதை வருவாய்த்துறை அமைச்சரவர்கள் மறுப்பார், அதற்கு விளக்கம் கொடுப்பார் என்று அப்போதே சொல்லிவிட்டார். ஆனால் திரு. வரதராஜன் அவர்கள் பேசும்போது, முதலிலே 4 ஏக்கர் அதாவது ஃபிசிக்கல் ஏக்கர், ஸ்டான்டர்டு ஏக்கர் அல்ல, அளவையில் அப்படி நான்கு ஏக்கர் வரைக்கும் வரியே இல்லை, ஆனால் இன்றைக்கு 6.67 ஏக்கர் வரை இல்லை என்றால் இந்த அரசைப் பற்றி என்ன கருதுவார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்று சொன்னார். ஆனால் அதற்குப் பிறகும் இங்கே வரியைப் போட்டு விட்டீர்களே என்று மாண்புமிகு உறுப்பினர்

1979 ஏப்ரல் 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னால் நான் அதற்கு என்ன பதில் சொல்ல முடியும் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தக் காரணத்தால் தான் இன்றைக்கு வரியைப் பொறுத்தவரையிலும் எந்த அளவுக்கு குறைக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைத்திருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குத்

(மாலை 6-10)

தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிக் குறைத்தாலும், அதிகநிலம் உள்ளவர் களுக்கு நாங்கள் வரி போட்டுக்கொண்டிருக்கிறோம். அதன்மூலம் சரி செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் உங்களுக்குச் சொல்வேன். திராட்சைக்கு முதலிலே 2 ஏக்கர்களுக்கு வரி யில்லை. இன்றைக்கு 4 ஏக்கர்கள் வரை வரியில்லை. மஞ்சளுக்கு ரகமாகப் பிரித்து 10, 16, 20 ஏக்கர் வரை வரியில்லை. இன்றைக்கு 8 ஏக்கர்கள் வரை வரியில்லை. கொட்டைப்பாக்கு, தேயிலை, ரப்பர் ஆகியவைகளுக்கு ஏற்கெனவே சொல்லிவிட்டேன். முன்பு 8 ஏக்கர் வரை வரியில்லை; இன்றைக்கும் 8 ஏக்கர் வரை வரியில்லை. காபிக்கு முன்பு 10 ஏக்கர் வரை வரியில்லை; இப்போது 8 ஏக்கர் வரை வரியில்லை. இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டே போவதானால், உங்களுக்கு இன்னும் சொல்லலாம்.

பூச்செடிகளை சாதாரணமாக ஏழைகள்தான் வைப்பார்கள். அப்படி பூச்செடிக்கு 10, 16, 20 என்று 3 ரகங்களாக பிரிக்கப்பட்டு வரியில்லை; இப்போது 20 ஏக்கர்கள் வரை வரியில்லை. காய்கறிக்கு முதலிலே 10, 16, 20 என்று பிரிக்கப்பட்டு வரியில்லை. இன்றைக்கு காய்கறிக்கு 20 ஏக்கர்கள் வரை வரியில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை போல் தான் பருத்தி. முதலிலே 10, 15 ஏக்கர்கள் என்று பிரிக்கப்பட்டு வரியில்லை. இன்றைக்கும் 10 ஏக்கர்கள் வரை வரியில்லை. இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டு போகமுடியும்.

மானாவாரியைப் பற்றிச் சொன்னார்கள். மானாவாரி நிலத்திற்கு வரியே இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அதே நேரத்திலே இன்னொன்றையும் சொன்னார்கள். விவசாயமே செய்யப்படாத நிலத்திற்கு வரி போடுவதா என்றார்கள். எப்படி வரி போடுவார்கள்? இதைத்தான் உங்களுக்குச் சொல்கிறேன். யார் விவசாயம் செய்யவில்லையோ, அப்படிப்பட்டவர்கள் விவசாயம் செய்யவில்லை என்று சொல்லிவிட்டால் போதும். அப்படிச் சொல்லிவிட்டால் அவர்கள் இந்த வரியை நீக்கிவிடுவார்கள்.

மாண்புமிகு வரதராஜன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சில இடங்களில் தவறுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படி சில இடங்களில் தவறுகள் இருக்கலாம். இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம்

நேர்மையானவர்கள் என்று நான் சொல்லவில்லை; ஒருசிலர் தவறு செய்யலாம். எங்கே தவறு இருக்கின்றது என்று சொல்லுங்கள். அந்தத் தவறைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற இந்தச் சட்டம் ஏழைகளுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற சட்டம். ஆனால், மேலிடத்திலே ஆயிரக்கணக்கான, 5,000 ஏக்கர்கள் நிலம் வைத்திருந்தால், அதாவது தேயிலைத் தோட்டம், ரப்பர் தோட்டம் வைத்திருப்பவர்கள் பேரில் போடப்பட்ட வரி இன்றைக்கு ஓரளவுக்கு கொஞ்சம் கூட என்றாலும், வரி போடப்பட்டிருக்கிறது. இன்னமும் போடுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முனனுள்ள கேள்வி :—

"தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1978) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

Clause 2.

Mr. DEPUTY SPEAKER : The question is :—

"That Clause 2 do stand part of the Bill".

THIRU S. SIVASAMY : Sir, I move the following amendment :— In sub-clause (3) of Clause 2—

(1) In item (viii), for the words "one half of an acre", substitute the words "one acre".

(2) In item (x), for the word "three", substitute the word "four".

(3) Omit items (x) and (xiii).

The amendment was duly seconded.

THIRU C. PALANIMUTHU : Sir, I move the following amendment :—

(1) In item (ii) for the word 'one fourth', substitute the word 'including'.

(2) In item (vi) omit the word 'coconut'.

(3) In item (xii) for the words 'other than' substitute the word 'including'

The amendment was duly seconded.

THIRU R. KRISHNAN : Sir, I move the following amendment—

In sub-clause (3) of clause 2—

(1) In item (iii) for the words 'one third' substitute the words 'one fourth'.

(2) For the existing item (x) substitute the following :—

(x) Two acres of unirrigated land used for growing one crop of ragi, cholam, cumbu, horsegram, gingelly, blackgram, mulbry and paddy.

The amendment was duly seconded.

THIRU J. JAMES : Sir, I move the following amendment :— In sub-clause (3) of clause 2—

(1) In item (iii) for the words 'one third', substitute the words 'two-fifths'

(2) Omit items (x), (xi) B and (xiii) (B).

The amendment was duly seconded.

THIRU O. S. VELUCHAMI : Sir, I move the following amendment.—

In sub-clause (3) of clause (2)—

(1) In item (iv) for the words 'two-fifths of an acre', substitute the words 'one acre'.

(2) In item (v) for the words 'two-fifths of an acre', substitute the words 'one acre'.

(3) In item (vi) for the words 'one half of an acre' substitute the words 'one acre'.

(4) In item (viii) for the words 'one half of an acre', substitute the words 'one acre'.

(5) Omit item (x).

(6) Omit (xi) (B).

(7) Omit items (xiii) (A) and (xiii) B.

The amendment was duly seconded.

The amendment of Thiru J. James was put and lost.

The amendments of Thiruvalargal S. Sivasamy, C. Palanimuthl, R. Krishnan and O. S. Veluchami were, by leave, withdrawn.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 2, சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 2 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு—4.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That Clause 4 do stand part of the Bill".

THIRU R. KRISHNAN : Sir, I move the following amendment :

In Section 65 of the principal Act for Clause (i) substitute the following :—

"any person who holds land

(*a*) not exceeding fifty standard acres wholly grown with non-plantation crops or

(*b*) not exceeding forty standard acres wholly grown with plantation crops may apply to the prescribed officer for permission to compound the agricultural income-tax payable by him and to pay in lieu thereof a lumpsum at the rate or rates specified in Part II of the schedule to this Act."

The amendment was duly seconded.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 4 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 4 நிறைவேற்றப்பெற்றது.

1979 ஏப்ரல் 28] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவு 5, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: "தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1978) நிறைவேற்றப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

(ஙு) பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான வருமானத்திற்கு வழி செய்யும் இந்த மசோ தாவின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். பொது விற்பனை வரியைப் பொறுத்தவரையில், மக்கள் அன்றாடம் உபயோகிக்கின்ற பொருட்களுக்கு வரிகளை விதிப்பதால் அவர் களுடைய வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படுகிறது. இந்த குறிப்பிட்ட மசோ தாவில் கையால் செய்த தீப்பெட்டிகளுக்கு 2 சதவிகிதம் ஒருமுனை விற்பனை வரி போடுவதை நாங்கள் ஏற்பதற்கில்லை. இதை விளக்கமாக சொல்ல வேண்டியதில்லை. கையினால் தீப்பெட்டி தயாரிக்கும்போது, அதனால் பல பேர்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கிறது. மெஷின்களினாலும் தீப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வெளிவருவதால் கையினால் செய்யப்படுகின்ற தீப்பெட்டிகளுக்கும் அதற்கும் மிகுந்த போட்டி ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் சில ஜில்லாக்களில் இந்த கையினால் தீப்பெட்டி தயாரிப்பது பிரபல்யமாக இருக்கிறது. இந்த நிலையில் கையினால் செய்த தீப்பெட்டி களுக்கு ஒருமுனை விற்பனை வரி போடுவதால் அந்தத் தொழிலாளர்களுடைய நலன்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படும் என்றிருப்பதால், அரசாங்கம் இந்த வரியை வற்புறுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 6.20)

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே விற்பனை வரியின்கீழ் தாக்கல் செய்துள்ள

* 1979, ஏப்ரல் 20 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மசோதாவின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டில் இருக்கின்ற பெரிய பிரச்னை வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டும் என்பது. அதற்காக சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில் களுக்கும் ஊக்கம் கொடுப்பது என்பது அரசாங்கத்தின் கொள்கை அளவில் இருந்து வருகிறது. கொள்கை அளவில் அப்படி அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு ஆதாரமாக இருக்கின்றதா என்று சொன்னால், உண்மையிலேயே இதுவரையிலே எந்தத் திட்டத்தையும் இந்த அரசாங்கம் அறிவிக்கவில்லை என்பதுதான் என் கருத்து. ஆனால், ஏற்கனவே இருக்கின்ற வேலைவாய்ப்பை அழித்துவிடாமல், காக்க வேண்டும். இந்த அரசு அதற்குத் தயாராக இல்லை என்று சொல்கின்ற அளவிலே இருக்கின்ற தொழிலை கெடுத்து விட்டு, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக் கின்றவர்களை ரோடிலே அலைய விடுவோம் என்ற கொள்கை முடிவிற்கு வந்திருக்கின்றது என்று சொன்னால், இந்த அரசாங்கத்தின் போக்கை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நாட்டிலே செய்கின்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில், தமிழகத்திலேதான் அதிகமாக உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டிற்குத் தேவையான ஏறத்தாழ 60 சதவிகித தீப்பெட்டிகளை நாம்தான் தயார் செய்கிறோம். இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் பொறுத்த மட்டில், விம்கோவில் இயந்திரத்தால் செய்யப்படுகின்ற தொழிலுக்கு போட்டி யாக இவைகள் அமைந்திருக்கின்றன. சிறு தொழில்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு மத்திய அரசு, கையினால் செய்யப் படுகின்ற தீப்பெட்டிப் பொருள்களுக்கு சலுகைகள் செய்து கொண்டிருக்கிறது. எப்படியும் இந்த நாட்டில் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று ஒரு பெரிய நல்ல நோக்கத்தோடு, இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மத்திய அரசாங்கம் எந்த நோக்கத்தில் இந்தத் தொழில் வளருவதற்கு, இந்தத் தொழில் மூலம் வேலை வாய்ப்பை உருவாக்குகின்ற வகையிலே சலுகைகள் கொடுக்கின்றதோ, அதற்கு உறுதுணையாக மாநில அரசு நேரடியாக இந்த மக்களுக்கு அவர்கள் நலனைக் காக்க கடமைப்பட்டிருக்கின்ற இந்த அரசு, இந்தத் தொழிலின் மீது வரிச் சுமையைப் போட்டிருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. எனவே, நான் இதைக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

நான் ஏற்கனவே சொன்னதுபோல், இந்த அரசு ஒருவேளை இன்றைய தினம் தவறான கருத்தைக் கொண்டிருக்கலாம். ஒரு பகுதியிலே உள்ள மக்கள் இந்தத் தொழிலை பெருவாரியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசியல் காரணம் இதிலே கலந்து இருக்கின்றதோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. ஆக, இந்த நோக்கத்தின் அடிப்படையில் செயல்பட்டால்,

இப்படி ஏற்படுகின்ற இந்த உணர்வுக்கு இந்த அரசுதான் பொறுப்பு. இந்த மாநிலத்திலே உருவாக்குகின்ற இந்த தீப்பெட்டி நமது மாநிலத்திலே மட்டுமல்லாமல், இந்தியாவிலுள்ள வேறு பல மாநிலங்களுக்கும் செல்கின்றது. ஆனால், இதே தொழில் மற்ற மாநிலங்களிலே பாதுகாக்கப்படுகின்றது. இப்போது, ஆங்காங்கே இந்தத் தீப்பெட்டிகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, பல்வேறு மாநிலங்களிலே செய்கிறார்கள். அது மட்டுமல்லாமல், தமிழகத்திலே இருந்து செல்கின்ற தீப்பெட்டிகளுக்கு அவர்கள் பல்வேறு டாக்சுகளை வரியாக வசூல் செய்கிறார்கள். உதாரணமாக, தமிழகத்திலே இருந்து செல்லுகின்ற தீப்பெட்டிகளுக்கு ஏறத்தாழ 13 சதவிகித வரி அங்கே விதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்த அளவிலே அவர்கள் அங்கே எந்த விலைக்கு விற்கக்கூடிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதையெல்லாம் இந்த அரசு சற்று சிந்திக்க வேண்டும். ஆகவே, இன்றையதினம் கையினால் செய்யப்படுகின்ற தீப்பெட்டிகளுக்கு நீங்கள் வரி விதிக்கிறீர்கள் என்று சொன்னால், மறைமுகமாக நீங்கள் விம்கோவை ஆதரிக்கிறீர்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை இங்கே நான் கூற விரும்புகிறேன். ஆகவே, மத்திய அரசுக்குத் துணையாக நிற்கவேண்டிய இந்த மாநில அரசு, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற ஏறத்தாழ 3 லட்சம் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஆனால், அதற்கு மாறாக இந்தவிதமாக விதிக்கப்படுகின்ற இந்த 2 சதவிகிதம் சேல்ஸ் டாக்ஸினால் என்ன விளைவுகள் ஏற்படுகின்றது என்று சொன்னால், வேலைவாய்ப்பு அளிப்பதற்குப் பதிலாக, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழில் அதிபர்கள் மற்ற மாநிலங்களுக்கு சென்று இந்தத் தொழிலை நடத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்குகிறீர்கள்.

இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் ஏறத்தாழ மூன்று லட்சம் தொழிலாளர்கள். அவர்கள் இதன் காரணமாகத் தெருவிலே அலைவார்கள் என்று எச்சரிக்க விரும்புகிறேன். மறைமுகமாக விம்கோவைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால் அதற்கு நிச்சயமாக உங்களுக்கு உரிமை இருக்கிறது, தாராளமாகச் செய்யுங்கள். ஆனால் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழைத் தொழிலாளர்களைச் சித்திரவதை செய்யக்கூடாது என்ற எண்ணம் அரசுக்கு இருக்க வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். அந்த வகையில் இந்த வரியை நிச்சயமாகக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கண்டிப்பாக இந்த வரியைச் சுமத்த வேண்டுமென்று எண்ணினால் அதனால் ஏற்படும் பலனை இந்த அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: இந்த விற்பனை வரியை உயர்த்தக்கூடாது என்று ஏற்கனவே பட்ஜட் உரையில் பேசும்போதே கூறியிருக்கிறேன். தேங்காய் மீது போட்ட வரியை நீக்கியது போல் தீப்பெட்டி மேல் போட்ட

வரியையும் நீக்கியிருக்க வேண்டும். தமிழகத்தில் குறிப்பாக கோவில்பட்டி வட்டாரத்தில் பெரும்பகுதி கிராமத்திலும் நகரத்திலும் சாதாரண ஏழை எளிய மக்கள் வீட்டில் வைத்து தீப்பெட்டித் தொழிலைச் செய்து வருகிறார்கள். பல லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. வரி போடுவதன் மூலம் வேறு பல மாநிலங்களிலே இதன் விற்பனை குறையும். வட நாட்டு வியாபாரிகள் இங்கே வந்து வாங்கிப் போகிறார்கள். அந்தந்த மாநிலங்களின் வரி வேறு இருக்கிறது. ஆகவே, கையால் செய்கிற தீப்பெட்டிக்கு வரி போடுவதால் இந்தத் தொழில் பாதிப்பதோடு வேலை வாய்ப்பு குறையும். மத்திய சர்க்கார் மெஷின் மூலம் செய்கிற தீப்பெட்டிக்குத் தான் அதிகமாக வரி போட்டு அதையும் சற்றுக் குறைத்திருக்கிறது. விவசாயம் பயன் இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமையில், மகசூல் இல்லாத நிலைமையில் ஆங்காங்கு இருக்கக்கூடியவர்கள் அந்தந்த ஊர்களில் பத்தாயிரம், பதினைந்தாயிரம் முதல் போட்டு இந்தத் தொழிலைச் செய்வதன் மூலம் அந்தந்த வட்டாரத்தில் பத்து இருபது பேர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிறு சிறு குழந்தைகள் கூட நாளைக்கு 3 ரூ. 4 ரூ. வருமானம் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த வரி அந்தத் தொழிலைப் பாதிப்பதோடு வேலை வாய்ப்பைப் பாதிக்கும். இந்த வரியை கடைசி நேரத்திலாவது வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு மீறி இதைக் கொண்டு வந்தால் இதை எதிர்க்கிறேன், கண்டனத்தைத் தெரிவிக்கிறேன் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, தீப்பெட்டிக்குப் போட்ட வரியைப்பற்றி கைவிடவேண்டுமென்று முன்பே பட்ஜெட் டிமாண்ட் வருகிறபோதே வலியுறுத்தி அதனைக் கைவிட வேண்டுமென்று எதிர்த் தரப்பில் இருக்கும் அவ்வளவு பேரும் பேசி இருக்கிறோம். அப்போதே நிதியமைச்சர் அவர்கள் தேங்காய் வரியை எடுத்தார்கள், இதை எடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அவர் எடுக்க முடியாது என்று சொன்ன பிறகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் அதைச் செய்வாரா என்று தெரியவில்லை. இன்றைக்கு முதலமைச்சரும் இல்லை. ஆகவே, காபினட் தான் முடிவு செய்ய வேண்டும். இந்த வரியைப் போடக்கூடாது என்பது எல்லோருடைய அபிப்பிராயமும். இப்போது எப்படியும் இதை பாஸ் பண்ணப் போகிறார்கள். இப்போது நிறைவேற்றினாலும் பிறகு காபினட்டில் வைத்து இதை ரத்து செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். நீங்கள் அதை

(மாலை 6-30)

ரத்து பண்ணுவதற்கு ஒரு முயற்சி பண்ணுங்கள். இது தீப்பெட்டித் தொழிலைப் பாதிக்கும் என்று எல்லோரும் சொல்கிறார்கள், பத்திரிகைகளிலே பெரிய விளம்பரங்கள் அதைப்பற்றி வருகின்றன, பாதிக்கும் என்று அவர்களும் சொல்கிறார்கள், அதிலே சிரமம் இல்லையென்றால் அதைப்பற்றிச் சொல்ல

1979 ஏப்ரல் 28] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

மாட்டார்கள். எனக்குக் கிடைத்த தகவலின்படி நான் பார்க்கிறபோது நாம் தான் 70 கோடி ரூபாய் அளவிற்கு இதை உற்பத்தி பண்ணுகிறோம். அது வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இங்கே அதற்கு வரிபோடுவதாலே அங்கே போட்டா போட்டி காம்பெடிஷன் ஏற்பட்டு அதனால் விற்கமுடியாமல் போகுமோ என்று உற்பத்தியாளர்கள் கருதுகிறார்கள். ஆகவே இந்தத் தொழிலைப் பாதுகாப்பது அரசாங்கத்தினுடைய கடமை. ஆகவே இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்வது இந்த வரியை கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவில் தீப்பெட்டியைப்பற்றி, அதிலே போடப்பட்டிருக்கிற வரியைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் எண்ணங்களைச் சொல்லி இருக்கிறார்கள். இப்போது மட்டுமல்ல, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை வந்தபோதுகூட இதே கருத்துக்களை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சொன்னாலும் அப்போது நிதியமைச்சர் சொல்கிறபோது தீப்பெட்டிக்கு ஏன் வரிபோட்டோம் என்பதைப்பற்றிச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு வரிபோடப்பட்டு வசூலாகிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு சட்டசபை நடைபெறுவதனால் இந்தச் சட்ட முன்வடிவை இங்கே கொண்டுவந்து நிறைவேற்றுகின்ற வகையிலே நான் அவைமுன் வைத்திருக்கிறேன். ஆனால் நீங்கள் சொல்கிற போது அரசுக்கு வரி வந்துவிடுகிறதே என்ற எண்ணத்தினாலே நீங்கள் யாரும் சொல்லவில்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதே நோக்கிலே சிறு தொழில்கள் செய்கிறவர்களை இந்த அரசாங்கம் நசுக்கிவிடாது என்ற நல்ல எண்ணமும் உங்களுக்கு இருக்கிறது என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். ஏழைகள் மீது நாங்கள் வரி போடமாட்டோம் என்பதும் உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். வரி போடுவது என்றால் யார் குறுக்கே வந்தாலும், அவர்கள்மீது வரிகளைப் போடுகிற அரசு இது அல்ல என்பது நிச்சயமாக உங்கள் எல்லோருக்கும் தெரியும். இருக்கின்ற சில உண்மைகளை ஒருவருக்கொருவர் ஆழமாக நீங்கள் யோசித்துத் தெரிந்து கொள்ளாததால் நீங்கள் இதை எதிர்க்கிறீர்கள், வரவேற்கவில்லை. வரவேற்காததற்குக் காரணம், உங்களுக்கு இருக்கிற எண்ணம் அந்தக் குச்சியைச் செய்கிற சாதாரணத் தொழிலாளர்கள், ஒரு நாளைக்கு அவர்கள் 4, 5 ரூபாய் வாங்கும் அவர்கள்மேல் இந்த வரி வந்துவிடுமோ என்று எண்ணிச் சொல்கிறீர்கள் அல்லது அவர்களுக்கு எல்லாம் வேலை குறைந்துவிடுமோ அல்லது இங்கே இருக்கிற பெரிய தொழில் வேறு மாநிலத்திற்குச் சென்று விடுமோ என்ற ஐயம் உங்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட ஐயம் உங்களுக்குத் தேவை யில்லை என்பதை நான் இந்த அரசின் சார்பிலே உங்களுக்கு உறுதியாகத்

தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இருக்கின்ற இந்த தீப்பெட்டித் தொழில் வேறு எந்த மாநிலத்திற்கும் போகக்கூடாது என்று கண்காணிக்கின்ற பொறுப்பு நம் எல்லோருக்கும் இருக்கிறது. நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டுமானால், அண்டை மாநிலங்களிலே இதற்கு வரி போடுகிறார்களா என்றால் போடுகிறார்கள், அவர்கள் எவ்வளவு போடுகிறார்கள் என்று உங்களுக்குச் சொன்னால் நாம் போடுவது மிகக் குறைவு என்று நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். அண்டை மாநிலமான கேரள மாநிலத்திலே 3 சத வீதம் சிங்கிள் பாயின்ட், ஒரு முனைவரி போடப்பட்டிருக்கிறது. ஆனால் ஆந்திர மாநிலத்திலே 4 சதவிதம் மல்டி பாயின்ட், மல்டி பாயின்ட் என்றால் அதைவிட அதிகமாகப் போகும் என்பது நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கர்நாடக மாநிலத்திலே 4 சதவித மல்டி பாயின்ட், பல முனை வரி போட்டு இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசு எல்லாம் சேர்த்துப் போட்டிருப்பது எவ்வளவு தெரியுமா, 2 சதவிதம் சிங்கிள் பாயின்ட். இதிலிருந்து நீங்கள் எல்லாம் ஓரளவிற்கு ஒத்துக்கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியும், பூராவாக இல்லாவிட்டாலும்

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, வேறு மாநிலங்களிலே இங்கே இருந்து அனுப்பப்படுகின்றவைகளுக்கு வரி போடுகிறார்களா? நம்முடைய அளவிற்கு வேறு மாநிலங்களிலே அந்த உற்பத்தி இருக்கிறதா என்பதையும் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் தீப்பெட்டி செய்யப் படுகிறது என்றால் இயந்திரத்தால் செய்யப்படுகிறது, கையால் தயாரிக்கப் படுகிறது, கூட்டுறவுச் சங்கத்தால் தயாரிக்கப்படுகிறது, இந்த மூன்றையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 1966 ஆம் ஆண்டிலே இந்தத் தீப் பெட்டிக்கு இரண்டரை சதவிதம் வரி இருந்தது. ஆனால் இரண்டரை சதவிதம் வரியிலிருந்து, பிறகுதான் எடுக்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டிலே எடுக்கப்பட்டது என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால் இங்கே கையால் செய்யப்படுவதாலே மத்தியப் பேரசிடத்திலே கோரிக்கை விட்டார்கள், இயந்திரத்தால் செய்யப்படும் விம்கோ போன்ற தொழிற்சாலை களோடு அவர்களால் போட்டி போட முடியவில்லை, எங்களுக்கும் அவர்களுக்கும் ஆகும் செலவில் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அப்படிக் கேட்கிறபொழுது அவர்கள், சிவகாசியிலுள்ள தீப்பெட்டி உற்பத்தியாளர்கள், விம்கோ தீப்பெட்டிக்கும், தாங்கள் உற்பத்தி செய்கிற தீப்பெட்டிக்கும் குரோஸ் ஒன்றுக்கு 1 ரூபாய் 50 காசு வித்தியாசம் இருக்க வேண்டுமென்றுதான் கோரிக்கை வைத்தார்கள். இதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். கோரிக்கையை மறுபடியும் சொல்

கிறேன், சிவகாசியிலுள்ள தீப்பெட்டி உற்பத்தியாளர்கள், விம்கோ தீப்பெட்டிக்கும், தாங்கள் உற்பத்தி செய்கிற தீப்பெட்டிக்கும் குரோஸ் ஒன்றுக்கு 1 ரூபாய் 50 காசு வித்தியாசம் இருக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். ஆனால் மத்திய அரசு குரோஸ் ஒன்றுக்கு 2 ரூபாய் 70 பைசா வித்தியாசத்திலே வரியைப் போட்டது. அதற்குப் பிறகு நாம் வரி போட்டிருக்கிறோம். அப்படிப் போடும்பொழுது (குறுக்கீடு) அந்தக் கோரிக்கைக்குப் பிறகு அதைவிட வித்தியாசம் வேண்டுமென்று கோரிக்கை வைக்கவில்லை. கோரிக்கை எப்பொழுது வைத்தால் என்ன? ஆனால் அதற்குப்பிறகு இன்றைக்கு நமது அரசு வரி போட்ட பிறகு, அவர்களுக்கு இன்றைக்கிருக்கிற வித்தியாசம் 2 ரூபாய் 40 பைசா. 1 ரூபாய் 50 பைசா இன்றைக்குக் கொடுக்க முடியாது, 2 ரூபாய் 40 காசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, விம்கோவிற்கு மத்திய அரசின் எக்சைஸ டியூட்டி 7.20 இப்பொழுது. இந்த பெரிய அளவில் கையால் செய்யப்படும் தீப்பெட்டிக்கு 4 ரூபாய் 50 பைசா இப்பொழுது வருகிறது. 4 ரூபாய் 50 பைசா இருப்பதை மேலும் குறைத்தால்தான் தாங்கள் இருக்க முடியும் என்று அவர்கள் கோரிக்கையை வலியுறுத்தி மத்திய அரசிடம் கேட்டிருக்கிறார்கள். அந்தச் சந்தர்ப்பத்திலே நாம் இரண்டு சதவீத வட்டியை அவர்களுக்குச் சுமத்துகிறோம்.

* மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, கோரிக்கை வந்து சலுகை கொடுத்த பிறகு கோரிக்கையைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற நிலைமையைச் சொல்கிறேன். விம்கோவிற்கும் இவர்களுக்கும் இருக்கின்ற வித்தியாசம், இன்றைக்கு எவ்வளவு சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்

இதைப்போல கூட்டுறவு முறையால் செய்யப்படுகிற தீப்பெட்டிக்கு ஒரு குரோசுக்கு வித்தியாசம் 7 ரூபாய் 60 காசு. கூட்டுறவுத் தொழிற்சாலைகள் மூலம் செய்பவர்களுக்கு மத்திய அரசு அதிகமான சலுகை கொடுத்திருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான்—இன்னும் நான் சொல்ல வேண்டுமானால் நான் அமைச்சராக வந்தவுடனே இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து, ஆறு மாதங்களுக்கு முன்னாலேயே கொண்டுவர வேண்டுமென்று எண்ணினேன். ஆனால் எல்லோரும், இப்பொழுது வந்த அவசரத்திலே வேண்டியதில்லை என்று சொன்னார்கள். நான் உங்களுக்குச் சொல்வேன், ஏழை எளியவர்கள்மீது வரி போட வேண்டுமென்று இந்த அரசும் எண்ணாது, நானும் கருத மாட்டேன், இன்றைக்கிருக்கின்ற முதலமைச்சரும் கருத மாட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். வரி போடுவதன் நோக்கம், இன்றைக்கு இந்த அரசுக்குக் கோடிக்கணக்கான பணம் வர வேண்டுமென்று

அல்ல, நான் இன்றைக்கு உங்களுக்குச் சொல்வேன், சிவகாசியிலே மட்டும் செய்யக்கூடிய தொழிற்சாலையிலே 71 கோடி ரூபாய் இன்றைக்குச் செய்கிறார்கள். 1966-இல் 2.79 கோடி, இன்றைக்கு 71 கோடி. எனவே, இந்த வரி பணக்காரர்கள் மேல்தான் போடப்படுகிறது, பணக்காரர்கள்தான் கட்டுகிறார்கள் என்பது ஒன்று. இதை நன்றாக உணர்ந்தால், நம்முடைய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கட்சித் தலைவரவர்களிடம் நான் விவரம் கொடுத்திருக்கிறேன், நீங்கள் வேண்டுமானால் படித்துவிட்டுச் சொல்லுங்கள் என்றேன். நீங்களெல்லாம், இது பணக்காரர்களுக்கு இல்லை, ஏழைகளைத்தான் பாதிக்கும் என்று நீங்கள் எல்லோரும் கருதினால், நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏழை மேல் போடப்படும் வரி என்று எந்த நேரத்திலே பட்டதோ அதற்கு அடுத்த வினாடியே இந்த வரியை எடுத்து விடுவதற்கு என்றைக்கும் இந்த அரசு தயங்காது என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், சிவகாசியில் 71 கோடி ரூபாய்க்கு தீப்பெட்டி உற்பத்தி செய்வதாகச் சொல்கிறார்கள். அது உண்மைதான். ஆனால் மத்திய அரசுக்கு எக்சைஸ்

(மாலை 6-40)

ட்யூட்டியாக 30 கோடி ரூபாய் அவர்கள் செலுத்துகிறார்கள். அதில் மாநில அரசுக்கு வருகின்ற வருவாய், பங்குத் தொகை ரூ. 12 கோடி என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தத் தொழில் இங்கேயிருந்து அழிக்கப்பட்டால், மாநில அரசு ரூ. 12 கோடியை இழக்கும் என்பதை, சிவகாசி என்பதை மனதில் எண்ணியிருந்தாலும், இந்த இழப்பை நீங்கள் மனதில் கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அவர்கள் சொல்கிறபொழுது ஒன்றைச் சொன்னார்கள். வேண்டுமென்றுதான் பதில் சொல்லவில்லை. அரசியல் காரணங்களுக்காக போடப்பட்டது என்று எண்ணுகிறேன் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னார்கள் என்று சொல்லுக்குச் சொல் திருப்பிச் சொல்லக்கூடாது என்று நான் விட்டுவிட்டேன். நான், இதில் அரசியல் நோக்கம் இல்லை என்பதை மிகமிகத் தெளிவோடு சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். 2 சதவிகிதம் எவ்வளவு சாதாரணம் என்பதையும், அதனால் அவர்கள் அழிய மாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஏழைகள் மீது விதிக்கப்படுகின்ற வரி என்று எந்த நேரத்திலே தெரிவித்தாலும், இந்தச் சட்டமன்றம் இல்லாத நேரத்திலும், நான் முதலமைச்சரிடம் அனுமதி வாங்கி, அதை நீக்கத் தயாராக இருக்கிறேன். அதே நேரத்திலே, இங்கே இந்த விற்பனை வரி போடுவதாலே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இந்தத் தொழில் நின்று விடும் என்று கருதினால், நீங்கள் சொன்னால், அதை உடனடியாகக் கவனிப்பதற்கு இந்த அரசு பின்வாங்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவா வர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்."

என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ச) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்று மொழிகிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, இப்பொழுது இந்த கேளிக்கை வரி சம்பந்தமாக, மசோதா ஒன்றை நமது மாண்புமிகு அமைச்சர வர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். இதிலே, கம்பவுண்டிங் டாக்சில், 'ஓப்பன் ஏர் தியேட்டர்' விடப்பட்டிருக்கிறது. அவைகளும் இந்தச் சட்டத்திற்கு உட்பட்டு கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த மசோதா வினுடைய நோக்கம். முன்னாலே இருந்த வரியை, புதிய முறையிலே

* 1979 ஏப்ரல் 25 தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திருத்தி, கம்பவுண்டிங் டாக்ஸ் கொண்டுவரப்பட்டது. இதுவரையிலும், இந்தத் திருத்தத்தினாலே, கம்பவுண்டிங் செய்வதனாலே, அரசுக்கு ஏற்பட்ட வருவாய் அதிகரித்திருக்கிறதா, அதனாலே என்ன பலன் இருக்கிறது என்பதைப்பற்றி அரசு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவையைப் பொறுத்தவரை, எங்களுக்குத் தெரியாது. ஏனென்றால், முன்பு ஒரு அமெண்ட் மெண்ட் கொண்டு வந்து செக்கன்ட் கிரேட் முனிசிபாலிட்டீஸ், அதற்குக் கீழே இருக்கிற பஞ்சாயத்துக்கள் இவைகளிலுள்ள பர்மனென்ட் தியேட்டர்ஸ், செமி-பர்மனென்ட் தியேட்டர்ஸ், டூரிங் டாக்கீஸ், இவைகளுக்கெல்லாம் இந்த முறையில் வரி விதித்து வசூல் செய்திருக்கிறோம். இதனால், வருமானம் குறைந்திருக்கிறதா, அல்லது குறையாமல் அதிகரித்திருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை.

ஆனால் இப்படிப்பட்ட வரிகளால் வருமானம் அதிகரிப்பு கிடைத்திருக்குமே யானால் அதை வேறு இடங்களுக்கும் விஸ்தரிக்க முடியாதா என்பதைப்பற்றி அரசு ஆலோசிக்க வேண்டும். யாருக்கும் சிரமம் இல்லாமல், வரி உயர்வு இல்லாமல், வருமானம் அதிகரித்திருக்குமேயானால் இதை வேறு, அப்படி இல்லாத இடங்களுக்கும் ஏன் விஸ்தரிக்க கூடாது என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும்.

* திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரி சம்பந்தமாக அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம் சுமார் 6 கோடி ரூபாய் வரை குறையும் என்பதுதான் என்னுடைய கருத்து. முன்னாலே இருந்ததைவிட மொத்தத்திலே வரக்கூடிய வருமானம், மொத்தத் திலே பார்க்கும்போது நஷ்டம்தான், குறைவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். தேர்டு கிளாஸ் முனிசிபாலிட்டி, செகண்ட் கிளாஸ் முனிசி பாலிட்டி, பஞ்சாயத்துக்கள் இப்படி பல இடங்களில் உள்ள தியேட்டர்களில் எவ்வளவு மொத்த வருமானம் என்பதைப் பொருத்து வரிபோட்டு ஒரு டிக்கெட்டுக்கு இவ்வளவு என்று இருந்ததை இப்போது மாற்றி கொண்டு வந்திருக்கிறீர்கள். இதனால் கிராமப்புறங்களிலே இருக்கிற டூரிங் தியேட்டர் களுக்கு, சிறு தியேட்டர் சொந்தக்காரர்களுக்கு இந்த வரிகள் அதிகமாக்கப் பட்டு, வரிகளை கட்டமுடியாத அளவிற்கு வருமானம் இல்லாமல் தியேட்டர் களை மூடும் அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பெரிய நகரங்களிலே இருப்பவர்களுக்கு இந்தச் சட்டத்தினால் அதிக லாபம் கிடைத்திருக்கிறது, அவர்களுக்கு இதிலே ஆதாயம் இருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வரி குறைந்திருக்கிறது. நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். கிராமப்புறங்களில் டூரிங் டாக்கீசுகளை மூடிவிடுவதால் கிராமப் பஞ்சாயத்துக்கள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வரி குறைந்திருக்

1979 ஏப்ரல் 28] (திரு. சோ. அழகர்சாமி)

கிறது. இங்கே நகர்ப்புறங்களில் இந்த வரி விதிப்பு முறையினால் முன்னாலே கட்டியதைவிட இந்தப் பெரிய தியேட்டர் முதலாளிகள் குறைவாகவே வரி செலுத்துகிறார்கள். அவர்களுக்கு இதிலே லாபமும், ஆதாயமும் இருக்கிறது. மொத்தத்திலே போட்டிருக்கிற வரிகளின் காரணமாக பாதிப்புத்தான் அதிகமாக இருக்கிறது. எதற்கு வேண்டுமோ அதற்கு போடுவதில்லை. பெரிய முதலாளிகளுக்கு போட்டிருக்கலாம், ஆனால் அவர்களுக்கு வரி குறைப்பு ஏற்பட்டிருக்கிறது. வேண்டாம் என்பதற்கெல்லாம் வரி போடு கிறீர்கள். தீப்பெட்டிக்கு வரி போட்டீர்கள், இப்படி பாதிக்கக்கூடியவர்களுக்கு எல்லாம் வரியைப் போட்டிருக்கிறீர்கள். யாருக்கு போடவேண்டுமோ அவர்களுக்கு போடவில்லை. இதனால் அரசாங்கத்திற்கும் ஸ்தல ஸ்தபானங் களுக்கும் வருமானம் குறைந்திருக்கிறது. ஆனால் சினிமா பார்க்கக்கூடிய ஆட்களுக்கு ஆதாயம் ஒன்றும் இல்லை, அவர்களுக்கு கட்டணம் குறைந்திருக் கிறதா என்ன அது ஒன்றும் இல்லை. பழைய வரி விதிப்பு முறையை மாற்றி புதிய வரி விதிப்பு முறையை கொண்டு வந்ததன் காரணமாக பெரிய நகரங் களிலே முனிசிபாலிட்டி, பர்ஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸ் நகரங்களிலே தியேட்டர் முதலாளிகளுக்குத்தான் அதிகமான அளவு லாபமும், ஆதாயமும் கிடைத்திருக்கிறது. ஆனால் பட்டிக்காட்டில் இருக்கக்கூடியவர்களுக்கு, டூரிங் டாக்கீஸ் வைத்திருப்பவர்களுக்கு நஷ்டம்தான் ஏற்படுகிறது. அவர்கள் பணத்தைச் செலவழித்துக் கொண்டு, பஸ் சார்ஜ் கொடுத்து நகரங்களுக்கு சினிமாவுக்கு வரவேண்டியிருக்கிறது.

ஆகையால் முன்னாலே இருந்ததைப்போல இருக்காமல், அதை மாற்றி சட்டத்திருத்தம் கொண்டு வந்ததன் காரணமாக பெரிய தியேட்டர் முதலாளி களுக்கு சலுகை கொண்டுவருவதற்காகத்தான் இதைக் கொண்டுவந்திருக் கிறீர்கள் என்ற குற்றச்சாட்டையே சொல்லி, அதனால் நாங்கள் இதை எதிர்க்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

* திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய கேளிக்கை வரி திருத்த மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது இதை மூன்று மட்டமாக இந்த வரியை பிரிக்கலாம். பஞ்சாயத்துக்களுக்கு அங்கே பஞ்சாயத்துக்களில் இருக்கக்கூடிய தியேட்டர்களுக்கு இந்த வரி கொண்டுவரப்படும் என்பது ஒரு கட்டம், இரண்டாவது கட்டம் நகர சபைகள், நகரசபைகளில் இருக்கக்கூடிய தியேட்டர்களுக்கு இந்த வரி உண்டு என்பது, மூன்றாவது கட்டம் சிடியிலே இருக்கக்கூடியவர்களுக்கும் இது உண்டு என்பது.

இதிலே பஞ்சாயத்துக்களிலே இருக்கக்கூடிய தியேட்டர்களிலே ஏறக்குறைய காம்பவுண்டிங் முறையிலே அதிகாரிகளுடைய தலையீடு நீங்கி இன்றைக்கு வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இதிலே ஒன்றும் தவறு இல்லை. இரண்டாவது கட்டமாக நகரசபை, செகண்ட் கிளாஸ் முனிசிபாலிட்டி வருகிறது. அதிலே வரக்கூடிய வருமானம்—அதுவும் கம்பவுண்டிங் முறையிலேதான் வருகிறது. அரசாங்கத்திற்கும் இதுவரையில் சரியான முறையில்தான் வந்து கொண்டிருக்கிறது. எப்படியும் கம்பவுண்டிங் என்று போட்டுவிட்டால் அதிகாரிகளுடைய கவனம் போகாது, அதிகாரிகளுடைய தலையீடும் இருக்க முடியாது. 3-வது பிரிவு—பர்ஸ்ட் கிளாஸ்

(மாலை 6-50)

முனிசிபாலிட்டிகள் இருக்கும் நகரத்தில் இருக்கும் சினிமா தியேட்டர்கள் வரியை உயர்த்திக்கொண்டு இருக்கிறார்கள். 2 1/2 ரூ. டிக்கெட் என்றால் 2.60 வரியாக வந்துவிடுகிறது. இது சரியாக அரசாங்கத்திற்கு வருகிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. இரண்டு பிரிவுகளில் எப்படி கம்பௌண்டிங் செய்துகொள்ள வாய்ப்பு கொடுக்கப்படுகிறதோ, அதைப்போலவே இந்த 3-வது பிரிவான பர்ஸ்ட் கிளாஸ் முனிசிபல் நகரங்களிலும் உள்ள சினிமா தியேட்டர்கள் கம்பௌண்டிங் செய்துகொள்ள இந்த அரசாங்கம் அனுமதி அளிக்க வேண்டும். சமீபத்தில் முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். நான் ஒரு இன்பமான செய்தி சொல்லப் போகிறேன் என்று சொன்னார்கள். பர்ஸ்ட் கிளாஸ் முனிசிபாலிட்டி அல்லது நகரத்தில் இருக்கும் சினிமா தியேட்டர்களுக்கும் கம்பௌண்டிங் முறை வைத்து விடுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அந்த இலாகா ஏன் அதில் கவனம் செலுத்தவில்லை? முதலமைச்சர் அவர்கள் ஆர்வமாகச் சொன்ன பின்னாலும் கூட அந்த இலாகா ஏன் தாமதத்தைச் செய்து கொண்டு இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, அதை உடனடியாகச் செய்ய வேண்டும். எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள்—திங்கட் கிழமையே கூட உருவாக்கலாம் என்று சொன்னார்கள். திங்கட் கிழமையே இல்லையென்றாலும் முதலமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தைகளை அரசாங்கம் காப்பாற்ற வேண்டும். நகரத்தில் உள்ள தியேட்டர்கள்—பர்ஸ்ட் கிளாஸ் முனிசிபாலிட்டிகளில் உள்ள தியேட்டர்கள்—கம்பவுண்டிங் முறையில் வரி வசூலிக்க அனுமதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் உரிய முறையில் இன்னும் கூடுதலாக அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கும் என்று தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கேளிக்கை வரிச் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்டு இருக்கும் திருத்தத் தீர்மானத்தின் மீது

சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் கொண்டு வருகிற திருத்தம் மிகவும் தேவையானது என்பதை யாரும் மறுத்து கூட முடியாது. நல்ல பல திருத்தங்கள் சட்டத்தில் கொண்டு வருவதன் மூலம் வருவாயைப் பெருக்க முடியும், மக்களும் மகிழ்ச்சியோடு இருக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் சில கருத்துக்களை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது திறந்த வெளி அரங்குகள் என்பது கட்டப்படுகின்றன. அதற்கு கிட்டத்தட்ட 1 லட்ச ரூபாய் வரை செலவாகிறது. முன்பு டூரிங் தியேட்டர்கள் அதிகம் கட்டப்பட்டு வந்தன. அவற்றிற்கு சுமார் 40—50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகலாம். ஆனால் இப்போது பர்மனென்ட் தியேட்டர் என்ற முறையில் 'ஓப்பன் எர் தியேட்டர்கள்' கட்டப்பட்டு வருகின்றன. உதாரணமாக, சோமங்கலத்தில் திரு. என். கிருஷ்ணசாமி அவர்கள் அதைக் கட்டியிருக்கிறார்கள். அந்தத் தியேட்டரில் சுமார் 1,500 முதல் 1,750 மக்கள் சினிமா பார்க்கலாம். கடந்த ஓராண்டு காலமாக அந்தத் திரையரங்கு நல்ல முறையில் லாபகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது. அங்கே டிக்கெட் விலை 0.45 பைசா, 0.70 பைசாதான். 4—5 ரூபாயில் ஒரு குடும்பமே சினிமா பார்த்து விடலாம். அதனால் நிறைய மக்கள் சினிமா செல்வதற்கு முடியும். அதே மாதிரி முறையில் நகரத்தில் சினிமா பார்க்க வேண்டும் என்றால் ஒரு குடும்பத்திற்கு அதைவிட 5 மடங்கு செலவாகும். ஆகவே, இந்தமாதிரி திரையரங்குகளை ஊக்குவிப்பதன் மூலம், சாதாரண மக்கள் அதிகமான அளவிற்கு சினிமா பார்க்கவும் இயலும். ஆகவே, அந்த வகையில், சாதாரண மக்கள் பயன்பெறவும், அவர்கள் சுகாதாரம் பெருகவும், சமூக நலம் பெறவும், வளரும் சமுதாயம் காக்கப்படவும், ஒவ்வொரு கிராமத்திலும் 1 லட்ச ரூபாய் அளவில் திறந்த வெளி திரையரங்குகள் கட்டுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் கட்டணமும் குறைந்த அளவில் இருக்கும். அதிக மக்களும் பயன்பெற வாய்ப்பும் ஏற்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இதைப்பற்றி ஏற்கெனவே துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் 16—2—1979 இந்து பத்திரிகையில் அது செய்தியாக வந்து இருக்கிறது. அது குறித்து கட்டுரையாகவும் வந்து இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் திறந்த வெளி கலையரங்கங்களில் எப்போதுமே 4 ஷோ, 3 ஷோ போட முடியாது. இரண்டு ஷோ தான் போட முடியும். மிகக் கடுமையான மழை வருகிற நேரத்தில்தான் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இதற்காகப் போட்டு இருக்கும்

the percentage of tax to be multiplied by 10.5 instead of 12'

என்று இருக்கும் நிலையை மாற்றி

'to add the following as (1) (*a*) "any week during which 50 per cent or more of the shows are cancelled due to rain, such weeks shall not be taxed, subject however to be a maximum of 8 weeks in a year".

என்று இருக்கக்கூடிய நிலையில் இதை இன்றைய தினம் 12 சதவிதம் என்று இருந்ததை 10.5 சதவிதம் என்று மாற்றியிருக்கிறார்கள். அதை 11 சத விதம் என்ற அளவுக்கு செய்தால் நல்ல முறையில் இருக்கும் என்பதைச் சொல்லி, மக்கள் வாழ்க்கைத் தரத்தைப் பேணவும், மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கவும் இதைப்போல திறந்தவெளி கலையரங்குகளைக் கட்ட வேண்டு மென்று சொல்லி, அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம் குறிப்பாக 'ஓபன் எயர் தியேட்டர்' பற்றியது. அதற்கு என் வரி என்ற முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. காரணம் நாட்டிலே இன்றைக்கு பெர்மெனன்ட் தியேட்டர், செமி பெர்மனென்ட் தியேட்டர், டென்ட் எல்லாம் போடப்பட் டிருக்கின்றன. ஆனால் ஓப்பன் எயர் தியேட்டரில் மழைக்காலத்தில் யாரும் பார்க்க முடியாது. ஆகையால் அதற்குச் சலுகை கொடுக்க வேண்டும். அதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் பொதுவாக, கம்பவுண்டிங் வரி மூலம் அதிகமாக குறைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார் கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் அன்றைக்குப் பேசினார்கள். எவ்வளவு அதிகமாக வந்திருக்கிறது என்று புள்ளி விவரத்தைப் படித்துக் காட்டினேன் அன்றைக்கு. ஆனால் இன்றைக்கு புள்ளிவிவரம் கையில் இல்லை.

இந்த கம்பவுண்டிங் சிஸ்டம் வந்ததால் 1977-ல் எவ்வளவு வருமானம் வந்தது; அதைப்போல 1978-ல் எவ்வளவு வந்தது என்று பார்க்கும்போது 20 சதவிதம் அதிகமாக வந்திருக்கிறது. ஆனால் இங்கே கம்பவுண்டிங் செய்த இடத்தில் கூடுதல் வந்திருக்கிறது; எவ்வளவு என்றால் 20 சதவிதம் அல்ல; 3 சதவிதம் வந்திருக்கிறது. ஏன் 3 சதவிதம் என்றால் இங்கே கூடுதல்

மேல்வரியைக் குறைத்திருக்கிறோம். ஏனென்றால் கிராமத்தில் இருக்க வேண்டாமென்று குறைத்திருக்கிறோம். அப்படி இருந்தும் 3 சதவீதம் அதிகமாக வந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் பேசும்போது முனிசிபாலிட்டியில் சென்னை, மதுரை போன்ற பெரிய இடங்களில் இதனால் லாபம் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். மதுரை, சென்னை போன்ற இடங்களில் கம்பவுண்டிங் சிஸ்டம் இல்லை. அங்கெல்லாம் எப்போதும் போலவே தான் இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய இராமசாமி அவர்கள் சொன்னார்கள். அரசு இந்தச் சட்டத்தை எல்லா இடங்களிலும் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும் "கோடானு கோடி கொடுப்பினும் சொன்ன சொல் மீறாமை பல கோடி பெறும்" என்பதை மனதில் வைத்திருக்கிறோம் என்பதைச் சொல்லி, இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1979) நிறைவேற்றப்பெறவேண்டும்"

என மொழிகிறேன்.

(இரவு 7-00)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 30—4—1979, திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

201. 1979-80-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு வரவு-செலவு நடவடிக்கைகள் பற்றிய ஓர் பொருளாதார நடைமுறை வகைப்பாடு (ஆங்கிலம்).

* 202. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1979).

* 203. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1979).

* 204. 1979 ஆம் ஆண்டு மாநகரச் சிறு வழக்கு நீதிமன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக்கோவை, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1979).

205. 27—8—1969 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க 31—3—1978 ஆம் தேதியன்று உள்ளவாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினரின் சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப்பெற்றன.

1. மாண்புமிகு திரு. கி. மனோகரன்.

206. உடுக்குறியிடாத வினா-விடை பட்டியல் (851 முதல் 950 வரை).

207. உடுக்குறியிடாத வினா-விடை துணைப்பட்டியல் (951 முதல் 1000 வரை).

* 26—4—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

இணைப்பு I

[307-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 862க்கான விடையைக் காண்க.]

விடை—

(அ) சீருடன் அமைக்கப்பட்ட பால் பண்ணைகளில், உருக்கி மற்றும் புருசெல்லாசிஸ் நோய்களால் பாதிக்கப்படாவண்ணம் கால்நடை மந்தைகளை உருவாக்குவதும், பால் பண்ணைக்காரர்களுக்கு இது தொடர்பாகப் போதிக்கவும் ஏற்ற வகையில், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 1974ஆம் ஆண்டிலிருந்து சான்றளிக்கப்பட்டு முறைப்படி ஒப்புக்கொள்ளப்படத்தக்க கால்நடை மந்தைகளை உருவாக்கும் திட்டம் (accredited and certified herd project) செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சோதனை செய்முறைகள், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நோய்த்தடுப்பு துறைப் பணியாளர்களாலேயே நிகழ்த்தப்படுகின்றன. இத்திட்டம், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட இருக்கின்ற தீவிரக் கால்நடை உருக்கி நோய் அளவீடுக்கு, முன்னோடியாக அமைகிறது.

(ஆ) சான்றளிக்கப்பட்டு முறைப்படி ஒப்புக் கொள்ளப்படத்தக்க கால்நடை மந்தைகளை உருவாக்கும் திட்டத்தின்கீழ் ஆற்றிய பணிகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

விவரம்.	ஆண்டு.				
	1974	1975	1976	1977	1978
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1 உறுப்பினராக்கப்பட்ட பண்ணைகளின் எண்ணிக்கை.	2	3	9	6	3
2 பரிசோதிக்கப்பட்ட கால்நடைகள் ..	109	182	1,351	1,897	2,105
3 எலும்புருக்கி நோயினால் பாதிக்கப்பட்டவை.	4	5	103	49	56
4 செலவழிக்கப்பட்ட வேலை நேரம் (மணிக் கணக்கில்)	130	350	950	1,950	2,050
5 நோய் அறுதியீட்டுக்கு செலவழிக்கப்பட்ட தொகை (ரூபாயில்).	150	300	600	950	750
6 பணியாளர்கள் பயணப்படிச் செலவு (ரூபாயில்)	400	400	1,800	2,500	1,900
7 அமைப்பு மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் செலவு (ரூபாயில்).	..	..	..	..	..

துறை அலுவலர்களே சோதனை செய்ய நியமிக்கப்பட்டனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II.

[328-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 852-க்கான விடையைக் காண்க.]

பதில்.—

(அ) இம் மாநிலத்தில் மதுவிலக்கு 1—9—1974-லிருந்து மீண்டும் செயலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. 1974 செப்டம்பர் மாதம் முதல் 1977 மார்ச் மாதம் முடிய தமிழ்நாட்டில் கள்ளச் சாராயம் குடிப்போர்மீது போடப்பட்ட வழக்குகள் (மாவட்டவாரியாக).

மாவட்டம்.	1974–75 (1–9–1974 முதல் 30—3—1975)	1975–76	1976–77
(1)	(2)	(3)	(4)
1 வட ஆற்காடு	14,399	15,999	9,960
2 செங்கை கிழக்கு	1,914	3,043	3,683
3 செங்கை மேற்கு	1,887	1,692	3,273
4 கோவை நகர்புறம்	4,850	7,327	2,605
5 கோவை ஊரகம்	10,862	16,305	9,645
6 தர்மபுரி	2,358	3,424	2,559
7 நீலகிரி	2,056	4,662	1,788

8 சேலம் —	11,557	22,618	22,779
9 கன்னியாகுமரி	3,706	5,183	5,224
10 மதுரை தெற்கு	1,608	1,885	1,186
11. மதுரை வடக்கு	1,395	2,237	3,130
12. இராமநாதபுரம் கிழக்கு	2,117	1,962	1,838
13. திருநெல்வேலி	5,206	9,293	8,701
14. தென் ஆற்காடு	2,996	3,258	4,137
15. தஞ்சை கிழக்கு	2,014	2,404	1,748
16. தஞ்சை மேற்கு	1,123	1,318	1,295
17. திருச்சிராப்பள்ளி	9,378	12,254	8,849
18. புதுக்கோட்டை	1,084	1,074	1,194
19. சென்னை நகரம்	17,285	19,856	9,829
20. இரயில்வே போலீஸ்	551	1,260	1,388
21. இராமநாதபுரம் மேற்கு	..	1.113	1,167
மொத்தம் ..	98,346	1,38,167	1,05,978

(ஆ) கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மீது மட்டும் போடப்பட்ட வழக்குகள்.

(மாவட்டவாரியாக—1974 செப்டம்பர் முதல் 1977 மார்ச் முடிய)

மாவட்டம்.	1974–75 (செப்டம்பர் 1974 முதல் மார்ச் 1975).	1975–76	1976–77
(1)	(2)	(3)	(4)
1 வடஆற்காடு	2,458	8,008	8,083
2 செங்கை கிழக்கு	1,934	2,489	3,886
3 செங்கை மேற்கு	803	1,454	2,090
4 கோவை நகர்புறம்	483	637	724
5 கோவை ஊரகம்	3,158	6,660	4,353
6 தர்மபுரி	1,306	2,800	4,289
7 நீலகிரி	773	1,695	1,104
8 சேலம்	4,987	4,658	7,017
9 கன்னியாகுமரி	238	816	1,412
10 மதுரை தெற்கு	713	2,055	1,942

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11 மதுரை வடக்கு	1,718	3,913	4,38
12 இராமநாதபுரம் (கிழக்கு)	1,664	3,913	1,826
13 திருநெல்வேலி	1,727	3,706	3,670
14 தென்னாற்காடு	1,276	2,574	2,516
15 தஞ்சை கிழக்கு	873	1,312	767
16 தஞ்சை மேற்கு	1,772	1,374	1,597
17 திருச்சிராப்பள்ளி	1,537	3,497	5,545
18 புதுக்கோட்டை	658	1,570	1,937
19 சென்னை நகரம்	..	..	..
20 இரயில்வே போலீஸ்	..	..	..
21 இராமநாதபுரம் (மேற்கு)	28	1,307	1,898
	28,106	53,685	59,041

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(இ) 1974-ம் வருடம் செப்டம்பர் முதல் 1977-ஆம் வருடம் மார்ச் மாதம் முடிய போடப்பட்ட வழக்குகளும் அதில் தண்டனை அடைந்தவையும் (மாவட்ட வாரியாக)

மாவட்டம்.	1974—75 செப்டம்பர் முதல் மார்ச் வரை.		1975–76.		976—77.	
	மொத்த வழக்குகள்.	தண்டனை அடைந்த வழக்குகள்.	மொத்த வழக்குகள்.	தண்டனை அடைந்த வழக்குகள்.	மொத்த வழக்குகள்.	தண்டனை அடைந்த வழக்குகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1 வட ஆற்காடு ..	22,509	9,909	57,821	38,074	48,454	34,707
2 செங்கை கிழக்கு	11,085	8,633	20,102	28,933	28,330	22,291
3 செங்கை மேற்கு.	10,839	3,985	18,396	15,677	26,270	15,241
4 கோவை நகர்ப் புறம்	8,621	3,774	16,888	13,963	8,318	8,288
5 கோவை ஊரகம்.	20,686	15,685	39,333	36,401	24,599	19,847
6 தர்மபுரி ..	6,237	3,371	13,759	10,294	16,518	16,997
7 நீலகிரி	5,199	2,975	11,533	10,864	4,598	4,032
8 சேலம்	26,821	16,322	55,151	52,707	48,993	38,987
9 கன்னியாகுமரி ..	5,597	2,667	9,889	5,677	12,278	8,348

10 மதுரை தெற்கு	6,949	2,220	11,796	11,607	12,559	11,191
11 மதுரை வடக்கு.	7,305	1,218	15,420	14,122	23,904	15,682
12 இராமநாதபுரம் கிழக்கு.	8,585	1,981	13,910	12,601	11,381	7,653
13 திருநெல்வேலி ..	14,903	4,971	29,359	15,470	26,733	10,857
14 தென்னாற்காடு.	17,653	4,022	31,706	24,616	32,715	8,988
15 தஞ்சை கிழக்கு	6,607	3,448	11,940	13,923	8,244	8,434
16 தஞ்சை மேற்கு	7,225	2,610	9,755	11,335	8,845	7,817
17 திருச்சிராப்பள்ளி.	18,615	19,916	17,366	39,464	32,373	31,988
18 புதுக்கோட்டை	3,097	1,256	4,669	6,832	5,751	4,428
19 சென்னை நகரம்	27,616	19,293	49,794	46,351	24,182	23,303
20 இரயில்வே போலீஸ்	1,068	380	2,356	2,343	2,858	2,655
21 இராமநாதபுரம் மேற்கு.	..	..	6,513	4,837	8,273	36,315
மொத்தம் ..	2,37,309	1,28,636	4,47,456	4,16,091	4,16,176	3,38,049

(ஈ) தண்டனை அடைந்தவர்களிடமிருந்து அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை
(மாவட்ட வாரியாக 1974 செப்டம்பர் முதல் 1977 மார்ச் முடிய)

	மாவட்டம்.	1974-75.	1975-76.	1976-77.
	(1)	(2)	(3)	(4)
		ரூ.	ரூ.	ரூ.
1	வட ஆற்காடு	5,07,129	9,73,358	11,88,344
2	செங்கை கிழக்கு	2,62,118	4,00,701	16,53,399
3	செங்கை மேற்கு	1,31,370	3,17,312	6,64,055
4	கோவை நகர்புறம்	3,05,465	7,16,194	4,73,185
5	கோவை ஊரகம்	14,46,875	22,68,455	17,71,150
6	தர்மபுரி	1,89,585	5,56,715	8,30,030
7	நீலகிரி	1,24,720	3,60,741	3,59,848
8	சேலம்	6,83,918	24,99,255	29,51,053
9	கன்னியாகுமரி	96,831	1,59,883	3,20,770
10	மதுரை தெற்கு	1,67,535	3,99,336	4,04,728
11	மதுரை வடக்கு	1,16,289	5,37,738	9,85,799
12	இராமநாதபுரம் கிழக்கு	1,29,800	3,56,473	4,32,757

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

13	திருநெல்வேலி	1,68,155	4,96,983	5,74,363
14	தென்னாற்காடு	4,62,052	8,78,872	12,75,658
15	தஞ்சை கிழக்கு	1,67,840	3,58,052	4,16,079
16	தஞ்சை மேற்கு	98,140	3,29,400	2,98,780
17	திருச்சிராப்பள்ளி	3,83,911	12,49,975	13,13,883
18	புதுக்கோட்டை	62,200	5,97,400	2,28,195
19	சென்னை நகரம்	5,87,107	10,84,405	8,61,807
20	இரயில்வே போலீஸ்	45,455	1,49,847	1,14,050
21	இராமநாதபுரம் (மேற்கு)	..	1,44,962	2,65,310
	மொத்தம்	61,36,495	1,48,36,057	1,73,83,143

கள்ளச்சாராயம் குடிப்பவர்மீது போடப்பட்ட வழக்குகள் (மாவட்ட வாரியாக)
1974-ம் ஆண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்டு மாதம் முடிய.

மாவட்டம்.	1–4–1974 முதல் 31–8–1974 வரை.
	இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீது மட்டும் போடப்பட்ட வழக்குகள் மாவட்ட வாரியாக 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய.

மாவட்டங்கள்.	1-4-1974 முதல் 31-8-1974 முடிய (1974-ம் ஆண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் முடிய.)
(1)	(2)
1. வட ஆற்காடு	491
2. செங்கை கிழக்கு	110
3. செங்கை மேற்கு	141
4. கோவை நகர்ப்புறம்	209
5. கோவை ஊரகம்	1,072
6. தர்மபுரி	413
7. நீலகிரி	243
8. சேலம்	963
9. கன்னியாகுமரி	229
10. மதுரை தெற்கு	182
11. மதுரை வடக்கு	791
12. இராமநாதபுரம் கிழக்கு ..	219
13. திருநெல்வேலி	276
14. தென்னாற்காடு	95
15. தஞ்சை கிழக்கு	165
16. தஞ்சை மேற்கு	192
17. திருச்சிராப்பள்ளி	236
18. புதுக்கோட்டை	80
19. சென்னை நகரம்	..
20. இரயில்வே போலீஸ் ..	..
21. இராமநாதபுரம் மேற்கு ..	6
மொத்தம் ..	6,113

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கள்ளச் சாராயம் விற்றவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் (மாவட்ட வாரியாக)
1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய.

மாவட்டங்கள்.	1–4–1974 முதல் 31–8–1974 முடிய.
(1)	(2)
1. வட ஆற்காடு	..
2. செங்கை கிழக்கு	319
3. செங்கை மேற்கு	50
4. கோவை நகர்ப்புறம்	58
5. கோவை ஊரகம்	43
6. தர்மபுரி	9
7. நீலகிரி	1
8. சேலம்	8
9. கன்னியாகுமரி	..
10. மதுரை தெற்கு	1
11. மதுரை வடக்கு	165
12. இராமநாதபுரம் கிழக்கு	81
13. திருநெல்வேலி	136
14. தென்னாற்காடு	86
15. தஞ்சை கிழக்கு	9
16. தஞ்சை மேற்கு	2
17. திருச்சிராப்பள்ளி	433
18. புதுக்கோட்டை	23
19. சென்னை நகரம்	1
20. இரயில்வே போலீஸ்	13
21. இராமநாதபுரம் மேற்கு	4
மொத்தம்	1,442

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கள்ளச் சாராயம் வைத்திருந்தவர்கள் மீது மட்டும் போடப்பட்ட வழக்குகள்
1974-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய (மாவட்ட வாரியாக).

மாவட்டங்கள். (1)	1-4-1974 முதல் 31-8-1974 முடிய. (2)
1 வட ஆற்காடு	3,663
2 செங்கை கிழக்கு	881
3 செங்கை மேற்கு	647
4 கோவை நகர்ப்புறம்	508
5 கோவை ஊரகம்	1,696
6 தர்மபுரி	720
7 நீலகிரி	303
8 சேலம்	2,950
9 கன்னியாகுமரி	330
10 மதுரை தெற்கு	98
11 மதுரை வடக்கு	781
12 இராமநாதபுரம் கிழக்கு	318
13 திருநெல்வேலி	878
14 தென்னாற்காடு	646
15 தஞ்சை கிழக்கு	290
16 தஞ்சை மேற்கு	825
17 திருச்சிராப்பள்ளி	2,407
18 புதுக்கோட்டை	267
19 சென்னை நகரம்	2,822
20 இரயில்வே போலீஸ்	..
21 இராமநாதபுரம் மேற்கு	77
மொத்தம்	21,107

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

D 2 A 86—29

1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய போடப்பட்ட வழக்குகளில் தண்டனை அடைந்த வழக்குகள் (மாவட்ட வாரியாக).

மாவட்டங்கள். (1)	1-4-1974 முதல் 31-8-1974 முடிய தண்டனை அடைந்த வழக்குகள். (2)
1 வட ஆற்காடு	2,539
2 செங்கை கிழக்கு	718
3 செங்கை மேற்கு	317
4 கோவை நகர்ப்புறம்	820
5 கோவை ஊரகம்	1,607
6 தர்மபுரி	399
7 நீலகிரி	313
8 சேலம்	3,342
9 கன்னியாகுமரி	218
10 மதுரை தெற்கு	511
11 மதுரை வடக்கு	606
12 இராமநாதபுரம் கிழக்கு	1,670
13 திருநெல்வேலி	1,220
14 தென்னாற்காடு	912
15 தஞ்சை கிழக்கு	939
16 தஞ்சை மேற்கு	1,170
17 திருச்சிராப்பள்ளி	2,250
18 புதுக்கோட்டை	119
19 சென்னை நகரம்	1,798
20 இரயில்வே போலீஸ்	35
21 இராமநாதபுரம் மேற்கு	16
மொத்தம்..	21,519

1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய போடப்பட்ட வழக்குகளில் தண்டனை அடைந்தவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை (மாவட்ட வாரியாக).

மாவட்டங்கள். (1)	1–4–1974 முதல் 31–8–1974 முடிய. (2)
	ரூபாய்.
1 வட ஆற்காடு	18,145
2 செங்கை கிழக்கு	1,245
3 செங்கை மேற்கு	500
4 கோவை நகர்ப்புறம்	24,735
5 கோவை ஊரகம்	4,36,695
6 தர்மபுரி	15,199
7 நீலகிரி	4,180
8 சேலம்	71,846
9 கன்னியாகுமரி	10,216
10 மதுரை தெற்கு	29,805

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

11	மதுரை வடக்கு	16,980
12	இராமநாதபுரம் கிழக்கு	55,770
13	திருநெல்வேலி	31,217
14	தென்னாற்காடு	24,536
15	தஞ்சை கிழக்கு	56,835
16	தஞ்சை மேற்கு	11,970
17	திருச்சிராப்பள்ளி	31,360
18	புதுக்கோட்டை	12,510
19	சென்னை நகரம்	18,476
20	இரயில்வே போலீஸ்	32,366
21	இராமநாதபுரம் மேற்கு	..
	மொத்தம் ..	9,04,586

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

[328-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 853க்கான விடையைக் காண்க].

1—4—1977 முதல் 31—3—1978 வரையிலான மதுவிலக்கு வழக்குகளின் பட்டியல்—தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படும் விவர அறிக்கை,

வரிசை எண்ணும் மாவட்டமும்,	(I)	I(a)	IV(b)	IV(g)
(1)	(2)	(3)	(4)	(5)
1 வட ஆற்காடு	372	..	1,575	7,419
2 செங்கல்பட்டு (கிழக்கு) ..	83	..	2,582	1,121
3 செங்கல்பட்டு (மேற்கு) ..	308	..	401	967
4 கோயம்புத்தூர் (நகரம்) ..	381	..	301	152
5 கோயம்புத்தூர் (கிராமம்) ..	202	..	1,825	1,361
6 தர்மபுரி	296	..	678	2,739
7 நீலகிரி	53	..	619	772
8 சேலம்	79	..	2,082	3,130
9 கன்னியாகுமரி	150	..	194	1,147
10 மதுரை (தெற்கு)	7	..	425	1.062

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11 மதுரை (வடக்கு)	..	159	..	1,338	2,868
12 இராமநாதபுரம் (கிழக்கு)	..	11	..	243	1,298
13 திருநெல்வேலி	..	123	2	1,198	1,593
14 தென் ஆற்காடு	..	1,655	..	727	2,049
15 தஞ்சாவூர் (கிழக்கு)	..	602	416	323	644
16 தஞ்சாவூர் (மேற்கு)	..	138	..	482	1,696
17 திருச்சிராப்பள்ளி	..	1	..	1,586	4,714
18 புதுக்கோட்டை	..	1	..	425	1,435
19 சென்னை நகரம்	..	..	..	..	..
20 அரசு இரயில்வே போலீஸ்	..	616	11	..	..
21 இராமநாதபுரம் (மேற்கு)	..	13	..	183	891
மொத்தம்	..	5,250	429	17,187	37,058

I—பிற மாநிலங்களிலிருந்து ஒரு மாநிலத்திற்கு சாராயத்தைக் கள்ளத்தனமாக கடத்துதல்.

I (a)—ஒரு மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டத்திற்கு மதுவை கடத்துதல்.

IV (b)—கள்ளச் சாராயம் காய்ச்சுதல்.

IV (g)—கள்ளச் சாரயம் காய்ச்சுவதற்கான கருவிகள், ஊறல்கள் முதலியவற்றை வைத்திருத்தல்.

வரிசை எண்ணும் மாவட்டமும். (1)	V (6)	VI (7)	VII(a) (8)	VII(b) (9)
1 வட ஆற்காடு	27,533	727	924	..
2 செங்கல்பட்டு (கிழக்கு) ..	16,351	3,416	172	..
3 செங்கல்பட்டு (மேற்கு) ..	8,972	585	2,493	..
4 கோயம்புத்தூர் (நகரம்) ..	814	332	17	125
5 கோயம்புத்தூர் (கிராமம்) ..	2,912	1,214	297	..
6 தர்மபுரி	9,647	454	651	64
7 நீலகிரி	1,834	117	..	..
8 சேலம்	10,373	2,922	1,267	30
9 கன்னியாகுமரி	3,430	55	..	..
10 மதுரை (தெற்கு)	5,750	267	26	1
11 மதுரை (வடக்கு)	14,146	2,124	480	..
12 இராமநாதபுரம் (கிழக்கு) ..	2,362	171	1,087	..
13 திருநெல்வேலி	9,556	1,570	50	4
14 தென் ஆற்காடு	19,942	648	98	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

15	தஞ்சாவூர் (கிழக்கு	3,008	72	715	7
16	தஞ்சாவூர் (மேற்கு)	4,967	91	104	..
17	திருச்சிராப்பள்ளி	16,239	1,500	1,141	40
18	புதுக்கோட்டை	2,235	75	105	3
19	சென்னை நகரம்	14,978	1,769	..	21
20	அரசு இரயில்வே போலீஸ்	861	2	2	..
21	இராமநாதபுரம் (மேற்கு)	2,043	108	34	5
	மொத்தம்	1,77,953	18,219	9,663	300

V—கள்ளச் சாராவி அல்லது சாராயத்தை வைத்திருத்தல்.

VI—கள்ளச் சாராவி அல்லது சாராயத்தை விற்றல்.

VII (a)—புளிக்க வைத்த கள்ளை உரிமம் இன்றி கள்ளத்தனமாக காய்ச்சுதல்.

VII (b)—பதனீரை உரிமமின்றி புளிக்க வைத்தல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்ணும் மாவட்டமும்.	VII (c)	VIII	IX
(1)	(10)	(11)	(12)
1 வட ஆற்காடு	..	2,218	..
2 செங்கல்பட்டு (கிழக்கு)	..	309	..
3 செங்கல்பட்டு (மேற்கு)	..	193	..
4 கோயம்புத்தூர் (நகரம்)	2	1,758	6
5 கோயம்புத்தூர் (கிராமம்)	32	4,281	15
6 தர்மபுரி	16	849	..
7 நீலகிரி	..	380	..
8 சேலம்	138	3,185	..
9 கன்னியாகுமரி	..	85	3
10 மதுரை (தெற்கு)	430	230	..
11 மதுரை (வடக்கு)	339	857	..
12 இராமநாதபுரம் (கிழக்கு)	47	556	35
13 திருநெல்வேலி	..	342	63
14 தென் ஆற்காடு	..	621	..

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

D-2 A 86—30

15 தஞ்சாவூர் (கிழக்கு) ..	..	50	..	2
16 தஞ்சாவூர் (மேற்கு) ..	..	87	38	33
17 திருச்சிராப்பள்ளி ..	..	21	2,224	..
18 புதுக்கோட்டை ..	..	15	81	12
19 சென்னை நகரம் ..	..	..	329	166
20 அரசு இரயில்வே போலீஸ்	..	..	85	..
21 இராமநாதபுரம் (மேற்கு)	..	42	148	75
மொத்தம்	..	1,213	18,769	410

VII (c)—உரிமம் இன்றி பதனீர் இறக்குதல்.

VIII—மதுவை கள்ளத்தனமாக கடத்துதல்.

IX—மதுவை உரிமமின்றி விற்றல்.

வரிசை எண்ணும் மாவட்டமும்.	X	XIV	XVI	XVII
	(13)	(14)	(15)	(16)
1 வட ஆற்காடு	162	..	..	..
2 செங்கல்பட்டு (கிழக்கு)	79	..	..	..
3 செங்கல்பட்டு (மேற்கு)	256	..	..	3
4 கோயம்புத்தூர் (நகரம்)	62	2	6	6
5 கோயம்புத்தூர் (கிராமம்)	378	..	1	6
6 தர்மபுரி	1,160	15	17	..
7 நீலகிரி	30	..	..	..
8 சேலம்	2,641	..	..	..
9 ன்னியாகுமரி	1,133	..	..	..
10 மதுரை (தெற்கு)	71	1	7	15
11 மதுரை (வடக்கு)	34	6	27	170
13 இராமநாதபுரம் (கிழக்கு)	4,952	..	..	..
13 திருநெல்வேலி	3,163	..	1	1
14 தென் ஆற்காடு	1,811	..	..	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

15	தஞ்சாவூர் (கிழக்கு)	1,852	..	..	..
16	தஞ்சாவூர் (மேற்கு)	2,050	..	..	..
17	திருச்சிராப்பள்ளி	143	..	7	47
18	புதுக்கோட்டை	268	..	..	1
19	சென்னை நகரம்	211	177	..	..
20	அரசு இரயில்வே போலீஸ் ..	1	..	..	..
21	இராமநாதபுரம் (மேற்கு) ..	1,960	1	2	..
	மொத்தம் ..	22,417	202	68	249

X—மதுவை உரிமமின்றி வைத்திருத்தல்.

XIV—கஞ்சா செடிகளை பயிரிடுதல்.

XVI—போதை தரும் பொருட்களை கள்ளத்தனமாக கடத்துதல்.

XVII—போதை தரும் பொருட்களை உரிமமின்றி விற்றல்.

வரிசை எண்ணும் மாவட்டமும்.	XVIII	XIX	XIX(a)
(1)	(17)	(18)	(19)
1 வட ஆற்காடு	14	5,231	56
2 செங்கல்பட்டு (கிழக்கு) ..	24	2,596	3
3 செங்கல்பட்டு (மேற்கு) ..	4	1,725	2
4 கோயம்புத்தூர் (நகரம்) ..	175	708	1
5 கோயம்புத்தூர் (கிராமம்) ..	149	2,875	..
6 தர்மபுரி	112	836	..
7 நீலகிரி	15	621	124
8 சேலம்	177	12,598	..
9 கன்னியாகுமரி	68	2,473	175
10 மதுரை (தெற்கு)	3,375	1,363	782
11 மதுரை (வடக்கு)	1,318	1,652	104
12 இராமநாதபுரம் (கிழக்கு) ..	233	1,417	..
13 திருநெல்வேலி	769	8,243	..
14 தென் ஆற்காடு	55	3,671	79

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

15	தஞ்சாவூர் (கிழக்கு)	16	369	390
16	தஞ்சாவூர் (மேற்கு)	44	1,429	111
17	திருச்சிராப்பள்ளி	251	5,692	5
18	புதுக்கோட்டை	131	1,031	..
19	சென்னை நகரம்	497	9,407	432
20	அரசு இரயில்வே போலீஸ் ..	68	529	165
21	இராமநாதபுரம் (மேற்கு) ..	485	876	..
	மொத்தம் ..	8,010	65,342	2,429

XVIII—போதை தரும் பொருட்களை உரிமமின்றி வைத்திருத்தல்.

XIX—பல்வகை.

XIX(a)—இயல்பு மாற்றப்பட்ட சாராவியை அருந்தத்தக்கதாக ஆக்குதல்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்ணும் மாவட்டமும்.	XX	XXII	XXIV	மொத்தம்
(1)	(20)	(21)	(22)	(23)
1 வட ஆற்காடு	..	4	2	46,267
2 செங்கல்பட்டு (கிழக்கு)	..	..	1	26,737
3 செங்கல்பட்டு (மேற்கு)	..	..	..	15,909
4 கோயம்புத்தூர் (நகரம்)	..	3	51	4,902
5 கோயம்புத்தூர் (கிராமம்)	1	..	1	15,550
6 தர்மபுரி	..	1	2	17,531
7 நீலகிரி	..	..	..	4,565
8 சேலம்	..	6	..	38,628
9 கன்னியாகுமரி	..	..	..	8,913
10 மதுரை (தெற்கு)	..	2	..	13,814
11 மதுரை (வடக்கு)	..	..	..	25,622
12 இராமநாதபுரம் (கிழக்கு)	..	1	..	12,413
13 திருநெல்வேலி	..	7	..	26,685
14 தென் ஆற்காடு	..	**36**	**93**	**31,485**

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

15	தஞ்சாவூர் (கிழக்கு)	..	..	..	12	.	8,478
16	தஞ்சாவூர் (மேற்கு)	..	..	..	7	..	11,277
17	திருச்சிராப்பள்ளி	..	..	..	13	..	33,624
18	புதுக்கோட்டை	..	..	..	2	..	5,820
19	சென்னை நகரம்	..	..	..	319	..	28,306
20	அரசு இரயில்வே போலீஸ்		..	..	2	1	2,343
21	இராமநாதபுரம் (மேற்கு)		..	..	..	..	6,866
	மொத்தம்		..	1	415	151	3,85,735

XX—அபினைக் கடத்துதல்.

XXII—அபினை வைத்திருத்தல்.

XXIV—சட்டத்தில் குறிப்பிட்டுள்ள குற்றங்கள்.

இணைப்பு IV.

[329-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 454-க்கான விடையைக் காண்க]

மாவட்டத்தின் பெயர்.	மொத்த வழக்குகள்.	தண்டிக்கப்பட்டு சிறை சென்றோர்.	அபராதத் தொகை கட்டியவர்கள்.	வசூலான மொத்த அபராதத் தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
				ரூ.
1 வட ஆற்காடு	37,625	3,301	28,124	8,90,445
2 செங்கற்பட்டு (கிழக்கு) ..	6,686	547	3,523	5,12,607
3 செங்கற்பட்டு (மேற்கு) ..	1,976	119	978	53,939
4 கோயம்புத்தூர் (நகரம்) ..	908	275	370	44,670
5 கோயம்புத்தூர் (ஊரகம்) ..	3,927	1,612	2,570	5,93,280
6 தர்மபுரி	1,229	90	247	1,02,980
7 நீலகிரி	4,418	1,105	759	9,36,220
8 சேலம்	12,428	1,684	7,976	7,12,131
9 கன்னியாகுமரி	1,585	29	1,282	37,260
10 மதுரை (தெற்கு)	2,943	128	2,002	2,11,582

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

D-2 A 86—31

11 மதுரை (வடக்கு)	5,411	1,043	3,622	3,03,371
12 ராமநாதபுரம் (கிழக்கு)	1,147	124	948	44,151
13 ராமநாதபுரம் (மேற்கு) ..	983	86	647	25,165
14 தென்னாற்காடு	3,800	320	2,633	1,40,605
15 தஞ்சாவூர் (கிழக்கு)	660	89	428	19,950
16 தஞ்சாவூர் (மேற்கு)	1,483	99	1,153	53,357
17 திருச்சிராப்பள்ளி	5,471	689	4,427	91,360
18 புதுக்கோட்டை	695	47	602	26,515
19 சென்னை நகரம்	17,507	1,149	13,805	9,01,543
20 திருநெல்வேலி	7,616	842	4,945	2,47,250
	1,18,508	13,326	81,041	59,48,381

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு V.

[333-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 865-க்கான விடையைக் காண்க.]

(அ) ''சிறார் நல மையம்'' என்ற ''குழந்தைகள் காப்பகம்'' திட்டம் அரிசனம் மற்றும் மலைவாழ் இனத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்காகவும் ''சமூகக் கூடம்'' அரிசன இனத்தைச் சேர்ந்த குழந்தைகளின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மலைவாழ் இனத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கென தனியாக ''சமூகக் கூடம்'' ஏற்படுத்தும் திட்டம் இல்லை.

(ஆ) மாவட்ட வாரியாக விபரங்கள் கீழ்வருமாறு:—

மாவட்டம்.	சிறார் நல மையங்கள். — அரிசன சிறார்களுக்கு. — அரிசன நலத் துறை நிதி.		சமூக நல இயக்குநனர் நிதி.	
	மையங்களின் எண்ணிக்கை.	அனுமதிக்கப்பட்ட சிறார்கள்/தாய்மார்கள்.	மையங்களின் எண்ணிக்கை.	அனுமதிக்கப்பட்ட சிறார்கள்/தாய்மார்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)
1 செங்கல்பட்டு	11	770	13	910
2 வட ஆற்காடு	10	700	17	1,190
3 தென் ஆற்காடு	11	770	21	1,470

4 கோயம்புத்தூர் ..	5	350	13	910
5 சேலம்	8	560	12	840
6 திருநெல்வேலி	6	420	10	700
7 தர்மபுரி	6	420	7	490
8 நீலகிரி	4	280	5	350
9 தஞ்சாவூர்	10	700	16	1,120
10 திருச்சிராப்பள்ளி	8	560	8	560
11 புதுக்கோட்டை	4	280	6	420
12 மதுரை	7	490	9	630
13 இராமநாதபுரம்	7	490	9	630
14 கன்னியாகுமரி	3	210	4	280
மொத்தம் ..	100	7,000	150	10,500

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாவட்டம்	மலைவாழ் இனத்தைச் சேர்ந்த சிறார்களுக்கு சமூகநல இயக்குநர் நிதி.		சமூகக் கூடங்கள்.	
	மையங்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப் பட்ட சிறார் களின் எண்ணிக்கை.	சமூகக்கூடம், எண்ணிக்கை.	குழந்தைகளின் எண்ணிக்கை.
(1)	(6)	(7)	(8)	(9)
1 செங்கல்பட்டு	..	..	1	50
2 வட ஆற்காடு ..	10	400	1	62
3 தென் ஆற்காடு ..	18	720	3	137
4 கோயம்புத்தூர் ..	..	..	3	150
5 சேலம்	12	480	..	..
6 திருநெல்வேலி ..	..	..	1	41
7 தர்மபுரி	6	240	1	75
8 நீலகிரி	..	..	2	55
9 தஞ்சாவூர் ..	..	..	3	71
10 திருச்சிராப்பள்ளி ..	..	..	2	190
11 புதுக்கோட்டை ..	3	120	..	..
12 மதுரை	..	..	3	123
13 இராமநாதபுரம் ..	..	..	3	154
14 கன்னியாகுமரி ..	..	..	2	90
மொத்தம் ..	49	1,960	25	1,198

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VI.

[346-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 892-க்கான விடையைக் காண்க]

சென்னையிலுள்ள பூங்காக்களின் பட்டியல் :—

வரிசை எண். (1)	டிவிஷன் எண். (2)	பூங்காவின் பெயர். (3)	இடம். (4)
1	9	அண்ணா பூங்கா (ராபின்ஸன் பூங்கா)	சிமிட்டிரி ரோடு, மீனாட்சியம்மன் பேட், ராயபுரம்.
2	36	மை லேடீஸ் பூங்கா	மாணவர்கள் பூங்கா பகுதி.
3	43	காந்தி பூங்கா	பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை.
4	61	திரு. வி. க. பூங்கா	சேனாய் நகர், புல்லா ரெட்டி அவின்யூ.
5	64	நேரு பூங்கா	பூந்தமல்லி நெடுஞ்சாலை.
6	81	நேப்பியர் பூங்கா	சிந்தாரிப்பேட்டை, ஆதிகேசவபுரம்.
7	96	நாகேஸ்வரராவ் பந்தலு பூங்கா ..	லஸ் சர்ச் சாலை.
8	105	ஜீவானந்தம் பூங்கா	ஜி. என். செட்டி ரோடு, தி. நகர்.
9	105	டாக்டர் சி. நடேச முதலியார் பூங்கா.	வெங்கடநாராயண சாலை, தியாகராய நகர்.

வரிசை எண்.	டிவிஷன் எண்.	பூங்காவின் பெயர்.	இடம்.
(1)	(2)	(3)	(4)
10	108	சி. ஐ. டி. 3-வது மெயின்சாலை பூங்கா.	(சி. ஐ. டி. நகர், நந்தனம்),வி.ஓ.சி. நகர்.
11	105	பனகல் பூங்கா	தி. நகர்.
12		இந்திரா நகர் பூங்கா	இந்திரா நகர்.
13		கருணாநிதி நகர் பூங்கா	கருணாநிதி நகர்.
14	19	ஸ்ரீராமுலு நாயுடு பூங்கா ..	லோன் ஸ்கோயர், பிராட்வே, கொத்தவால் சாவடி.
15	22	அருணாசல ஈஸ்வரன் கோயில் தெரு பூங்கா.	அருணாசல ஈஸ்வரன் கோயில் தெரு.
16	28	சிவஞானம் பூங்கா	பெத்து நாயக்கன் தெரு, கொண்டி தோப்பு.
17	31	கான்ரான்ஸ்மித் பூங்கா	கொசப்பேட்டை.
18	33	ராகவேந்திர ராவ் பூங்கா	அவதானம் பாப்பையர் ரோடு, சூளை.
19	45	அருந்ததிபுரம் பூங்கா	அருந்ததிபுரம், பெரம்பூர் நெடுஞ்சாலை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

20	85	சத்தியமூர்த்தி பூங்கா	சேத்துப்பட்டு.
21	65	ஸ்பூர் டாங்க் ரோடு பூங்கா ..	டி. பி. செண்டர் பக்கம், சேத்துப் பட்டு.
22	97	டிமாண்டி காலனி பூங்கா	ஆழ்வார்பேட்டை.
23	100	டாக்டர் முத்துலட்சுமி பூங்கா ..	அடையார்.
24	101	சுதந்திர தின பூங்கா	(நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை), டான்க் பங்க் ரோடு.
25	104	ஜி. என். செட்டி பூங்கா	தேனாம்பேட்டை.
26	110	அண்ணா பூங்கா	தேனாம்பேட்டை.
27	56	கக்கன்ஜி பூங்கா (புது பூங்கா) ..	புது ஆவடி பூங்கா.
28	1	சூரியநாராயணன் செட்டி பூங்கா ..	எஸ். என். செட்டி தெரு.
29	2	காமராஜர் பூங்கா	எஸ். என். செட்டி தெரு.
30	3	சிவகாமி அம்மையார் பூங்கா ..	பாஷியம் நாயுடு தெரு.
31	5	சர். பி. டி. தியாகராஜ செட்டி பூங்கா.	டி. எச். ரோடு.
32	5	சுந்தரமூர்த்தி செட்டி பூங்கா அண்டு பவுண்டன்.	தெலுங்கு செட்டி தெரு.
33	8	சுந்தரமூர்த்தி செட்டி பூங்கா ..	வெங்கடநாயர் தெரு.

வரிசை எண் (1)	டிவிஷன் எண். (2)	பூங்காவின் பெயர். (3)	இடம். (4)
34	10	பாண்டியன் பூங்கா	சிமிட்டரி ரோடு
35	20	திருவாங்கூர் மகாராஜா பூங்கா ..	ராஜா அண்ணாமலை மன்றம் எதிர் பக்கம்.
36	24	டி. எச். ரோடில் மணிக்கூண்டிலுள்ள மிடியம் ஸ்கிப் பூங்கா.	டி. எச். ரோடு.
37	27	திருவள்ளுவர் பூங்கா	பேஸின் பிரிட்ஜ், மூலக்கொத்தலம்.
38	27	கத்பாதா பூங்கா	கத்பாதா புதிய லேபர் காலனி.
39	35	வெங்கடேச பெருமாள் பூங்கா	சூளை நெடுஞ்சாலை ரோடு, சதைன் ஹம்ஸ் ரோடு சேருமிடம்.
40	36	அப்துல்லா பூங்கா	சைதன் ஹம்ஸ் ரோடு.
41	36	ஜெர்மியா பூங்கா	வேப்பேரி நெடுஞ்சாலை.
42	36	திருமலை பிள்ளை பூங்கா	ஜி. என். டி. இன்ஸ்டியூட் எதிர் பக்கம்.
43	44	மங்காலபுரம் பூங்கா	கிருஷ்ணா தாஸ் ரோடு.
44	46	சாமி தேசிகாநந்தர் பூங்கா ..	வியாசர்பாடி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

45	48	வாட்டர் டாங்க் பூங்கா அண்ட் போகி பாளையம். ..	போகி பாளையம், பட்டாளம்.
46	48	டாக்டர் அருண்டால் பூங்கா ..	சிவராவ் சாலை.
47	49	டாக்டர் சத்தியவாணிமுத்து பூங்கா	பட்டாளம், அங்காளம்மன் கோயில் தெரு.
48	49	கருணாநிதி பூங்கா	புது பெரன்சி ரோடு, பி. அண்ட். சி. மில் கேட் பக்கம்.
49	49	வைதியா பூங்கா	புது பெரன்சி ரோடு.
50	51	சஜிதா ஹுசேன் பார்க்	பேப்பர் மில்ஸ் ரோடு, செம்பியம்.
51	52	ஆனந்தன் பூங்கா	அகரம், எஸ். ஆர். பி. கோயில் தெரு.
52	54	ஜீவா பூங்கா	யுனைடெட் இந்தியா காலனி, அயனாவரம்.
53	57	செக்கரேடேரியட் காலனி பூங்கா	செக்கரேடேரியட் காலனி.
54	59	டட்டேல் பூங்கா	செல்லப்ப முதலி தெரு, ஓட்டேரி.
55	64	பாஷ்யம் நாயுடு பூங்கா	டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம்.
56	63	குமரன் பூங்கா	ஹாரிங்டன் ரோடு.
57	66	பாங்க் மாணிக்க முதலி பூங்கா ..	லாண்டன் கேட், கங்கதீஸ்வரர் கோயில் தெரு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	டிவிஷன் எண்.	பூங்காவின் பெயர்.	இடம்.
(1)	(2)	(3)	(4)
58	69	மேயர் சுந்தரராவ் நாயுடு பூங்கா ..	மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர்.
59	67	அன்பழகன் பூங்கா	வெட்டினரி காலேஜ் ஹாஸ்டல் பக்கம், சென்னை-7.
60	72	கே. எஸ். மணி பூங்கா	..
61	73	எஸ். ஓ. பாலசுப்பிரமணியம் பூங்கா	செல்லப் பிள்ளையார் கோயில் தெரு புதுப்பாக்கம்.
62	78	திரு. வி. க. பார்க், ராயப்பேட்டை	ஸ்ரீனிவாச பெருமாள் கோயில் சன்னதி தெரு, ராயப்பேட்டை.
63	90	டாக்டர் அன்னிபெஸண்ட் சிலை பூங்கா.	காமராஜ் சாலை சந்திக்கும் இடம், ஐஸ் அவுஸ், பீட்டர்ஸ் ரோடு.
64	99	கேசவ பெருமாள் பூங்கா (அடையார்)	அடையார்.
65	99	டாக்டர் தர்மாம்பாள் பூங்கா ..	ஏ. ஏ. தெரு.
66	113	டிரஸ்ட்புரம் பூங்கா	டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், 6-வது கிராஸ் தெரு.
67	114	கருணாநிதி பூங்கா	காமராஜ் காலனி.
68	114	ரங்கராஜபுரம் பூங்கா	ரங்கராஜபுரம்.

69	119	அமைச்சர் கோவிந்தசாமி பூங்கா ..	கோட்டூர் அடையார்.
70	120	காந்தி பார்க், சைதாப்பேட்டை ..	சைதாப்பேட்டை.
71		பார்க் அண்ட் நர்சரி, அண்ணாசாலை	திரு. வி. க. ரோடு, அண்ணா சாலை.
72		பார்க் அண்ட் நர்சரி ஸ்பர்டங்க்ரோடு	ஸ்பர்டங்க் ரோடு சேருமிடம்.
73		பார்க் அண்ட் நர்சரி, தர்மாபுரம்	ஆற்காடு ரோடு.
74		பார்க் அண்ட் நர்சரி, பூந்தமல்லி நெடுஞ்சாலை.	வி. பி. ஹால் எதிர் பக்கம்.
75		தியாகி சிவலிங்கம் பார்க்	பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை.
76	13	டேரஸ் பூங்கா	இப்ராகிம் சாயபு தெரு, முத்தியால் பேட்டை.
77	68	டேரஸ் பூங்கா	எழும்பூர் மேம்பாலம், எழும்பூர்.
78	119	ரிச்சர்ட்ஸ் பூங்கா	சைதாப்பேட்டை.
79	61	பெரிய கூடல் பார்க்	அண்ணா நகர் நிலம்.
80	103	எஸ். ஆர். பி. சர்மா பூங்கா ..	அபிபுல்லா ரோடு, தி. நகர்.
81	114	அண்ணா பூங்கா	யூனைடெட் இந்தியா காலனி, கோடம்பாக்கம்.
82	102	பிள்ளையார் கோயில் தெரு பூங்கா	தி. நகர்.

வரிசை எண் (1)	டிவிஷன் எண். (2)	பூங்காவின் பெயர். (3)	இடம். (4)
83	46	கன்னிகாபுரம் பார்க்	கன்னிகாபுரம் குப்பை மேடு.
84	91	சி. ஐ. டி. 6-வது கிராஸ் தெரு பூங்கா	மைலாப்பூர்.
85	70	ஹரிஸ் ரோடு பூங்கா	புதுப்பேட்டை.
86	44	பி. பி. ரோடு பூங்கா	பெரம்பூர்.
87	27	தாஜ்மஹால் பூங்கா	பென்ஷனர் லையன்.
88		பன்னீர் செல்வம் பூங்கா ..	மாடல் ஸ்கூல் ரோடு, ஆயிரம் விளக்கு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 28

இணைப்பு VII

[346ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 893க்கான விடையைக் காண்க],

1. செங்கற்பட்டு மாவட்டம்—

1. பாலபுரம்	31
2. பழையசீவரம்	19
3. ஆவடி	27
4. மதுராந்தகம்	15
5. தொழுப்பேடு	15
6. கொட்டிவாக்கம்	5
7. கொண்டக்கரை	122
	234

2. வடாற்காடு மாவட்டம்—

1. பேரணாம்பட்டு	15
2. கிளியாம்பட்டு	38
3. கங்கையூர்	8
4. அருணகிரிமங்கலம்	36
5. கண்ணமங்கலம்	15
6. அய்யன்பாலயம்	19
7. இரும்பேடு	21
8. அய்யன்னேரி	22
9. அகரம்	20
10. குறும்பாடி	41
	235

3. தர்மபுரி மாவட்டம்—

1, மேனசி	16

4. கோயம்புத்தூர் மாவட்டம்—

1. புங்கமுத்தூர்	15
2. கனியூர்	70
3. பருத்தியூர்	26
4. மேட்டுபாளையம்	30
5. முரளி	13
	154

1979 ஏப்ரல் 28]

5. தென்னாற்காடு மாவட்டம்—

1.	பெரும்பாக்கம்	40
2.	இளம்வழுதிநகர்	2
3.	கக்பா ஆலம்பாடி	62
4.	வக்கநமாரி	80
5.	கீளமானக்குடி	36
6.	மாரூர்	48
7.	பூலானூர்	65
8.	சோளம்பட்டு	13
9.	மரதூர்	3
10.	சடயம்பட்டு	9
11.	திருவக்குளம்	30
12.	மருதூர்	42
13.	கீழ்கேவூர்	35
		465

6. தஞ்சாவூர் மாவட்டம்—

1.	திட்டை	16
2.	சானூரப்பட்டி	15
3.	பெரியநாயகிபுரம்	53
4.	திருத்தாங்கூர்	42
5.	பள்ளி அக்ரகாரம்	18
6.	மானாங்கோரை	11
7.	அச்சம்பட்டி	41
8.	கல்யாணபுரம்	8
9.	மாரியம்மன்கோயில்	29
10.	அக்ரதிருநள்ளூர்	9
11.	காக்கலாணி	10
12.	அய்யகாரம்பாலயம்	8
13.	பாலகிருஷ்ணநகர்	9
14.	ராதாநல்லூர்	27
15.	சோளபுரம்	7
16.	கீழக்கோயில்பத்து	21
17.	திருவலம்பொழில்	25
18.	வெள்ளம் பெரம்பூர்	12
19.	திருவாரூர்	25
20.	சேரிமஸ்வாபுரம்	20
21.	உள்ளிக்கடை	6
22.	மேளக்கொருக்கை	9
23.	சோழபுரம்	4
		425

1979 ஏப்ரல் 28]

7, திருச்சி மாவட்டம்—

1.	அணிக்குடிச்சான்	35
2.	நாகம்பள்ளி	4
3.	சுக்கம்பட்டி	10
4.	வெங்கடமநாயக்கன்பட்டி	1
5.	பாவயபாலயம்	2
6.	இரண்யமங்கலம்	2
7.	விஸ்வநாதபுரி	3
8.	மோகவனூர்	7
9.	உடும்பியம்	9
10.	வீதிவிடங்கம்	2
		75

8, புதுக்கோட்டை மாவட்டம்—

1,	பச்சலூர்	10

9, மதுரை மாவட்டம்—

1.	அட்டனூர்	20
2.	மேலக்கல்	3
3.	சொக்கலிங்கபுரம்	32
4.	அளகாபுரி	17
		72

10, திருநெல்வேலி மாவட்டம்—

1.	வீராணம்	24
2.	சேரன்கோயில்பத்து	28
3.	அய்யனேரி	25
4.	சீனிகுளம்	7
5.	வில்லிச்சேரி	20
6.	வேலாயுதபுரம்	14
7.	ஓட்டபிடாரம்	46
		164

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 28

மொத்த விபரம்.

செங்கற்பட்டு	234
வடாற்காடு	235
தருமபுரி	16
கோயம்புத்தூர்	154
தென்னாற்காடு	465
தஞ்சாவூர்	425
திருச்சி	75
புதுக்கோட்டை	10
மதுரை	72
திருநெல்வேலி	164
மொத்தம் ..	1,850

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

D 2 A 86—33

இணைப்பு VIII.

[377ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண்: 958—க்கான விடையைக் காண்க].

விடை.—

(அ) 30—11—1978 அன்றைய நிலவரப்படி 41,669 பேர்கள். மாவட்ட வாரியான புள்ளி விவரங்கள் வருமாறு :

மாவட்டம்.	ஜூனியர் கிரேடு ஆசிரியர்கள்.	செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்.	பட்டதாரி ஆசிரியர்கள்.	மொழி ஆசிரியர்கள்.				
				தமிழ்.	இந்தி.	தெலுங்கு.	மலையாளம்.	உருது.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1. வட ஆற்காடு	19	1,362	741	346	3	6	..	14
2 தென் ஆற்காடு	20	809	553	344	..	..	..	..
4. செங்கல்பட்டு.. ..	72	1,275	448	173	..	11	..	..
3. கோயம்புத்தூர்	45	2,180	867	401	2	..	..	..

இணைப்பு VIII —தொடர்ச்சி.

[..7] ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 958க்கான விடையைக் காண்க]—தொடர்ச்சி

விடை :—

(அ) 30—11—1978 அன்றைய நிலவரப்படி 41,669 பேர்கள். மாவட்ட வாரியான புள்ளி விவரங்கள் வருமாறு :—தொடர்ச்சி.

மாவட்டம்	உடல்பயிற்சி ஆசிரியர்கள்.							
	ஆரபு.	சமஸ்கிருத	ஆங்கிலம்.	லோயர் கிரேடு.	ஹையர் கிரேடு.	டிகிரி டிப்ளமா பெற்றவர்கள்.	கைத்தொழில் ஆசிரியர்கள் (நெசவு, விவசாயம், தையல், ஓவியம், இசை முதலியன).	மொத்தம்.
(1)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)
1 வட ஆற்காடு	2	..	..	252	17	..	488	3,250
2. தென் ஆற்காடு	..	..	18	107	7	8	136	2,002
3 செங்கல்பட்டு	..	..	..	124	4	..	265	2,373
4 கோயம்புத்தூர்	..	..	..	232	18	..	284	4,020

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
5. தர்மபுரி	6	750	324	144	1	6		
6. கன்னியாகுமரி	13	1,070	789	304	31	..	6	..
7. சென்னை	90	1,386	1,324	296	24	19		2
8. மதுரை	196	1,667	1,049	288	10	..	..	
9. நீலகிரி..	4	415	217	58	..	..	..	
10. புதுக்கோட்டை	4	172	144	66	..	..	..	
11. ராமநாதபுரம்	89	1,322	425	240	4	..	..	
12. சேலம்	28	1,492	749	382	17	..	..	..
13. தஞ்சாவூர்	29	856	689	664	..	..	..	
14. திருச்சிராப்பள்ளி	36	2,102	1,065	251	..	..	..	..
15. திருநெல்வேலி	80	2,133	800	222	2	..	..	..
மொத்தம் ..	731	18,991	10,184	4,179	94	42	8	19

	(10)	(11)	(12)	(13)	(14)	(51)	(16)	(17)
5. தர்மபுரி	..	..	..	102	6		194	1,534
6. கன்னிய குமரி ..	2	..	..	214	18	..	172	2,619
7. சென்னை	3	7	..	149	19	461	300	4,084
8. மதுரை	..	..	..	213	21	98	194	3,736
9. நீலகிரி..	..	..	..	58	4	..	69	825
10. புதுக்கோட்டை ..	..	..	..	36	1	..	60	483
11. ராமநாதபுரம் ..	1	..	..	118	11	..	226	2,436
12. சேலம் ..	..	..	..	382	3	..	275	3,328
13. தஞ்சாவூர்	..	..	..	138	12	..	404	2,792
14. திருச்சிராப்பள்ளி ..	..	..	..	148	20	..	822	4,444
15. திருநெல்வேலி ..	..	..	..	184	11	..	312	3,744
மொத்தம் ..	8	7	18	2,448	172	567	4,201	41,669

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 28]

இணைப்பு IX.

[........ 378....ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 961-க்கான விடையைக் காண்க.]

இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக்குட்பட்ட, திருமண மண்டபங்கள் கொண்ட அறநிலையங்களின் விவரம்:—

கோவை, நீலகிரி மாவட்டங்கள்.

1. அருள்மிகு ரெங்கநாதர் ஆலயம், காரமடை.
2. ,, அகோர தர்ம மடம், நெறிஞ்சிப்போட்டை.
3. ,, சங்கமேஸ்வரர் ஆலயம், பவானி.
4. ,, காளியம்மன் ஆலயம், பாரியூர்.
5. ,, சுப்பிரமணியசுவாமி ஆலயம், மருதமலை.
6. ,, கன்னிகாபரமேஸ்வரி ஆலயம், கோயமுத்தூர்.
7. ,, கரிவரதராஜ பெருமாள் ஆலயம், ந. புளியம்பட்டி.
8. ,, பேச்சிமுத்து ரெங்கநாதர் சத்திரம், கோயமுத்தூர்.
9. ,, குப்பி ஆலயம், உதகை.
10. ,, ஆமணலிங்கேஸ்வரர் ஆலயம், தளி.
11. ,, செல்லாண்டியம்மன் ஆலயம், வெள்ளித் திருப்பூர்.
12. ,, வினாயகர் ஆலயம், குன்னூர்.
13. ,, முத்துகுமாரசாமி ஆலயம், பவளமாலை.
14. ,, மாரியம்மன் ஆலயம், வெள்ளாளபாளையம்.
15. ,, வரதராச பெருமாள் ஆலயம், வெங்கம்பூர்.

மதுரை மாவட்டம்.

16. அருள்மிகு மதன கோபாலசுவாமி ஆலயம், மதுரை.
17. ,, கூடல் அழகர் ஆலயம், மதுரை.
18. ,, காளஹஸ்தீஸ்வரர் ஆலயம், திண்டுக்கல்.
19. ,, சுப்பிரமணியசுவாமி ஆலயம், திருப்பரங்குன்றம்.

[1979 ஏப்ரல் 28

சேலம் மாவட்டம்.

20. அருள்மிகு அருள்மிகு காயமலேஸ்வரர் ஆலயம், ஆத்தூர்.

21. ,, மாரியம்மன் ஆலயம், எளம்பிள்ளை.

வட ஆற்காடு மாவட்டம்.

22. அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயம், திருவண்ணாமலை.

23. ,, படவேண்டு எல்லையம்மன் ஆலயம், குடியாத்தம்.

24. ,, சுப்பிரமணிய சுவாமி ஆலயம், சோளிங்கர்.

25. ,, ரெட்டியார் சத்திரம், வேலூர்.

26. ,, பால சார்தூளீஸ்வரர் ஆலயம், குடியாத்தம்.

27. ,, தர்மராஜா ஆலயம், திருப்பத்தூர்.

இராமநாதபுரம் மாவட்டம்.

28. அருள்மிகு சேவுக பெருமாள் ஆலயம், சிங்கம்புனரி.

29. ,, மாயூரநாதசுவாமி ஆலயம், ராஜாபாளையம்.

30. ,, சிவகங்கை தேவஸ்தானம், சிவகங்கை.

31. ,, ராமநாதபுரம் சமஸ்தானம், ராமனாதபுரம்.

32. ,, வெங்கிடாசலபதி ஆலயம், சாத்தூர்

33. ,, பாடலாரசர் ஆலயம், அருப்புக்கோட்டை.

34. ,, ஹிந்து நாடார் தேவஸ்தானம், விருதுநகர், நகரம்.

35. ,, செட்டி நீரேரி வினாயகர் ஆலயம், விருதுநகர், நகரம்.

1979 ஏப்ரல் 28]

திருநெல்வேலி மாவட்டம்.

36. அருள்மிகு குற்றால நாதசுவாமி ஆலயம், குற்றாலம்.
37. ,, சுப்பிரமணியசுவாமி ஆலயம், திருச்செந்தூர்.
38. ,, திருமலைக்குமாரசுவாமி ஆலயம், பன்மொழி.
39. ,, ஊணநாதசுவாமி ஆலயம், கோவில்பட்டி.
40. ,, சங்கர நாராயணசுவாமி ஆலயம், சங்கரன் கோயில்.
41. ,, காசிவிஸ்வநாதசுவாமி ஆலயம், குலசேகரன் பட்டினம்.

தஞ்சாவூர் மாவட்டம்.

42. அருள்மிகு சாரங்கபாணி ஆலயம், மேக்கிரிமங்கலம்.
43. ,, சுவேதாரண்யேசுவரர் ஆலயம், திருவெண்காடு.
44. ,, சுவாமிநாதசுவாமி ஆலயம், சுவாமிமலை.
45. ,, வெங்கிடாசலபதி ஆலயம், உப்பிலியப்பன் கோயில்.
46. ,, சுப்ரமணியசுவாமி ஆலயம், எட்டிக்குடி.
47. ,, சொக்கநாதர் ஆலயம் மற்றும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம், மன்னார்குடி.
48. ,, நவநீதேஸ்வரர் ஆலயம், சிக்கல்.
49. ,, பவஔஷதீசர் ஆலயம், திருத்துறைப்பூண்டி.
50. ,, சந்தானராமசுவாமி ஆலயம், நீடாமங்கலம்.
51. ,, தியாகராஜசுவாமி ஆலயம், திருவாரூர்.
52. ,, ஸ்ரீனிவாசப்பெருமாள் ஆலயம், நாச்சியார் கோயில்.
53. ,, வீரமாளியம்மன் ஆலயம், ஆத்தலூர்.
54. ,, வீரகோதண்டராமர் ஆலயம், தில்லை விளாகம்.
55. ,, பங்காரு காமாட்சியம்மன் ஆலயம், தஞ்சாவூர்.
56. ,, ராஜகோபாலசாமி ஆலயம், மன்னார்குடி.

[1979 ஏப்ரல் 28

செங்கற்பட்டு மாவட்டம்.

57. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம் (தியாகேசன் கல்யாண மண்டபம், திருத்தணி).
58. ,, சுப்ரமணியசுவாமி ஆலயம், திருத்தணி (வள்ளி கல்யாண மண்டபம்).
59. ,, தியாகராஜசுவாமி ஆலயம், திருவொற்றியூர்.
60. ,, பவானியம்மன் ஆலயம், பெரியபாளையம்.
61. ,, தேவராசசுவாமி ஆலயம், காஞ்சிபுரம்.
62. ,, வேதகிரீஸ்வரர் ஆலயம், திருக்கழுக்குன்றம்.

சென்னை.

63. அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயம், சென்னை-4.
64. ,, வடபழனி ஆண்டவர் ஆலயம், வடபழனி.
65. ,, கந்தசாமி ஆலயம், பூங்காநகர்.
66. ,, சென்னமல்லீஸ்வரர் ஆலயம், சென்னை-1
67. ,, ஏகாம்பரேஸ்வரர் ஆலயம், சென்னை-1.
68. ,, கன்னிகாபரமேஸ்வரி ஆலயம், கொத்தவால் சாவடி.
69. ,, கங்காதீஸ்வரர் ஆலயம், புரசைவாக்கம்.
70. ,, மணலி லெட்சுமண முதலியார் தர்மம், சென்னை-1.

தென்னார்க்காடு மாவட்டம்.

71. அருள்மிகு விருதகிரீஸ்வரர் ஆலயம், விருதாசலம்.
72. ,, கொளஞ்சியப்பர் ஆலயம், மணவாள நல்லூர்.
73. ,, சுப்ரமணியசுவாமி ஆலயம், மயிலம்.
74. ,, வைத்தியநாத சுவாமி ஆலயம், திட்டக்குடி.
75. ,, பாடலீஸ்வரர் ஆலயம், திருப்பாதிரிப் புலியூர்.

[1979 ஏப்ரல் 28]

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

76. அருள்மிகு சப்தரிஸ்வரர் ஆலயம், இலால்குடி.
77. ,, கல்யாணபசுபதீஸ்வரர் ஆலயம், கரூர்.
78. ,, வெங்கட்ரமணசுவாமி ஆலயம், தாந்தோனிமலை.
79. ,, வேதநாராயண பெருமாள் ஆலயம், திரு நாராயணபுரம்.
80. ,, உத்தமர் கோயில், பிச்சாண்டார்கோயில்.
81. ,, சுப்ரமணியசுவாமி ஆலயம், குமார வயலூர்.
82. ,, கலியுக வரதராசர் ஆலயம், கல்லங்குறிச்சி.
83. ,, காமவேதீஸ்வரர் ஆலயம், திருமங்கலம்.
84. ,, மத்யார்சுஜேஸ்வரர் ஆலயம், பேட்டை வாய்த்தலை.

இணைப்பு X.

[........ 384..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 976-க்கான விடையைக் காண்க.]

விஞ்ஞானக் கல்வியும், தொழிற்கல்வியும், பல்கலைக் கழகங்களில் விரைந்து வளர்ந்து வருங்கால், நுண்கலைகளையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற உயர்ந்த திட்டத்தின் அடிப்படையாக, பல்கலைக் கழக மானியக்குழு பல்வேறு கலாச்சாரத்துறைகளில் செம்மல்களை (Fellows) நியமனம் செய்ய வேண்டும் என்று கருதியது. அத்தகைய எட்டு கலாச்சார செம்மல் நியமனங்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள மற்ற பல்கலைக் கழகங்களான மதுரை-காமராஜ் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் மேற்படி திட்டம் நடைமுறையில் இல்லை.

கலாச்சார செம்மல்களை நியமிக்கும் திட்டத்தில் செயல் முறையாவது.

1. நான்கு செம்மல்களடங்கிய ஒரு குழு ஒவ்வொருவரும் மூன்று திங்கள் என்ற விகிதத்தில் ஓராண்டு பணிபுரிவது.

2. மாத ஊதியம் ரூ. 3,000மும் இலவசப் பயணச் சலுகையும் தருவது.

[1979 ஏப்ரல் 28

3. செம்மல்களாக நியமிக்கப்படுபவர்களுக்கு பல்கலைக் கழக பட்டம் பெற்றிருக்க வேண்டுமென்றோ, உயர்ந்த கல்வித் தகுதியுடையவராயிருத்தல் வேண்டுமென்றோ கட்டாயம் இல்லை. அவர்கள் சார்ந்துள்ள துறையில் மேம்பட்டவர்களாயிருக்க வேண்டுமென்பதையே ஒரே தகுதியாக நிர்ணயிக்க வேண்டியது.

4. செம்மல்கள் பல்கலைக் கழகத்துடன் அல்லது பல்வேறு துறைகளுடன் பணியாற்றுங்கால், அவர்கள் பல்கலைக் கழகத்தின் உள்ளேயே இருக்கவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. உயர் மட்டக் கலைஞர்கள் தங்கள் பணிக்காலத்தில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஏதுவாக இருக்கும் வகையில், பணியிடத்திற்கான விதிகளை தளர்த்திக்கொள்வது.

மேற்கண்ட செயல்முறைகளின்படி கீழ்க்கண்ட நான்கு துறைகளின் செம்மல்கள் நியமம் குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

1. இசைத்துறை.
2. பண்டைய வரலாறு மற்றும் தொல்பொருளாய்வுத்துறை.
3. இந்திய வரலாற்றுத் துறை.
4. மரபார்ந்த பண்பாட்டுத் துறை.

இந்நான்கு துறைகளின் பரிந்துரைப்படி, சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு, நடப்பாண்டுக்கு, கீழ்க்கண்ட நான்கு உயர்ந்த கலைஞர்களை, நான்கு துறைகளில், மூன்று மாதங்களுக்கு செம்மல்களாக நியமனம் செய்துள்ளது:

1. இந்திய இசை (வாய்ப்பாட்டு) திரு. சீர்காழி எஸ். கோவிந்தராசன்.
2. இந்திய இசை (கருவி) திரு. எஸ். பாலச்சந்திரன் (வீணை).
3. கோயில் கலை .. திரு. கணபதி ஸ்தபதி.
4. சமயவுரை (கதாகாலட்சேபம்) திரு. கிருபானந்த வாரியார்.

மேலே குறிப்பிட்டுள்ள நான்கு கலைஞர்களும் செம்மல்கள் நியமனம் ஏற்றுப் பணியாற்ற இசைந்துள்ளனர். திரு. சீர்காழி எஸ். கோவிந்தராசன் அவர்கள் 20—9—1978 அன்றும், திரு கணபதி ஸ்தபதி 3—10—1978 அன்றும் முறையே இந்திய இசைத்துறையிலும் பண்டை வரலாற்று மற்றும் தொல்பொருளாய்வுத் துறையிலும் செம்மல்களாக சேர்ந்துள்ளனர்.

1979 ஏப்ரல் 28]

இணைப்பு XI.

[.... 387..-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 984-க்கான விடையைக் காண்க.]

அறிக்கை

மாயூரம் நகராட்சியில் சாலை போடுவதற்காக 1978–79 ஆம் ஆண்டில் இதுவரை (31—1—1979) கீழ்க்கண்ட வேலைகளுக்காக ரூபாய் 1,62,036·93 செலவிடப்பட்டுள்ளது.

வரிசை எண்ணும், வேலைகள் விபரமும்.	தொகை.
(1)	(2)
	ரூபாய்.
1. மாயூரம் நகராட்சி போலீஸ் ஸ்டேஷன் சாலையில் வடக்கு பகுதியில் தடுப்புச் சுவர் கட்ட	1,471·25
2. மொழையூர் வாய்க்காலில் நடைபாதை பாலம் அமைக்க	3,029·58
3. செட்டித் தெருவில் தடுப்புச் சுவர் கட்ட (இறுதிப் பட்டியல்)	6·11
4. முதலியார் தெரு, வண்டிக்காரத் தெரு மற்றும் மேட்டுத் தெருவுக்கு தூசிபடியாத சாலை அமைக்க	16,336·00
5. சி 5. சி.5 சாலைக்கு கருங்கல் சல்லி சாலை போட (பட்டமங்கலம் நகரமைப்பு திட்டசாலை)	3,649·00
6. நடு ஒத்த சரகு தெருவுக்கு ஸ்பெஷல் ரிப்பேர் செய்ய (நெ. 2 ஏகடியன் தெரு வரை)	9,157·50
7. தெற்கு சாலியத் தெரு முதல் ரயில்வே ஜங்ஷன் வரை ஸ்பெஷல் ரிப்பேர் செய்ய (வழி) தெற்கு சாலியத் தெரு வியாபார செட்டித் தெரு சார தட்டை தெரு	6,125·00
8. கிழக்கு வீதி தெற்கு வீதியிலிருந்து 1 நீ. மற்றும் 5 நீ. புதுத் தெரு சந்திப்பு மற்றும் 5 நீ. புதுத் தெருவில் இருந்து இரயில்வே லையன் வரை 2 நீ. புதுத் தெருவில் ஸ்பெஷல் ரிப்பேர் செய்வதற்கு	10,028·28

வரிசை என்னும் வேலைகள் விபரமும் (1)	தொகை (2)
9. ஆரோக்கிநாதபுரம் பள்ளிக்கூட சாலை (தூக்கனாங்குளம் தெற்கு தெரு) ஸ்பெஷல் ரிப்பேர் செய்ய ..	5,780·00
10. கேங்கு மஸ்தூர்களைக் கொண்டு சாலைகளை பராமரிக்க	30,459·49
11. திருவிழுந்தூர் புதுத் தெருவில் இருந்து திருவிழந்தூர் சுடுகாடு நகராட்சி எல்லை வரை செம்மண் சாலை அமைக்க	1,440·89
12. பெரிய மணவெளித் தெருவிற்கு தார் சாலை அமைக்க	451·50
13. காவேரி நகர் தார் சாலை புதுப்பிக்க ..	3,276·00
14. மேலமடவிளாகம் சந்திற்கு சிவப்பு கப்பி போட	1,414·94
15. மேலமடவிளாகம் சந்திற்கு தென்புறம் சிவப்பு கப்பி போட	937·81
16. சாலைகளின் ஓரங்களில் உள்ள மண்ணை அப்புறப்படுத்த டிராக்டர் வாடகை	400·00
17. இரயில்வே லைனில் இருந்து மாப்படுகை வரை சாலை தடுப்பு சுவர் கட்ட	987·46
18. கூடுதல் மாட்டுக் கொட்டகை கட்ட	13,125.55
19. பட்டமங்கலத் தெருவிற்கு தூசிபடியாத சாலை அமைக்க	3,762·00
20. சின்ன மணவெளித் தெரு நல்ல முத்தான் தெருவிற்கு தூசி படியாத சாலை அமைக்க	3,933.00
21. பேருந்து நிலையத்தின் பக்கங்களை அகலப்படுத்தி தார் சாலை அமைக்க ..	8,066·00
22. காவிரி ஆற்றின் குறுக்கே மூங்கிற்பாலம் அமைக்க	1,500·00
23. சின்ன கன்னாரத் தெருவிற்கு தூசிபடியாத சாலை அமைக்க	11,462·00
24. ராமலிங்க முதலியார் தெருவிற்கு தூசிபடியாத சாலை அமைக்க	2,562·00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 28]

வரிசை என்னும் வேலையின் விபரமும் (1)	தொகை (2)
25. கவரத் தெரு பெரிய முகம்மதியன் தெரு சின்ன முகம்மதியன் தெருவிற்கு தூசி படியாத சாலை அமைக்க	10,666·00
26. ராமலிங்க முதலியார் தெருவின் அருகில் காவிரி ஆற்றின் குறுக்கே மூங்கில் பாலம் அமைக்க	2,350·00
27. திருவிழந்தூர் கவரைத் தெருவிற்கு தார் சாலை அமைக்க	2,350·00
28. திருவிழந்தூர் செட்டித் தெருவிற்கு தார் சாலை அமைக்க	1,230·00
29. வ. உ.சி. தெருவின் சந்துகளுக்கு ஸ்பெஷல் ரிப்பேர் செய்ய	2,010·00
30. திரு. வி.க. மார்க்கெட்டின் உட்புறம் நடைபாதைக்கு செம்மண் அடிக்க	1,464·58
மொத்தம் ..	1,62,036.93

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS